
# TNPSC தேர்வுப் பெட்டகம்
# நடப்பு நிகழ்வுகள் - ஏப்ரல் 2019
www.tnpscthervupettagam.com









SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**faTNPSC துளிகள் ........ 10**

**தமிழ்நாடு செய்திகள் ........ 23**

தமிழ்நாடு – லோக் ஆயுக்தா ........ 23
தொலைதூர செயல்பாட்டு வாகனம் ........ 23
ஆதிச்சநல்லூர் ........ 24
கோவில் பாதுகாப்பு ........ 25
காளிங்கராயன் கால்வாய் ........ 25
பாதரச அளவுகள் ........ 26
கிரேட் பேக்யார்டு (புழக்கடை) பறவைக் கணக்கெடுப்பு ........ 27
ஆளில்லா விமானம் - சோதனை ........ 27
மீன்பிடிப்பிற்குத் தடை ........ 28
தமிழ்நாடு தேர்தல் ........ 29
தேர்தல் 2019 ........ 29
வேலூர் தேர்தல் ........ 30
கடல் மட்ட உயர்வு ........ 30
வீராணம் ஏரி ........ 31
வெப்பத்தாற் பகுப்பு ஆலை ........ 32
காலம். வாக்கியத்தின் முடிவு ........ 32
இரயில் சுற்றுப் பயணச் சேவை ........ 32
தஞ்சாவூர் கல்வெட்டுகள் ........ 33
நிழல் இல்லாத தினம் ........ 33
மதராஸ் பத்திரிக்கையாளர் ........ 34
பாரதி எழுத்து வடிவம் ........ 35

**தேசியச் செய்திகள் ........ 35**

மக்களவைத் தேர்தலில் வாக்குப்பதிவு சீட்டுகள் ........ 35
முப்படைகளின் இரண்டாவது கூட்டுத் தளவாட முனையம் ........ 36
SVEEP பயிலரங்கம் ........ 36
"இடைவெளி குறித்த கவனம்" ........ 36
CCIT - இறுதி ........ 37
100வது போர்க் கப்பல் ........ 38
எமிசாட் ........ 38
மாத்ரி பாலம் ........ 38
AUSINDEX - 19 ........ 38
பொலிவியாவின் லித்தியம் ........ 39
கடற்கண்காணிப்பு ஹெலிகாப்டர்கள் ........ 39
கம்காஸா ........ 39
AFSPA – அருணாச்சலப் பிரதேசம் ........ 40
போக்குவரத்து உள்கட்டமைப்பு ........ 41

தரநிலை மற்றும் ஒப்புமை மதிப்பீடு ....41
பேம் 2 ....41
ITBP வாக்குகள் ....42
சான்றளிக்கப்படாத விளம்பரங்கள் ....43
பசுமை மற்றும் இயற்கை நிலத் தோற்றம் ....43
NIRF தரவரிசை ....43
ARIIA ....45
VVPAT சரிபார்ப்பு ....45
போல்டு குருஷேந்திரா 2019 ....46
நீதிமன்ற வரம்பு - தடை இல்லை ....46
கங்லா தொங்பி போர் ....46
தோம்கார் பாறைக் கலை வளாகம் ....47
மோடி திரைப்படம் - தடை ....48
பிரதமர் - வருத்தம் தெரிவித்தல் ....48
முதல் கட்ட வாக்குப்பதிவு ....48
பள்ளிக் குழந்தைகளின் சுகாதாரம் ....49
இந்திய நகரங்கள் மற்றும் காற்று மாசுபாடு ....49
வீர் பரிவார் செயலி ....51
வளர்ச்சி உதவி ....51
ரயில்வயர் வை-பை ....52
ஷரத்து 324 ....52
ரபேல் குறித்து இந்திய உச்சநீதிமன்றம் ....52
பார்மாகோவிஜிலென்ஸ் திட்டம் ....53
பிற்காலச் சேர்க்கை ....54
தேர்தல் பத்திரத் திட்டம் ....54
அஸ்ஸாம் ரைபில்ஸ் ....55
உலகின் மிகப்பெரிய விமானம் ....56
IMD (India Meteorological Department) – பருவ மழை முன்கணிப்பு ....57
நிர்பய் ....57
தேர்தல் நடத்தை விதிமீறல் ....58
இந்திய பசிபிக் பிரிவு ....58
சீ விஜில் ....59
உலக பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீடு 2019 ....60
புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சான்றிதழ்கள் ....60
மோடி எழுத்து வடிவம் ....60
தொலைபேசி எண் 112 ....61
ஐஎன்எஸ் இம்பால் ....62
வான் கண்காணிப்பு ....62
கடலோர கப்பற்படை கப்பல் - வீரா ....62
மூன்றாம் கட்டத் தேர்தல் ....63
3100 மருத்துவ கருவிப் பெட்டிகள் ....63
புற்றுநோய் முன்னேற்பாடு ....64
கங்கை – தனித்துவ பண்புகள் ....64
பெண் சிசுக் கொலை ....65
மக்களாட்சி குறியீடு 2018 ....66

பல் மருத்துவர்கள் மற்றும் பொது மருத்துவர்கள் ....66
அகிம்சா ஆட்டிறைச்சி ....66
வெளிநாடு செல்வதற்கான உரிமை ....67
பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளித்தல் ....67
காரியா திருவிழா ....68
காசி முடியரசுகள் ....68
சீனா - பால் ....69
மலேரியா நோயற்ற இந்தியா ....69
2019 ஆம் ஆண்டின் QS EMBA தரவரிசை ....70
ஏவுகணை ஒப்பந்தம் ....70
**சர்வதேசச் செய்திகள் ....70**
5G சேவையைப் பெறும் முதல் மாவட்டம் ....70
ஆசியாவின் மிகப்பெரிய ஆற்றல் சேமிப்பு அமைப்பு ....71
ஏகாதிபத்திய சகாப்தம் ரெய்வா ....71
இந்தியா – ஆப்பிரிக்கா : IAIARD ....71
உணவுப் பற்றாக்குறை மீதான சர்வதேச அறிக்கை ....72
ஹயபூசா - 2 ....72
தேசிய அளவிலான ஐந்தாம் தலைமுறை பிணையம் ....73
ஐஎன்எஸ் கொல்கத்தா மற்றும் ஐஎன்எஸ் சக்தி ....73
மாலத் தீவுகள் ....74
ஆப்பிரிக்கச் சிங்கம் 2019 பயிற்சி ....74
ஆஸ்திரேலியா மற்றும் 7 நாடுகளின் இராணுவப் பயிற்சி ....74
பேரிடர் தாங்குதிறன் மீதான ஆசிய வளர்ச்சி வங்கியின் அறிக்கை ....75
ஈரான் - அமெரிக்கா ....75
லிபியா நெருக்கடி நிலை ....75
தாய் நாட்டிற்கு பணத்தைத் திருப்பி அனுப்புதல் ....76
வளர்ச்சியை விட உயர்ந்த இலட்சியங்கள் ....76
லார்டு ஹாவ் தீவு ....77
இலங்கை – புதிய ரயில்வே பாதை ....78
ஆளில்லா குட்டி விமானங்கள் – பட்டுவாடா ....78
பெஞ்சமின் நெதன்யாகு ....78
எச்ஆர் 2123 மசோதா ....79
ரஷ்ய விருது ....79
நோட்ரி டேம் தீ ....79
ராவணா - 1 ....80
இந்தியா-வியட்நாம் ....80
செயற்கை நுண்ணறிவு மாநாடு ....81
ஜமைக்கா - ஆதார் ....81
நேபாளிசாட் – 1 ....81
ஆசியத் தேநீர் கூட்டிணைவு ....82
ஆப்பிரிக்காவில் மேம்பாட்டுத் திட்டங்கள் ....82
அமர்த்தியா சென் ....82
உக்ரைன் அதிபர் ....83
ஈரான் - பாகிஸ்தான் ....83
ஈரானிய எண்ணெய் ....83

உலக நாடுகள் மக்கள் தொகை அறிக்கை ....84
வெளியேற்ற விசா ....84
**பொருளாதாரச் செய்திகள் ....85**
நிதியியல் கட்டுப்பாட்டுக் குழு ....85
உற்பத்தி PMI குறியீடு ....85
முதலீட்டு ஆலோசகர்கள் ....85
வரவு மற்றும் செலவு ஆகியவற்றுக்கான முன்தொகை ....86
எதிர்க் குவிப்புத் தடுப்பு வரி ....86
வட்டி விகிதக் குறைப்பு ....87
வளர்ச்சி முன்கணிப்பு ....87
முன்கூட்டிய விலைநிர்ணய ஒப்பந்தங்கள் - CBDT ....87
லட்சுமி விலாஸ் வங்கி ....88
LCR விதிமுறைகள் ....88
வெளிப்புற இலக்கு ....88
ரூபாய்களை இருப்பில் வைத்திருக்கும் வங்கிகள் ....88
வளர்ச்சி - கணிப்பு ....89
சொத்துகள் இணைப்பு ....90
அமேசான் - சீனா ....90
டிசிஎஸ் – இந்திய அஞ்சல் துறை ....90
பகுதி – மெய்நிகர் நாணயம் ....91
எட்மணி – நிதிச் சேவைகள் செயலி ....91
வலுவான செயல்பாடு ....91
தரவு உள்ளூர் மயமாக்கல் ....92
ஜன் தன் ....92
ஷெல் (போலி) நிறுவனங்கள் ....92
பசுமை மகிழுந்து கடன் ....93
குறைதீர்ப்புத் திட்டம் ....93
மின்னணு முறையிலான ரசீது அமைப்பு ....94
டீசல் மகிழுந்துகள் நிறுத்தம் ....94
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள் ....95**
டொலுவினை பயனுள்ள பொருட்களாக மாற்றுதல் ....95
நாசாவின் செவ்வாய்க்கான ஹெலிகாப்டர் ....95
மூன்ஷூட் விருது ....96
நொதிகள் கத்தரிப்பான் ....96
சூப்பர்பக் பூஞ்சைகள் ....97
புதிய வெளிக்கோள் TOI – 197.0 ....97
மரபணு திருத்தம் ....98
பருப்பொருளின் புதிய நிலை ....99
கருந்துளை - போவேஹி ....99
ஹோமோ லூசோனென்சிஸ் ....101
பதின் பருவத்தினருக்கான சிறந்த உணவு ....101
முதலாவது “குளிர்த் தெளிப்பு” ஸ்மார்ட் ஆய்வகம் ....102
முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட இருதயம் ....102
பயன்கள் நிறைந்த பாக்டீரியா ....103
தடுப்பூசிக்கான எதிர்ப்புப் பிரச்சாரம் ....104

டிஜிட்டல் சுகாதாரத் தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் ...... 104
HD 21749c ...... 105
மீத்தேன் ஏரி - சனிக் கிரகம் ...... 105
GSLV - நான்காவது நிலை ...... 106
ஹீலியம் ஹைட்ரைடு அயனி $HeH^+$ ...... 106
மரபணுத் தொகுதி வரிசையாக்கம் ...... 106
குறுங்கோள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் ...... 107
கெப்ளர் – 47 அமைப்பு ...... 108
முதல் ஆயுதந் தாங்கிய நீர்-நில ஆளில்லாப் படகு ...... 108
பனிப்பொழிவிலிருந்து மின்சாரம் ...... 109
தனித்துவம் வாய்ந்த தீயணைப்பான் ...... 109
செவ்வாய் நிலநடுக்கம் ...... 110
குவாண்டம் வெப்ப நிலைமானி ...... 110
பெப்பி கொலும்போ ...... 111
குறுங்கோளில் முதல் செயற்கைப் பள்ளம் ...... 111
**சுற்றுச்சூழல் செய்திகள் ...... 112**
சர்வதேசக் காலநிலை நிலைமை ...... 112
ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் சபை ...... 113
சர்வதேச காற்றின் நிலைமை 2017 ...... 114
மின்னணு கழிவுப் பொருளாதாரம் ...... 115
யூரோ VI எரிபொருள் ...... 116
குதிக்கும் சிலந்திகள் ...... 116
பருவ மழை கணிப்பு ...... 117
கோமோடோ டிரேகன் ...... 117
மிதக்கும் சுத்திகரிப்புத் தீவுகள் ...... 118
ஆரளம் சரணாலயத்தில் இரண்டு புதிய பறவையினங்கள் ...... 119
சைட்டிரிடியோமைகோசிஸ் ...... 119
மஞ்சள் வானிலை எச்சரிக்கை ...... 120
24 x 7 மாசு வசூல் மையம் ...... 120
முதல் நேர்மறை கார்பன் கிராமம் ...... 120
ஜிங்க் பற்றாக்குறை ...... 121
பேரிடர்கள் முகம் 2019 ...... 121
மாசுபடுத்தப்பட்ட நதிகள் – மத்திய கண்காணிப்புக் குழு ...... 121
கான மயில் ...... 122
ஆக்கிரமிக்கும் வகை காளைத் தவளை ...... 123
ஆலிவ் ரிட்லி ...... 124
பாலி எரிமலை ...... 124
புதிய பறவை இனம் ...... 125
கரி நிலங்கள் ...... 126
பென்குயின் காலனி ...... 126
கடல்சார் சுற்றுச்சூழல் ...... 126
நிரந்தர உறைபனி ...... 127
காகாபோ கிளி ...... 127
95 மில்லியன் வருடத்திற்கு முந்தைய நண்டு இனம் ...... 128
நெகிழியற்ற முதல் விமானம் ...... 129

காற்று மாசுபாடு ... 129
**மாநிலச் செய்திகள் ... 129**
முதல்முறை வாக்களிப்பவர்களுக்கான செயலி ... 129
பிரெய்லியில் வாக்குச் சீட்டு ... 129
நடமாடும் மெத்தடோன் வாகனங்கள் ... 130
கந்தமால் ஹால்டி ... 130
கேப் அறிவியல் ... 131
மேற்கு வங்காளம் ... 131
கேரளா சுற்றுலா ... 131
கேரளா ... 132
அருணாச்சலப் பிரதேசம் ... 132
நீலக் குறிஞ்சி பூத்தல் ... 133
பெரியார் நதி நிற மாற்றம் ... 134
கொன்யாக் நடனம் ... 135
ஆந்திரப்பிரசேதம் ... 135
WSIS விருதுகள் ... 135
M3 பதிப்பு EVM கருவிகள் ... 136
முதல் ISO சான்றிதழ் பெற்ற இரயில் நிலையம் ... 136
சென்ச்சுப் பழங்குடியினர் ... 137
ஊடாடும் பறவைப் பூங்கா - மும்பை ... 137
**பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ... 138**
பிரவாசி பாரதிய சம்மான் விருது ... 138
பீபாடி தொழில்சார் சாதனையாளர் விருது ... 139
சர்வதேச ஆரோக்கிய விருது ... 140
ஜயித் பதக்கம் ... 140
அலெம்பா இம்சுங்கர் ... 140
உலக வங்கியின் புதிய தலைவர் ... 141
ESPN பல்துறை  விளையாட்டு விருதுகள் ... 141
மகரிஷி பத்ராயன் வியாஸ் சம்மான் 2019 ... 141
ஆண்டிற்கான உலகளாவிய சிறந்த கசடு நிறுவன விருது ... 142
கிரிக்கெட் வீரர் - கோலி ... 143
ஜாமியா மிலியா பல்கலைக் கழகம் ... 144
சரஸ்வதி சம்மான் விருது ... 144
தீபா மாலிக் ... 144
இலண்டன் நகரத்தின் சுதந்திரம் ... 145
உலக பத்திரிக்கை புகைப்பட விருதுகள் 2019 ... 145
புலிட்சர் விருது ... 146
ககன்தீப் காங் ... 146
நன்மதிப்பு விருது ... 147
நல்லெண்ணத் தூதர் - தெருவோரக் குழந்தைகளின் கிரிக்கெட் ... 147
A.K. சிங் வாழ்நாள் சாதனையாளர் விருது ... 148
யுனெஸ்கோ / குயிலர்மோ கானோ பத்திரிக்கை சுதந்திர விருது 2019 ... 148
உலகளாவிய திறன் சவால் ... 149
தாகூர் இலக்கிய விருது ... 149
BCM-95 (பிசிஎம் – 95) ... 150

அர்ஜுனா விருதுகள் ........ 150
தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது - 2019 ........ 150
71வது உலகப் பத்திரிக்கை சுதந்திரத்தின் நாயகன் ........ 151
**விளையாட்டுச் செய்திகள் ........ 152**
அஸ்லான் ஷா ஹாக்கி கோப்பை ........ 152
இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டி ........ 152
தேசிய கிரிக்கெட் சங்கம் ........ 153
ஆசிய காற்றுத் துப்பாக்கி சாம்பியன்ஷிப் ........ 153
சதுரங்கம் ........ 153
ஐசிசி டெஸ்ட் தரவரிசை ........ 153
அஸ்லான் ஷா ஹாக்கிக் கோப்பை ........ 154
ஸ்குவாஷ் ........ 154
FIFA ........ 155
மலேசிய ஓபன் ........ 155
அகஸ்டா மாஸ்டர்ஸ் ........ 155
ஹாக்கி பயிற்சியாளர் ........ 156
குத்துச் சண்டை – தங்கப் பதக்கம் ........ 156
ஆசியக் கோப்பை மேசைப் பந்தாட்ட போட்டித் தொடர் 2019 ........ 156
டைகர் - வெற்றி ........ 157
மல்யுத்தத் தரவரிசை ........ 157
கோமதி மாரிமுத்து ........ 158
சந்தோஷ் கோப்பை ........ 158
ஜெர்மி லல்ரினங்கா ........ 159
ஆசிய தடகள சாம்பியன்ஷிப் ........ 160
லா லிகா பட்டம் ........ 161
ISSF உலகக் கோப்பை 2019 - பீஜிங் ........ 161
ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் 2019 ........ 162
ஆசிய மல்யுத்தப் போட்டி ........ 162
**முக்கிய தினங்கள் ........ 163**
ஒடிசா தினம் – ஏப்ரல் 01 ........ 163
உலக மன இறுக்க விழிப்புணர்வு தினம் ........ 163
சர்வதேசச் சுரங்க விழிப்புணர்வு தினம் ........ 164
தேசிய கடல்சார் தினம் ........ 164
உலக சுகாதார தினம் ........ 165
கோஹிமாப் போர் ........ 165
பார்வையின்மைத் தடுப்பு வாரம் 2019 - ஏப்ரல் 01 முதல் 07 ........ 165
1994 ஆம் ஆண்டு ருவாண்டா இனப் படுகொலை மீதான பிரதிபலிப்பிற்கான சர்வதேச தினம் - ஏப்ரல் 07 ........ 166
தேசிய கைத்தறி வாரம் - ஏப்ரல் 07 முதல் 14 ........ 167
சர்வதேச வளர்ச்சி மற்றும் அமைதிக்கான விளையாட்டு தினம் ........ 168
உலக ஹோமியோபதி தினம் ........ 168
தேசிய ஆய்வு தினம் ........ 169
உலக நடுக்குவாதம் (பார்க்கின்சன்) தினம் – ஏப்ரல் 11 ........ 169
பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம் – ஏப்ரல் 11 ........ 170
மனித விண்வெளிப் பயணத்திற்கான சர்வதேச தினம்- ஏப்ரல் 12 ........ 170
ஜாலியன்வாலா பாக் படுகொலை தினம் - ஏப்ரல் 13 ........ 171

அம்பேத்கர் ஜெயந்தி – ஏப்ரல் 14 .......... 172
இமாச்சலப் பிரதேச தினம் .......... 172
மகாவீர் ஜெயந்தி .......... 173
முஜிப்நகர் தினம் .......... 173
உலகப் பாரம்பரிய தினம் 2019 .......... 173
உலக இரத்தம் உறையா நோய் தினம் – ஏப்ரல் 17 .......... 174
புனித வெள்ளி .......... 174
உலக சீன மொழி தினம் .......... 175
தேசியக் குடிமைப் பணிகள் தினம் – ஏப்ரல் 21 .......... 175
உலக பூமி தினம் – ஏப்ரல் 22 .......... 176
உலக புத்தகத் தினம் .......... 176
மகளிருக்கு அரசியல் அதிகாரமளிக்கும் நாள்- ஏப்ரல் 24 .......... 177
அமைதிக்கான பன்முகத் தன்மை மற்றும் அரசியல் செயலாண்மை திறனுக்கான சர்வதேச தினம் .......... 178
உலக மலேரியா தினம் – ஏப்ரல் 25 .......... 178
தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் பெண்களுக்கான சர்வதேச தினம் .......... 178
தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் – ஏப்ரல் 24 .......... 179
உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத் தினம் – ஏப்ரல் 21 .......... 179
உலக அறிவுசார் சொத்துரிமை தினம் .......... 180
உஸ்தாத் அல்லா ரக்கா .......... 180
உலக நோய்த் தடுப்பு வாரம் .......... 181
உலக கால்நடை தினம் – ஏப்ரல் 27 .......... 181
பணியில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான உலக தினம் – ஏப்ரல் 28 .......... 182
ஆயுஷ்மான் பாரத் திவாஸ் .......... 182
உலகளாவிய கலாச்சார தினம் .......... 182
சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினம் .......... 183
சர்வதேச நடன தினம் .......... 183
**இதரச் செய்திகள் .......... 184**
சிலம்பொலி சு.செல்லப்பன் .......... 184
புகையிலையின் தவறான பயன்பாடு .......... 184
உலக சுகாதாரப் புள்ளியியல் 2019 .......... 185
அறுவை சிகிச்சை பிரசவ விழிப்புணர்வு மாதம் .......... 185
மை சர்கிள் (My Circle) செயலி .......... 185
மிகவும் செல்வாக்குள்ள 100 மனிதர்கள் .......... 186
ராஜோரி தினம் – ஏப்ரல் 13 .......... 187
உலக ஒவ்வாமை வாரம் .......... 187

# TNPSC துளிகள்

- ஊழல் எதிர்ப்பு வேட்பாளரான சுசானா கப்புடோவா என்பவர் சுலோவேகியாவின் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று அந்நாட்டின் முதலாவது பெண் அதிபராக உருவெடுத்துள்ளார்.
- இந்தியாவின் தந்தையான மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த தினத்தைக் குறிப்பதற்காக பொலிவியாவின் கேப்ரியல் ரெனி மோர்னோ பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி அரங்கத்தின் பெயர்ப் பலகையை இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.
- பெருநகர சென்னை மாநகராட்சியானது 3,030 கிலோ வாட் மொத்தத் திறனுடன் 662 கட்டிடங்களின் கூரைகளின் மீது சூரிய ஒளித் தகடுகளைப் பொருத்த திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் அது தனது ஆற்றல் செலவில் ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் ரூபாய் சேமிக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சீன இரயில்பெட்டி உற்பத்தியாளர்களைப் பின்னுக்குத் தள்ளி உலகின் மிகப்பெரிய இரயில்பெட்டி கட்டுமான நிறுவனமாக சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலை (Integral Coach Factory - ICF) உருவெடுத்துள்ளது.
- ஐரோப்பாவைச் சேர்ந்த எஸ்தோனியா நாட்டில் சமீபத்தில் நிறைவு பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 44 சதவிகித வாக்குப் பதிவுடன் நிகழ்நேர வாக்குப் பதிவில் உலகின் முன்னணி நாடாக அது உருவெடுத்துள்ளது.
- சீனாவின் லாங் மார்ச் 3B விண்கலமானது எதிர்கால மனித விண்வெளி வானூர்திகள் மற்றும் விண்வெளி நிலையம் ஆகியவற்றிற்கான தகவல் தொடர்புகளை வழங்குவதற்காக புதிய தலைமுறைக் கண்காணிப்பு மற்றும் தரவு நிலை உணர்த்தி செயற்கைக் கோளை சுற்று வட்டப் பாதையில் நிலை நிறுத்தியுள்ளது.
- இந்தியாவில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கட்செவி நிறுவனமானது இந்தியாவில் “Tipline” என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் குடிமக்கள் வதந்திகள் மற்றும் தவறான தகவல்களை சரி பார்க்க முடியும்.
- 2017 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்த மறைமுக வரியான சரக்கு மற்றும் சேவைகள் வரியின் (Goods and Services Tax - GST) வசூலிப்பானது மார்ச் மாதத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. இந்த வரி வசூலிப்பானது 15.6 சதவிகிதம் உயர்ந்து ரூ.1.06 டிரில்லியன் என்ற மதிப்பை எட்டியுள்ளது.
- வட ஆப்பிரிக்க நாடான அல்ஜீரியாவில் மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களைத் தொடர்ந்து, 20 ஆண்டுகள் அதிபர் பதவி வகித்த அப்டெலாசிஸ் பவுட்டெப்லிக்கா என்பவர் தனது பதவியில் இருந்து விலக உள்ளார்.
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அன்று சர்வதேச கிரிக்கெட் ஆணையத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக இந்தியாவைச் சேர்ந்த மனு சவ்கானி பொறுப்பேற்றார். மேலும் இவர் மான்செஸ்டர் யுனிடெட் நிறுவனத்தின் தணிக்கைக் குழுவின் உறுப்பினர் மற்றும் நிர்வாகப் பணியல்லாத இயக்குநர் ஆகிய பொறுப்புகளிலும் பணியாற்றுகிறார்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவுப் படி, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01-லிருந்து விஜயா வங்கி மற்றும் தேனா வங்கி ஆகியவற்றின் அனைத்துக் கிளைகளும் பேங்க ஆப் பரோடாவின் கிளைகளாக செயல்படுகின்றன.
    - இணைக்கப்பட்ட இந்த 2 வங்கிகளின் வாடிக்கையாளர்கள் பேங்க் ஆப் பரோடாவின் வாடிக்கையாளர்களாகக் கருதப்படுவார்கள்.

- ரிலையன்ஸ் ஜியோ டிஜிட்டல் சேவை நிறுவனமானது ஹேப்டிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தைக் கையகப்படுத்தியுள்ளது. ஹேப்டிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் என்பது உரையாடல், பேச்சு மற்றும் பிராந்திய மொழிகளில் இந்தியாவின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு உதவி நிறுவனத்தைக் கட்டமைப்பதற்கான ஒரு உரையாடும் வசதி கொண்ட செயற்கை நுண்ணறிவுத் தளமாகும்.
- மியான்மரில் உள்ள சிறுபான்மை ரோஹிங்கியா முஸ்லீம்களுக்கு எதிராக நிகழ்ந்த மனித உரிமை விதி மீறல்கள் குறித்து விசாரிக்கும் விசாரணைக் குழுவின் தலைவராக அமெரிக்காவின் அரசுத் தரப்பு வழக்குரைஞரான நிக்கோலஸ் கொம்ஜியான் என்பவரை ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அண்ட்டோனியோ குட்டெரஸ் நியமித்துள்ளார்.
- கம்பியில்லா செயலெல்லையை வரையறுப்பதில் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனமான ஓபன் சிக்னலின் அறிக்கையானது இந்தியாவில் மிக அதிகமாக 4G அலைவரிசை கிடைக்கும் நகரமாக தன்பாத்தை (95.3%) அறிவித்துள்ளது. இதற்கு அடுத்த இடத்தில் ராஞ்சி (95%) உள்ளது.
- பிஎஸ்என்எல் நிறுவனமானது சர்வதேச அளவில் கைபேசிச் சேவையை வழங்கக்கூடிய பிரிட்டிஷ் தொலைத் தொடர்பு செயற்கைக் கோள் நிறுவனமான இன்மார்சாட்டிடமிருந்து வான்வழி மற்றும் கடல்சார் இணைப்பிற்கான அனுமதியைப் ("in-flight and maritime connectivity" - IFMC) பெற்றுள்ளது.
    - இது இந்திய வான்வெளியில் பறக்கும் விமானங்களில் பயணிக்கும் பயணிகளுக்கு வை-பை இணைப்பு வசதியை வழங்குவதற்கு உதவுகிறது.
- தமிழ்நாடு மாநில அரசானது 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆம் தேதி முதல் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையமானது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் இரயில் நிலையமாக அழைக்கப்படுவதற்கான அதிகாரப்பூர்வ அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.
- தமிழ்நாடு உணவு தானிய சந்தையிடல் கூடம் மற்றும் மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆகிய இரண்டும் கரும்புச் சாற்றிலிருந்து இரசாயனமற்ற வெல்லம் மற்றும் குழந்தைகளுக்கான திணை அப்பம் போன்ற ஆரோக்கியப் பலன்களைக் கொண்ட சுவையான பழுப்பு அரிசிப் பாலை தயாரிப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- BSE (மும்பை பங்குச் சந்தை) மற்றும் இந்திய சர்வதேசச் சந்தை (India INX) ஆகிய இரண்டும் இந்தியா மற்றும் இரஷ்யா ஆகிய நாடுகளில் உள்ள முதலீட்டாளர் சமூகம் மற்றும் நிறுவனங்களை இணைப்பதற்காக மாஸ்கோ சந்தையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
    - BSE மற்றும் India INX ஆகிய இரண்டும் மாஸ்கோ சந்தையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஈடுபடும் முதலாவது இந்தியப் பங்குச் சந்தைகளாகும்.
- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது (SEBI - Securities and Exchange Board of India) கைபேசி பணவழங்கீடுகள் நிறுவனத்தின் முதலீடு மற்றும் சொத்து மேலாண்மைத் தளமான பேடிஎம் நிதி நிறுவனத்திற்கு தரகுச் சேவைகளை தொடங்குவதற்காக தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- அனைத்து இந்தியக் கால்பந்து கூட்டமைப்பின் தலைவரான பிரபுல் படேல் என்பவர் FIFA ஆணையத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவில் இடம்பெற்ற முதலாவது இந்தியராக இவர் உருவெடுத்துள்ளார்.
- தகவல் தொழில்நுட்ப தொழிற்துறை அமைப்பான நாஸ்காம் ஆனது 2019-20 ஆம்

ஆண்டிற்கான தனது தலைவராக டபிள்யூஎன்எஸ் உலக சேவைகள் குழுவில் தலைமை நிர்வாக அதிகாரியாக உள்ள கேசவ் முருகேஷை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.

- 2019-20 ஆம் ஆண்டிற்காக இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்பின் தலைவராக டயோடா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் கிர்லோஸ்கர் சிஸ்டம்ஸின் தலைமை மேலாண் இயக்குனராக உள்ள விக்ரம் கிர்லோஸ்கர் பொறுப்பேற்றார்.
- வால்மார்ட்டிற்குச் சொந்தமான இணையவழி வணிக நிறுவனமான பிளிப்கார்ட் நிறுவனமானது தன்னுடைய தளத்திலிருந்துப் பொருட்களை வாங்கும் பயனாளிகளுக்கு உடனடியாகக் கடன் வழங்குவதற்காக காணொளி அடிப்படையிலான 'உன்னுடைய வாடிக்கையாளர்களை அறிந்து கொள்' என்ற முறைக்கான தீர்வைகளை மேம்படுத்திக் கொண்டிருக்கிறது.
- இந்தியக் கடற்படையும் அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றமும் (Council of Scientific and Industrial Research - CSIR) இந்தியக் கடற்படைக்காக மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் கூட்டாக இணைந்து செயல்படுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- கொடைக்கானல் மலைப் பூண்டானது புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது. இவற்றின் தனித்துவ மருத்துவப் பண்புகள், நறுமணச் சுவை ஆகியவற்றின் காரணமாக புவிசார் குறியீடு என்ற அங்கீகாரம் இதற்கு வழங்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சித் துறையின் மின்னணு கற்றல் பயிற்சித் திட்டத்தில் தெலுங்கானாவானது தொடர்ந்து இரண்டாவது வருடமாக முதலிடம் பெற்றுள்ளது.
- ஹீரோ மோட்டார்ஸ் நிறுவனத்தின் தலைவரான Dr. பவன் முஞ்சால் ஆசிய கோல்ப் விளையாட்டிற்கு ஆற்றிய பங்களிப்புகளுக்காக ஆசிய சுற்றுலா நிறுவனத்தால் சிறப்புச் சாதனையாளர் விருது வழங்கப்பட்டு கௌவிக்கப்பட்டுள்ளார்.
- 56 வயதான முன்னாள் பெடரல் வழக்குரைஞரான லொரி லைட்ஃபூட் சிக்காகோவின் முதல் கறுப்பினப் பெண் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - இவர் இந்நகரத்தின் முதல் தன்பாலின (லெஸ்பியன்) தலைவருமாவார்.
- சென்னையில் உள்ள நன்மங்கலம் பாதுகாக்கப் பட்ட காடுகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்து குப்பைகளைக் கொட்டுவதைத் தடுப்பதற்காகவும் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காகவும் ஒரு சுற்றுச் சுவர் அமைக்கப்பட விருக்கிறது.
    - பெரும்பாலும் முட்புதர்களைக் கொண்ட காடான சென்னையில் உள்ள நன்மங்கலம் பாதுகாக்கப் பட்ட காடுகளானது மிகவும் அச்சுறு நிலையில் உள்ள இனமான நீண்ட அலகுடைய இந்திய ஆந்தைகளுக்கு வாழிடமாக விளங்குகின்றது.
- ஐக்கிய இராஜ்ஜிய அரசானது "நிகழ்நேர பாதிப்புகள்" மீதான வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இது இணையதள தொழில்நுட்ப நிறுவனங்களின் தனிப்பட்ட நிர்வாகிகளை, அவர்களது இணைய தளங்களில் பரவியுள்ள தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களுக்கு அவர்களை சட்டப் பூர்வமாகப் பொறுப்பேற்க வைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.

- மார்ச் மாதத்தில் இந்தியாவின் பங்குச் சந்தைக்கு வந்துள்ள வெளிநாட்டு மூலதன வரத்தானது 4.89 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி

மாதத்திலிருந்து இந்தியப் பங்குச் சந்தைக்கு வந்த மிகப் பெரிய வெளிநாட்டு மூலதனம் இதுவாகும்.

- வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் (FII - Foreign Institutional Investors) மற்றும் வெளிநாட்டு சேவை முதலீட்டாளர்கள் (FPI - Foreign Portfolio Inevestors) ஆகியவற்றின் முதலீடுகள் இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI - Securities and Exchange Board of India) மூலம் ஒழுங்குபடுத்தப் படுகின்றன. இந்த முதலீடுகளின் மீதான உச்ச வரம்பு இந்திய ரிசர்வ் வங்கியினால் பராமரிக்கப்படுகின்றது.

❖ புல்வாமாவில் இந்திய ரிசர்வ் பாதுகாப்புப் படைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து ஜம்மு காஷ்மீர் மாநில அரசானது 270 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட ஜம்மு-ஸ்ரீநகர் ஊரி தேசிய நெடுஞ்சாலை 1-ல் மக்கள் போக்குவரத்தைத் தடை செய்துள்ளது.

- இந்தத் தடையானது காலை 4 மணி முதல் மாலை 5 மணி வரை வாரத்தில் இரண்டு நாட்களுக்கு செயல்படுத்தப்பட விருக்கின்றது. இத்தடையானது 2019 ஆம் ஆண்டு மே 31-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

❖ யூடியூபின் தலைமை நிர்வாக அதிகாரியான சூசன் வோஜ்சிக்கி என்பவர் தனது வருடாந்திரத் தலைமை நிகழ்வான "பிராண்ட்கேஸ்ட்" என்பதில் யூடியூபின் மிகப்பெரிய மற்றும் விரைவான வளர்ந்து வரும் சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளதை உறுதி செய்துள்ளார்.

- காம்ஸ்கோர் தரவின்படி, இந்தியாவில் யூடியூபானது 265 மில்லியனுக்கும் மேற்பட்ட மாதாந்திர நிகழ்நேர பயன்பாட்டாளர்களைக் கொண்டுள்ளது.

❖ தமிழ்நாடு மாநிலக் காவல் துறை பங்கு கொள்ளும் தேர்தல் தொடர்பான பணிகளுக்கு தமிழ்நாட்டுக் காவல் துறையின் பொது இயக்குனராக இந்தியக் காவற்பணி அதிகாரியான அஸ்தோஷ் சுக்லாவை இந்தியத் தேர்தல் ஆணையம் (Election Commission) நியமித்துள்ளது. இவர் உடனடியாக இப்பொறுப்பை ஏற்கவிருக்கிறார்.

- மாநில காவல்துறை அதிகாரிகள் சிறைத் துறை தலைவரான சுக்லா தலைமையில் செயல்படவிருக்கின்றனர்.

❖ முதன்முறையாக தேர்தல் ஆணையமானது சீர்திருத்தப்பட்ட மற்றும் குடும்பத்தால் கைவிடப்பட்ட 192 நபர்களுக்காக சென்னையில் உள்ள மனநல நிறுவனத்தில் ஒரு வாக்குப் பதிவு மையத்தை அமைக்கவிருக்கிறது.

- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியானது "மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் தங்கும் இல்லத்தின்" பொறுப்பாளராக அறுவை சிகிச்சை மருத்துவரான வேலன்டைன் கொனோலியை நியமித்தது. 1875 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது.

❖ பங்குகளின் மதிப்பில் ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி உலகின் மூன்றாவது மிகப்பெரிய பங்குச் சந்தையாக ஹாங்காங்கின் பங்குச் சந்தை உருவெடுத்துள்ளது. முதல் மற்றும் இரண்டாவது இடங்களில் முறையே அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகள் உள்ளன.

❖ இலண்டனில் நடைபெற்ற சர்வதேசத் தண்ணீர் மாநாட்டின் போது தேசியத் தூய்மை கங்கைத் திட்டம் (National Mission for Clean Ganga - NMCG) அல்லது நமாமி கங்கையானது சர்வதேசத் தண்ணீர் நுண்ணறிவு அமைப்பினால் "ஆண்டின் பொதுத் தண்ணீர் நிறுவனத்திற்கான" சிறப்புத் தகுதிநிலையைப் பெற்றுள்ளது.

❖ மத்திய அரசானது பசு பாதுகாப்பிடங்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் அதன்

நிர்வாகக் கட்டுப்பாடுகள், விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுத்தல் மற்றும் அதன் நிர்வாக ரீதியிலான சட்டங்கள் ஆகியவற்றை சுற்றுச் சூழல் அமைச்சகத்திலிருந்து வேளாண் அமைச்சகத்திற்கு மாற்றியுள்ளது.

- தனது குழந்தைப் பருவம் முதல் கொத்தடிமைத் தொழிலாளராக இருந்த திருவண்ணாமலையைச் சேர்ந்த 85 வயதான கன்னியப்பன் என்பவர் தமிழ்நாடு வருவாய் துறையினால் மீட்கப்பட்டுள்ளார். இவருடன் சேர்த்து இதர 50 நபர்களும் மீட்கப்பட்டுள்ளனர். இவர் முதல் முறையாக வாக்களிக்க முடிவு செய்துள்ளார்.
- முப்பது ஆண்டுகளாக சூடானின் அதிபராக இருந்த ஒமர் ஹாசன் அல்-பஷிர் என்பவரது ஆட்சிக்கு எதிராக பல மாதங்களாக நடைபெற்ற போராட்டங்களைத் தொடர்ந்து இவர் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு கைது செய்யப்பட்டார்.
    - அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சரான அகமது அவாத் இபன் அல் என்பவர் மூன்று மாத காலத்திற்கு நெருக்கடி நிலையை அறிவித்ததுடன் 2005 ஆம் ஆண்டின் அரசியலமைப்பையையும் இரத்து செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.
- ஆஸ்திரேலியாவில் பிறந்தவரும் விக்கி லீக்ஸைத் தொடங்கியவருமான ஜீலியன் அஸாஞ்சே என்பவர் இலண்டனில் உள்ள ஈகுவேடாரின் தூதரகத்தில் கைது செய்யப்பட்டார்.
    - மிகப்பெரிய கசிவுகளில் ஒன்றான அரசாங்க இரகசியங்கள் மற்றும் வகைப்படுத்தப்பட்ட தரவுகள் ஆகியவற்றின் கசிவு தொடர்பாக அமெரிக்க அரசின் சதிக் குற்றச்சாட்டுகளை அவர் எதிர் கொள்கிறார்.
- அமெரிக்காவின் தனியார் விண்கல ஏவும் நிறுவனமான ஸ்பேஸ்எக்ஸ் ஆனது பால்கன் கனரக ஏவு வாகனத்தின் மூலம் சவுதி அரேபியாவின் செயற்கைக்கோளான "அரப்சாட்" என்ற செயற்கைக் கோளை ஏவி தனது முதலாவது வணிக ரீதியிலான ஏவுதலை மேற்கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 31 வரை பிரெக்ஸிட் ஒப்பந்தத்தை நீட்டிக்க ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை ஒப்புக் கொண்டுள்ளன. இந்த நீட்டிப்பானது நெகிழ்வுத் தன்மையுடையது. வெளியேறுவதற்கான ஒப்பந்தமானது ஐக்கிய இராஜ்ஜியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே பிரிட்டன் வெளியேற முடியும்.
- வாகனத் துறை மற்றும் உயர்ரக மின் எஃகு ஆகியவற்றிற்கான மதிப்புக் கூட்டப்பட்ட எஃகின் அதிக இறக்குமதி காரணமாக மூன்று ஆண்டுகளில் முதன்முறையாக 2018-19 ஆம் நிதியாண்டில் எஃகின் நிகர இறக்குமதியாளராக இந்தியா உருவெடுத்துள்ளது.
- பாலஸ்தீனியத்தின் அதிபரான முகமது அபாஸ் என்பவர் முகம்மது இஸ்தாயேக் என்பவரை அந்நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுத்துள்ளார். இவர் அபாஸிற்கு நீண்டகால ஆலோசகராகவும் அவரின் பதேக் கட்சியில் மூத்த உறுப்பினராகவும் இருக்கிறார்.
- கடலோரப் பிராந்தியங்களில் உள்ள சிறிய சதுப்புநிலப் பகுதிகளை கண்டறிந்து அவற்றைப் படமெடுத்து உறுதி செய்யவும் கடலோர வாழ்வாதாரத் திட்டங்களின் மூலமாக அவற்றைப் பாதுகாக்கவும் முதன்முறையாக இஸ்ரோவானது மத்தியக் கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
    - இது காலநிலை மாற்றங்களின் விளைவுகளுக்கு எதிராக ஒரு வலுவான கட்டமைப்பை அமைப்பதற்காக இணைந்துள்ளது.
- லக்னோவின் கிறிஸ்தவ சபைக் கல்லூரியானது 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில்

தங்களது மாணவர்களின் பெற்றோர்கள் வாக்களிக்கும் பட்சத்தில் அவர்களின் இறுதித்தேர்வில் பத்து மதிப்பெண்கள் கூடுதலாகச் சேர்க்கப்படும் என அறிவித்துள்ளது.

- அரசியலமைப்பு சபையில் டாக்டர். பீமாராவ் அம்பேத்கரின் உரைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உரைகளின் கையேட்டைப் பிரசார் பாரதியின் தலைவரான சூர்யப் பிரகாஷ் புதுடெல்லியில் வெளியிட்டார்.
- இந்தியக் குடியரசுத் தலைவரான ராம்நாத் கோவிந்தின் பொலிவியா நாட்டுப் பயணத்தின் போது அந்நாடானது சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டிணைவில் 122-வது உறுப்பினராவதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.
- கூகுள் நிறுவனமானது எந்த இடத்திலிருந்தும் செயலிகளை இயக்கவும் நிர்வகிக்கவும் வசதியாக 'அந்தோஸ்' எனும் புதிய கிளவுட் அடிப்படையிலான திறந்தநிலை தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - அந்தோஸ் ஆனது பொது கிளவுடில் அல்லது ஏற்கனவே வன்பொருளில் நிறுவப்பட்டுள்ள செயலிகளை இயக்க பயனாளிகளுக்கு அனுமதியளிக்கிறது.
- ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாயின் அமீரக இஸ்லாமிய வங்கியானது கட்செவி (WhatsApp) வழியாக வாடிக்கையாளர்களுக்கு உரையாடல் வங்கிச் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இதன் மூலம் கட்செவி வழியாக வங்கிச் சேவையைத் தொடங்கிய முதல் இஸ்லாமிய வங்கியாக இது மாறவுள்ளது.
- புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய இரயில்வே நிலையமானது உலகின் மிக நீளமான இரயில் நிலையத்தின் பெயர் என்ற சிறப்புத்துவத்தை ஒரு எழுத்தின் முலம் இழந்துள்ளது.
    - ஐக்கிய இராஜ்ஜியத்தின் வேல்ஸில் உள்ள இரயில் நிலையமானது "LlanFairpwllgwyngyllgogerychwyrndrobwllllantysiliogogogoch" என்ற பெயரால் வழங்கப்படுகிறது. உலகச் சாதனைப் பெற்ற இந்த இரயில் நிலையத்தின் பெயரானது 58 எழுத்துகளைக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் நடைபெறவிருக்கும் அபுதாபி சர்வதேச புத்தகத் திருவிழாவின் போது (ADIBF - Abu Dhabi International Book Fair) "நன்மதிப்பு விருந்தாளி" நாடாக இந்தியா கலந்து கொள்ளும் என்று ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது. ADIBF ஆனது 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- போர்ப்ஸின் உலகின் சிறந்த வங்கிக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் வாடிக்கையாளர்களால் முன்னணி வங்கியாக எச்டிஎப்சி வங்கி கண்டறியப்பட்டுள்ளது. போர்ப்ஸ் நாளிதழானது 23 நாடுகளில் ஆய்வை நடத்தியது. இந்தத் தரவரிசையில் ஐசிஐசிஐ வங்கியானது இரண்டாம் இடத்திலும் எஸ்பிஐ வங்கியானது 11-வது இடத்திலும் உள்ளது.
- ஆண்டின் தலைசிறந்த பொதுத் துறை நிறுவனத்திற்கான புகழ்பெற்ற "2019 ஆம் ஆண்டின் AIMA (The All India Management Association - AIMA) மேலாண் இந்திய விருதை" இந்திய எண்ணெய்க் கழகம் பெற்றுள்ளது. அனைத்து இந்திய மேலாண்மைக் கழகமானது நாட்டில் மேலாண்மை தொழிற் பண்பட்டவர்களுக்கான தலைமை அமைப்பாகும்.
- செசெல்ஸ் போன்ற தீவு நாடுகளால் எதிர்கொள்ளப்படும் உலக வெப்பமயமாதலின் உடனடிப் பாதிப்புகளை எடுத்துக் காட்டுவதற்காக கடற்கரையின் ஆழமானப் பகுதியிலிருந்து அந்நாட்டின் அதிபரான டேனி பாரே உரை நிகழ்த்தினார்.

- பிரிட்டன் நடத்திய "நெக்டோன் திட்டம்" என்ற அறிவியல் பயணத்திற்காக அவர் சென்ற போது இந்த உரை நிகழ்த்தப்பட்டது. இந்தத் திட்டமானது இந்தியக் கடற்பகுதியின் ஆழம் குறித்து ஆய்வு நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ 2019 ஆம் ஆண்டின் ஆசிய-பசிபிக் நெகிழ்திறன் நகரங்கள் காங்கிரஸின் (Resilient Cities Asia-Pacific 2019 - RCAP) 4-வது பதிப்பானது உள்ளூர் சுற்றுச் சூழல் முன்னெடுப்புகளுக்கான சர்வதேச மன்றத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டது (ICLEI - International Council for Local Environmental Initiatives). இது தெற்கு தில்லி நகராட்சிக் கழகத்தினால் புது தில்லியில் நடத்தப்பட்டது.

❖ அமெரிக்காவை மையமாகக் கொண்ட நோயின் போக்கு, பொருளாதாரம் மற்றும் கொள்கைகளுக்கான மையத்தினால் (CDDEP - Center for Disease Dynamics, Economics & Policy) நடத்தப்பட்ட இந்தியர்களின் சுகாதார நலம் குறித்த ஒரு ஆய்வின் படி, இந்தியாவில் 6,00,000 மருத்துவர்கள் மற்றும் 20,00,000 செவிலியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்று கணிக்கப்பட்டுள்ளது.

❖ மூன்று நபர்களின் டிஎன்ஏவைப் பயன்படுத்தி ஒரு குழந்தை பிறந்துள்ளதாக கிரீஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இந்த ஆண் குழந்தையானது இரண்டு பெண் மற்றும் ஒரு ஆண் ஆகியோரிடமிருந்து மரபணுவைப் பெற்றுள்ளது.

❖ ஏப்ரல் 13 அன்று ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப் பட்டினத்தில் உள்ள கடற்படை தளத்தில் நடைபெற்ற ஒரு விழாவின் போது இந்தியக் கடற்படைக் கப்பலான கோழிக்கோடு பணியிலிருந்து விலக்கப்பட்டது.

❖ கண்ணம்மா திட்டம் என்பது மாணவிகளுக்கு சுகாதாரத் துணிகளை வழங்குதற்கான வட மதராஸ் ரோட்டரி சங்கத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.

❖ இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் விமானப் படைத் தளபதியான அர்ஜன் சிங் என்பவரின் 100-வது பிறந்த தினத்தின் போது அவரை நினைவு கூர்ந்தார்.

- அர்ஜன் சிங் என்பவர் (15.04.19 – 16.07.19) 5 நட்சத்திரத் தரவரிசையைப் பெற்று இந்திய விமானப் படையின் படைத் தளபதியாக பதவி உயர்வு பெற்ற IAF ன் (Indian Air Force) முதலாவது மற்றும் ஒரே அதிகாரி ஆவார்.

❖ இந்திய ரிசர்வ் வங்கியானது அதன் ஆளுநரான சக்திகாந்த தாஸால் கையெழுத்திடப்பட்ட 50 ரூபாய் நோட்டுகளைப் புழக்கத்தில் விட்டுள்ளது.

- இந்தப் புதிய நோட்டுகளின் வடிவமானது அனைத்து விதத்திலும் மகாத்மா காந்தி வரிசை கொண்ட புதிய 50 ரூபாய் நோட்டுகளைப் போன்று உள்ளன.

❖ KIET கல்வி நிலையக் குழுமத்தைச் சேர்ந்தவர்கள் அடங்கிய இந்திய அணி அமெரிக்காவின் அலபாமாவில் உள்ள அமெரிக்க விண்வெளி மற்றும் ஏவுவாகன மையத்தில் நடைபெற்ற 25-வது வருடாந்திர ரோவர் (சுற்றித் திரிபவர்) சவால் போட்டியில் 2019 ஆம் ஆண்டிற்கான "AIAA (American Institute of Aeronautics and Astronautics) நீல் ஆம்ஸ்ட்ராங் சிறந்த வடிவமைப்பு விருதினை" வென்று இருக்கின்றது.

- AIAA - அமெரிக்க விண்வெளிப் பயண மற்றும் வானவியல் நிறுவனம்.

❖ மத்திய உள்துறை அமைச்சகமானது ஜம்மு காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் (Pak Occupied Kashmir - PoK) பகுதியில் உள்ள சல்மாபாத் மற்றும் சக்கன் டா பாக் ஆகியவற்றிற்கிடையே எல்லைக் கோட்டுப் பகுதியில் நடைபெறும் வர்த்தகத்திற்கு தடை

விதிக்க முடிவு செய்துள்ளது.

- ❖ சர்வதேசக் கப்பற் படைப் பயிற்சி (IFR - International Fleet Review) என்பது போர்க் கப்பல்கள், விமானங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களின் அணிவகுப்பாகும். இது நல்லிணக்கம், ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் அவர்களின் நிறுவனத் திறன்களை வெளிப்படுத்துவதற்காக நாடுகளால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.
    - ○ 2019 ஆம் ஆண்டில் சீனாவில் நடைபெறவிருக்கும் IFR-ல் இந்தியக் கப்பற் படையைச் சேர்ந்த போர்க் கப்பல்களான ஐஎன்எஸ் கொல்கத்தா மற்றும் ஐஎன்எஸ் சக்தி ஆகியவை கலந்து கொள்ளவிருக்கின்றன.
- ❖ இந்திய வணிகச் சமூகத்திற்கு ராஸ் அல் கைமாஹ் பொருளாதார மண்டலத்தின் (RAKEZ - Ras Al Khaimah Economic Zone) பிரத்தியேக பெரு நிறுவனத் தூதுவராக முன்னாள் கிரிக்கெட் வீரர் ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.
    - ○ ராஸ் அல் கைமாஹ் என்பது ஐக்கிய அரபு அமீரகத்தை உருவாக்கும் ஏழு அமீரகங்களில் ஒன்றாகும்.
- ❖ 2019 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி அமைதிக் காப்பு நடவடிக்கைகளுக்காக 38 மில்லியன் அமெரிக்க டாலரை ஐக்கிய நாடுகள் இந்தியாவிற்கு வழங்குகிறது. இதுவரை அந்த அமைப்பானது இந்த நடவடிக்கைக்காக இவ்வளவு பெரிய தொகையை எந்தவொரு நாட்டிற்கும் வழங்கவில்லை.
- ❖ முதன்முறையாக போலந்து நாட்டைச் சேர்ந்த இருதய அறுவை சிகிச்சை நிபுணர்கள் நோயாளியின் குறுகிய இருதய வால்வைத் திறந்து, அவருடைய மார்பின் உட்பகுதியைப் பார்ப்பதற்காக முப்பரிமாண கண்ணாடிகளைப் பயன்படுத்தினர்.
- ❖ ஹரியானாவில் உள்ள சோனிபட் மாவட்டத்தில் கனரக வாகனங்கள் இயங்குவதன் மூலம் யமுனாவின் வெள்ளப் பெருக்குப் பகுதியில் அரிப்பு ஏற்படுகிறது எனக் கூறப்படுவதை ஆராயத் தேசியப் பசுமைத் தீர்ப்பாயமானது ஒரு குழுவை அமைத்துள்ளது.
    - ○ இந்தக் குழுவானது NGT-ன் தலைவரான நீதிபதி ஆதர்ஷ் குமார் கோயல் என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது .
- ❖ மத்தியப் பிரதேசத்தின் துர்ஜான்பூர் எனும் கிராமத்தை ஷிவ்தாம் என பெயர் மாற்றம் செய்ய மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.
- ❖ ஜாலியன்வாலா பாக் படுகொலையைப் பற்றி நானக் சிங்கால் எழுதப்பட்ட 100 வருடத்திற்கு முந்தைய புத்தகமான “கூனி வைசாகி” எனும் நூலின் ஆங்கில மொழிப் பெயர்ப்பானது அபுதாபியில் வெளியிடப்பட்டது.
    - ○ இந்தப் புத்தகத்தை மொழி பெயர்த்துள்ள ஐக்கிய அரபு அமீரகத்திற்கான இந்திய தூதரான நவ்தீப் சிங் சூரி இப்புத்தக வெளியீட்டை நடத்தினார்.
- ❖ டென்மார்க்கின் கோபன்ஹேகனில் நடைபெறும் 2030 ஆம் ஆண்டின் குறிக்கோள்கள் மற்றும் பாரீசு ஒப்பந்தம் ஆகியவற்றிற்கிடையேயான ஒத்திசைவு மீதான உலகளாவிய முதலாவது மாநாட்டில் தூய்மையான மற்றும் திறன் வாய்ந்த குளிர்வித்தல் மீதான உலகளாவிய முதலாவது கூட்டணி தொடங்கப்பட்டது.
- ❖ 2020 ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் G20 குழுமத் தலைவர்களின் 15-வது வருடாந்திர மாநாட்டை சவுதி அரேபியா நடத்தவுள்ளது.
- ❖ காஸ்மிக் கதிர்களைக் கண்டறிய விண்வெளிக்கு அனுப்பப்படும் சிறிய ஆய்வு செயற்கைக் கோளான க்யூப்சாட் குழுவிற்கு இந்திய அமெரிக்க மாணவரான கேசவ் ராகவனின்

தலைமையிலான குழுவினை நாசா தேர்ந்தெடுத்துள்ளது.

- இங்கிலாந்து கார் பந்தய ஓட்டுநரான லூயிஸ் ஹாமில்டன் சீன கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் பார்முலா ஒன்-இன் 1000-வது போட்டியில் தனது 75-வது வாழ்நாள் பட்டத்தை வென்றுள்ளார்.
- பாரம்பரிய மருத்துவ சிகிச்சை முறைகள் மீதான அறிவியல்சார் ஆராய்ச்சி மற்றும் கல்வியை ஊக்குவிப்பதற்காக மத்திய ஆயுஷ் அமைச்சகமானது அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றத்துடன் (CSIR - Council of Scientific and Industrial Research) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- ஆசியாவின் முதலாவது பலூன் செயற்கைக் கோளானது தஞ்சாவூரில் உள்ள பெரியார் மணியம்மை தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த மாணவிகளின் குழுவினால் ஏவப்பட்டது.
    - இந்தச் செயற்கைக் கோளானது எஸ்கேஜ என்எஸ்எல்வி 9 (விண்வெளி ஏவு வாகனத்தைப் போன்றது) மணியம்மையார் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- சமீபத்தில் நார்த்ரோப் குருமானால் வடிவமைக்கப்பட்ட அன்டாரிஸ் ஏவு வாகனமானது விர்ஜினியாவில் உள்ள நாசாவின் விண்வெளி ஏவுதளத்திலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு “சிக்னஸ் சரக்கு விண்கலத்தைச்” சுமந்து சென்றது.
    - இந்த சிக்னஸில் உள்ள 20 எலிகள் அறிவியல் ஆராய்ச்சிக்கு பயன்படுத்தப் படவிருக்கின்றது. இதன் நோக்கம் இழுப்பு வாத நோய்த் தடுப்பு மருந்தின் திறன் குறித்து சோதனை செய்வதாகும்.
- மதராஸ் உயர் நீதிமன்றமானது இந்துத் திருமணச் சட்டத்தின்படி, “மணமகள்” என்ற சொல்லானது மாற்றுப் பாலினத்தவரையும் குறிக்கும் என்றும் ஒரு பெண்ணாகப் பிறந்தவர்களை மட்டுமே அந்தச் சொல் குறிக்காது என்றும் கூறியுள்ளது.
- ஆப்பிரிக்க நாடான மலாவியானது மாஸ்குயிரிக்ஸ் எனும் வணிகப் பெயரின் கீழ் உலகின் மிகவும் மேம்படுத்தப்பட்ட மலேரியத் தடுப்பூசிக்காக பெரிய அளவில் முன்னோட்ட சோதனைகளை செய்ய உள்ளது.
    - தடுப்பூசியின் 4 அடுத்தடுத்த வழங்கீடுகளானது செயல்புரிவதற்கு, முறையான கால அளவில் வழங்கப்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும்.
- வங்காள தேசத்தின் தேர்தல் ஆணையமானது அந்நாட்டின் உள்ளாட்சி தேர்தல்களை உயர் தொழில்நுட்ப மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் மூலம் நடத்த திட்டமிட்டுள்ளது.
- மத்திய சுகாதார அமைச்சகமானது ‘கெமிஸ்ட்’ (chemist) மற்றும் ‘ட்ரக்கிஸ்ட்’ (druggist) எனும் சொற்களை ‘பார்மஸி’ (pharmacy) எனும் வார்த்தையைக் கொண்டு மாற்றுவதாக முடிவெடுத்துள்ளது.
    - இது மருத்துவப் பொருட்களை விற்கும் கடைகளை பார்மஸி எனப் பெயரிடும் சர்வதேச நடைமுறைகளுடன் ஒத்திசைகிறது.
- பள்ளிப் பருவத்திலிருக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 15 வயது சிறுவனான ரன்வீர் சிங் சாந்து ஒரு கணக்கியல் நிறுவனத்தை அமைத்து பிரிட்டனின் இளம் வயது கணக்கராகப் புகழ்பெற்றுள்ளார்.
- பெருவின் முன்னாள் அதிபர் ஆலன் கார்சியா ஒடேப்ரேசிட் முறைகேட்டில் சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளின் காரணமாக தன்னைத் தானே சுட்டுக் கொண்டார்.
- இந்தியாவுடனான அரசியல் உறவுகளைத் தொடங்கி 70 ஆண்டுகள் நிறைவு பெற்றதை

நினைவு கூறும் வகையில் ராமாயணத்தின் கருத்துருவில் இந்தோனேசியாவானது சிறப்பு நினைவு தபால் தலையை வெளியிட்டுள்ளது.

- இந்த தபால் தலையானது, காகாவின் ராமாயணத்தில் (Kakawin Ramayana) சீதாவைக் காப்பாற்ற ஜடாயு போராடிய ஒரு காட்சியைக் கொண்டுள்ளது.

❖ ஸ்டார்ட்அப்பிலிங் (StartupBlink) எனும் அமைப்பு தொழில் தொடங்குதலுக்கு உகந்த சூழல்களுடைய நாடுகளைத் தரவரிசைப்படுத்தியுள்ளது

- மொத்தமுள்ள 120 நாடுகளில் இந்தியா 17-வது இடத்தில் உள்ளது.

❖ போலியான, தரக்குறைவான, காலாவதியான மருந்துகளைக் கட்டுப்படுத்துவதற்காக மருந்துகளின் பெயர்கள் மற்றும் காலாவதி தேதி ஆகியவற்றை ஆங்கில மொழியுடன் இந்தி / பிராந்திய மொழியையும் சேர்த்து அச்சடிக்க வேண்டும் என சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖ மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு அவற்றின் அமைச்சகங்கள் வழங்கியுள்ள அரசு உத்திரவாதங்களை மீளாய்வு செய்யுமாறு அனைத்து துறைகளையும் நிதியமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

❖ 2019 ஆம் ஆண்டிற்கான "நீடித்த வளர்ச்சிக்கான நிதியளித்தல்" (Financing for Sustainable Development Report-FSDR) அறிக்கையின்படி, 2030 ஆம் ஆண்டின் நீடித்த வளர்ச்சி செயல்பாட்டின் இலக்கை அடைவதற்கு போதுமான வளங்களை திரட்டுதல் என்பது உலகளாவிய அளவில் ஒரு முக்கிய சவாலாக தொடர்கிறது.

❖ ஜெயராம் என்பவரால் இயக்கப்பட்ட "பயானகம்" (Bhayanakam) (பயம்) எனும் மலையாள திரைப்படமானது பீஜிங்கில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த ஒளிப்பதிவிற்கான விருதினைப் பெற்றுள்ளது.

❖ அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பிரச்சனைக்குரிய பகுதியான கோலன் குன்றுகளை இஸ்ரேலின் ஒரு பகுதியாக அங்கீகரித்ததைத் தொடர்ந்து, அங்கு உள்ள யூதக் குடியிருப்பிற்குப் பெயரிடப்போவதாக அந்நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

- இஸ்ரேல் நாடானது அமெரிக்க அதிபரை கௌரவிக்கும் விதமாக, ஜெருசலமின் மேற்குச் சுவர் அருகே திட்டமிடப்பட்டுள்ள இரயில் நிலையத்திற்கு அவரது பெயரை வைக்கப் போவதாக அறிவித்துள்ளது.

❖ இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தினால் (Securities and Exchange Board of India) அமைக்கப்பட்ட இணையப் பாதுகாப்பு கட்டமைப்பைப் போன்று மும்பை பங்குச் சந்தையும் (Bombay Stock Exchange - BSE) தனது உறுப்பினர்களுக்கு இணையப் பாதுகாப்புச் சேவைகளை அளிப்பதற்காக வலையமைப்பு நுண்ணறிவு என்ற ஒரு தனியார் நிறுவனத்தை பணியமர்த்தியுள்ளது.

- வலையமைப்பு நுண்ணறிவு நிறுவனமானது உறுப்பினர்களுக்கு அனைத்து நாட்களிலும் (24x7) இணையப் பாதுகாப்பு சேவைகளை அளிப்பதற்காக தனது சொந்த தளமான "ப்ளூஸ்கோப்" என்ற தளத்தைப் பயன்படுத்த விருக்கின்றது.

❖ பாரத ஸ்டேட் வங்கி பொதுக் காப்பீட்டு நிறுவனமானது இணையத் தாக்குதல்கள் காரணமாக நிதியியல் மற்றும் தொடர் இழப்புகளிலிருந்து வணிகங்களைப் பாதுகாப்பதற்காக "இணையப் பாதுகாப்புக் காப்பீடு" என்ற ஒரு சேவையைத் தொடங்கியுள்ளது.

❖ ரோலக்ஸ்-மாண்டீ-கார்லோ மாஸ்டர்ஸ் போட்டியில் ATP மாஸ்டர்ஸ் 1000 என்ற பட்டத்தை

வென்ற முதலாவது இத்தாலியராக பேபியோ பாக்னினி உருவெடுத்துள்ளார். இவர் செர்பீயாவைச் சேர்ந்த தூசன் லஜோவிக் என்பவரைத் தோற்கடித்தார்.

- ரிலையன்ஸ் சில்லறை வர்த்தக நிறுவனமானது வருடாந்திர வருவாயில் 1 இலட்சம் கோடிக்கும் மேல் வருவாய் ஈட்டிய முதலாவது இந்திய சில்லறை வர்த்தக நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
  - 2018–2019 ஆம் நிதியாண்டிற்கான இதன் வருவாயின் மதிப்பு ரூ. 1,30,556 கோடியாகும். இந்த நிறுவனத்தின் கடந்த ஆண்டு மதிப்பான ரூ. 69,198 கோடியை விட இது 89 சதவிகிதம் அதிகமாகும்.
- வட கொரிய அதிபரான கிம் ஜாங்-உன் மற்றும் இரஷ்ய அதிபரான விளாடிமிர் புடின் ஆகியோர் பசிபிக் துறைமுக நகரமான விளாடிவோஸ்தாக்கில் நடைபெற்ற மாநாட்டில் முதன்முறையாக சந்தித்துப் பேசினர்.
- சமீபத்தில் இந்திய ரிசர்வ் வங்கியானது தேசிய வீட்டுவசதி வங்கி (National Housing Bank - NHB), தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (National Bank for Agriculture & Rural Development - Nabard) ஆகியவற்றில் உள்ள தனது மொத்தப் பங்குகளையும் மத்திய அரசிற்கு விற்பனை செய்துள்ளது. ரிசர்வ் வங்கியானது இந்த இரண்டு நிறுவனங்களிடமும் வைத்துள்ள பங்குகள் முறையே ரூ. 1,450 கோடி மற்றும் ரூ. 20 கோடிகள் ஆகும்.
- இந்தியத் தலைமை நீதிபதிக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் புகார் குறித்து விசாரிப்பதற்காக நீதிபதி S A போப்டே, நீதிபதி இந்திரா பானர்ஜி மற்றும் நீதிபதி இந்து மல்கோத்ரா ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவை இந்திய உச்ச நீதிமன்றம் அமைத்துள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 24 அன்று "ஆய்வகங்களில் உள்ள விலங்குகளுக்கான உலக தினம்" அனுசரிக்கப்படுகின்றது.
- ஆட்சி மாற்றத்திற்காக சூடான் மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகளில் மக்களால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் புகழ்பெற்ற போராட்டமானது அரபு புரட்சி 2.0 என்று அழைக்கப்படுகின்றது.
- "எதிர்காலப் பணிகளில் முக்கியமானது பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் - 100 ஆண்டுகள் அனுபவம் மீதான கட்டமைப்பு" என்ற தலைப்பைக் கொண்ட ஒரு அறிக்கையானது 1919 ஆம் ஆண்டிற்குப் பின் நிகழ்ந்த "உலகின் முக்கியமான தொழிற்சாலை விபத்துகளில்" ஒன்றாக போபால் விபத்தைக் குறிப்பிட்டுள்ளது.
  - இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகளின் தொழிலாளர் நிறுவனமான சர்வதேசத் தொழிலாளர் அமைப்பால் (ILO - International Labour Organization) வெளியிடப்பட்டது.
- மலாவி நாட்டின் புதிய மலேரிய நோய்த் தடுப்பு மருந்தானது RTS, S என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்திய உச்ச நீதிமன்றமானது இந்திய ரிசர்வ் வங்கி ஆய்வு செய்த வங்கிகளுக்கான தனது வருடாந்திர ஆய்வு அறிக்கையை, சட்டத்தால் விலக்கு அளிக்கப்படாமல் இருக்கும் பட்சத்தில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அதனை வெளியிட வேண்டும் என்று அந்த அமைப்பை அறிவுறுத்தியுள்ளது.
- இந்தியாவின் புகழ்பெற்ற குழிப் பந்தாட்ட நிர்வாகியான திலீப் தாமஸ் என்பவர் இந்தியக் குழிப் பந்தாட்ட தொழிலக மன்றத்தினால் (Golf Industry Association - GIA) "குழிப் பந்தாட்டத்திற்கான வாழ்நாள் பங்களிப்பாளர்" என்ற விருதுக்குத்

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- முதன்முறையாக ஐக்கிய அரபு அமீரகமானது இந்தியாவைச் சேர்ந்த இந்துத் தந்தை மற்றும் முஸ்லீம் தாய்க்குப் பிறந்த 9 மாதங்கள் நிரம்பிய ஒரு பெண் குழந்தைக்கு பிறப்புச் சான்றிதழை வழங்கியுள்ளது.
    - ஐக்கிய அரபு அமீரகமானது ஒரு சகிப்புத் தன்மை உடைய நாட்டிற்கான உதாரணமாகத் தான் திகழ்வதை எடுத்துக் காட்டுவதற்காக 2019 ஆம் ஆண்டை “சகிப்புத் தன்மைக்கான ஆண்டாக” அறிவித்துள்ளது.
- கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் துறை ஆராய்ச்சியாளர்கள் உதடுகள், தாடை மற்றும் நாக்கு ஆகியவற்றுடன் கூடிய மெய்நிகர் குரல் வளையப் பாதையை உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் மூளையின் சமிக்ஞைகளைப் பயன்படுத்தி இயற்கையான குரலைப் போன்று செயற்கையான குரலை ஏற்படுத்த முடியும்.
    - இது விபத்துகள், பக்க வாதம் அல்லது நரம்பு சார்ந்த குறைபாடுகள் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டு பேச முடியாமல் இருப்பவர்களுக்கு உதவ இருக்கின்றது.
- இரண்டு போட்டிகளைக் கொண்ட ஐசிசி உலக கிரிக்கெட் லீக் பிரிவின் ஆண்களுக்கான ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பங்கு பெறும் முதலாவது பெண் நடுவராக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிளைரி போலோசாக் உருவெடுத்துள்ளார்.
- தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் விதமாக பெய்ஜிங்கில் நடைபெற்ற மண்டலம் மற்றும் பாதை வழித்தட மன்ற (Belt and Road Forum) மாநாட்டை இரண்டாவது முறையாக இந்தியா தவிர்த்துள்ளது.
    - மண்டலம் மற்றும் பாதை வழித்தடத் திட்டத்தின் முக்கியக் கூறான சீன-பாகிஸ்தான் பொருளாதார பெருவழிப் பாதைக்கு (China-Pakistan Economic Corridor - CPEC) எதிரான நிலைப்பாட்டில் இந்தியா உள்ளது.
- இந்தியாவின் அறிவுசார் சொத்துரிமை கட்டமைப்பில் “போதிய அளவிடத் தகுந்த முன்னேற்றங்கள்” ஏற்படாத காரணத்தினால் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் (USTR - The US Trade Representatives) இந்தியாவை “முன்னுரிமை கண்காணிப்புப் பட்டியல்” இல் வைத்துள்ளனர்.
    - தனது சொந்தச் சட்டமான “பிரிவு 301 அறிக்கை” அல்லது உலக வர்த்தக அமைப்பின் வழிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக அமெரிக்கா அச்சுறுத்துகின்றது.
- கேரளாவின் விழிஞ்சியம் துறைமுகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் “எல் அண்ட் டி” என்ற நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட “ICGS C-441” என்ற இடைமறிப்புக் கப்பலானது இந்தியக் கடற்படைப் பாதுகாப்புப் பணியில் இணைந்தது. இது உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்டக் கப்பலாகும்.
- மும்பையில் நடைபெற்ற விழாவில் பிரபல எழுத்தாளரான சலீம் கான், தேசிய விருது பெற்ற திரைப்படத் தயாரிப்பாளரான மதூர் பண்டார்கர் மற்றும் நடிகை ஹெலன் ஆகியோருக்குப் புகழ்மிக்க மாஸ்டர் தீனநாத் மங்கேஷ்கர் விருது வழங்கப்பட்டது.
- தவறுதலாக விபத்தில் சிக்கிய கோழிக் குஞ்சினைக் காப்பாற்றியதற்காக மிசோரமைச் சேர்ந்த தேராக் சி லால்ச்சன்ஹிமாவிற்கு விலங்குகளை நன்முறையில் நடத்த விழைகின்ற மக்கள் அமைப்பானது (PETA - People for the Ethical Treatment of Animals) ‘2019 ஆம் ஆண்டிற்கான கருணையுள்ள குழந்தை’ என்ற விருதை அந்த சிறுவனுக்கு வழங்கியுள்ளது.
- சென்னையில் தமிழ்நாடு விளையாட்டுச் செய்தியாளர்கள் சங்கம் மற்றும் இந்தியா

சிமெண்ட்ஸ் ஆகியோர் இணைந்து நடத்திய வருடாந்திர விருதுகள் மற்றும் உதவித் தொகை வழங்கும் விழாவில் பிரபல மேசைப் பந்தாட்ட வீரரான சரத் கமலுக்கு 2019 ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் பட்டம் வழங்கப்பட்டது.

- ❖ அங்கோலாவைத் தாயகமாகக் கொண்ட இசாத் மாங்கனி இனமானது உத்தர கன்னடாவில் மிகவும் அரிதான பழ வகையாக மாறி அச்சுறு நிலையில் உள்ளது.
- ❖ சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளை ஒட்டிய எல்லைப் பகுதியில் வெடி பொருட்களை சேமித்து வைப்பதற்காக நிலத்துக்கு அடியில் குகைகளை அமைக்க இந்திய இராணுவம் திட்டமிட்டுள்ளது.
  - ○ பொதுத் துறை நிறுவனமான தேசிய நீர்மின் திறன் கழகமானது (NHPC - National Hydroelectric Power Corporation) இத்திட்டத்தின் பங்காளர் நிறுவனமாகும்.
- ❖ இந்தியத் தொழிற் துறை வளர்ச்சி வங்கியானது (IDBI - Industrial Development Bank of India) ஈரானுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு வணிகப் பரிமாற்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக இந்தியாவில் உள்ள 5 நகரங்களில் ஈரான் வர்த்தகப் பிரிவுகளைத் தொடங்கியுள்ளது.
  - ○ மும்பை, கொல்கத்தா, தில்லி, இந்தூர் மற்றும் அகமதாபாத் ஆகியவை இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 5 நகரங்களாகும்.
- ❖ அறிவியல்சார் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றம் (Council of Scientific & Industrial Research) மற்றும் செல் & மூலக்கூறு உயிரியல் மையம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் "எசிட்னா" எனப்படுகின்ற ஒரு முட்டையிடும் பாலூட்டியின் பாலில் காணப்படும் ஒரு நுண்ணுயிர் எதிர்ப்புப் புரதத்தைப் பிரித்தெடுத்துள்ளனர்.
  - ○ இந்தப் புரதங்களானது கால்நடைகளில் பயன்படுத்தப்படும் நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு மாற்றாகப் பணியாற்றும்.
- ❖ ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்தின் இந்தியப் பிரிவு மற்றும் நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டமானது பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளிடையே பங்கேற்பு, திறன் மற்றும் அதிகாரமளிப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு ஒரு திறந்தவெளித் தளத்தை உருவாக்குவதற்கான உறுதிக் கடிதம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
  - ○ இத்திட்டமானது அடல் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அடல் இடைமுக ஆய்வகத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.
- ❖ அமெரிக்காவில் பயண இசைவுக் காலம் முடிந்த பிறகும் தங்கி இருப்பவர்கள் மற்றும் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்படும் மக்களை பாகிஸ்தான் ஏற்க மறுப்பதால் அந்நாட்டின் மீது அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது.
- ❖ தென்மேற்கு பசிபிக் நாடான பப்புவா நியூ கினியாவானது கிரிக்கெட் உலகக் கோப்பையின் இரண்டாவது பிரிவு போட்டியில் 45 ரன்கள் வித்தியாசத்தில் ஓமனை வீழ்த்தியதன் மூலம் சர்வதேசக் கிரிக்கெட் ஆணையத்தில் ஒரு இடத்தையும் ஒரு நாள் சர்வதேசத் தர நிலையையும் பெற்றுள்ளது.


# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு – லோக் ஆயுக்தா

- தமிழ்நாடு மாநில ஆளுநர் 5 உறுப்பினர்கள் கொண்ட தமிழ்நாடு லோக் ஆயுக்தா அமைப்பின் தலைவராக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியான P. தேவதாஸை நியமித்துள்ளார்.
- தமிழ்நாடு லோக் ஆயுக்தாவானது ஒரு தலைவர், இரண்டு நீதித் துறை சார் உறுப்பினர்கள், இரண்டு நீதித் துறை சாராத உறுப்பினர்கள் உள்ளிட்ட 5 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும்.
- இந்த ஊழல் எதிர்ப்பு அமைப்பின் நீதித் துறைசார் உறுப்பினர்களாக முன்னாள் மாவட்ட நீதிபதிகளான கே. ஜெயபாலன் மற்றும் R. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் நீதித்துறை சாராத உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான எம். ராஜாராம் மற்றும் மூத்த வழக்குரைஞரான K. ஆறுமுகம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், அவர்கள் பதவியேற்ற நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரையோ அல்லது 70 வயதை அடையும் வரையோ இவற்றில் எது முன்னர் வருகிறதோ அது வரை அப்பதவியில் இருப்பார்கள்.
- பொதுப் பணியாளர்களுக்கு எதிரான புகார்களைப் பதிவாளரிடமோ அல்லது அதற்குரிய அதிகாரியிடமோ நேரிலோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டும். முகவரி இல்லாமல் பெறப்படும் புகார்கள் இக்குழுவினால் பரிசீலிக்கப்பட மாட்டாது.

## தொலைதூர செயல்பாட்டு வாகனம்

- உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட நீரூக்கடியிலான ஒரு தொலைதூர செயல்பாட்டு வாகனமானது சென்னையில் உள்ள தேசியக் கடல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (NIOT - National Institute of Ocean Technology) வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த வாகனத்திற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய ஆராய்ச்சி வளர்ச்சிக் கழகத்தினால் (NRDC - National Research Development Corporation) “தேசிய மெச்சத்தக்க புத்தாக்க விருது” வழங்கப்பட்டுள்ளது.
- இந்த ROV ஆனது அந்தமானில் உள்ள பவளப் பாறைகள், அரேபியக் கடலில் உள்ள கடல் களைகள் மற்றும் அண்டார்டிகாவில் உள்ள பிரியதர்ஷினி ஏரி ஆகியவற்றில் பருவநிலை மாற்றம் குறித்த ஆய்வுகளை நடத்தும் இந்திய ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுகிறது.




## ஆதிச்சநல்லூர்

- தூத்துக்குடி மாவட்டத்தின் ஆதிச்சநல்லூரிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மாதிரிகளின் கார்பன் காலக் கணிப்பின் மூலம் இந்த மாதிரிகள் கி.மு. 905 முதல் கி.மு. 696ற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



- தொல் கைவினைப் பொருட்களின் கார்பன் காலக் கணிப்பானது அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள பீட்டா அனலடிக் பரிசோதனை ஆய்வகத்தில் நடைபெற்றது.

- தமிழ் எழுத்துருக்களைக் கொண்ட இந்தத் தொல் கைவினைப் பொருட்களின் மூலம் தமிழ் மொழி பிராகிருத மொழியை விடப் பழமையானது என்பதை உறுதி செய்ய முடியும். மேலும் இதன் காலம் கி.மு. 268 முதல் கி.மு. 232 வரை ஆகும்.

## கோவில் பாதுகாப்பு

- இந்து சமய அறநிலையத் துறையானது (The Hindu Religious and Charitable Endowments - HR&CE) மாநிலம் முழுவதும் உள்ள பாரம்பரியக் கோவில்களின் பாதுகாப்பிற்கான ஒரு கையேட்டைத் தயார் செய்துள்ளது.



- கோவில்களின் கட்டமைப்புகள் பலவீனமாக இல்லை என்பதை உறுதி செய்வதற்காகவும் நவீனத் தொழில்நுட்பத்தின் உதவி இல்லாமல் அதன் பராமரிப்பைத் தொடருவதை உறுதி செய்வதற்காகவும் இதுபோன்ற ஒரு அறிவியல் அணுகுமுறையுடன் கூடிய கையேடு தேவைப்படுகின்றது.
- HR & CE துறையானது தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 36,700 கோவில்களை நிர்வகிக்கின்றது.
- இந்தக் கோவில்களில் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட கோவில்கள் பாரம்பரிய கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இக்கோவில்கள் 100 ஆண்டுகள் பழமையானதாகும்.

## காளிங்கராயன் கால்வாய்

- நெகிழ்வு மற்றும் தெர்மாக் கோல் கழிவுகள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் கோழிப் பண்ணைக் கழிவுகள் உள்ளிட்ட கழிவுப் பொருட்கள் தொடர்ந்து கொட்டப் படுவதால் ஈரோட்டில் உள்ள 736 ஆண்டுகள் பழமையான காளிங்கராயன் கால்வாய் மாசுபடுகின்றது.
- 90.5 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தக் கால்வாயானது பவானியிலிருந்து கொடுமுடி வரை கால்வாயின் இரு புறங்களிலும் அமைந்துள்ள 15,743 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்கிறது.






- காளிங்கராயன் கால்வாயானது கொங்கு மண்டலத் தலைவரான காளிங்கராயன் என்பவரால் 1283 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
- இந்தக் கால்வாயின் நீர் ஆதாரம் ஈரோட்டில் உள்ள பவானிக்கு அருகில் உள்ள காளிங்கராயன் அணையாகும்.
- இந்தக் கால்வாயானது காவிரியின் இரண்டு முக்கியத் துணையாறுகளான பவானி மற்றும் நொய்யல் ஆகியவற்றை இணைக்கிறது.

## பாதரச அளவுகள்

- அண்ணாப் பல்கலைக் கழகத்தின் கடல் மேலாண்மைக்கான நிறுவனமானது (Institute for Ocean Management - IOM) சென்னையில் வாயு நிலையிலுள்ள பாதரசத்தின் அளவானது 3.5 நானோ கிராம் /மீ3 என்பதிலிருந்து 8.5 நானோ கிராம் /மீ3 வரையிலான அளவில் உள்ளதாகக் கண்டறிந்துள்ளது.




- வளிமண்டலத்தில் வாயு நிலையிலுள்ள பாதரசத்தின் சர்வதேசச் சராசரி அளவானது 1.5 நானோ கிராம் /மீ$^3$ ஆகும்.

- தொழிற்சாலை மாசுபாட்டைத் தவிர, பாதரசத்தின் மிகப் பெரிய இயற்கை இருப்பான கடலுக்கு அருகில் உள்ள பாதரசமானது நகரத்தில் காற்றில் வாயு நிலையிலுள்ள பாதரசத்தின் அதிக அளவிற்குக் காரணம் என்று சந்தேகிக்கப் படுகின்றது.
- மாசுபாட்டு அளவானது காலை 3 மணி முதல் காலை 8 மணி வரை அதிகமாகவும் குளிர் காலத்தை விடக் கோடைக் காலத்தில் அதிகமாகவும் உள்ளது.

## கிரேட் பேக்யார்டு (புழக்கடை) பறவைக் கணக்கெடுப்பு

- பங்குபெற்ற அனைத்து மாவட்டங்களிடையே தமிழ்நாட்டைச் சேர்ந்த சேலம் மாவட்டமானது அதிக எண்ணிக்கையிலான பறவைகளின் பட்டியலை (8420) கிரேட் பேக்யாடு (புழக்கடை) பறவைக் கணக்கெடுப்பு (GBBC - Great Backyard Bird Count) 2019ற்கு சமர்ப்பித்துள்ளது.




- GBBC என்பது பறவை இனங்களின் நிகழ் நேரப் புகைப்படத்தை உருவாக்குவதற்கான ஒரு நிகழ்வாகும்.
- பங்கேற்பாளர்கள் 4 நாட்கள் நடைபெறக்கூடிய நிகழ்ச்சியின் அனைத்து நாட்களிலும் அல்லது குறைந்தபட்சம் ஏதாவது ஒரு 15 நிமிடங்களிலும் பறவைகளைக் கணக்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் கணக்கெடுத்த எண்ணிக்கையை birdcount.org என்ற ஆன்லைன் இணையதளத்தில் தெரிவிக்கிறார்கள்.
- இது கார்னெல் பறவையியல் ஆய்வகம் மற்றும் தேசிய அடுபோன் (Audubon) சமூகத்தினால் 1998 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- GBBC என்பது காடுகளில் வாழும் பறவைகள் பற்றிய தரவுகளைச் சேகரித்து நிகழ் நேரத்தில் முடிவுகளைக் காண்பிக்கும் முதலாவது நிகழ்நேர குடிமக்கள் அறிவியல் திட்டமாகும்.
- 22-வது வருடாந்திர GBBC ஆனது 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 முதல் பிப்ரவரி 18 வரை நான்கு நாட்கள் நடைபெற்றது.

## ஆளில்லா விமானம் - சோதனை

- விமானப் போக்குவரத்து பொது இயக்குனரகமானது (The Directorate General of Civil Aviation - DGCA) தொலைதூர விமான ஓட்டிகளுக்கான விமான அமைப்புத் திட்டத்தின் கீழ் (Remotely

Piloted Aircraft System - RPAS) வேலூர், சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களை ஆளில்லா விமானங்களுக்கான புதிய சோதனை இடங்களாக அறிவித்துள்ளது.

- சிவில் தொலைதூர விமான ஓட்டிகளுக்கான விமான அமைப்பு 2018 ஆம் ஆண்டின் செயல்பாட்டிற்கான தேவைகளானது விமானப் போக்குவரத்தை உறுதி செய்வதற்காக ஆளில்லா வான்வழி விமானங்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் கட்டுப்படுத்துகிறது.




- ஆளில்லா விமானங்கள் செயல்பாட்டிற்கு வரும் முன்னர் அனைத்து ஆளில்லா விமானங்களும் “டிஜிட்டல் ஸ்கை” என்ற தளத்தில் DGCA – உடன் பதிவு செய்வது கட்டாயமாகும்.
- RPAS ஆனது ஆளில்லா விமானங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள மண்டலங்களாக விமான நிலையங்களைச் சுற்றியுள்ள பகுதிகள், சர்வதேச எல்லைக்கு அருகில் உள்ள பகுதிகள், தில்லியில் உள்ள விஜய் சவுக், மாநிலத் தலைநகரங்களில் அமைந்துள்ள தலைமைச் செயலக வளாகம், உத்திசார் முக்கியமான / இராணுவத் தளவாடங்கள் அமைந்துள்ள இடங்கள் ஆகியவற்றை அறிவித்துள்ளது.

## மீன்பிடிப்பிற்குத் தடை

- இனப்பெருக்கக் காலத்தை முன்னிட்டு தமிழ்நாடு கடற்கரை நெடுகிலும் வருடாந்திர 61 நாட்கள் மீன்பிடி தடைக் காலமானது ஏப்ரல் 15 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
- 2017 ஆம் ஆண்டில் இந்தத் தடைக் காலமானது 45 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.
- இராமநாதபுரம், தூத்துக்குடி, நாகப்பட்டினம் மற்றும் கடலூர் உள்ளிட்ட மாநிலத்தின் 13 மாவட்டங்களில் உள்ள ஏறத்தாழ 12,000 இயந்திரப் படகுகள் இந்தத் தடைக் காலத்தின் போது கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லாது.
- இந்தத் தடையானது நாட்டுப் படகுகளுக்குப் பொருந்தாது. அவை வழக்கம் போல மீன் பிடித்தலை மேற்கொள்ளும்.
- தமிழ்நாடு மாநிலமானது 1076 கிலோ மீட்டர் கடற்கரை எல்லையைக் கொண்டுள்ளது. கடல் மீன் உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது.



## தமிழ்நாடு தேர்தல்

- சுதந்திரத்திற்குப் பிந்தைய இடைக்கால நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்பொழுது உயிருடன் இருக்கும் ஒரே நபரான டி.எம். காளியண்ணா என்பவர் நாமக்கல் தொகுதியில் உள்ள திருச்செங்கோடு நகரத்தில் தனது வாக்கைப் பதிவு செய்தார். அவருடைய வயது 99 ஆகும்.
- தற்பொழுதுள்ள சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களினை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாராளுமன்றவாதி இவராவார்.
- ஈரோடு நாடாளுமன்றத் தொகுதியில் 102 வயதான K. அருக்காணி என்பவர் தனது வாக்குரிமையைப் பதிவு செய்தார்.

## தேர்தல் 2019

- தமிழ்நாட்டில் நடைபெற்ற 38 மக்களவைத் தொகுதிகளுக்கான தேர்தலில் சராசரியாக 71.87 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.
- இத்தேர்தலில் 2.05 கோடி ஆண்களும் 2.11 கோடிப் பெண்களும் 1,011 மாற்றுப் பாலினத்தவர்களும் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர்.
- தருமபுரி பாராளுமன்றத் தொகுதியில் அதிக அளவில் வாக்குகள் பதிவாயின. இங்கு 80.49 சதவிகித வாக்குகள் பதிவாகின.
- தென் சென்னை பாராளுமன்றத் தொகுதியில் குறைவான வாக்குகள் பதிவாயின. இங்கு 56.41 சதவிகித வாக்குகள் பதிவாகின.
- மாநிலத்தின் தலைநகரில் உள்ள மூன்று பாராளுமன்றத் தொகுதிகள் மாநிலத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிடையே குறைவான வாக்குப் பதிவைச் சந்தித்துள்ளன.

| | |
|---|---|
| **Chennai North** | 63.47% |
| **Chennai Central** | 59.25% |
| **Chennai South** | 56.41% |

### சட்டமன்ற இடைத் தேர்தல்

- 18 இடங்களுக்கான சட்டமன்ற இடைத் தேர்தலில் சராசரியாக 75.57 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.
- சட்டமன்ற இடைத் தேர்தலில் அதிக அளவில் சோளிங்கரில் 82.26 சதவிகித வாக்குகள் பதிவாகின. இதற்கு அடுத்து அரூரில் 82.08 சதவிகித வாக்குகள் பதிவாகின.
- பெரம்பூர் சட்டமன்ற இடைத் தேர்தலில் மிகக் குறைவான வாக்குகள் பதிவாகின. இங்கு 64.14 சதவிகித வாக்குகள் பதிவாகின.

## வேலூர் தேர்தல்

- தி.மு.க வேட்பாளரின் அலுவலகத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அதிக அளவிலான நிதியைப் பறிமுதல் செய்ததைத் தொடர்ந்து வேலூர் தொகுதிக்கான மக்களவைத் தேர்தல் இரத்து செய்யப்பட்டது.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது (EC - Election Commission) அந்தத் தொகுதிக்கானத் தேர்தலை இரத்து செய்வதற்கானப் பரிந்துரையை இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அளித்தது.
- ECI ஆனது பின்வரும் அதிகாரங்களைப் பயன்படுத்தி அத்தொகுதிக்கான தேர்தலை இரத்து செய்துள்ளது.
    - அரசியலமைப்பின் ஷரத்து 324
    - 1897-வது சட்டக்கூறின் 21-வது பிரிவு
    - நியாயமான மற்றும் நேர்மையான தேர்தலை நடத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள பிற அதிகாரங்கள்
- சட்ட விரோதப் பணப்புழக்கம் காரணமாக தேர்தல் இரத்து செய்யப்பட்ட முதலாவது மக்களவைத் தொகுதியாக வேலூர் தொகுதி உருவெடுத்துள்ளது.

## கடல் மட்ட உயர்வு

- அண்ணா பல்கலைக் கழகத்தின் புவியியல் துறையினால் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின்படி சென்னைக் கடற்கரையிலுள்ள 1.5 சதுர கிலோ மீட்டர் நிலப் பரப்பானது 2100 ஆம் ஆண்டில் மூழ்கிவிடும் என்று கணித்துள்ளது.
- கடல் மட்ட உயர்வு காரணமாக கடல் பரப்பானது ஒவ்வொரு ஆண்டும் 0.5 மீட்டர் அளவுக்கு நிலத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும்.
- கடந்த 50 ஆண்டுகளில், ஒரு ஆண்டில் 3.6 மி.மீ. கடல் மட்ட உயர்வானது வங்காள விரிகுடாவில் நிகழ்ந்துள்ளது.
- வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட கடல் மட்ட அதிகரிப்பானது இதர ஆசியப் பிராந்தியங்களில் ஏற்பட்டதை விட அதிகமாகும்.
- கடல் மட்ட உயர்வானது கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள நிலத்தடி நீர்மட்டத்தை மேல் மட்டத்திற்குக் கொண்டு வரும்.
- நிலத்தடி நீரில் உள்ள நன்னீரில் கடல் நீரானது கலந்து விடும்.

## வீராணம் ஏரி

- ❖ மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட நீரானது வீராணம் ஏரியை வந்தடைந்துள்ளது. அந்த ஏரி நீரால் மூழ்கியுள்ளது.
- ❖ சென்னை நகரத்தின் நீர்த் தேவையில் 35 சதவிகிதத்தை வீராணம் ஏரி பூர்த்தி செய்கிறது.
- ❖ இந்த ஏரியின் மொத்தக் கொள்ளளவானது 1,465 மில்லியன் கன சதுர அடியாகும் (mcft - million cubic feet).
- ❖ ஒவ்வொரு நாளும் இந்த ஏரியிலிருந்து 6 mcft (180 மில்லியன் லிட்டர்கள்) நீரானது எடுக்கப்படுகின்றது.
- ❖ ஒரு நாளைக்கு சென்னை நகரத்தின் நீர்த் தேவையானது 0.5 mcft ஆகும்.
- ❖ இந்த நீரானது குழாய்கள் மூலம் விழுப்புரம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்கள் வழியாக நகரத்தை அடைகின்றது.




### *ஏரி - வரலாறு*

- ❖ வீராணம் ஏரியானது பேரரசுச் சோழர்களின் ஆட்சியின் போது பத்தாவது நூற்றாண்டில் (கி.பி. 907 – 955) கட்டப்பட்டது.
- ❖ இது இராஜ ஆதித்ய சோழனால் உருவாக்கப்பட்டது.
- ❖ இவர் தனது தந்தையான வீரநாராயணன் என்ற பட்டத்தைக் கொண்ட முதலாம் பராந்தகச் சோழன் என்பவரின் நினைவாக இந்த ஏரிக்கு வீர நாராயணன் என்று பெயரிட்டார்.
- ❖ வீர நாராயணன் ஏரியானது பின்னாளில் வீராணம் ஏரி என்று அழைக்கப்பட்டது.
- ❖ வீராணம் ஏரியானது கீழ் மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்பட்ட நீர் மற்றும் வடவாறு நதி வழியாக செல்லும் கொள்ளிடம் ஆகியவற்றிலிருந்து நீரைப் பெறுகின்றது.

## வெப்பத்தாற் பகுப்பு ஆலை

- பெருநகர சென்னை மாநகராட்சியானது (GCC - Greater Chennai Corporation) நெகிழிக் கழிவுப் பொருட்களைக் கையாள்வதற்காகவும் அவற்றிலிருந்து எரிபொருளை உற்பத்தி செய்வதற்காகவும் ஒரு வெப்பத்தாற் பகுப்பு (Pyrolysis Plant) ஆலையை நிறுவ முடிவு செய்து கொண்டிருக்கின்றது.
- GCC ஆனது ஒவ்வொரு நாளும் 500 டன்கள் எடையுள்ள நெகிழிக் கழிவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்றது.
- வெப்பத்தாற் பகுப்பு செயல்முறையானது ஆக்ஸிஜன் வாயு இல்லாத நிலையில் மிகவும் அதிக வெப்ப நிலையின் கீழ் நெகிழிப் பொருட்களில் உள்ள கரிமச் சேர்மங்களை சிதைத்து அவற்றை எரிபொருளாக மாற்றுகின்றது.
- இந்த எரிபொருளானது ஒரு லிட்டர் ரூ.25 முதல் ரூ.35 வரை விற்கப்படுகின்றது. ஒரு லிட்டர் எரிபொருளைத் தயாரிப்பதற்கு 2 கிலோ கிராம் நெகிழிக் கழிவுப் பொருள் தேவைப்படுகின்றது.
- இந்த எரிபொருளானது சிமெண்ட், எஃகு, செங்கல் தொழிற்சாலைகள் மற்றும் கொதிகலன்களில் பயன்படுத்தப் படுகின்றது.
- மேலும் இந்த எரிபொருளானது சரக்கு வண்டிகள், மின்னாக்கி அமைப்புகள், நீராவிக் கப்பல்கள் மற்றும் இதர வாகனங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

## காலம். வாக்கியத்தின் முடிவு

- கோயம்புத்தூரைச் சேர்ந்த சமூகத் தொழில்முனைவோரான அருணாச்சலம் முருகானந்தம் என்பவர் பார்ச்சூன் பத்திரிக்கையினால் வெளியிடப்படும் 2019 ஆம் ஆண்டின் உலகின் 50 சிறந்த தலைவர்களின் பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.
- இவர் சமீபத்தில் வெளியிடப்பட்ட பட்டியலில் 45-வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளார்.
- இவருடைய பணியைப் பிரதிபலிக்கும் "காலம். வாக்கியத்தின் முடிவு" என்ற ஒரு ஆவணப்படம் இந்த ஆண்டில் சிறந்த குறும் படப் பிரிவில் ஆஸ்கர் விருதை வென்றுள்ளது.
- இவர் குறைந்த விலையுடைய மாதவிடாய்த் துணிகளைத் தயாரிக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.
- இவர் கிராமப்புற இந்தியாவில் மாதவிடாய் சுழற்சிக்கான பாரம்பரியத் தூய்மையற்ற பழக்க வழக்கங்களைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்கான அடிப்படை செயல்முறைகளை புதுப்பித்ததற்காக பாராட்டப்பட்டார்.

## இரயில் சுற்றுப் பயணச் சேவை

- தென்னிந்திய இரயில்வேயானது சென்னை மண்டலத்தில் முதலாவது இரயில் சுற்றுப் பயணச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 235.5 கிலோ மீட்டர் நீளமுடைய நாட்டின் மிகப்பெரிய சுற்றுப் பயணப் பாதை இதுவாகும்.
- தற்பொழுது 35 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட கொல்கத்தா புறநகர் இரயில்

பாதையானது நாட்டின் நீளமான பாதையாக இருக்கின்றது.




## தஞ்சாவூர் கல்வெட்டுகள்


- தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலில் உள்ள தமிழ் கல்வெட்டுகள் இந்தி கல்வெட்டுகளால் மாற்றப்பட்டு வருகின்றன எனும் போலி செய்தி பரவியது.
- உண்மையில் இந்தக் கல்வெட்டுக்கள் இந்தி மொழிக்கும் மராத்தி மொழிக்கும் பயன்படுத்தப்படும் தேவநகரி எழுத்து வடிவில் எழுதப்பட்டுள்ளன.
- மேலும் தகவல்களுக்கு இங்கே சொடுக்கவும்
  - https://www.tnpscthervupettagam.com/modi-script/
- தஞ்சாவூர் பெரிய கோவிலில் உள்ள கல்வெட்டுகளின் பட்டியல்

| அரசர்கள் | கல்வெட்டுக்களின் எண்ணிக்கை |
|---|---|
| ராஜ ராஜ சோழன் | 64 |
| ராஜேந்திர சோழன் | 21 |
| ராஜ ராஜ சோழன் II | 1 |
| குலோத்துங்க சோழன் - I | 1 |
| குலோத்துங்க சோழன் - III | 1 |
| ராஜேந்திர சோழன் - III | 1 |
| பாண்டியன் காலம் | 2 |
| விஜயநகர நாயக்கர்கள் காலம் | 4 |
| மராட்டிய ஆட்சியாளர்கள் காலம் | 4 |

## நிழல் இல்லாத தினம்

- சென்னை 25.05.19 அன்று நிழல் இல்லாத தினத்தைக் கடைபிடித்தது.

- இந்த நாளன்று சூரியனானது மிகச்சரியாக தலைக்கு மேலாக இருக்கும்.
- இது ஏறத்தாழ எந்தவொரு பொருளின் நிழலையும் தரையில் ஏற்படுத்தாது.
- இது இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நிகழும்
- சூரியனின் கதிர்கள் புவிப்பரப்பின் மீது உள்ள பொருளின் மீது செங்குத்தாக விழுவதால் இது நிகழ்கிறது.
- எனவே அந்தப் பொருளின் நிழலானது அதன் கீழ்ப்பகுதியிலேயே இருக்கும்.
- உலகெங்கிலும் உள்ள வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நேரங்களில் இந்நிகழ்வு நிகழ்கின்றது.
- பொதுவாக, இந்தியாவில் இது ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நிகழும்.




- கடக ரேகை மற்றும் மகரரேகை ஆகியவற்றிற்கு உட்பட்ட இடங்களில் மட்டுமே இது நிகழும்.
- எனவே இந்தியாவில் கடக ரேகைக்கு அப்பால் அமைந்துள்ள டெல்லி, அலகாபாத், ஸ்ரீநகர் போன்ற பகுதிகளில் இந்த நிழல் இல்லாத தினம் நிகழ்வதில்லை.

## மதராஸ் பத்திரிக்கையாளர்

- சென்னை நகரத்தின் அரசியல் மற்றும் கலாச்சார வரலாறு மீதான தனது எழுத்துகளுக்காகப் பிரபலமாக அறியப்படுபவரான பாரம்பரிய ஆர்வலர் எஸ். முத்தையா சமீபத்தில் காலமானார்.
- ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 22 ஆம் தேதி சென்னை நகரத்தில் நடைபெறும் மதராஸ் தினக் கொண்டாட்டங்களுக்கான முக்கியப் பங்காளராக இவர் செயல்பட்டார்.
- இவரது பணிகளுக்காக 2002 ஆம் ஆண்டில் மிகவும் புகழ்பெற்ற பிரிட்டீஷ் பேரரசின் மிக உயரிய நிபுணத்துவ பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

## பாரதி எழுத்து வடிவம்

- ஐஐடி – மதராஸ் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அடங்கிய ஒரு குழுவானது பன்மொழி ஒளியியல் பண்பு கொண்ட அங்கீகாரத் திட்டத்தினைப் பயன்படுத்தி பாரதி எழுத்து வடிவத்தில் உள்ள ஆவணங்களைப் படிப்பதற்கான ஒரு முறையை மேம்படுத்தியுள்ளனர்.
- பாரதி என்பது இந்தியாவிற்காக ஒரு பொது எழுத்து வடிவமாகப் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் ஒன்பது இந்திய மொழிகளுக்கான ஒரு ஒருங்கிணைந்த எழுத்து வடிவமாகும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட எழுத்து வடிவங்கள் பின்வருமாறு :
    - Tamil
    - Kannada
    - Telugu
    - Malayalam
    - Devanagri
    - Bengali
    - Oriya
    - Gujarathi
    - Gurmukhi
- ரோமன் எழுத்து வடிவமானது பல ஐரோப்பிய மொழிகளுக்கான (ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி போன்ற) ஒரு பொது எழுத்து வடிவமாகப் பயன்படுத்தப்படுகின்றது.
- அதேபோன்று பாரதி எழுத்து வடிவமானது, ஒரு பொது எழுத்து வடிவத்துடன் இந்தியாவின் தகவல் தொடர்புத் தடைகளை ஒழிக்க எண்ணுகின்றது.
- பாரதி எழுத்து வடிவத்தின் கீழ் ஆங்கிலம் மற்றும் உருது ஆகிய மொழிகளின் எழுத்து வடிவங்கள் ஒருங்கிணைக்கப்படவில்லை.

# தேசியச் செய்திகள்

## மக்களவைத் தேர்தலில் வாக்குப்பதிவு சீட்டுகள்

- 2019 ஆம் ஆண்டு நடைபெறும் மக்களவைத் தேர்தலில் ஒட்டு மொத்த நாடும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலமாக வாக்களிக்க உள்ள நிலையில் தெலுங்கானாவின் நிஜாமாபாத் பகுதி மக்கள் மட்டும் வாக்குப் பதிவுச்சீட்டு மூலம் வாக்களிக்க உள்ளனர்.
- 2019 மக்களவைத் தேர்தலில் நிஜாமாபாத் மக்களவை தொகுதியில் 185 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.
- ஒரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் 16 வேட்பாளர்களை மட்டுமே இடம் பெறச்

செய்ய முடியும். மேலும் ஒரு வாக்குச் சாவடியில் அதிகபட்சமாக 4 இயந்திரங்கள் மட்டுமே பயன்படுத்த முடியும்.

- ❖ எனவே தேர்தல் ஆணையமானது பழைய முறையான வாக்குச் சீட்டுமுறைக்கு திரும்பிச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

## முப்படைகளின் இரண்டாவது கூட்டுத் தளவாட முனையம்

- ❖ முப்படைகளின் இரண்டாவது கூட்டுத் தளவாட முனையமானது மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள கடற்படைத் தளத்தில் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.
- ❖ இது மூன்று பாதுகாப்புப் படைகளுக்கும் தளவாட ஆதரவை அளிப்பதோடு மனித வளம், வளங்களைப் பயன்படுத்துதல், போலிகளை அகற்றுதல் ஆகியவற்றை மேம்படுத்துகிறது.
- ❖ முப்படைகளையும் உள்ளடக்கிய முதல் முனையமானது 2018-ம் ஆண்டில் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் அமைக்கப்பட்டது.
- ❖ இந்திய இராணுவம் மற்றும் விமானப் படை ஆகியவற்றை மட்டுமே உள்ளடக்கிய மூன்றாவது முனையமானது அசாமின் கவுகாத்தியில் வரவுள்ளது.

## SVEEP பயிலரங்கம்

- ❖ இந்தியத் தேர்தல் ஆணையமானது 150 சமுதாய வானொலிகளுக்காக முறையான வாக்காளர்கள் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான (SVEEP - Systematic Voter's Education and Electoral Participation program) பயிலரங்கத்தை நடத்தியது.
- ❖ இந்தப் பயிலரங்கத்தின் முக்கிய நோக்கம் வாக்காளர்களுக்காக கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சமுதாய வானொலிகளுக்குப் பயிற்சி வழங்குவது மற்றும் அவற்றின் திறனை மேம்படுத்துவதாகும்.
- ❖ சமுதாய வானொலி என்பது உள்ளூர் மக்களுக்குப் பொருத்தமானதாகவும் குறிப்பிட்ட பகுதியின் நலனைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் இருக்கும் ஒரு வகையான வானொலிச் சேவையாகும்.
- ❖ சமுதாய வானொலிகள் பொதுவாக குறைந்த வரம்பு கொண்ட, குறைந்த செலவிலான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி லாப நோக்கில்லா நிறுவனங்களால் செயல்படுத்தப்படுவதாகும்.

## "இடைவெளி குறித்த கவனம்"

- ❖ ஆக்ஸ்பேம் இந்தியாவானது "இடைவெளி குறித்த கவனம் - இந்தியாவில் வேலைவாய்ப்பின் நிலைமை" என்ற தலைப்பு கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையின்படி, தரமான வேலை வாய்ப்புகள் போதாமை மற்றும் சம்பள ஏற்றத்தாழ்வு ஆகியவை இந்தியத் தொழிலாளர் சந்தையில் சமத்துவமின்மை நிலவுவதைக் குறிக்கின்றன.
- ❖ இந்த அறிக்கையானது சம்பளத்திலும் தினக் கூலியிலும் பாலின சமத்துவமற்ற தன்மை

நிலவுவதை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் பெண்கள் எவ்வாறான பணியில் இருந்தாலும் அவர்கள் எவ்வாறு குறைந்த ஊதியத்தினைப் பெறுகின்றனர் என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

- மேலும் இது NSSO (National Sample Survey Organisation) கணக்கெடுப்பின் அடிப்படையில் சராசரியாக ஒரு பணிக்குத் தகுதி வாய்ந்த ஆண் தொழிலாளர்கள் பெறும் ஊதியத்தை விட பெண் தொழிலாளர்கள் 34 சதவிகிதம் குறைவாகப் பெறுகின்றனர் என்றும் கூறுகின்றது.

***ஆக்ஸ்பேம்***

- வறட்சி நிவாரணத்திற்கான ஆக்ஸ்போர்டு குழு - ஆக்ஸ்பேம் என்பது உலக வறுமையை ஒழிப்பதற்காக 1942 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு தொண்டு நிறுவனமாகும்.
- ஆக்ஸ்பேமானது இந்தியாவில் மனிதாபிமான சேவையின் 67-வது ஆண்டை அனுசரிக்கின்றது.
- 1951 ஆம் ஆண்டில் ஆக்ஸ்பேம் கிரேட் பிரிட்டன் ஆனது பீகார் வறட்சிக்கான தனது முதலாவது முழு அளவிலான மனிதாபிமான உதவி வழங்குவதைத் தொடங்கியது.

## CCIT - இறுதி

- உலகம் முழுவதும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை அடுத்து, இந்தியா மற்றும் பொலிவியா ஆகிய நாடுகள் சர்வதேச தீவிரவாதம் மீதான விரிவான உடன்படிக்கையை (CCIT - Comprehensive Convention on International Terrorism) விரைவாக இறுதி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளன.
- CCIT என்பது அனைத்து விதமான சர்வதேசத் தீவிரவாதத்தையும் குற்றவாளியாக்குவதற்காக முன்மொழியப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும். மேலும் அது தீவிரவாதிகள், அவர்களுக்கு நிதி, ஆயுதங்கள் மற்றும் புகலிடம் வழங்குபவர்கள் ஆகியோரைத் தடை செய்கிறது.
- CCIT ஆனது 1996 ஆம் ஆண்டில் இந்தியாவால் முன்மொழியப்பட்டது. ஆனால் இது இதுநாள் வரை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லை.
- தீவிரவாதம் தொடர்பான இந்த ஒரு உடன்படிக்கையைத் தவிர, இதர 3 உடன்படிக்கைகளும் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

| Name of the Convention | Year adopted |
|---|---|
| **International Convention for the Suppression of Terrorist Bombings** | 1997 |
| **International Convention for the Suppression of the Financing of Terrorism** | 1999 |
| **International Convention for the Suppression of Acts of Nuclear Terrorism** | 2005 |

## 100வது போர்க் கப்பல்

- இந்தியக் கடற்படை, இந்தியக் கடலோரக் காவற்படை மற்றும் மொரீஷியஸ் கடலோரக் காவற்படை ஆகியவற்றிற்கு 100 போர்க் கப்பல்களைக் கட்டமைத்து வழங்கிய இந்தியாவின் முதலாவது கப்பல் கட்டும் தளமாக கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டுமானம் மற்றும் பொறியாளர்கள் என்ற நிறுவனம் உருவெடுத்துள்ளது.
- 100-வது போர்க் கப்பலான IN LCU - 56 ஆனது 216 நபர்களுக்கு இடவசதி அளிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் இதில் 2 உள்நாட்டு CRN 91 துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன.



## எமிசாட்

- இந்தியாவின் விண்கலமான பிஎஸ்எல்வி C - 45 ஆனது 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அன்று ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து விண்ணுக்குப் பாய்ந்தது.
- இந்த விண்கலமானது இதர நாட்டைச் சேர்ந்த 28 செயற்கைக் கோள்கள் மற்றும் மின்னணு நுண்ணறிவு செயற்கைக் கோளான எமிசாட் ஆகியவற்றைச் சுமந்து சென்றது.

## மாத்ரி பாலம்

- இந்திய இராணுவமானது காஷ்மீரின் லே - லடாக் பகுதியில் உள்ள சிந்து நதியின் மீது மிக நீளமான தொங்கு பாலமான “மாத்ரி பாலத்தைக்” கட்டமைத்துள்ளது.
- 260 சதுர அடி நீளம் கொண்ட இந்தத் தொங்கு பாலமானது இந்திய இராணுவத்தின் தீயணைப்பு மற்றும் சீற்றப் படைகளுக்கான சஹாஸ் அவுர் யோகயாதா என்ற படைப் பிரிவைச் சேர்ந்த போர்ப் படைப் பொறியாளர்களால் கட்டமைக்கப்பட்டது.

## AUSINDEX - 19

- இந்தியக் கடற்படை மற்றும் ஆஸ்திரேலியக் கடற்படை ஆகிய நாடுகளுக்கிடையேயான

இருநாட்டுக் கடற்படைப் பயிற்சியான "AUSINDEX" (Australia India Exercise) என்பதின் மூன்றாவது பதிப்பானது விசாகப் பட்டினத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

- இந்தக் கூட்டுப் பயிற்சியானது இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையான சாகர் திட்டம் (பிராந்தியத்தில் உள்ள அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) மற்றும் கடல்சார் துறையில் நல்ல ஒழுங்கை உறுதிப்படுத்துவதற்காக இரு நாடுகளின் பகிர்மான நோக்கங்கள் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.

| Event | Venue |
|---|---|
| **AUSINDEX -2015** | Vishakapatnam |
| **AUSINDEX -2017** | Freemantle, Australia |
| **AUSINDEX - 2019** | Vishakapatnam |

## பொலிவியாவின் லித்தியம்

- பொலிவியா நாடானது இந்தியாவிற்கு தனது லித்தியம் கார்பனேட்டை வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. மேலும் இது இந்தியாவில் லித்தியம் மின்கலன்/செல்கள் தயாரிப்பு ஆலைகளுக்கான கூட்டு முயற்சியில் ஈடுபடவிருக்கிறது.
- உலகின் மொத்த லித்தியம் இருப்பில் நான்கில் ஒரு பங்கு பொலிவியாவில் உள்ளது.
- இந்தக் கூட்டாண்மையானது இந்தியாவின் இலட்சிய மின்சாரப் போக்குவரத்து திட்டமான "போக்குவரத்து உருமாற்றம் மற்றும் மின்கலன் சேமிப்பு மீதான தேசியத் திட்டத்திற்கு" மிகப்பெரிய உந்து சக்தியை அளிக்கும்.
- 2030 ஆம் ஆண்டில் குறைந்தது 30 சதவிகித வாகனங்கள் மின்சார மின்கலனால் இயக்கப்படுவதையும், அவற்றில் சமபங்கு பொலிவியாவின் லித்தியத்தைப் பயன்டுத்துவதையும் இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பொலிவியா, அர்ஜென்டினா மற்றும் சிலி ஆகிய நாடுகள் தென் அமெரிக்க கண்டத்தின் லித்தியம் முக்கோண நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

## கடற்கண்காணிப்பு ஹெலிகாப்டர்கள்

- அமெரிக்க நாடானது பல பயன்பாடு கொண்ட எம்எச்-60 "ரோமியோ" என்ற கடற்கண்காணிப்பு ஹெலிகாப்டர்கள் 24-ஐ இந்தியாவிற்கு விற்பனை செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நீர்மூழ்கிக் கப்பல்களைத் தாக்கி அழித்தல், நிலப்பகுதியில் உள்ளதைத் தாக்கி அழித்தல், கண்காணிப்பு, தகவல் நிலை உணர்த்தி, போரின் போது தேடுதல் மற்றும் மீட்பு, கடற்படை ஆயுத ஆதரவு மற்றும் தளவாட உதவி ஆகியவற்றிற்காக இந்த வகை ஹெலிகாப்டர்களை லாக்ஹீட் மார்ட்டின் என்ற நிறுவனம் வடிவமைக்கிறது.

## கம்காஸா

- 2018 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற 2+2 பேச்சுவார்த்தையின் போது தகவல் தொடர்பு இணக்கப் பாடு மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

- இது அமெரிக்காவிலிருந்து தகவல் தொடர்பு பாதுகாப்புக் கூறுகளை இந்தியாவிடம் பரிமாறிக் கொள்ள வழி வகுக்கிறது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, முதலாவது பாதுகாப்பான தகவல் தொடர்பு இணைப்பானது இந்தியக் கடற்படைத் தலைமையகம் மற்றும் மத்திய அமெரிக்க மற்றும் பசிபிக் கடற்படைத் தலைமையிடம் ஆகியவற்றிற்கிடையே ஏற்படுத்தப்பட்டது.
- இது இந்தியா பின்வரும் வசதிகளைப் பெற வழிவகை செய்கிறது.
    - முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்புத் தொழில்நுட்பங்களை அமெரிக்காவிடமிருந்துப் பெற
    - அமெரிக்க ஆயுதப் படைகள் மற்றும் நிகழ்நேர அமெரிக்க உளவுத்துறை ஆகியவற்றின் முக்கியத்துவம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப அமைப்பை அணுக.

## AFSPA – அருணாச்சலப் பிரதேசம்

- மத்திய உள்துறை அமைச்சகமானது அருணாச்சலப் பிரதேசத்தில் மொத்தம் உள்ள 9 மாவட்டங்களில் மூன்று மாவட்டங்களிலிருந்து விமர்சனத்திற்குரிய ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை (AFSPA - Armed Forces Special Powers Act) திரும்பப் பெறுவதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
- குடிமைப் பணியாளர்களுக்கு உதவுவதற்காக ஆயுதப் படைகள் தேவைப்படும் பகுதிகளில் AFPSA பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- AFSPA சட்டத்தின் பிரிவு 3-ன் கீழ் யூனியன் பிரதேசத்தின் ஆட்சியாளர் அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசு ஆகியவற்றினால் "பாதிக்கப்பட்ட இடங்கள்" என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் மட்டும் இச்சட்டம் பொருந்தும்.
- 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 அன்று அருணாச்சலப் பிரதேசம் தனி மாநிலமாக உருவெடுத்துள்ளது. அன்றிலிருந்து AFSPA சட்டமானது அருணாச்சலப் பிரதேசத்தின் சில பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது.

### *AFSPA*

- AFSPA ஆனது 1942 ஆம் ஆண்டின் ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரங்கள் அவசரநிலைச் சட்டத்தின் அடிப்படையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- "பாதிக்கப்பட்ட பகுதிகளாக" அறிவிக்கப்பட்ட பகுதிகளில் இந்திய ஆயுதப் படைகள் செயல்படுவதற்கு முழு அதிகாரங்களை அளிக்கக்கூடிய இந்தச் சட்டமானது இந்திய நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டதாகும்.
- AFSPA சட்டங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன.

| REGION | STATUS |
|---|---|
| **Armed Forces Special Powers (Assam and Manipur) Act, 1958**<br>**(Extended to all 7 North East states later)** | Tripura, Meghalaya – Withdrawn<br>Rest of the States - Partially Withdrawn |

| | |
|---|---|
| **The Armed Forces (Punjab and Chandigarh) Special Powers Act, 1983** | Withdrawn in 1997 |
| **The Armed Forces (Jammu and Kashmir) Special Powers Act, 1990** | Active |

## போக்குவரத்து உள்கட்டமைப்பு

- தேசிய முதலீட்டு மற்றும் உள்கட்டமைப்பு நிதியம் (NIIF - National Investment and Infrastructure Fund) ஒரு தனியார் முதலீட்டு நிறுவனமான ரோடிஸ் மற்றும் உலகளாவிய போக்குவரத்து உள்கட்டமைப்பை செயல்படுத்தும் நிறுவனம் ஆகியவை இணைந்து இந்தியாவில் சாலைத் திட்டங்களில் 2 பில்லியன் டாலர்கள் மதிப்பில் முதலீடு செய்வதற்கான ஒரு தளத்தை உருவாக்கியுள்ளன.
- NIIF என்பது இந்தியாவின் முதலாவது தன்னிச்சையான சொத்து நிதியம் ஆகும். இது இந்திய அரசால் 2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இந்த நிதியை உருவாக்கப்பட்டதன் நோக்கமானது புதிதாகத் தொடங்கப்படவுள்ள திட்டங்கள் மற்றும் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள வணிக ரீதியிலான திட்டங்களில் உள்கட்டமைப்பு முதலீட்டின் மூலம் பொருளாதாரத் தாக்கத்தை அதிகப்படுத்துவதாகும்.
- NIIF-க்கான மூலதனமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் உள்ள நிறுவன முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்படுகின்றது.

## தரநிலை மற்றும் ஒப்புமை மதிப்பீடு

- தரநிலை மற்றும் ஒப்புமை மதிப்பீட்டுத் துறையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக இந்தியத் தரநிலை அமைப்பானது டெல்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- ஐஐடி – டெல்லி ஆனது தரநிலையாக்கத்திற்குத் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான உள்கட்டமைப்பு வசதியை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. BIS (Bureau of Indian Standards) ஆனது இத்திட்டங்களுக்காக ஐஐடி-டெல்லிக்கு நிதியுதவியை அளிக்கும்.
- BIS என்பது BIS சட்டம், 2016-ன் கீழ் உருவாக்கப்பட்ட இந்தியாவின் தேசியத் தரநிலைகள் அமைப்பாகும். BIS-ன் பொது இயக்குநர் சுரினா ராஜன் ஆவார்.

## பேம் 2

- பேம் 2 (இந்தியாவில் கலப்பு மற்றும் மின்சார வாகனங்களின் தயாரிப்பு மற்றும் துரிதமாக அவற்றை ஏற்றுக் கொள்ளுதல்) திட்டமானது காரீய - அமில மின்கலன்களால் இயங்கும் மின்சார வாகனங்களை தனது திட்டத்தின் வரம்பிலிருந்து நீக்கியுள்ளது. இது மேம்படுத்தப்பட்ட மின்கலன்களால் இயங்கும் வாகனங்களுக்கு மட்டும் மானியம் வழங்க அனுமதிக்கிறது.




- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து பேம் 2 அல்லது பேம் திட்டத்தின் இரண்டாம் நிலையானது செயல்படுத்தப்படுகின்றது. இது 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- பேம் இந்தியாவானது தேசிய மின்சாரப் போக்குவரத்துத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது மானியங்கள் வழங்குவதன் மூலம் வணிக ரீதியில் இயங்கும் மின்சார வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதையும் மின்சாரப் போக்குவரத்தை அதிகரிப்பதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- பேம் திட்டமானது தொழில்நுட்ப வளர்ச்சி, தேவை உருவாக்கம், சோதனைத் திட்டங்கள் மற்றும் கட்டுமானத் திட்டங்கள் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.

## ITBP வாக்குகள்

- 2019 ஆம் ஆண்டின் மக்களவைப் பொதுத் தேர்தலுக்காக இந்தோ - திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையைச் (Indo-Tibetan Border Police - ITBP) சேர்ந்த வீரர்கள் முதலாவதாக வாக்களித்துள்ளனர். இவர்கள் பணியாளர் வாக்காளர்களாக (சர்வீஸ்) அருணாச்சலப் பிரதேசத்தில் தங்களது வாக்கைப் பதிவு செய்தனர்.
- இந்திய நாட்டின் முதலாவது வாக்கானது ITBP-ன் விலங்குகள் பயிற்சிப் பள்ளியின் தலைவரான டிஐஜி சுதாகர் நடராஜன் என்பவரால் பதிவு செய்யப்பட்டது.
- பாதுகாப்பு மற்றும் துணை இராணுவப் படையைச் சேர்ந்த பணியாளர் வாக்காளர்கள் தபால் மூலமோ அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட நபர்கள் மூலமோ வாக்கைப் பதிவு செய்ய முடியும்.

### *சர்வீஸ் வாக்காளர்கள்*

- சர்வீஸ் வாக்காளரின் மனைவி சர்வீஸ் வாக்காளராகப் பதிவு செய்யப்படுவார். ஆனால் அவரது குழந்தைகள் சர்வீஸ் வாக்காளர்களாக பதிவு செய்யப்படுவதில்லை.
- பின்வரும் பிரிவைச் சேர்ந்தவர்கள் சர்வீஸ் வாக்காளர்கள் ஆவர்.

| |
|---|
| Member of Armed Forces |
| Member of Assam Rifles, CRPF, BSF, ITBF, GREF in Border Roads Organisation and Central Industrial Security Force. |
| Employed by the Government of India in a post outside India. |
| Member of an armed police force of a state, and serving outside that state. |

## சான்றளிக்கப்படாத விளம்பரங்கள்

- இந்தியத் தேர்தல் ஆணையமானது வாக்களிக்கும் தினம் அல்லது அதற்கு முந்தைய 48 மணி நேரத்தில் சோதனைகள் குழுவால் முன்னரேச் சான்றளிக்கப்பட்ட அரசியல் விளம்பரங்கள் தவிர மற்ற அனைத்து அரசியல் விளம்பரங்களையும் தடை செய்துள்ளது.
- ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவானது மாநில மற்றும் மாவட்ட அளவில் அனைத்து அரசியல் விளம்பரங்களையும் ஆய்வு செய்துச் சான்றிதழ்களை அளிக்கும்.
- தற்பொழுது வாக்குப் பதிவு நிறைவடைய இருக்கும் முந்தைய 48 மணி நேரத்தில் தேர்தல் விளம்பரங்களை மின்னணு ஊடகங்களின் மூலம் மேற்கொள்ளத் தடை செய்யப்பட்டுள்ளது.

## பசுமை மற்றும் இயற்கை நிலத் தோற்றம்

- "பசுமை மற்றும் இயற்கை நிலத் தோற்றம்" என்பதன் மீதான தேசியக் கருத்தரங்கானது மத்தியப் பொதுப் பணித் துறையினால் ஒருங்கிணைக்கப்பட்டது.
- இந்தக் கருத்தரங்கானது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சமூக இயற்கை நிலைப்புத் தன்மையில் முக்கியப் பங்கு வகிக்கும் பசுமை நகரப் பகுதிகளின் மீது கவனத்தைச் செலுத்தியது.
- பசுமை நகரப் பகுதிகள் என்பது பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், மரக் கட்டைகள், இயற்கைப் புல்வெளிகள், ஈர நிலங்கள் மற்றும் இதர நகரச் சுற்றுச் சூழல்கள் போன்ற இயற்கைப் பகுதிகளைக் குறிக்கும்.

## NIRF தரவரிசை

- 2019 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கான தேசிய நிறுவனங்களுக்கான தரவரிசைக் கட்டமைப்பு (NIRF - National Institutional Ranking Framework) வரிசையை இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் வெளியிட்டுள்ளார்.
- 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 அன்று NIRF ஆனது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு தொடங்கப்பட்டது.
- இதன் முதலாவது தர வரிசைப் பட்டியல் 2016-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- தரவரிசை அளவுருக்களானது கற்பித்தல், கற்றல் மற்றும் வளங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில்சார் நடைமுறைகள், பட்டப் படிப்பு முடிவுகள், அனைவரையும் சென்றடையக் கூடிய மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நுண்ணறிவு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

- மதராஸில் உள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனமானது (The Indian Institute of Technology - IIT) உயர் நிறுவனங்களின் ஒட்டு மொத்த தேசியத் தர வரிசையில் முதலிடத்தில் உள்ளது.

| CATEGORY | TOP INSTITUTE/ UNIVERSITY |
|---|---|
| **Overall** | IIT Madras |
| **Engineering** | IIT Madras |
| **Law** | National Law School of India University, Bengaluru |
| **Architecture** | IIT Kharagpur |
| **Medical Institutes** | AIIMS New Delhi |
| **Colleges** | Miranda House |
| **Pharmacy** | Jamia Hamdard |
| **Indian Management institutes** | IIM Bangalore |
| **Universities** | IISc Bangalore |

- தரவரிசையில் முன்னிலையில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு கல்லூரிகள் பின்வருமாறு

| Category | Name | Rank |
|---|---|---|
| COLLEGES | Presidency College | 3 |
| | Loyola College | 6 |
| UNIVERSITY | Anna University | 7 |
| | Amrita Viswa Peedam | 8 |
| ENGINEERING | IIT Madras | 1 |
| | Anna University | 9 |
| | NIT Trichy | 10 |
| PHARMACY | JSS College, Nilgiris | 10 |
| ARCHITECTURE | NIT Trichy | 7 |
| | Anna University | 12 |
| MEDICINE | CMC, Vellore | 3 |
| | Amrita Viswa Peedam | 5 |
| | JIPMER, Pondicherry | 8 |
| | SRMC, Chennai | 11 |
| MANAGEMENT | IIM, Trichy | 14 |
| OVERALL | IIT Madras | 1 |

## ARIIA

- ❖ இந்தாண்டில் (2019) முதன் முறையாக NIRF-ன் கீழ் புத்தாக்க சாதனைகள் மீதான நிறுவனங்களின் அடல் தரவரிசையானது (ARIIA - Atal Ranking of Institutions on Innovation Achievements) அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- ❖ இந்தியாவில் உள்ள நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கான ARIIA தர வரிசையானது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே “புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவு வளர்ச்சி” தொடர்பான குறிகாட்டிகள் மீது பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றது.
- ❖ மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது ARIIA-ன் தர வரிசையில் முதலிடத்தில் வகைப்படுத்தப் பட்டுள்ளது.

## VVPAT சரிபார்ப்பு

- ❖ இந்திய உச்ச நீதிமன்றமானது ஒவ்வொரு சட்டமன்றப் பகுதி/தொகுதியிலும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை முறையை (voter verified paper audit trial - VVPAT) தோராயமாக 5 வாக்குப் பதிவு இயந்திரங்களுக்கு அதிகரிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.
- ❖ இந்தியத் தேர்தல் ஆணையத்தின் (ECI - Election Commission of India) முந்தைய வழிகாட்டுதல்களின் படி, அனைத்து சட்டமன்றப் பகுதி/தொகுதிகளில் VVPAT ஆனது ஒரு வாக்குப் பதிவு இயந்திரத்தில் மட்டுமே நேரடியாகச் சரிபார்க்கப்பட்டது.




- ❖ ஏப்ரல் - மே மாதத்தில் நடைபெறவிருக்கும் மக்களவைத் தேர்தலுக்கான இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மாதிரி சரிபார்ப்பானது 4125 வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் VVPAT இயந்திரங்களைக் கொண்டிருக்கும்.

***VVPAT***

- ❖ VVPAT என்பது ஒரு நபர் எந்தக் கட்சிக்கு வாக்களித்தாரோ அந்தக் கட்சியின் சின்னத்தை ஒரு காகிதத்தில் குறிப்பிட்டுக் காட்டும் ஒரு சாதனமாகும்.
- ❖ இந்தக் காகிதமானது ஒரு சிறிய சாளரத்தின் மூலம் 7 வினாடிகள் வெளியில் காண்பிக்கப்பட்டுப் பின்னர் அதற்குரியப் பெட்டியில் விழுந்து விடும். வாக்காளர் அந்தக் காகிதத்தை எடுத்துச் செல்ல முடியாது.

- VVPAT ஆனது வாக்காளர் எந்த வேட்பாளருக்கு வாக்களித்தாரோ அவரின் வரிசை எண், வேட்பாளரின் பெயர் மற்றும் அவருடைய சின்னம் ஆகியவற்றைக் காண்பிக்கும்.

## போல்டு குருஷேந்திரா 2019

- இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் கூட்டு இராணுவப் பயிற்சியின் 12-வது பதிப்பான “போல்டு குருஷேத்திரா 2019” ஆனது உத்தரப் பிரதேசத்தின் ஜான்சியில் உள்ள பாபினா இராணுவ முகாமில் தொடங்கியது.
- மூன்று நாட்கள் நடத்தப்படும் இந்தப் பயிற்சியானது இராணுவத் தொழில்நுட்பம், கடல்சார் பாதுகாப்பு அதிகரிப்பு மற்றும் தீவிரவாதத்திற்கு எதிராகப் போரிடுதலை வலுப் பெறச் செய்தல் ஆகியவற்றை மேம்படுத்தும்.
- 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளானது இந்திய இராணுவம் மற்றும் சிங்கப்பூர் ஆயுதப் படைகளிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக ஒரு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

## நீதிமன்ற வரம்பு - தடை இல்லை

- இந்திய உச்ச நீதிமன்றமானது இன்றிலிருந்து வரதட்சணைக் கொடுமை அல்லது கொடூரம் காரணமாக தனது புகுந்த வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட ஒரு பெண் தனது கணவர் மற்றும் மாமியாருக்கு எதிராக குடியிருக்கும் இடத்திலிருந்தே வழக்குப் பதிவு செய்யலாம் என்று உத்தரவிட்டுள்ளது.
- அந்தப் பெண் இந்தியக் குற்றவியல் சட்டப் பிரிவு 498-ஏ வின் கீழ் எந்தவொரு எல்லை வரம்புமின்றி குற்றவியல் நடைமுறைகளை ஆரம்பிக்க முடியும்.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 177 ஆனது குற்றம் நடைபெற்ற வரம்பில் உள்ள நீதிமன்றங்களில் மட்டுமே வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரித்துத் தண்டனை வழங்குவதைக் கட்டாயமாக்கியுள்ளது.
- இந்த முக்கியமான தீர்ப்பானது ரூபாலி தேவி எதிர் உத்தர பிரதேச அரசு மற்றும் பலர் என்ற வழக்கில் வழங்கப்பட்டது.

## கங்லா தொங்பி போர்

- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 அன்று கங்லா தொங்பி போரின் 75வது ஆண்டு பிளாட்டின நினைவு தினமானது இராணுவப் போர்த் தளவாடப் படையினால் இம்பாலுக்கு அருகில் உள்ள கங்லா தோங்பி போர் நினைவகத்தில் அனுசரிக்கப்பட்டது.
- இது இரண்டாம் உலகப் போரின் மிகக் கடுமையான போராகக் கருதப்படுகின்றது.
- இது 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் 06 ஆம் தேதி இரவு மற்றும் 07 ஆம் தேதியில் ஜப்பானியப் படைகளுக்கு எதிராக 221 மேம்பட்ட போர்த் தளவாட படைப் பிரிவைச் சேர்ந்த வீரர்களால் போரிடப்பட்டது.




- இந்தப் போரானது இரண்டாம் உலகப் போரின் தென் கிழக்கு ஆசிய அரங்கின் ஒரு பகுதியாக ஜப்பானின் பர்மாவை நோக்கிய இலக்கின் மீதான திருப்பு முனைகளில் ஒன்றாகும்.
- இந்தப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் கோஹிமாப் போரும் நடைபெற்றது. இந்த இரண்டு போர்களிலும் மிகப் பெரிய இழப்புகளை ஜப்பான் சந்தித்தது.

## தோம்கார் பாறைக் கலை வளாகம்

- இந்த வளாகமானது காஷ்மீரில் சிந்து நதிக்கரைக்கு அடுத்துள்ள லே நகரத்தில் உள்ள தோம்கார் கிராமத்தில் அமைந்துள்ளது. இது 500 சிற்ப வேலைகளைக் கொண்டுள்ளது.
- 2000 மற்றும் 4000 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாகக் கருதப்படும் இது அதிக அளவிலான பாறைகளில் செதுக்கப்பட்ட ஓவியங்களைக் கொண்டுள்ளது.



- வரலாற்றுக்கு முந்தைய இந்தப் பாறை ஓவியங்களை தனி ஒரு மனிதனாகப் பாதுகாப்பதில் முக்கியக் கருவியாக செயல்பட்ட ஒரு விவசாயியான ஸ்டான்சின் தங்ஜுக் என்பவரது முயற்சியினால் 2012 ஆம் ஆண்டில் இவ்வளாகம் ஏற்படுத்தப்பட்டது.
- பெட்ரோகில்ப்ஸ் (petroglyphs) என்பது பாறைப் பரப்பின் பகுதியை மறு உருவாக்கம் செய்வது, எடுப்பது, செதுக்குவது மற்றும் அகலப்படுத்துவது ஆகியவற்றின் மூலம் பாறைக் கலை வடிவமாக உருவாக்கப்பட்ட உருவங்களாகும்.
- இதன் சேதமடைந்த நிலை காரணமாக இது சமீபத்தில் செய்தியில் வந்துள்ளது.

## மோடி திரைப்படம் - தடை


- தேர்தல் காலத்தின் போது பிரதமர் நரேந்திர மோடி குறித்தத் திரைப்படத்தைத் திரையிடுவதற்கு (திரைப் படத்தின் பெயர் - PM Narendra Modi) இந்தியத் தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.
- இது எந்தவொரு அரசிய கட்சியையோ அல்லது தனி நபர்களையோ காட்சிப்படுத்தும் இது போன்ற திரைப்படங்களை மின்னணு ஊடகங்களில் திரையிடக் கூடாது என்று அறிவுறுத்தியுள்ளது.

## பிரதமர் - வருத்தம் தெரிவித்தல்

- ஏப்ரல் 13 அன்று நிகழும் ஜாலியன் வாலாபாக் படுகொலையின் 100-வது நினைவு தினத்தை முன்னிட்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அந்நாட்டு பிரதமர் தெரசா மே வருத்தம் தெரிவித்தார்.
- ராணி எலிசபெத் இந்த நிகழ்வை, இந்தியாவுடனான பிரிட்டனின் கடந்த கால வரலாற்றில் "துயரத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு உதாரணம்" என்று கூறியதாக தெரசா மே கூறினார்.
- ஆனால் அந்நாட்டின் ஜெர்மி கோர்பைன் தலைமையில் செயல்படும் எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சியானது, ஜாலியன் வாலாபாக் படுகொலைக்காக அந்நாட்டின் பாராளுமன்றத்தில் பிரிட்டிஷ் அரசானது “முழு மனதுடன் மன்னிப்பு கேட்க வேண்டும்” என்று கூறியுள்ளது.

## முதல் கட்ட வாக்குப்பதிவு

- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 அன்று நாடாளுமன்றத் தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப் பதிவு தொடங்கியிருக்கின்றது. 2019 ஆம் ஆண்டு மே 19 அன்று நாடாளுமன்றத் தேர்தலுக்கான 7-வது மற்றும் இறுதிக் கட்ட வாக்குப் பதிவு நடைபெறவிருக்கின்றது.




- ஆந்திரப் பிரதேசம் (25), தெலுங்கானா (17), உத்தரகாண்ட் (5), மேகாலயா (2) மற்றும் அருணாச்சலப் பிரதேசம் (2) உள்பட 20 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் மொத்தம் 91 இடங்களுக்கான வாக்குப் பதிவு தொடங்கியிருக்கின்றது.

## பள்ளிக் குழந்தைகளின் சுகாதாரம்

- சுகாதார நல ஆலோசனை வழங்கக் கூடிய பகுதிகளில் பணியாற்றும் ஒரு அமைப்பான ஜர்மா வெல்னஸ் அமைப்பானது பல்வேறு சமூக-பொருளாதார பின்னணியைக் கொண்ட பள்ளி செல்லும் 2 இலட்சம் குழந்தைகளிடையே ஒரு சுகாதார ஆய்வை நடத்தியது.
- இது "பள்ளிகளின் திறன் மற்றும் தாக்கங்களை மேம்படுத்துதல்: பள்ளி சுகாதார முதல் கட்ட சோதனைத் திட்டத்திலிருந்து பெறப்பட்ட நுண்ணறிவு" என்ற தலைப்பைக் கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

*முடிவுகள்*

- உடல் பருமன், பார்வைக் குறைபாடு மற்றும் பல் தொடர்பான பிரச்சனைகள் போன்றவை இந்தியா முழுவதும் 2 வயது முதல் 17 வயது வரை உள்ள பள்ளி செல்லும் குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளாகும்.
- 30.4 சதவிகித மாணவர்கள் இயல்பற்ற பிஎம்ஐ (உடல் பொருண்மை எண்) கொண்டவர்களாக உள்ளனர். இரண்டு மாணவர்களில் ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி தேவைப்படுகின்றது.

## இந்திய நகரங்கள் மற்றும் காற்று மாசுபாடு


- இந்திய நகரங்களில் உள்ள அபாயகரமான காற்று மாசுபாட்டு நிலையை எடுத்துக் காட்டுவதற்காக "2014-2019 ஆகிய வருடங்களுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில் இந்தியாவில் காற்றின் தரம் மீதான அரசியல் தலைவர்களின் நிலை மற்றும்

நடவடிக்கைகள்" என்ற தலைப்பு கொண்ட அறிக்கையை காலநிலை போக்குகளுக்கான சுற்றுச்சூழல் குழு என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.

- இது பிரதமர் நரேந்திர மோடியின் மக்களவைத் தொகையான வாரணாசியானது உலக சுகாதார நிறுவனத்தின் மிகவும் மாசுபட்டுள்ள 15 நகரங்களின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது என்று கூறுகிறது.
- இது வாரணாசியில் நிலைமை மோசமடைந்துள்ளது என்று கூறுகிறது. ஆனால் அரசு அதன் அழகுபடுத்தல் மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றில் மட்டுமே கவனத்தைச் செலுத்துவதாகக் கூறுகிறது.
- வாரணாசி நகரத்தில் அதிக அளவிலான கட்டுப்பாடற்ற கட்டுமானத்தின் காரணமாக ஒவ்வாமை மற்றும் சுவாசப் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
- வாரணாசியின் காற்றுத் தரக் குறியீடானது 2017 ஆம் ஆண்டில் 490 என்ற மிகவும் அபாயகரமான நிலையிலும் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 384 என்ற மிகவும் மோசமான நிலையிலும் இருந்தது.

| Air Quality Index | Status |
|---|---|
| 0 – 50 | Good |
| 51 – 100 | Satisfactory |
| 101 – 200 | Moderate |
| 201 – 300 | Poor |
| 301 – 400 | Very Poor |
| 401 – 500 | Severe |

- லக்னோ மற்றும் கான்பூர் ஆகிய பாராளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் காற்று மாசுபாட்டுப் பிரச்சினை குறித்து எதுவும் கண்டு கொள்வதில்லை என்று அந்த அறிக்கை கூறுகிறது.
- மத்திய உள்துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் மற்றும் மூத்த பாஜக தலைவரான முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் முறையே லக்னோ மற்றும் கான்பூர் பாராளுமன்றத் தொகுதிகளின் உறுப்பினர்களாவர்.




## வீர் பரிவார் செயலி

- இந்தியக் குடியரசுத் தலைவர் மத்திய ரிசர்வ் காவற்படையின் (CRPF - Central Reserve Police Force) 54-வது வல்லமை தினக் கொண்டாட்டத்தின் போது (ஏப்ரல் 09) "வீர் பரிவார் செயலியைத்" தொடங்கி வைத்தார்.
- இது எல்லைப் பகுதிகளில் பணியாற்றும் போது கொல்லப்பட்ட CRPF வீரர்களின் குடும்பங்களுக்கான ஒரு கைபேசிச் செயலியாகும்.
- வீர் பரிவார் செயலியானது கொல்லப்பட்ட வீரர்களின் குடும்பங்களின் கைபேசிகளில் பாதுகாப்பான முறையில் நிறுவப்பட விருக்கிறது. இது செயலிப் பட்டியலில் (Stores) இருக்காது.
- இந்தச் செயலியானது பண வழங்கீடுகள், ஓய்வூதிய நலன்களை வழங்குதல் ஆகியவை தொடர்பாக இறந்த CRPF வீரர்களின் குடும்பங்களுக்கு நிகழ்நேர உதவியை அளிக்கும்.

## வளர்ச்சி உதவி

- நேபாளத்தில் 25 படுக்கை வசதி கொண்ட மகப்பேறு மருத்துவமனையை இந்தியா கட்டியுள்ளது. இந்த மருத்துவமனை சந்திர நாராயண் யாதவ் நினைவு மகப்பேறு மருத்துவமனை என்று அழைக்கப் படும்.
- இந்த மருத்துவமனையானது இந்திய அரசின் சிறு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (SDP - Small Development Projects Scheme) கட்டப்பட்டுள்ளது.
- SDP ஆனது ஆப்கானிஸ்தான், நேபாளம், பூடான், வங்காள தேசம் மற்றும் மியான்மர்

போன்ற அண்டை நாடுகளுக்கு இந்திய வளர்ச்சி உதவியின் ஒரு தூணாக உள்ளது.

- இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு முக்கிய அம்சம் வளர்ச்சி உதவியாகும்.

## ரயில்வயர் வை-பை

- மும்பையில் உள்ள சாந்தாகுரூஸ் இரயில் நிலையமானது ரயில்வயர் வை-பை மண்டலத்தைப் பெற்ற 1600-வது இரயில் நிலையமாக உருவெடுத்துள்ளது.
- ரயில்வயர் என்பது ரயில் டெல்லின் ஒரு வணிக அலைவரிசை முன்னெடுப்பாகும்.
- ஏற்கனவே இரயில் டெல் என்ற அமைப்பானது 985 இரயில் நிலையங்களுக்கு அதிவேக வை-பை வசதியை வழங்கியுள்ளது.
- இந்திய ரயில்டெல் கழகமானது இந்திய அரசின் மினிரத்னா பொதுத்துறை நிறுவனமாகும்.
- இது நாட்டில் மிகப்பெரிய நடுநிலையான தொலைத் தொடர்பு கட்டமைப்பு வழங்குநர்களில் ஒன்றாகும்.

## ஷரத்து 324

- இந்தியத் தேர்தல் ஆணையமானது ஷரத்து 324-ன் கீழ் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி நாடாளுமன்றத் தேர்தல் நிறைவுடையும் வரை மூன்று அரசியல் சார்ந்த திரைப் படங்களுக்குத் தடை விதித்துள்ளது.
- அரசியலமைப்பின் ஷரத்து 324-ன் கீழ், தேர்தலை நடத்துவது மற்றும் கட்டுப்பாடுகளை விதிப்பது ஆகிய அதிகாரங்கள் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்து வேட்பாளர்களுக்கும் ஒரு சமநிலையை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இதன் பணியாகும்.
- 2013 ஆம் ஆண்டில் சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம் எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றமானது நியாயமான மற்றும் நேர்மையான தேர்தலானது இந்திய அரசியலமைப்பின் "அடிப்படைக் கட்டமைப்பின்" ஒரு பகுதி என்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

| Movie | Personality |
|---|---|
| **Udyama Simham** | K Chandrasekar Rao |
| **Lakshmi's NTR** | NT Rama Rao |
| **PM Narendra Modi** | Narendra Modi |

## ரபேல் குறித்து இந்திய உச்சநீதிமன்றம்

- இந்திய உச்ச நீதிமன்றமானது ரபேல் ஒப்பந்தம் குறித்த பல ஆவணங்கள் திருடப்பட்டவையாக இருப்பதால் அது குறித்து நீதிமன்றங்களினால் விசாரணை செய்யக்கூடாது என்ற வாதங்களைத் தள்ளுபடி செய்துள்ளது.

- பிரெஞ்சு உற்பத்தியாளரான டசால்ட் நிறுவனத்துடன் 136 ரபேல் போர் விமானங்களை வாங்குவதற்காக பல ஆண்டுகளாக தொழில்நுட்ப விவாதங்கள் மற்றும் சமரச முயற்சிகள் நிகழ்ந்த போதிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சு வார்த்தைகளைக் கைவிட 2015 ஆம் ஆண்டில் பிரதமர் முடிவு செய்தார்.
- இவர் முந்தையதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட 36 ரபேல் போர் விமானங்களை மட்டுமே வாங்குவதற்காக ஒரு புதிய அரசுகளுக்கிடையேயான ஒரு ஒப்பந்தத்தை அறிவித்தார்.
- பல மனுதாரர்கள் இந்த ஒப்பந்தம் குறித்து இந்திய உச்ச நீதிமன்றம் விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். ஆனால் 2018 ஆம் ஆண்டில் இந்திய உச்ச நீதிமன்றமானது இதில் தலையிடுவதில்லை என்று முடிவு செய்து மனுக்களை தள்ளுபடி செய்தது.
- 2019 ஆம் ஆண்டில், தி இந்து நாளிதழைச் சேர்ந்த என். இராம் என்பவர் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் கோப்புகளை வெளியிட்டார். அவையாவன
    - பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் சமரசக் குழுவானது பிரதம அமைச்சரக அலுவலகம் டசால்ட் நிறுவனத்துடன் தனிப்பட்ட சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக புகார் தெரிவித்தது.
    - இந்த தனிப்பட்ட பேச்சுவார்த்தைகளானது இந்தியாவின் நிலையை வலுவிழக்கச் செய்தது. இது ஒரு சிறந்த ஒப்பந்தத்தைத் தடை செய்தது.
    - வங்கி உத்தரவாதங்கள் மற்றும் ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் போன்ற இந்தியாவிற்கான தரநிலைகளுக்கான பகுதிகளைப் பிரெஞ்சு அரசு நீக்க அனுமதிக்கப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்ட இந்த வழக்கின் மனுதாரர், தி இந்து நாளிதழின் ஆவணங்களின் அடிப்படையில் மீண்டும் உச்ச நீதிமன்றத்தை அணுகி சீராய்வு மனுவைத் தாக்கல் செய்தார்.
- இந்திய அரசானது இந்த ஆவணங்கள் திருடப்பட்டவை என்றும் பிரதி எடுக்கப்பட்டவை என்றும் இது குறித்து மேலும் விசாரணை மேற்கொண்டால் தேசப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் உச்சநீதிமன்றத்திடம் வாதிட்டது.
- இந்திய உச்ச நீதிமன்றம் இந்த வாதங்களை முற்றிலும் தள்ளுபடி செய்து அதனை மீண்டும் சீராய்விற்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்தது. தி இந்து நாளிதழ் வெளியிட்ட சான்றுகளின் நம்பகத் தன்மையையும் ஒப்புதலையும் உச்ச நீதிமன்றம் சரிபார்த்தது.

## பார்மாகோவிஜிலென்ஸ் திட்டம்

- இந்திய பார்மாகோவிஜிலென்ஸ் திட்டத்தின் (PvPI - Pharmacovigilance Programme of India) தேசிய ஒத்துழைப்பு மையமானது பொதுவாகப் பயன்படுத்தப்படும் 7 நுண்ணுயிர்க் கொல்லிகளிலிருந்து பதிவாகிக் கொண்டிருக்கும் எதிர்மறை விளைவுகள் குறித்து ஒரு எச்சரிக்கையை எழுப்பியுள்ளது.
- அந்த 7 நுண்ணுயிர்க் கொல்லிகளாவன

| | |
|---|---|
| Cefotaxime | Ofloxacin |
| Cefixime | Tranexamic Acid |

| | |
|---|---|
| Quetiapine | Sulfasalazine |
| Sodium Valproate | |

- மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பானது இந்த மருந்துகளின் எதிர்விளைவுகள் பற்றி மக்களுக்குத் தெரிவிக்க மருந்துப் பொட்டலங்களில் அல்லது விளம்பரத் தொகுப்புகளில் துண்டுப் பிரசுரங்களைச் செருக வேண்டும் என்று மருந்து உற்பத்தியாளர்களை அறிவுறுத்தியுள்ளது.
- PvPI ஆனது மத்திய சுகாதார அமைச்சகத்தின் கீழ் மருந்துக் கண்காணிப்பாளராகச் செயல்படுகின்றது.

## பிற்காலச் சேர்க்கை

- வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்வாக மத்திய பொதுப் பணியாளர் தேர்வாணையமானது (UPSC - Union Public Service Commission) மத்திய அரசுத் துறைகளில் 9 பொதுத் துறை நிபுணர்களை இணைச் செயலாளர்களாக நியமித்துள்ளது.


| Name | Department |
|---|---|
| **Kakoli Ghosh** | Agriculture, Co-operation and Farmers Welfare |
| **Amber Dubey** | Civil Aviation |
| **Arun Goel** | Commerce |
| **Rajeev Saksena** | Economic Affairs |
| **Sujit Kumar Bajpayee** | Environment, Forest and Climate Change |
| **Saurabh Mishra** | Financial Services |
| **Dinesh Dayanand Jagdale** | New and Renewable Energy |
| **Suman Prasad Singh** | Road Transport and Highways |
| **Bhushan Kumar** | Shipping |

- இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் என்ற பதவியில் இல்லாமல் செயலாளர்களாக பதவி வகித்த புகழ்பெற்ற நபர்களில் நிதித் துறை செயலாளராகப் பணியாற்றிய விஜய் கேல்கர், வணிக மற்றும் நிதித் துறை செயலாளராகப் பணியாற்றிய மாண்டேக் சிங் அலுவாலியா ஆகியோர் அடங்குவர்.

## தேர்தல் பத்திரத் திட்டம்

- இந்திய உச்சநீதிமன்றமானது அனைத்து அரசியல் கட்சிகளும் தாங்கள் பெற்ற தேர்தல் பத்திரங்கள் விவரங்களை மூடிய உறையில் வைத்து தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.
- மேலும் தகவல்களுக்கு இந்த இணைப்பைப் பயன்படுத்தவும்

https://www.tnpscthervupettagam.com/sbi-to-issue-and-encash-electoral-bonds/ .




*குறைகள்*

- தேர்தல் பத்திரங்களை தவறாகப் பயன்படுத்துவதற்கு அதிக வாய்ப்புள்ளன. ஏனெனில் தேர்தல் பத்திரங்களை வாங்கும் தனிநபர்கள் அதனை பொதுத் தளத்தில் வெளிப்படுத்துவதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன.
- தேர்தல் பத்திரங்களானது தேர்தல் நிதியுதவி வழங்குதலை மிகவும் சிக்கலாக மாற்றுகின்றது. இது அரசியல் துறையில் மிக அதிக அளவிலான கறுப்புப் பணத்தை உள்ளே கொண்டு வரும்.
- நிறுவனங்கள் வரி விதிக்காத நாடுகளில் பதுக்கி வைத்துள்ள தங்களது கறுப்புப் பணத்தை மீண்டும் அதை அரசியல் கட்சிக்கு கொடுப்பதற்கு ஒரு சட்டவழிப் பாதையாக இதைப் பயன்படுத்துகின்றன.
- தேர்தல் பத்திரங்கள் நிறுவன நன்கொடைகளின் மீது அதிகபட்சமான 7.5 சதவிகித உச்ச வரம்பை ஒழிக்கிறது. அதாவது இழப்பு ஏற்படுத்தும் நிறுவனங்கள் வரம்பற்ற நன்கொடைகளை அளிக்க முடியும்.

## அஸ்ஸாம் ரைபில்ஸ்


- "வடகிழக்கு மாநிலங்களின் சென்டினல்கள்" என்று அழைக்கப்படும் அஸ்ஸாம் ரைபில்ஸானது இந்தியாவின் பழமையான துணை இராணுவப் படையாகும்.
- இது பிரிட்டிஷாரால் 1835 ஆம் ஆண்டில் "கச்சா லெவி" என்று அழைக்கப்படும் ஒரு துணை இராணுவப் படையாக உருவாக்கப்பட்டது.
- அஸ்ஸாம் ரைபில்ஸின் ஆங்கிலேயரல்லாத முதலாவது பொது இயக்குநர் கர்னல் சிதிமான் ராய் எம்சி என்ற படைத் தளபதி ஆவார்.




- இந்திய அரசு (துறைகளை ஒதுக்குதல்) விதிகள், 1961 ஆனது அஸ்ஸாம் ரைபில்ஸை தலைமை "காவல் துறை"யாக வைத்துள்ளது. ஆனால் அஸ்ஸாம் ரைபில்ஸின் குறிக்கோள்கள் மற்றும் செயல்பாடுகள் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படையைப் போன்றதாகும்.
- அஸ்ஸாம் ரைபில்ஸின் நிர்வாகக் கட்டுப்பாடு உள்துறை அமைச்சகத்திடமும் செயல்முறைக் கட்டுப்பாடு பாதுகாப்பு அமைச்சகத்திடமும் உள்ளது.
- இரட்டைக் கட்டுப்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக அனைத்து இந்திய அஸ்ஸாம் ரைபில்ஸ் முன்னாள் சேவைப் பணியாளர் நல மன்றமானது தில்லி உயர் நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்துள்ளது.

## உலகின் மிகப்பெரிய விமானம்

- உலகின் மிகப்பெரிய விமானமானது ஒரு விண்வெளி நிறுவனமான ஸ்ட்ராட்டோலான்ச் என்பதனால் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது தனது முதலாவது விமானப் பயணச் சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.



- ஸ்ட்ராட்டோலான்ச் என்ற நிறுவனமானது மைக்ரோ சாப்ட்டின் இணை நிறுவனரான பால் அலென் என்பவரால் 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்த விமானம் ஒரு மணி நேரத்தில் அதிகபட்சமாக 189 மைல் வேகத்தில் பறந்து சாதனை படைத்துள்ளது.
- இந்த விமானம் கலிபோர்னியாவில் உள்ள மொஜாவே பாலைவனத்தில் 17,000 அடி உயரத்தில் இரண்டரை மணி நேரம் பறந்துள்ளது.

## IMD (India Meteorological Department) – பருவ மழை முன்கணிப்பு

- இந்திய வானிலையியல் துறையானது நீண்ட காலச் சராசரி என்ற அளவில் திட்டமிடப்பட்ட மழை அளவு குறித்த தனது பருவமழை முன்கணிப்பை வெளியிட்டுள்ளது. இது நீண்ட கால சராசரி அளவில் 96 சதவிகிதம் மழை பெய்யும் என்று கணித்துள்ளது.
- LPA-ன் (Long Period Average) 96 சதவிகிதம் என்பது சாதாரண மழைப் பொழிவை விடக் குறைவு என்பதைக் குறிக்கிறது.
- மேலும் தகவல்களுக்கு பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தவும். https://www.tnpscthervupettagam.com/monsoon-prediction/

## நிர்பய்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (Defence Research and Development Organisation) குறைஒலி வேகம் கொண்ட "நிர்பய்" என்ற ஏவுகணையை ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்திலிருந்து வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- பல்வேறு தளங்களிலிருந்து ஏவப்படக் கூடிய திறன் கொண்ட இது நீண்ட தொலைவு சென்று தாக்கி அழிக்கும் குறைஒலி வேகம் கொண்ட ஏவுகணையாகும்.
- நிர்பய் ஏவுகணையானது ஒரு கலப்பு ஏவுகணையாகும். வானூர்தித் தொழில்நுட்பமானது ஏவுகணை போன்று இது செங்குத்தாக மேலெழும்புவதற்கும் விமானம் போன்று கிடைமட்டமாக பறப்பதற்கும் அனுமதிக்கின்றது.
- இது வான் பகுதியில் 100 மீட்டருக்கும் கீழான உயரத்தில் மாக் 0.7 என்ற வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டது.
- இந்த ஏவுகணையானது சிறிது நேரம் இலக்கை நோக்கி சுற்றித் திரிந்து, இலக்கைத் தேடி அதன் பின் இலக்கானது தென்பட்டவுடன் அதைத் தாக்கி அழிக்கும்.
- இந்த ஏவுகணையில் வழிகாட்டு, கட்டுப்பாட்டு மற்றும் ஊடுருவல் அமைப்பானது புவியிடங் காட்டியுடன் கூடிய உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வளைய லேசர் கிரையோஸ்கோப் மற்றும் எம்இஎம்எஸ்-ஐ அடிப்படையாகக் கொண்ட அசைவற்ற ஊடுருவல் அமைப்பு ஆகியவற்றைச் சுற்றி வடிவமைக்கப்பட்டுள்ளது.




## தேர்தல் நடத்தை விதிமீறல்

- ஏப்ரல் 15-ம் தேதியன்று இந்தியத் தேர்தல் ஆணையமானது தேர்தல் நடத்தைகளை மீறியதற்காக பின்வரும் தலைவர்கள் மீது அவர்கள் பிரச்சாரம் செய்வதிலிருந்து ஒரு தற்காலிகமான தடையை விதிக்க ஆணையிட்டு இருக்கின்றது.

| Offender | Time Period |
|---|---|
| **UP CM Yogi Adityanath** | 72 hours |
| **Mayawati** | 48 hours |
| **Union Minister Maneka Gandhi** | 48 hours |
| **Azam Khan, Samajwadi Party** | 72 hours |

- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 123 (ஊழல் செயல்பாடுகள்) என்பதை மீறியதற்காக இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு தனிப்பட்ட உத்தரவில் மாயாவதியைக் கண்டித்துள்ளது.
- ஒரு வேட்பாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ இனம், மதம், சாதி மற்றும் சமூகத்தின் அடிப்படையில் வாக்கு அளிக்கவோ அல்லது வாக்கு அளிக்கக் கூடாது என்றோ தூண்டுவது என்பது பிரிவு 123 என்பதின் கீழ் ஊழல் செயல்பாடு என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றது.

## இந்திய பசிபிக் பிரிவு

- வெளியுறவுத் துறை விவகாரங்கள் அமைச்சகமானது தனது முந்தைய மூன்று பிரிவுகளை ஒன்றிணைப்பதன் மூலம் இந்திய பசிபிக் பிரிவு ஒன்றை உருவாக்கியிருக்கின்றது.

| DIVISION | FOCUS |
|---|---|
| QUAD DIVISION | India’s joint maritime strategy with Australia, Japan and the US |
| ASEAN | Issues concerning the 10 Member countries of South-East Asian grouping |
| IORA (INDIAN OCEAN RIM ASSOCIATION) | 2 dozen odd Indian Ocean Littoral countries with the marked exception of Pakistan and China. |

- 2018 ஆம் ஆண்டில் ஷாங்ரி லா கருத்தரங்கில் பிரதமர் நரேந்திர மோடியால் எடுத்துரைக்கப்பட்ட இந்தியப் பசிபிக் கொள்கையோடு இது ஒத்துப் போகின்றது.




- இந்தியா ஹார்மஸ் நீரிணையிலிருந்து மலாக்கா நீரிணைப் பகுதி வரை உள்ள கடல்சார் வளைவுப் பகுதியை தனது செல்வாக்கு நிறைந்த பகுதியாகக் கருதுகின்றது.
- இந்த நடவடிக்கையின் மூலம் இந்தியா தனது செல்வாக்கை மேற்குப் பசிபிக் பிராந்தியத்திற்கு நீட்டிக்க எண்ணுகின்றது.
- சமீபத்தில் அமெரிக்காவும் தனது பசிபிக் படைப் பிரிவுப் பகுதியை இந்திய பசிபிக் படைப்பிரிவு என்று மறுபெயரிட்டு இருக்கின்றது. இது தனது இந்திய-பசிபிக் கொள்கைக்கு வலிமை கொடுத்திட எண்ணுகின்றது.

## சீ விஜில்

- இதே வகையைச் சேர்ந்த இந்தியக் கடற்படையின் முதலாவது முன்னெடுப்பான சீ விஜில் பயிற்சியானது இந்தியாவின் 7516.6 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட கடல் எல்லை முழுவதிலும் பிரத்யேகப் பொருளாதார மண்டலத்திலும் மேற்கொள்ளப்பட்டது.
- மேலும் விவரங்களுக்கு கீழுள்ள இணைப்பைப் பயன்படுத்தவும். https://www.tnpscthervupettagam.com/exercise-sea-vigil/
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 அன்று சீ விஜில் பயிற்சியானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்தப் பயிற்சியின்போது குறிப்பிடத்தக்க சாதனைகளை எடுத்துரைத்த துணைக் கடற்படை அதிகாரியான எம்எஸ் பவார் என்பவரால் இப்பயிற்சியானது தலைமை தாங்கப்பட்டது.

## உலக பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீடு 2019

- 2019 ஆம் ஆண்டின் உலக பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீட்டில் மொத்தம் உள்ள 180 நாடுகளில் இந்தியா 140-வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது எல்லைகளற்ற செய்தியாளர்கள் (Reporters Without Borders) என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது.
- இந்தக் குறியீட்டில் நார்வே முதலிடத்தில் உள்ளது.
- பாரீஸை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் என்ற அமைப்பானது உலகெங்கிலும் உள்ள பத்திரிக்கையாளர்கள் மீது தாக்குதல்களைத் தடுக்கும் மற்றும் ஆவணப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் ஒரு இலாப நோக்கில்லா நிறுவனமாகும்.

## புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சான்றிதழ்கள்

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வள நிறுவனங்கள் (RECs - Renewable Energy Certificates) சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சான்றிதழ்கள் பெறுவதிலிருந்து விலக்குக் கோரி தில்லி உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளன.
- REC என்பது புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு கொள்கைக் கருவியாகும்.
- இது பின்வருவனவற்றின் கீழ் மொத்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
    - மின்சாரச் சட்டம், 2003
    - தேசிய பருவநிலை மாற்ற நடவடிக்கைத் திட்டம் (NAPCC - National Action Plan on Climate Change), 2003.

## மோடி எழுத்து வடிவம்

- தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சோமநாதர் கோவிலில் மராத்தியர் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த மோடி எழுத்து வடிவத்தின் ஒரு கற்பாறைக் கல்வெட்டானது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- மோடி என்பது மகாராஷ்டிர மாநிலத்தில் முதன்மையாகப் பேசப்படும் மராத்திய மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு எழுத்து வடிவமாகும்.



- இந்தக் கல்வெட்டானது கி.பி.1753 ல் பிரதாப சிம்ஹான் என்பவர் ஆலயத்திற்கு அளித்த நன்கொடைகளைப் பதிவு செய்துள்ளது.

## தொலைபேசி எண் 112

- இந்தியா முழுவதும் பயன்படுத்தப்படும் ஒரே அவசர உதவி எண்ணான 112 என்ற அமைப்பில் 20 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இணைந்துள்ளன.
- அவசர நிலை பதில் உதவி அமைப்பானது (ERSS - Emergency Response Support System) அனைத்து விதமான அவசர நிலைகளையும் சமாளிப்பதற்கு இந்தியா முழுவதும் அவசர உதவி எண்ணான “112” என்ற எண்ணைக் கருதுகின்றது.
- 112 என்ற உதவி எண்ணானது காவல் துறை (100), தீயணைப்பு (101), பெண்கள் (1090) ஆகிய உதவி எண்களின் ஒருங்கிணைப்பாகும்.

### *பெண்கள் பாதுகாப்பு*

- பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக “112 இந்தியா” என்ற கைபேசிச் செயலியில் ஒரு பிரத்தியேக வசதியாக “ஷவுட்” (சப்தமிடு) என்ற வசதி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- “ஷவுட்” வசதியைப் பயன்படுத்தி, பெண்கள் பின்வருபவர்களிடமிருந்து உடனடி உதவியைப் பெற முடியும்.
    - அருகில் உள்ள பதிவு செய்யப்பட்ட தன்னார்வலர்கள்.
    - அவசர நிலை உதவி மையம்
- இந்த திட்டமானது நிர்பயா நிதியின் கீழ் செயல்படுத்தப்படுகின்றது.
- நிர்பயா நிதி என்பது பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட திட்டங்களுக்கான நிதியாகும்.

## ஐஎன்எஸ் இம்பால்

- இந்தியக் கடற்படையானது மும்பையில் உள்ள மசகான் கப்பல் கட்டும் தளத்தில் வழிகாட்டும் ஏவுகணை அழிப்பானான இம்பாலை அறிமுகப்படுத்தியுள்ளது.
- வட கிழக்கு மாநிலத்தில் உள்ள ஒரு நகரத்தின் பெயரால் வழங்கப்படும் முதலாவது போர்க் கப்பல் இதுவாகும்.
- "திட்டம் 15-பி" என்பதின் கீழ் உருவாக்கப்பட்ட மூன்றாவது கப்பல் இம்பாலாகும். இதற்கு முன் இத்திட்டத்தின் கீழ் விசாகப்பட்டினம் மற்றும் மர்மகோவா ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.
- இது மசகான் கப்பல் கட்டும் தளத்தில் கடற்படையின் கடற்படை வடிவமைப்பு இயக்குனரகத்தால் (Directorate of Naval Design) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது.
- இந்தியக் கடற்படைக் கப்பல்களின் பெயர்கள்

| கப்பல் வகை | பெயர் | உதாரணம் |
|---|---|---|
| அழிப்பான்கள் | மாநிலத் தலைநகரம் (அ) பெரும் நகரம் | ஐஎன்எஸ் தில்லி, ஐஎன்எஸ் சென்னை |
| சிறிய ரக போர்க் கப்பல்கள் | மலைத் தொடர்கள், நதிகள், (அ) ஆயுதங்கள் | ஐஎன்எஸ் சிவாலிக், ஐஎன்எஸ் திரிசூல் |
| வழித் துணைக் கப்பல்கள் | சிறிய ரக தனிப்பட்ட ஆயுதங்கள் | ஐஎன்எஸ் கிர்பான் ஐஎன்எஸ் கஞ்சர் |

## வான் கண்காணிப்பு

- இந்திய விமான நிலையங்கள் ஆணையமானது (Airports Authority of India) விண்வெளியை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச வான் போக்குவரத்து கண்காணிப்பு அமைப்பை அளிக்கக்கூடிய அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனமான ஏரோனுடன் இணைந்துள்ளது.
- இந்திய வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் (air traffic controllers - ATC) விமானங்கள் கடற் பரப்பிற்கு மேலே பறக்கும் போது விமானத்தைப் பற்றிய ஒரு மேலான தகவலை மட்டுமே பெறுகின்றனர்.
- இந்த ஒப்பந்தமானது கடற் பரப்பின் மேல் பறக்கும் விமானங்களின் துல்லியமான நிலைமையைக் கண்டறிய இந்தியாவிற்கு உதவும்.


## கடலோர கப்பற்படை கப்பல் - வீரா

- இந்தியக் கடலோரக் காவல்படை கப்பலான வீராவானது ஜெனரல் பிபின் ராவத்-ஆல் ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்கு கடற்படைத் தளத்தில் செயல்நிலைப் படுத்தப்பட்டது.
- இந்த வீரா கப்பலானது லார்சன் & டூப்ரோ நிறுவனத்தால் உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்படும் புதிய தலைமுறைக் கப்பல்களில் மூன்றாவது கப்பலாகும்.




## மூன்றாம் கட்டத் தேர்தல்

- ஏப்ரல் 23 அன்று 116 இடங்களுக்கான மக்களவைத் தேர்தலின் பெரிய மற்றும் மூன்றாவது கட்டத் தேர்தல் நடைபெறுகின்றது.




- குஜராத் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் இத்தேர்தல் நடைபெறுகிறது.
- கேரளாவின் வயநாடு தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிடுகின்றார்.
- ஜம்மு காஷ்மீரில் உள்ள அனந்த்நாக் தொகுதியில் மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது கட்டங்களாக மூன்று பிரிவுகளில் தேர்தல் நடைபெற விருக்கின்றது.
- நாட்டில் இதேபோன்ற ஒரே நாடாளுமன்றத் தொகுதி இதுவாகும்.

## 3100 மருத்துவ கருவிப் பெட்டிகள்

- மத்திய உள்துறை அமைச்சகமானது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு 3100 பாலியல் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரிக்கும் கருவிப் பெட்டிகளை

வழங்கியுள்ளது.


❖ இது வன்புணர்வு விசாரணை கருவிப் பெட்டி எனவும் அழைக்கப்படுகிறது.

❖ இதனைப் பயன்படுத்தி இரத்த மாதிரிகள், விந்தணு மாதிரிகள் மற்றும் இதர ஆதாரங்களை சேகரித்து உடனடியாக மருத்துவ மற்றும் சட்ட விசாரணைகளை போலீசார் மேற்கொள்ள முடியும்.

❖ இந்த கருவிப் பெட்டிகளானது மத்திய அரசின் பெண்கள் நலம் சார் திட்டமான 'நிர்பயா நிதி'யிலிருந்து அளிக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் வாங்கப்பட்டுள்ளன.

## புற்றுநோய் முன்னேற்பாடு

❖ பொருளாதார நுண்ணறிவு அலகு (Economist Intelligence Unit-EIU) எனும் அமைப்பு வெளியிட்டுள்ள புற்றுநோய் முன்னேற்பாடு குறியீட்டில் (Index of Cancer Preparedness-ICP) உள்ள 28 நாடுகளில் இந்தியா 19-வது இடத்தில் உள்ளது.




❖ ICP குறியீடானது "உலகெங்கிலும் புற்றுநோய்க்கெதிரான தயார்நிலை:ஒரு உலகளாவிய தொற்றுநோய்க்காக தேசிய தயார் நிலை" எனும் அறிக்கையின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ளது.

❖ ICP ஆனது கீழ்க்காணும் மூன்று விரிவான களங்கள் வாரியாக புற்றுநோய்க்கெதிரான தயார் நிலையினை ஆராய்கிறது.

  ○ கொள்கை மற்றும் திட்டமிடல்.
  ○ மருத்துவ கவனிப்பு வழங்குதல்.
  ○ சுகாதார அமைப்புகள் மற்றும் ஆளுமை.

## கங்கை – தனித்துவ பண்புகள்

❖ கங்கையின் தனித்துவமான பண்புகளை கண்டறிய மத்திய நீர்வளத்துறை அமைச்சகமானது ஒரு ஆய்விற்கு உத்தரவிட்டுள்ளது.

❖ நாக்பூரை அடிப்படையாகக் கொண்ட NEERI (National Environmental Engineering Research Institute) குழுவானது பாகிரதீ மற்றும் கங்கை ஆகிய நதிகளில் உள்ள 20 மாதிரி

மையங்களிலிருந்து நீரின் தரத்தினை மதிப்பீடு செய்துள்ளது.


- ❖ இந்த ஆய்வானது கதிரியக்கம், நுண்ணுயிரியல் மற்றும் உயிரியல் தரவுருக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ தனிமைப்படுத்தப்பட்ட பாக்டீரியாவை விட மூன்று மடங்கு அதிகமான அளவில் பாக்டீரியா உண்ணிகளின் தொகுதியைக் கங்கையின் தண்ணீர் மாதிரிகள் கொண்டிருந்தன.
- ❖ பாக்டீரியா உண்ணிகள் என்பது பாக்டீரியாவை கொல்லும் ஒருவகை வைரஸ் ஆகும்.
- ❖ இவை பொதுவாக ஓம்புயிரிக்கு மட்டுமல்லாமல் இதர நன்மையளிக்கும் பாக்டீரியாவிற்கும் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை.

***தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆய்வு நிறுவனம்-NEERI***

- ❖ நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் மற்றும் தொற்று நோய்கள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்ற இந்த அமைப்பானது 1858 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- ❖ NEERI ஆனது சுற்றுச்சூழல் அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் ஒரு முன்னோடி ஆய்வகமாகும்.

## பெண் சிசுக் கொலை

- ❖ சிங்கப்பூரில் உள்ள ஆய்வாளர்கள் குழுவால் உலக மக்கள்தொகையின் போக்கு மீதான ஒரு ஆய்வு நடத்தப்பட்டது.
- ❖ இந்த அறிக்கையானது தேசிய அறிவியல் அகாடமியின் முயற்சியில் வெளியிடப்பட்டது.




- ❖ இந்த ஆய்வானது தேர்ந்தெடுக்கப்பட்ட பாலின கருக்கலைப்பு காரணமாக உலகமெங்கிலும் குறைந்தபட்சம் 23 மில்லியன் பெண் குழந்தைகள் காணாமல் போய் உள்ளதாக கண்டறிந்துள்ளது.
- ❖ காணமல் போனவர்களில் பெரும்பான்மையினோர் சீனா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பெண்களாவர்.
- ❖ காணாமல் போன பெண்கள் என்றழைக்கப்படுபவர்களில் தோராயமாக 10.6 மில்லியன் பேர் இந்தியாவையும் 11.9 மில்லியன் பேர் சீனாவையும் சேர்ந்தவர்கள்.
- ❖ சீனாவின் ஒரு “குடும்பம் ஒரு குழந்தை கொள்கை” மற்றும் ஆண் குழந்தைகள் மீதான விருப்பம் ஆகியவை இந்தச் சிக்கலை மிகவும் அதிகப்படுத்தியுள்ளது.

## மக்களாட்சி குறியீடு 2018


- பொருளாதார நுண்ணறிவு அலகு (Economist Intelligence Unit-EIU) ஆனது "Democracy Index 2018: Me too? Political participation, protest and Democracy" எனும் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது 2006 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட இந்தக் குறியீட்டின் 11-வது பதிப்பாகும்.
- இந்த அறிக்கையின்படி இந்தியாவானது பின்தங்கிய/குறைபாடுகளுடைய மக்களாட்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- கீழ்க்கண்டவாறு நாடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
    - முழு மக்களாட்சி
    - கலப்பு மக்களாட்சி
    - பின்தங்கிய மக்களாட்சி
    - சர்வாதிகார ஆட்சி

## பல் மருத்துவர்கள் மற்றும் பொது மருத்துவர்கள்

- பல் மருத்துவர்கள் ஒரு இணைப்புப் படிப்பிற்குப் பிறகு பொது மருத்துவர்களாக செயல்பட அனுமதியளிக்க வேண்டி இந்திய பல் மருத்துவக் கழகத்தினால் அளிக்கப்பட்ட முன்மொழிவுகளை நிதி ஆயோக் ஒப்புக்கொண்டுள்ளது.
- இது நாட்டில் குறிப்பாக கிராமப்புறங்களில் நிலவும் மருத்துவர்களின் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்படும் திட்டமாகும்.
- இது பல் மருத்துவ படிப்பிற்குப் பிறகு 3 ஆண்டு கால இணைப்புப் படிப்பைப் பரிந்துரை செய்கிறது.
- இந்த படிப்பின் அனைத்து வரையறைகளும் எம்பிபிஎஸ் படிப்பிற்கு பரிந்துரைக்கப்படும் பாடத்திட்டம், தேர்வு முறைகள், மதிப்பீட்டு முறைகள், பட்டம் மற்றும் பதிவு ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

## அகிம்சா ஆட்டிறைச்சி

- ஹைதராபாத்தை மையமாகக் கொண்டு செயல்படும் செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் (CCMB - Centre for Cellular and Molecular Biology) மற்றும் தேசிய இறைச்சி ஆராய்ச்சி மையம் (NRCM - National Research Centre on Meat) ஆகியவை இணைந்து "அகிம்சா இறைச்சியை" உருவாக்கத் திட்டமிட்டுள்ளன.
- இந்தியாவின் முதலாவது ஆய்வக இறைச்சித் திட்டம் இதுவாகும்.
- ஆராய்ச்சியாளர்கள் விலங்குகளின் வளர்ப்பு இல்லாமலேயே குருத்தணுக்களிலிருந்து இறைச்சி மற்றும் கோழிக் கறியை உருவாக்கவிருக்கின்றனர்.
- கொழுப்பு இல்லாத எலும்பற்ற இறைச்சியை உருவாக்கும் திட்டங்களுக்கு நிதியளிக்கும் உலக நாடுகள் சிலவற்றில் இந்தியாவும் ஒன்றாகும்.




## வெளிநாடு செல்வதற்கான உரிமை

- வெளிநாடு செல்வதற்கான உரிமையானது திருமணம் மற்றும் குடும்பம் போன்று ஒரு உண்மையான மற்றும் அடிப்படை மனித உரிமையானது என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- சதீஷ் சந்திர வெர்மா எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் இந்த தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.
- தமிழ்நாட்டுப் பிரிவைச் சேர்ந்த இந்தியக் காவல்துறை அதிகாரியான சதீஷ் சந்திரா என்பவருக்குத் துறைசார் நடவடிக்கைகளின் காரணமாக தனிப்பட்ட அயல்நாட்டுப் பயணத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது.
- இந்திய உச்ச நீதிமன்றமானது 1978 ஆம் ஆண்டில் மேனகா காந்தி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பைக் குறிப்பிட்டு அவருக்கு வெளிநாடு செல்வதற்கான உரிமையை உறுதி செய்தது.
- மேலும் இது 1958 ஆம் ஆண்டில் கெண்ட் எதிர் டுல்லீஸ் என்ற வழக்கில் அமெரிக்க உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் மேற்கோள் காட்டியது.
- இந்த தீர்ப்பானது, "வெளிநாடு செல்வதற்கான உரிமையானது சமூக மதிப்பு மிக்கது என்றும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த அடிப்படை மனித உரிமையை அது பிரதிபலிக்கிறது" என்றும் கூறியுள்ளது.

## பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளித்தல்

- இந்திய உச்ச நீதிமன்றமானது பில்கிஸ் யக்கூப் ரசோல் பானோ என்பவருக்கு ரூ.50 இலட்சம் நிவாரண உதவித் தொகை வழங்குமாறு குஜராத் அரசிற்கு உத்தரவிட்டுள்ளது.

- இவர் 2002 ஆம் ஆண்டில் நரேந்திர மோடி ஆட்சியின் போது குஜராத்தில் நிகழ்ந்த முஸ்லீம்களுக்கு எதிரான இனவாதப் படுகொலையின் போது பாலியல் சீண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு தற்பொழுது உயிர் வாழ்பவர் ஆவார்.
- பிரிவு 357 ஏ-வை உள்ளிணைப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் குற்றவியல் நடைமுறைச் சட்டமானது திருத்தம் செய்யப்பட்டது.
- பிரிவு 357ஏ ஆனது குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நிவாரணத் தொகை அளிப்பதற்கு ஒரு நிதியை உருவாக்குவதற்காக ஒரு திட்டத்தைத் தயாரிக்க ஒவ்வொரு மாநில அரசையும் கட்டாயமாக்குகின்றது.

## காரியா திருவிழா

- காரியா திருவிழா என்பது திரிபுராவில் உள்ள பழங்குடியினர்களின் மிகப் பெரிய திருவிழாவாகும்.
- இது பெரும்பாலும் சித்திரை மாதத்தின் கடைசி நாளில் தொடங்கி வைகாசி மாதத்தின் ஏழாவது நாள் வரை நடைபெறும்.



- மக்கள் இத்திருவிழாவின் போது மூங்கில் கம்பத்தை வழிபடுகின்றனர். அவர்கள் அக்கம்பத்தை காரியா என்ற கடவுளாகக் கருதுகின்றனர்.
- காரியா நடனத்திலிருந்துப் பெறப்பட்ட பாரம்பரிய நடனம் அல்லது சிவபெருமானின் நடனம் அல்லது இதர கலாச்சார நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து இந்த பூஜை நிகழும்.

## காசி முடியரசுகள்

- தற்போதைய மேகாலயாவை இந்தியாவின் ஒரு பகுதியாக அங்கீகாரம் செய்யும் 1948 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களை மறு ஆய்வு செய்ய காசி முடியரசுகள் அல்லது 25 ஹிமாஸ் கூட்டமைப்புகள் முடிவு செய்துள்ளன.
- இந்த 25 ஹிமாஸ் கூட்டமைப்புகள் ஒரு சயாமினால் ஆட்சி செய்யப்பட்டன (ஹிமாவின் தலைவர் போன்ற அரசர்).

- இவை நடைமுறையில் உள்ள மத்திய சட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட குடிமக்கள் (திருத்த) மசோதா ஆகியவற்றிலிருந்துப் பழங்குடியினர்களின் பழக்கங்கள் மற்றும் மரபுகள் ஆகியவற்றைக் காப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- அனைத்து 25 காசி அரசுகளும் 1947 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் தேதி மற்றும் 1948 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் தேதி ஆகிய காலகட்டத்தில் இந்திய டொமினியனுடன் இணைப்பு ஒப்பந்தம் மற்றும் இணைக்கப்பட்ட ஒப்பந்தம் ஆகியவற்றில் கையெழுத்திட்டுள்ளன.
- ஆனால் அனைத்து முன்னாள் அரசுகளாலும் கையெழுத்திடப்பட்டதைப் போல இவை "ஒன்றிணைப்பு ஒப்பந்தத்தில்" கையெழுத்திடவில்லை.

## சீனா - பால்

- சீனாவில் உற்பத்தி செய்யப்படும் சாக்லேட்டுகள் உள்பட பால் மற்றும் அவற்றிலிருந்துப் பெறப்படும் பொருட்களை உள்நாட்டில் இறக்குமதி செய்வதற்கானத் தடையை இந்தியா நீட்டித்துள்ளது.
- சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பாலில் மெலமைன் இருப்பதாக சந்தேகிக்கப் படுகின்றது.
- துறைமுக சோதனை நிலையங்களில் உள்ள அனைத்து ஆய்வகங்களின் திறனானது "மெலமைன்" சோதனைக்குத் தகுதியுடையதாக மேம்படுத்தப்படும் வரை இந்தத் தடையானது நீட்டிக்கப்பட இருக்கின்றது.
- மெலமைன் என்பது நெகிழிப் பொருட்கள் மற்றும் உரங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு நச்சு இரசாயனமாகும்.
- மெலமைனானது விலங்குகளின் சிறுநீர் பைகளில் கற்களை உருவாக்கும்.
- இது மனிதர்களிடத்திலும் சிறுநீரகக் கற்களை ஏற்படுத்தும்.
- உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளர் மற்றும் பால் நுகர்வாளராக இந்தியா விளங்குகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் இந்தியா 150 மில்லியன் டன் பாலை உற்பத்தி செய்கின்றது.
- பால் உற்பத்தியில் உத்தரப் பிரதேச மாநிலம் முன்னணியில் உள்ளது. இதற்கு அடுத்து இராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## மலேரியா நோயற்ற இந்தியா

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றமானது (ICMR - Indian Council of Medical Research) இந்திய "மலேரியா நோய் ஒழிப்பு ஆராய்ச்சிக் கூட்டிணைவைத்" (MERA - Malaria Elimination Research Alliance) தொடங்கியுள்ளது.
- 2019-ஆம் ஆண்டு ஏப்ரல் 25 அன்று உலக மலேரிய தினக் கொண்டாட்டத்தின் போது இந்தக் கூட்டிணைவு தொடங்கப்பட்டது.
- "கொசுவின் மூலம் பரப்பப்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய திட்டமானது" (NVBDCP - National Vector Borne Diseases Control Program) 2030-ஆம் ஆண்டில் மலேரிய நோயற்ற இந்தியாவை உருவாக்க எண்ணுகின்றது.

- NVBDCP ஆனது மலேரியாவை ஒழிப்பதற்கான ஆராய்ச்சி சார்ந்த திட்டங்களின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.
- மேரா இந்தியா என்பது மலேரியாவை ஒழிப்பதற்காக ஆராய்ச்சிகளை அதிகரிக்கவும் அதற்காக திட்டமிடவும் இணைந்துப் பணியாற்ற பங்களிப்பாளர்கள் ஒன்று கூடுவதாகும்.

### 2019 ஆம் ஆண்டின் QS EMBA தரவரிசை

- பெங்களூருவின் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் (IIM-B) நிறுவன மேலாண்மையின் மேல்நிலை பட்டப்படிப்புக் கல்வியானது ஆசிய பசிபிக் தர வரிசையில் 12-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- மேலும் 2019 ஆம் ஆண்டிற்கான QS Executive MBA தரவரிசையில் உலகளாவிய அளவில் 61-வது இடத்தையும் இது பிடித்துள்ளது.
- இதனால் உலகளவில் உள்ள 100 முன்னணிப் பொருளாதாரக் கல்வியகங்களில் இடம் பிடித்த ஒரே இந்திய பொருளாதாரக் கல்வியகமாக இது மாறியுள்ளது.
- மேலும் IIM-B ஆனது 2019 ஆம் ஆண்டின் தேசிய கல்வியக கட்டமைப்புத் தர வரிசையிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.


### ஏவுகணை ஒப்பந்தம்

- ஏவுகணை கொள்முதல் ஒப்பந்தத்தில் உள்ள நெருக்கடி கால அதிகாரங்களை இந்திய இராணுவம் செயல்படுத்தியுள்ளது.
- பாதுகாப்புத் துறை அமைச்சகமானது முன்னுரிமை அடிப்படையில் ரூ.300 கோடி வரை கொள்முதல் செய்ய அனுமதி அளித்துள்ளது.
- கொள்முதல் செய்யப்படவிருக்கும் ஆயுதங்கள் பின்வருமாறு
    - இஸ்ரேலிடமிருந்து ஸ்பைக் - LR பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள்
    - இரஷ்யாவிடமிருந்து மிகவும் குறுகிய வரம்பு கொண்ட வான் பாதுகாப்பு அமைப்பான இக்லா – S.

## சர்வதேசச் செய்திகள்

### 5G சேவையைப் பெறும் முதல் மாவட்டம்

- 5G பிணையத்தின் சோதனையை நடத்தி உலகின் முதல் 5G சேவை அகலப் பட்டை மற்றும் ஜிகாபைட் அமைப்பு ஆகியவற்றைப் பெற்றுள்ள முதல் மாவட்டமாக சீனாவின் ஷாங்காய் மாகாணமானது உள்ளது .
- 5G பிணையத்தின் இந்த சோதனையானது ஷாங்காயின் ஹாங்கோவ் மாவட்டத்தில் தொடங்கி உள்ளது.
- 4G LTE பிணையங்களை விட 10 முதல் 100 மடங்கு வேகமான பதிவிறக்க வேகங்களுடன் கூடிய 5G ஆனது செல்லுலார் தொழில்நுட்பத்தின் அடுத்த தலைமுறையாகும்.




## ஆசியாவின் மிகப்பெரிய ஆற்றல் சேமிப்பு அமைப்பு

- ஆற்றல் தேவையைக் குறைக்கவும் அவசர கால காப்பு ஆற்றலை இரயில்களுக்கு வழங்கவும் ஜப்பானின் ஒசாகா இரயில் நிலையத்தில் ஆசியாவின் மிகப்பெரிய ஆற்றல் சேமிப்பு அமைப்பு ஒன்றை டெஸ்லா நிறுவனமானது உருவாக்கியுள்ளது.
- இது ஜப்பானின் ஒசாகாவின் இரயில் சேவையை இயக்கும் நிறுவனமான கின் டெட்சுவுடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த 7 மெகாவாட் - மணிநேர அமைப்பானது ஆசியாவின் மிகப்பெரிய ஆற்றல் சேமிப்புத் திட்டம் மட்டுமல்லாமல் ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நான்காவது மிகப் பெரிய சேமிப்புத் திட்டமுமாக உள்ளது.

## ஏகாதிபத்திய சகாப்தம் ரெய்வா

- ஜப்பானின் புதிய இளவரசரான நருஹிதோ என்பவர் கிரிசான்தேமும் சிம்மாசனத்தில் அமரும் நாளான 2019 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியிலிருந்து தனது புதிய ஏகாதிபத்திய சகாப்தமாக ரெய்வாவை ஜப்பான் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்தப் புதிய சகாப்தமானது ஜப்பான் வரலாற்றில் 248-வது சகாப்தமாக இருக்கும்.
- ஜப்பானியப் பேரரசருக்கு எந்த அரசியல் அதிகாரமும் இல்லை. ஆனால் இவர் அந்நாட்டின் மிக முக்கியமான அடையாளத் தலைவராக உள்ளார்.

## இந்தியா – ஆப்பிரிக்கா : IAIARD

- தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி ஆலோசக சேவை வங்கியுடன் இணைந்து நிலத்தால் சூழப்பட்ட ஆப்பிரிக்க நாடான மலாவியில் இந்திய-ஆப்பிக்க வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தை (IAIARD - India-Africa Institute of Agriculture and Rural Development - IAIARD) இந்தியா அமைக்கவிருக்கிறது.

- IAIARD ஆனது மலாவி மற்றும் இதர ஆப்பிரிக்க நாடுகளுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய ஆப்பிரிக்க நிறுவனமாக விளங்கும். மேலும் இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் தங்களது மனித வளங்கள் மற்றும் திறன் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக பயிற்சி பெறவிருக்கின்றனர்.
- இது வேளாண் நிதி மற்றும் நுண் நிதியியல் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்தவிருக்கிறது.
- இந்தியாவால் ஆப்பிரிக்க நாட்டில் உருவாக்கப்பட்ட இது போன்ற வகையைச் சேர்ந்த முதலாவது நிறுவனம் இதுவாகும்.

## உணவுப் பற்றாக்குறை மீதான சர்வதேச அறிக்கை


- ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (Food and Agriculture Organization of the United Nations - FAO) மற்றும் ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம் ஆகியவை ஒன்றிணைந்து உணவுப் பற்றாக்குறை மீதான சர்வதேச அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டில் 53 நாடுகளில் ஏறத்தாழ 113 மில்லியன் மக்கள் மிகக் கடுமையான உணவுப் பற்றாக்குறையை எதிர் கொண்டிருந்தனர் என்பதைக் கண்டறிந்துள்ளது.



- ஏறத்தாழ பட்டினியை எதிர்கொண்டிருக்கும் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் 8 நாடுகளில் உள்ளனர். அந்த நாடுகளாவன: ஆப்கானிஸ்தான், காங்கோ, எத்தியோப்பியா, நைஜீரியா, தெற்கு சூடான், சூடான், சிரியா மற்றும் ஏமன் ஆகியவையாகும்.
- மிகக் கடுமையான உணவுப் பற்றாக்குறை என்பது பட்டினியின் மிகக் கொடிய வடிவமாகும்.

## ஹயபூசா - 2

- ஜப்பானின் விண்கலமான ஹயபூசா-2 ஆனது சமீபத்தில் சிறு கோளின் மீது ஒரு சிறிய குழியை ஏற்படுத்துவதற்காக வெடி மருந்தை அதன் மீது மோதச் செய்தது.
    - இதன் நோக்கமானது சூரியக் குடும்பத்தின் தோற்றம் குறித்து அறிந்து கொள்வதற்காக நிலத்திற்கு அடியில் உள்ள மாதிரிகளை சேகரிப்பதாகும்.



## தேசிய அளவிலான ஐந்தாம் தலைமுறை பிணையம்

- தென் கொரியா நாடானது உலகின் முதலாவது தேசிய அளவிலான ஐந்தாம் தலைமுறை பிணையத் தகவல் தொடர்பைத் தொடங்கியுள்ளது.
- 5G ஆனது தற்பொழுதுள்ள எல்டிஇ அலைவெண் வரிசையின் (600 மெகா ஹெர்ட்ஸ் முதல் 6 ஜிகா ஹெர்ட்ஸ் வரை) அதிர்வெண்ணைப் பயன்படுத்தும்.
- 5G ஆனது 4G-ஐவிட 20 மடங்கு வேகமாக திறன்பேசிகளுக்கு உடனடியாக இணைப்பை ஏற்படுத்தும்.
- இது ஒரு வினாடியில் ஒரு முழுமையான திரைப்படத்தையும் பதிவிறக்கம் செய்ய பயனாளர்களை அனுமதிக்கிறது.
- 5G தொழில்நுட்பமானது ஓட்டுநர் அல்லாத வாகனங்கள் போன்ற சாதனங்களின் எதிர்கால வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.




## ஐஎன்எஸ் கொல்கத்தா மற்றும் ஐஎன்எஸ் சக்தி

- சீனாவின் க்யூங்டோவில் சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 70-வது நினைவு தினத்தை அனுசரிக்கும் ஒரு விழாவில் இந்தியாவைச் சேர்ந்த ஐஎஸ் “கொல்கத்தா” மற்றும் “சக்தி” ஆகிய இரண்டு கடற்படைக் கப்பல்கள் பங்கேற்கவிருக்கின்றன.



- ஐஎன்எஸ் கொல்கத்தா என்பது இந்தியக் கடற்படையின் கொல்கத்தா பிரிவைச் சேர்ந்த இரகசிய வழிகாட்டு-ஏவுகணை அழிப்பின் தலைமைக் கப்பலாகும்.
- இது நிலத்தில் இருக்கும் இலக்கைத் தாக்கி அழிக்கக் கூடிய சீர்வேக ஏவுகணைகள் மற்றும் கடலில் இருக்கும் இலக்கைத் தாக்கி அழிக்கக் கூடிய பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணைகள் போன்ற போர்த் தளவாடங்களைக் கொண்டுள்ளது.
- ஐஎன்எஸ் சக்தி என்பது கப்பல் ஆயுதக் கிடங்காகவும் விநியோகக் கப்பலாகவும் உள்ளது.

## மாலத் தீவுகள்

- மாலத் தீவின் நாடு கடத்தப்பட்ட முன்னாள் அதிபரான முகமது நஷித் என்பவர் அந்நாட்டில் சமீபத்தில் நிறைவு பெற்ற தேசியத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.
- இந்த வெற்றி மாலத்தீவு ஜனநாயகக் கட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். அது மக்களின் மஜ்லிஸ் என்ற அவையில் மூன்றில் இரண்டு பங்கு இடங்களை வென்றுள்ளது.
- மக்களின் மஜ்லிஸ் என்பது மாலத்தீவின் ஒற்றை அவை சட்ட சபை அமைப்பு ஆகும்.

## ஆப்பிரிக்கச் சிங்கம் 2019 பயிற்சி

- மொராக்கோ மற்றும் அமெரிக்கா ஆகியோர் ஆதரவளிக்கும் ஆப்பிரிக்கச் சிங்கம் (African Lion) 2019 பயிற்சியானது மார்ச் 16 முதல் ஏப்ரல் 7 வரை மொராக்கோவில் நடைபெற்றது.
- இந்த ஒத்திகையானது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், வான்வழி மற்றும் நிலப்பரப்பு போர்ப் பயிற்சிகள் மற்றும் தந்திரோபாயத் தூண்டல் ஆகிய பயிற்சிகளை உள்ளடக்கியது ஆகும்.
- கூடுதலாக, கனடா, ஸ்பெயின், பிரிட்டன், செனகல் மற்றும் துனிசியா ஆகிய நாடுகளின் இராணுவப் பிரிவினர்களும் இந்த 16வது பதிப்பில் பங்கேற்றனர்.

## ஆஸ்திரேலியா மற்றும் 7 நாடுகளின் இராணுவப் பயிற்சி

- இந்தியா, இலங்கை, மலேசியா, தாய்லாந்து, வியட்நாம், இந்தோனேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய 7 நாடுகளுடன் ஆஸ்திரேலியாவானது இந்தியப் பெருங்கடல் இராணுவப்

பயிற்சியை நடத்துகிறது.

- இதனை மிகப்பெரிய பயிற்சிகளில் ஒன்றாக நடத்துவதற்காக ஆஸ்திரேலியாவானது 1000 இராணுவ வீரர்களுடன் 4 கடற்படைக் கப்பல்கள் மற்றும் ஒரு இராணுவ விமானம் ஆகியவற்றை ஒதுக்கியுள்ளது.
- இந்தப் பயிற்சியானது இந்தியப் பெருங்கடலில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆஸ்திரேலியப் படையினர் இலங்கையிலிருந்துத் தொடங்கி பின்னர் இந்தியாவை அடைந்து அதன் பிறகு மற்ற பங்கேற்பாளர் நாடுகளுக்கும் சென்று இரண்டரை மாதங்களுக்குப் பின்பு அவர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்புவர்.

## பேரிடர் தாங்குதிறன் மீதான ஆசிய வளர்ச்சி வங்கியின் அறிக்கை

- ஆசிய வளர்ச்சி வங்கியானது சமீபத்தில் "ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டம் 2019: பேரிடர் தாங்கு திறனை வலுப்படுத்துதல்" எனும் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, 2016 முதல் 2030 காலகட்டத்தில் வளரும் ஆசியாவில் பேரிடர் தாங்கு திறன் கொண்ட உள்கட்டமைப்பை உருவாக்கத் தேவையான முதலீட்டை 26 ட்ரில்லியன் டாலர்களாக மதிப்பிட்டுள்ளது.
- ஏனென்றால் ஆசியாவில் வளர்ந்து வரும் பொருளாதாரங்களானது இயற்கைப் பேரிடர்களால் மிகவும் பாதிக்கப்பட கூடியவை ஆகும். மேலும் 2000 ஆம் ஆண்டிலிருந்து அது சுமார் 644 பில்லியன் டாலர்கள் அளவிற்கு சேதமடைந்துள்ளன.

## ஈரான் - அமெரிக்கா

- உயரடுக்கு இராணுவப் படையான ஈரானின் "இசுலாமிய புரட்சிப் பாதுகாப்புப் படை" (IRGC - Iran's 'Islamic Revolutionary Guard Corps) தீவிரவாத அமைப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.
- முதன் முறையாக அமெரிக்க நாடானது பிற நாட்டின் இராணுவ அமைப்பை தீவிரவாத அமைப்பாக தேர்ந்தெடுத்துள்ளது.
- இதற்குப் பதிலடி தரும் வகையில், ஈரான் அமெரிக்காவின் மத்திய படைப் பிரிவான மத்தியக் கிழக்கில் உள்ள அமெரிக்கப் படைகளை தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளது.
- IRGC ஆனது 1979 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இசுலாமியப் புரட்சிக்குப் பின்னர் ஈரான் மத குருவின் ஆட்சியைக் காப்பாற்றும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது.
- இது தற்பொழுது ஈரானின் வலிமை மிக்க பாதுகாப்பு அமைப்பாக உள்ளது.

## லிபியா நெருக்கடி நிலை

- இந்தியாவானது லிபியாவின் திரிபோலியிலிருந்து 15 மத்திய ரிசர்வ் பாதுகாப்புப் படை வீரர்களைக் கொண்ட அமைதிப் படைப் பிரிவைச் சேர்ந்த அனைவரையும் அங்கிருந்து

வெளியேற்றியுள்ளது.

- போரினால் பாதிக்கப்பட்ட அந்த நாட்டின் நிலைமையானது தற்பொழுது மிகவும் மோசமடைந்துள்ளது.
- இது 2011 ஆம் ஆண்டில் நீண்ட காலமாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்த மும்மர் கடாபியைப் பதவியிலிருந்து நீக்கிய புகழ்பெற்ற கிளர்ச்சியுடன் தொடங்கியது.
- தற்பொழுது லிபியாவானது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பயிஸ்-அல்-சராஜ் என்பவரால் ஆட்சி செய்யப்படுகின்றது.
- வட ஆப்பிரிக்க நாடான லிபியாவானது மிகப் பெரிய எண்ணெய் வளங்களைக் கொண்டுள்ளது.

## தாய் நாட்டிற்கு பணத்தைத் திருப்பி அனுப்புதல்

- உலக வங்கியின் இடப்பெயர்வு மற்றும் வளர்ச்சி என்ற அறிக்கையின் 2019 ஆம் ஆண்டின் பதிப்பின் படி, வெளிநாட்டில் வாழும் நபர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கு அனுப்பப்பட்ட பணத்தைப் பெற்ற நாடுகளில் உலகின் முன்னணி நாடாக இந்தியா தன் நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் 79 பில்லியன் டாலர்களை இந்தியாவிற்கு அனுப்பியுள்ளனர்.
- வங்கிகள் மூலம் தாய்நாட்டிற்குப் பணத்தைத் திருப்பி அனுப்பும் வழிகளில் வங்கிகள் மூலமான வழி மிகவும் செலவு மிக்கதாக விளங்குகிறது. இதற்கு வங்கிகள் சராசரியாக 11 சதவிகிதத்தைக் கட்டணமாக வசூலிக்கின்றன.

## வளர்ச்சியை விட உயர்ந்த இலட்சியங்கள்

- வளர்ச்சியை விட உயர்ந்த இலட்சியங்கள் என்பது ஐக்கிய நாடுகளின் ஆசியா மற்றும் பசிபிக் ஆகியவற்றிற்கான பொருளதாரம் மற்றும் சமூக ஆணையத்தால் (UNESCAP - UN Economic and Social Commission for Asia and the Pacific) வெளியிடப்படும் ஒரு வருடாந்திர அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையின்படி, நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக வறுமையை ஒழிப்பதற்கு 2030 ஆம் ஆண்டு வரை ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 2 டாலரை (ரூ 140) இந்தியா செலவிட வேண்டும்.
- 2014 ஆம் ஆண்டின் "வறுமை மீதான சி. ரங்கராஜன் குழுவின்" அறிக்கையின்படி இந்தியாவானது ஏறத்தாழ 363 மில்லியன் அளவிற்கு வறுமையில் வாழும் மக்களைக் கொண்டுள்ளது.

### *UNESCAP*

- ESCAP என்பது ஆசியா-பசிபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் பிராந்திய வளர்ச்சி நிறுவனமாகும்.
- இது 1947 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைமையிடம் தாய்லாந்தின் பாங்காக்கில் உள்ளது.
- UNESCAP-ன் நிறுவனர் உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்று ஆகும்.

- UNESCAP ஆனது ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் கீழ் இயங்குகின்றது.

## லார்டு ஹாவ் தீவு

- இந்த ஆண்டில் கடல் வெப்ப நிலை அதிகரிப்பின் காரணமாக உலகின் தென்கோடி முனையில் அமைந்துள்ள பவளப் பாறையான லார்டு ஹாவ் தீவின் பவளப் பாறையானது நிறம் வெளிறலினால் பாதிக்கப்பட்டுள்ளது.
- யுனெஸ்கோவானது லார்டு ஹாவ் தீவை உலக இயற்கை முக்கியத்துவம் வாய்ந்த உலக பாரம்பரிய இடமாக வகைப்படுத்தியுள்ளது.
- இந்த மீதமுள்ள எரிமலைத் தீவானது ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கிடையே தாஸ்மான் கடலில் அமைந்துள்ளது.

### *பவளப் பாறைகள்*

- பவளப் பாறைகள் என்பது "சூசாந்தலே" எனும் நுண்ணுயிர் பாசிகளுடன் ஒன்றுக்கொன்று உதவிக் கொள்ளும் பண்புடன் (பவளத்திற்குள் வாழும்) வாழும் விலங்குகளாகும்.
- சூசாந்தலே ஆனது சூரிய ஒளியை உணவாக மாற்றுகிறது மற்றும் பவளங்களுக்கு 90 சதவிகித ஆற்றல் தேவையைப் பூர்த்தி செய்கிறது. இது பவளங்களுக்குத் தேவையான நிறத்தைக் கொடுக்கிறது.




### *பவள நிறம் வெளிறல்*

- வெப்ப நிலை போன்ற பாதிக்கக் கூடிய நிலைமைகள் ஏற்படும் போது இந்த உறவு முறிந்து நிறம் வெளிறல் ஏற்படுகின்றது. இதன் விளைவாக பவளங்கள் அதன் சூசாந்தலேக்களை வெளியேற்றுகின்றன.
- இது பவளத்தைப் பெரும்பாலும் நிறமற்றதாக ஆக்குகிறது. இது பவளத்தின் பிரகாசமான வெள்ளை நிறத் தோற்றத்தை வெளிப்படுத்துகின்றது.
- ஒன்றுக்கொன்று உதவிக் கொள்ளும் தன்மையுடைய அதன் பாசிகளின் இழப்பு என்பது வெளிறிய பவளங்கள் வலுவற்றதாக இருக்கும்.

## இலங்கை – புதிய ரயில்வே பாதை

- இலங்கையின் கடற்கரை நகரமான மாத்தறை மற்றும் ஹம்பன்தொட்டா மாகாணத்தில் உள்ள பெலியாட்டா ஆகியவற்றை இணைக்கும் வகையில் சீனாவின் உதவியுடன் கட்டப்பட்டுள்ள ஒரு புதிய இரயில் பாதையை இலங்கை திறந்து வைத்துள்ளது.
- 26.75 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட மாத்தறை - பெலியாட்டா இரயில் பாதையானது 1948 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது இரயில் பாதை நீட்டிப்பாகும்.

## ஆளில்லா குட்டி விமானங்கள் – பட்டுவாடா

- கூகுளின் தாய் நிறுவனமான ஆல்பபெட் ஆனது “விங்” என்று பெயரிடப்பட்ட ஆளில்லா குட்டி விமானங்கள் மூலம் சேவை வழங்குதலை மேம்படுத்தியுள்ளது. இது ஆஸ்திரேலியாவில் உள்ள கான்பெரா நகரத்தில் சோதனை முறையில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த ஆளில்லா குட்டி விமானங்கள் உணவு, குளிர் பானங்கள் மற்றும் மருத்துவப் பொருட்கள் ஆகியவற்றை நேரடியாக வாடிக்கையாளரின் வீட்டிற்கே சென்று வழங்க விருக்கின்றன.

## பெஞ்சமின் நெதன்யாகு

- இஸ்ரேல் தேசியத் தேர்தலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு 5-வது முறையாக வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.
- இஸ்ரேல் பாராளுமன்றமான “நெஸட்” ல் மொத்தம் உள்ள 120 இடங்களில் வலது சாரித் தலைவர்களின் லிக்குட் கட்சியானது 35 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. அந்தக் கட்சி மீண்டும் அரசு அமைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- “நெஸட்” என்பது இஸ்ரேல் பாராளுமன்றமாகும்.



- நெதன்யாகு என்பவர் மிக நீண்ட காலம் பதவியிலிருக்கும் பிரதமராக சாதனை

படைக்கவுள்ளார். இதற்குமுன் இஸ்ரேல் நாட்டின் நிறுவனரான டேவிட் பென் குரியோன் என்பவர் இச்சாதனையைப் புரிந்துள்ளார்.

## எச்ஆர் 2123 மசோதா

- ❖ அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையே உத்திசார் உறவை மேம்படுத்துவதற்காக 6 செல்வாக்குள்ள அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு இருகட்சிக் குழுவானது ஒரு புதிய சட்ட மசோதாவான எச்ஆர் 2123 மசோதாவை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது நிறைவேற்றப்பட்டுச் செயல்பாட்டுக்கு வந்தால், "ஆயுதங்கள் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்" நோக்கத்திற்காக அமெரிக்க அரசு இந்தியாவை "நேட்டோ நட்பு நாடு " என்ற அந்தஸ்திற்கு இணையாக நடத்தப்படுவதை அந்தச் சட்டம் உறுதி செய்ய வேண்டும்.
- ❖ இது பாதுகாப்பிற்கான ஆயுத விற்பனையில் இந்தியாவிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற ஒரு வலிமை மிக்க சமிக்ஞையை அனுப்ப எண்ணுகின்றது.

## ரஷ்ய விருது

- ❖ ரஷ்யாவின் உயரிய விருதான "செயிண்ட் ஆண்ட்ரூ தி அப்போஸ்தல்" என்ற பட்டமானது பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- ❖ இந்தப் பட்டமானது இரஷ்யாவின் துறவிகளின் ஆதரவாளர் மற்றும் ஏசுவின் முதல் தூதரான ஆன்ட்ரு என்ற துறவியைக் கௌரவிப்பதற்காக சார் பீட்டர் தி கிரேட் என்பவரால் 1698 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- ❖ இது 1998 ஆம் ஆண்டில் இரஷ்யாவின் உயரிய விருதாக மீண்டும் ஏற்படுத்தப்படும் வரை USSR ஆட்சியில் ஒழிக்கப்பட்டது.
- ❖ இந்தியா மற்றும் இரஷ்யா ஆகிய நாடுகளின் மக்களுக்கிடையே நட்பு ரீதியிலான உறவை மேம்படுத்தியதற்காகவும் இரு நாடுகளுக்கிடையே ஒரு சிறப்பு வாய்ந்த மற்றும் பயன் தரக்கூடிய உத்திசார் பங்களிப்பை ஊக்குவித்ததற்காகவும் இவ்விருது வழங்கப்பட்டு அவர் கௌரவிக்கப்பட்டார்.

## நோட்ரி டேம் தீ

- ❖ புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளின்போது "பாரீசின் நமது பெண்மணி" என்று பொருள்படும் பாரீசின் நோட்ரி டேம் தேவாலயத்தில் தீ பற்றிக் கொண்டது. இதனால் அது குறிப்பிடத்தக்க அளவில் சேதத்தையும் கண்டது.
- ❖ சேதாரங்கள் ஒட்டு மொத்த கூரை மற்றும் முக்கிய கூம்புப் பகுதியின் தகர்வையும் உள்ளடக்கியதாகும்.
- ❖ பிரெஞ்சு கோதிக் கட்டிடக் கலை முறையின் ஒரு மிகச் சிறந்த மாதிரியாக இந்த தேவாலயம் கருதப்படுகின்றது.
- ❖ இதன் கட்டுமானம் 1160 ஆம் ஆண்டில் பிஷப் மௌரைஸ் டி சுல்லி என்பவரது தலைமையில் தொடங்கப்பட்டு 1260 ஆம் ஆண்டு வாக்கில் பெருமளவில் கட்டி

முடிக்கப்பட்டது. இருந்தாலும் பின்தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் இது அடிக்கடி புனரமைக்கப்பட்டது.

- இந்தத் தேவாலயத் தளம் பிரான்சின் மன்னர் என்ற முறையில் நெப்போலியன் தி கிரேட் என்ற மன்னரின் முடிசூட்டு விழா நடந்த தளமாகும்.



- 1831 ஆம் ஆண்டில் தேவாலயத்தின் புதுமையான கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வைப் பரப்பிட வேண்டி விக்டர் ஹியூகோவின் புகழ்பெற்ற நாவலான "நோட்ரி டேமின் கூன்முதுகு" (The Hunchback of Notre-Dame) என்ற புதினம் எழுதப்பட்டது.

## ராவணா - 1

- அமெரிக்காவைச் சேர்ந்த நாசாவின் விண்கல வசதியைப் பயன்படுத்தி இலங்கையின் முதலாவது செயற்கைக் கோளான "ராவணா - 1" ஆனது விண்ணுக்கு ஏவப்பட்டது.
- இந்தச் செயற்கைக் கோளானது இலங்கையைச் சேர்ந்த இரண்டு ஆராய்ச்சிப் பொறியாளர்களால் ஜப்பானில் உள்ள கியூசு தொழில்நுட்ப நிறுவனத்தில் வடிவமைத்துக் கட்டமைக்கப்பட்டது.
- ராவணா – 1 செலுத்துதலானது சர்வதேச விண்வெளி உலகில் இலங்கை நுழைந்துள்ளதைக் குறிக்கிறது.

## இந்தியா-வியட்நாம்

- இரு நாடுகளுக்கிடையேயான கடல்சார் பயிற்சியின் இரண்டாவது பதிப்பானது இந்தியக் கடற்படை மற்றும் வியட்நாம் மக்கள் கடற்படை ஆகியவற்றிற்கிடையே வியட்நாமின் கேம் ரான்ஹ் பேயில் நடைபெற்றது.
- இந்த வருடாந்திரப் பயிற்சியில் இந்தியத் தரப்பிலிருந்து ஐஎன்எஸ் கொல்கத்தா மற்றும் ஐஎன்எஸ் சக்தி ஆகிய இரண்டு போர்க் கப்பல்கள் பங்கு பெற்றன.
- 2016 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் வியட்நாம் ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான உறவானது "விரிவான உத்திசார் பங்களிப்பு" என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது.
- இந்தப் பயிற்சியின் முதலாவது பதிப்பானது 2018 ஆம் ஆண்டில் வியட்நாமின் டா நாங்கில் நடைபெற்றது.

## செயற்கை நுண்ணறிவு மாநாடு


- அரசு, வியாபாரம் மற்றும் சமூகம் ஆகியவற்றின் மீதான எதிர்கால விவாதத்தை மேலும் அதிகப்படுத்த "அனைத்திற்கும் செயற்கை நுண்ணறிவு" என்று அழைக்கப்படும் உலகின் முதன்மையான செயற்கை நுண்ணறிவு மாநாட்டை ஐக்கிய அரபு அமீரகம் நடத்த இருக்கின்றது.
- இம்மாநாடு சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியம் (International Telecommunication Union - ITU) மற்றும் உலக அறிவுசார் சொத்து நிறுவனம் (World Intellectual Property Organisation - WIPO) ஆகியவற்றின் உதவியுடன் செயற்கை நுண்ணறிவிற்கான ஐக்கிய அமீரகத்தின் தேசியத் திட்டத்தால் பொலிவுறு துபாய் என்ற நிறுவனத்தின் உத்திசார் பங்களிப்புடன் நடத்தப்படும்.

## ஜமைக்கா - ஆதார்

- ஜமைக்கா உச்ச நீதிமன்றமானது அந்நாட்டின் "தேசிய அடையாளம் மற்றும் பதிவுகள் சட்டத்தை" (NIRA - National Identification and Registration Act) இரத்து செய்துள்ளது.
- இது தனது முடிவிற்கு இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி T.Y. சந்திரசூட்டின் ஆதார் சட்டத்தின் மீதான மாறுபட்ட தீர்ப்பை மேற்கோள் காட்டியது.
- ஜமைக்காவின் NIRA சட்டமானது இந்தியாவின் ஆதார் சட்டத்தைப் போன்றது.
- இது அனைத்து குடிமக்களிடமிருந்துப் பெறப்படும் பயோமெட்ரிக் தகவல்களின் தொகுப்பை ஒரே இடத்தில் சேமித்து வைக்க அனுமதிக்கிறது.

## நேபாளிசாட் – 1

- நேபாளத்தின் முதலாவது செயற்கைக் கோளான "நேபாளிசாட்-1" ஆனது அமெரிக்காவில் உள்ள தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகத்தின் (National Aeronautics and Space Administration - NASA) ஏவு மையத்திலிருந்து விண்ணுக்கு ஏவப்பட்டது.




- இந்தச் செயற்கைக் கோளானது நேபாள நாட்டைச் சேர்ந்த அபாஸ் மாஸ்கீ மற்றும்

ஹரிராம் ஸ்ரேஸ்தா ஆகிய இரண்டு நபர்களால் ஜப்பானின் கியூசு தொழில்நுட்ப நிறுவனத்தில் வடிவமைக்கப்பட்டது.

## ஆசியத் தேநீர் கூட்டிணைவு

- தேநீர் வளர்ப்பு மற்றும் நுகர்வில் முன்னணியில் இருக்கும் 5 நாடுகளின் ஒரு ஒன்றியமான "ஆசியத் தேநீர் கூட்டிணைவானது" (Asian Tea Alliance - ATA) சீனாவின் கியூசோவில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தியத் தேநீர் மன்றம், சீனத் தேநீர் சந்தையிடல் மன்றம், இந்தோனேஷியத் தேநீர் சந்தையிடல் மன்றம், இலங்கைத் தேநீர் வாரியம் மற்றும் ஜப்பான் தேநீர் மன்றம் ஆகியவை இதன் உறுப்பு நாடுகளாகும்.
- உலகத் தேநீர் நுகர்வை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தக் கூட்டிணைவு ஏற்படுத்தப்பட்டது. இது ஆசியத் தேநீரின் எதிர் காலத்திற்கான ஒரு நிலையான திட்டத்தை உருவாக்கும்.
- தேநீர் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இந்தியா (முதலில் சீனா) உள்ளது.
- உலகில் தேநீர் நுகர்வில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- இந்தியாவில் தமிழ்நாடு மாநிலமானது தேநீர் உற்பத்தியில் மூன்றாவது மிகப்பெரிய மாநிலமாக விளங்குகின்றது.

## ஆப்பிரிக்காவில் மேம்பாட்டுத் திட்டங்கள்

- ஆப்பிரிக்காவில் இரண்டு அபிவிருத்தி திட்டங்களை உருவாக்க இந்தியாவானது ஜப்பான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுடன் இணையவுள்ளது.
- இது ஆப்ரிக்கக் கண்டத்தில் வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் தனது தடத்தினை விரிவுபடுத்தவும் அப்பிராந்தியத்தில் வளர்ந்துவரும் சீனாவின் செல்வாக்கினை எதிர்கொள்ளவும் முற்படுகிறது.
- இந்தத் திட்டத்தின்படி இந்தியாவானது
  - ஜப்பானுடன் இணைந்து கென்யாவில் புற்றுநோய் மருத்துவமனையை அமைக்கவுள்ளது.
  - UAE-உடன் இணைந்து எத்தியோப்பியாவில் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப மையத்தினை அமைக்கவுள்ளது.

## அமர்த்தியா சென்

- இலண்டன் பொருளாதாரப் பள்ளியானது (LSE - London School of Economics) "சமத்துவமற்ற ஆய்வுகளுக்கான" அமர்த்தியா சென் என்ற ஒரு ஆய்வு இருக்கை அமைக்கப்படுவதாக அறிவித்துள்ளது.
- நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் என்பவரை கௌரவிப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவர் LSE-ல் பேராசிரியராக பணியாற்றினார்.
- அமர்த்தியா சென்னின் "பொதுநலப் பொருளாதாரம்" குறித்த பணிகளுக்காக இவருக்கு

1998 ஆம் ஆண்டில் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

- ❖ பொதுநலப் பொருளாதாரம் என்பது சமூகத்தின் நல்வாழ்வின் மீதான அப்பொருளாதார விளைவுகளின் அடிப்படையில் பொருளாதாரக் கொள்கைகளை மதிப்பீடு செய்யும் பொருளாதாரத்தின் ஒரு பிரிவாகும்.

## உக்ரைன் அதிபர்

- ❖ உக்ரைன் மக்கள் 41 வயதான தொலைக்காட்சி நகைச்சுவையாளர் மற்றும் நடிகரான வோலோடிமைர் ஜெலன்ஸ்கை என்பவரை தங்களுடைய புதிய அதிபராகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
- ❖ இவர் "மக்களின் பணியாளர்" என்ற புகழ்பெற்ற உள்ளூர் நகைச்சுவைத் தொடரில் "புனைவு அதிபர்" என்ற கதாபாத்திரத்தில் நடித்ததன் மூலம் பிரபலமடைந்தார்.
- ❖ இஸ்ரேல் நாட்டைத் தவிர்த்து யூதப் பிரதமர் (வோலோடிமைர் குரோய்ஸ்மேன்) மற்றும் யூத அதிபரைக் கொண்ட உலகின் ஒரே நாடு உக்ரைன் ஆகும்.

## ஈரான் - பாகிஸ்தான்

- ❖ ஈரான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து ஒரு கூட்டு எல்லை விரைவு பதிலெதிர்ப்புப் படையை (joint border rapid reaction force) உருவாக்க ஒப்புக் கொண்டுள்ளன.




- ❖ இந்த நாடுகளில் ஈரானிய சிஸ்தான் மாகாணத்திற்கும் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்திற்கும் இடையிலான வன்முறைக்குள்ளான எல்லைப் பகுதியில் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் மற்றும் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

## ஈரானிய எண்ணெய்

- ❖ ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வது மீதான அதன் பொருளாதாரத் தடை விலக்குகள் புதுப்பிக்கப்பட மாட்டாது என அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

- இந்த தடை விலக்கு தள்ளுபடியானது ஈரான் நாட்டின் மீது அதிகபட்ச பொருளாதார அழுத்தத்தை உருவாக்கி அந்நாட்டினை தனிமைப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியா, சீனா மற்றும் அமெரிக்க கூட்டாளிகளான ஜப்பான், தென்கொரியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இதனால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளாகும்.
- சீனாவையடுத்து ஈரானிடம் அதிக அளவில் கச்சா எண்ணெய் வாங்கும் இரண்டாவது நாடு இந்தியாவாகும்.
- தற்போது இந்தியாவானது கீழ்க்காணும் இரண்டிற்கும் அமெரிக்காவிடமிருந்து விலக்கு அளிக்கப்பட்ட அனுமதியைப் பெற வேண்டும்.
    - எண்ணெய் இறக்குமதி
    - சாபாஹார் துறைமுக மேம்பாடு

## உலக நாடுகள் மக்கள் தொகை அறிக்கை

- ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியமானது (United Nations Population Fund's- UNFP) 2019 ஆம் ஆண்டிற்கான உலக நாடுகளின் மக்கள் தொகை அறிக்கையை (State of the World: Population Report) வெளியிட்டது.
- இது இந்தியாவின் மக்கள் தொகையானது 2010 மற்றும் 2019 ஆம் ஆண்டு கால அளவில் சராசரியாக வருடத்திற்கு 1.2% உயர்ந்துள்ளது என குறிப்பிடுகிறது.
- இது சீனாவின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தை விட இரு மடங்கு அதிகமாகும்.
- இந்த அறிக்கையானது முதன்முறையாக கீழ்க்காணும் மூன்று முக்கிய அளவீடுகளில் பெண்களின் ( 15-49 வயதிற்குட்பட்ட) முடிவெடுக்கும் திறனையும் உள்ளடக்கியுள்ளது.
    - அவர்கள் இணையுடன் பாலியல் உறவு
    - கருத்தடைப் பயன்பாடு
    - சுகாதாரப் பராமரிப்பு
- மகப்பேறு மற்றும் பாலியல் உரிமைகள் இல்லாமையானது பெண்களின் கல்வி, வருமானம் மற்றும் பாதுகாப்பின் மீது எதிர்மறையான விளைவுகளைப் பெருமளவில் ஏற்படுத்துகின்றன.

## வெளியேற்ற விசா

- ஐக்கிய நாடுகளின் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பானது 2019-ஆம் ஆண்டின் இறுதியில் அனைத்து அயல்நாட்டுப் பணியாளர்களுக்கான மிகவும் விமர்சனத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கும் வெளியேற்ற விசா அமைப்பை கத்தார் ஒழிக்கவிருக்கிறது என்று அறிவித்துள்ளது.
- 2018-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், கத்தார் சட்டமன்றமானது "கப்லா" அல்லது "நிதி ஆதரவுத் திட்டத்தை" ஒழிப்பதற்காக ஒப்புதல் வழங்கியது.
- கப்லா என்பது அயல்நாட்டுப் பணியாளர்கள் பணியிலிருந்து மாறுவதற்கோ, ஒரு நாட்டிற்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ தங்கள் மேலதிகாரியிடம் அனுமதி

பெற வேண்டும்.

- 2022-ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி நடைபெறுவதை நினைவில் வைத்து தொழிலாளர் சீர்திருத்தங்கள் அங்கு மேற்கொள்ளப் படுகின்றன.
- கத்தார் நாடு 2022-ஆம் ஆண்டு கால்பந்து உலகக் கோப்பையை நடத்த இருக்கின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## நிதியியல் கட்டுப்பாட்டுக் குழு

- நிதியியல் விதிகளை அமல்படுத்துவதற்காகவும் பொதுக் கடன்களை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்காகவும் நிதியியல் ஒழுங்கு ஆணையத்தை அமைப்பதற்கான அவசியத்தை 15-வது நிதி ஆணையத்தின் தலைவரான N.K. சிங் வலியுறுத்தியுள்ளார்.
- அரசியலமைப்பின் பிரிவு 293(3) ஆனது மாநில அரசுகள் கடன் வாங்குவதற்கான ஒரு உச்ச வரம்பை நிர்ணயித்துள்ளது. அந்த உச்ச வரம்பிற்கு மேல் மாநில அரசுகள் கடன் வாங்கக் கூடாது.
- ஆனால் மத்திய அரசானது தான் கடன் வாங்கும் நிதிக்கான எந்தவொரு அரசியலமைப்புக் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலங்கள் மற்றும் மத்திய அரசு ஆகியவற்றின் கடனானது 70 சதவிகிதத்திற்கும் மேல் உள்ளது.
- நிதியியல் விதிகளை அமல்படுத்துவதற்காகவும் மத்திய அரசின் நிதியியல் ஒருங்கிணைப்பைக் கண்காணிப்பதற்காகவும் நிதியியல் ஒழுங்கு ஆணையம் போன்ற ஒரு நிறுவன அமைப்பு தேவைப்படுகின்றது.

## உற்பத்தி PMI குறியீடு

- நிக்கெய் இந்தியாவானது கொள்முதல் மேலாளர்கள் குறியீட்டில் (PMI - Purchasing Managers Index) பெற்றுள்ள 52.6 புள்ளியானது அதன் உற்பத்தித் துறையில் இழப்பு ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றது.
- உற்பத்தித் துறையில் 50-க்கும் மேற்பட்ட புள்ளியானது விரிவாக்கத்தையும் அதற்குக் கீழே உள்ள புள்ளியானது சரிவையும் குறிக்கின்றது.
- இந்தக் குறியீடானது 400-க்கும் மேற்பட்ட தொழிற்துறை நிறுவனங்களில் உள்ள கொள்முதல் செய்பவர்களின் நிர்வாகிகளுக்கு ஒவ்வொரு மாதமும் அனுப்பப்பட்ட கேள்விகளுக்கு, அவர்கள் அளித்த பதில்களிலிருந்துத் தொகுக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

## முதலீட்டு ஆலோசகர்கள்

- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது (Securities and Exchange Board of India -

SEBI) வளர்ந்து வரும் முதலீட்டு ஆலோசகர்களுக்காக ஒரு சுய ஒழுங்குமுறை அமைப்பை (SRO - self-regulatory organisation) பரிந்துரைத்துள்ளது.

- இது நிறுவனங்களினால் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆலோசனையின் தரம் குறித்த பிரச்சனைகளைக் களையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- மேலும் SRO ஆனது முதலீட்டிற்கான ஆலோசகர்களால் வசூலிக்கப்படும் அதிக கட்டணம், வருமானத்தை ஈட்டுவதற்குத் தவறான உத்தரவாதத்தை அளித்தல் மற்றும் தவறான நடத்தை போன்ற புகார்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

## வரவு மற்றும் செலவு ஆகியவற்றுக்கான முன்தொகை

- இந்திய அரசின் ஆலோசனையுடன் இந்திய ரிசர்வ் வங்கியானது 2019-20 நிதியாண்டின் முதல் பகுதிக்கான வரவு மற்றும் செலவு ஆகியவற்றுக்கான முன்தொகையின் (WMA - Ways and Means Advances) வரம்பை ரூ.7500 கோடியாக நிர்ணயிக்க முடிவு செய்துள்ளது.
- WMA மீதான வட்டி விகிதமானது ரெப்போ விகிதமாகவும் அதனை மீறிய தொகையானது ரெப்போ விகிதத்தை விட 2 சதவிகிதம் அதிகமாகவும் இருக்கும்.
- WMA வரம்பு மீறப்பட்டால் RBI மத்திய அரசுடன் கலந்தாலோசித்து அந்த மீறிய வரம்பிற்கான செலவீனத் தொகையை அளிக்கும்.
- WMA என்பது RBI-யினால் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு தற்காலிக நிதியளிக்கப் படும் வசதியாகும்.
- WMA திட்டமானது அரசின் வரவுகள் மற்றும் பண வழங்கீடுகள் ஆகியவற்றில் ஏற்படும் தற்காலிக பொருத்தமின்மையைக் களைவதற்காக 1997 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்டதாகும்.

## எதிர்க் குவிப்புத் தடுப்பு வரி

- சீனா, மலேசியா, சவுதி அரேபியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து சூரிய ஒளியை உற்பத்தி செய்ய மின்கலன்களில் பயன்படுத்தப்படும் பொருட்களின் இறக்குமதி மீது டன்னுக்கு USD 1559 வரை எதிர்க் குவிப்புத் தடுப்பு வரியை ஐந்து ஆண்டு காலத்திற்கு இந்தியா விதித்துள்ளது.
- மேற்குறிப்பிட்ட நாடுகளிலிருந்து மிகக் குறைவான விலையில் எத்திலீன் வினைல் அசிட்டேட் தாள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது சூரிய ஒளி மின்கலங்களைத் தயாரிக்கும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
- வணிக அமைச்சகத்தின் விசாரணை அமைப்பான வணிகத் தீர்வுகளுக்கான பொது இயக்குனரகத்தின் (Directorate General of Trade Remedies - DGTR) பரிந்துரையின் அடிப்படையில் இந்த எதிர்க் குவிப்புத் தடுப்பு வரி விதிக்கப்படுகின்றது.
- எதிர்க் குவிப்புத் தடுப்பு வரியானது நியாயமான வணிக நடைமுறைகளை உறுதி செய்வதையும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஒரு சரியான தளத்தை உருவாக்குவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

## வட்டி விகிதக் குறைப்பு

- இந்திய ரிசர்வ் வங்கியானது தனது ரெப்போ விகிதத்தை 0.25 புள்ளிகளைக் குறைத்து 6 சதவிகிதமாக நிர்ணயித்துள்ளது. மேலும் இது தற்போதைய நிதியாண்டிற்கான GDP-ன் முந்தைய கணிப்பான 7.4 சதவிகிதத்திலிருந்து குறைத்து GDP-ஆனது 7.2 சதவிகிதமாக இருக்கும் என்று கணித்துள்ளது.
- ரெப்போ விகிதம் என்பது இந்திய ரிசர்வ் வங்கியானது மற்ற வணிகம்சார் வங்கிகளுக்கு கடன் வழங்கும் விகிதமாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய ஆளுநரான சக்திகாந்த தாஸின் கீழ் தொடர்ந்து இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்படும் விகிதக் குறைப்பு இதுவாகும்.

## வளர்ச்சி முன்கணிப்பு

- ஆசிய வளர்ச்சி வங்கியானது (Asian Development Bank - ADB) 2019-20 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சி விகிதமானது 7.2 சதவிகிதமாக இருக்கும் என்று கணித்துள்ளது. இதற்குமுன் இது இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 7.6 சதவிகிதமாக இருக்கும் என்று கணித்திருந்தது.
- உள்நாட்டில் ஏற்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் உலக தேவைகளில் ஏற்பட்ட மாறுபாடுகள் ஆகியவற்றின் காரணமாக இது நிகழ்ந்துள்ளது.
- ADB ஆனது 1966 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியில் உருவாக்கப்பட்ட பிராந்திய வளர்ச்சி வங்கியாகும். இதன் தலைமையிடம் பிலிப்பைன்ஸின் மணிலா மெட்ரோவின் மண்டல்யுயாங் நகரத்தில் உள்ளது.
- இது தொடங்கப்பட்ட போது உறுப்பினர்களின் எண்ணிக்கை 31 ஆக இருந்தது. ஆனால் தற்பொழுது இது 68 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. இதில் 49 நாடுகள் ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்ததாகவும் மீதமுள்ள 19 நாடுகள் மற்ற பகுதிகளைச் சேர்ந்ததாகவும் உள்ளன.
- ADB-ன் தற்போதையத் தலைவர் தஹிகோ நகோவா ஆவார்.

## முன்கூட்டிய விலைநிர்ணய ஒப்பந்தங்கள் - CBDT

- மத்திய நேரடி வரிகள் வாரியமானது (Central Board of Direct Taxes - CBDT) 3 இருநாட்டு முன்கூட்டிய விலை நிர்ணய ஒப்பந்தங்கள் உள்பட 18 முன்கூட்டிய விலை நிர்ணய ஒப்பந்தங்களில் ( Advance Pricing Agreements - APA) கையெழுத்திட்டுள்ளது.
- CBDT ஆல் கையெழுத்திடப்பட்டுள்ள APA-ன் மொத்த எண்ணிக்கை தற்பொழுது 271 ஆக உள்ளது.
- APA என்பது வருங்காலத்தில் வருமான வரி செலுத்துபவர்களின் சர்வதேச நிதிப் பரிமாற்றங்களைக் கணக்கிடுவதற்கான பரிமாற்ற நிதி முறையைத் தீர்மானிக்கக்கூடிய வரி செலுத்துவோர் மற்றும் வரி வசூலிக்கும் அமைப்பு ஆகியவற்றிற்கிடையேயான ஒரு ஒப்பந்தமாகும்.

## லட்சுமி விலாஸ் வங்கி

- லட்சுமி விலாஸ் வங்கி மற்றும் இந்தியா புல்ஸ் வீட்டு வசதி நிதி மன்றங்கள் இரு நிறுவனங்களின் இணைப்பிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளன.
- புதிய நிறுவனம் இந்தியா புல்ஸ் லட்சுமி விலாஸ் வங்கி என்று அழைக்கப்படும்.
- CAR (Capital adequacy ratio) என்பது இடர்பாடுடைய நிறைந்த சொத்துக்கள் மற்றும் நடப்புக் கடன்களுக்கும் அது தொடர்புடைய வங்கியின் மூலதனத்திற்கும் உள்ள விகிதம் ஆகும்.
- வணிக வங்கிகள் அதிகப்படியான நிதி எடுப்பதைத் தடுக்கவும் இந்த நடைமுறையில் திவாலாவதைத் தடுப்பதற்காகவும் இந்த விகிதமானது இந்திய ரிசர்வ் வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றது.

## LCR விதிமுறைகள்

- வங்கிகளின் நிதி நிலைமையை மேலும் வலுப்படுத்தவும் இந்திய ரிசர்வ் வங்கியானது நிதி உள்ளடக்க விகிதத்தின் விதிமுறைகளை மாற்றியமைத்து கடன் கொடுப்பவர்களுக்கு 2 சதவிகித நிதி வசதியை அளித்துள்ளது.
- LCR (liquidity coverage ratio) ஆனது குறுகிய கால பிரச்சனை நிதிகளுக்கு தீர்வு காணும் திறனை உறுதி செய்வதற்காக வங்கிகளிடம் இருக்கும் உயர் நிதியியல் சொத்துக்களின் விகிதத்தைக் குறிக்கும்.

## வெளிப்புற இலக்கு

- இந்திய ரிசர்வ் வங்கியானது வணிக வங்கிகள் தங்களது கடன் அளிக்கும் விகிதங்களை ரெப்போ விகிதம் அல்லது அரசுக் கருவூலக் கட்டண விகிதம் போன்ற வெளிப்புற இலக்குகளுடன் இணைப்பதற்கான தனது பரிந்துரையை கால வரையறையின்றி இரத்து செய்துள்ளது.
- வெளிப்புற இலக்குகள் என்பது வணிக வங்கிகள் தங்கள் வழங்கும் பல்வேறு வகையான கடன்கள் மீது தாங்கள் விதிக்கும் வட்டி விகிதங்களை வெளிப்புற வட்டி விகிதத்துடன் இணைப்பதாகும்.
- ரெப்போ விகிதம் போன்ற வெளிப்புற விகிதங்களுடன் வங்கி வட்டி விகிதத்தின் இலக்கை நிர்ணயிப்பது வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்குப் பயனளிக்கும்.
- இந்திய பாரத வங்கி மட்டுமே தனது வைப்பு விகிதங்களை ரெப்போ விகிதத்துடன் இணைத்துள்ளது.

## ரூபாய்களை இருப்பில் வைத்திருக்கும் வங்கிகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது ரூபாய்களை இருப்பில் வைத்திருக்கும் வங்கிகளை அமைப்பதற்கு புதிய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.
- மத்திய வங்கியானது ரூபாய்களை இருப்பில் வைத்திருக்கும் நியாயமான கட்டுப்பாடுகளுடன் ரூ.1000 கோடியிலான CBL (ரூபாய்களை இருப்பு வைத்திருக்கும் வங்கிகளின் மீது வரம்பு/ Chest Balance Limit) என்ற வரம்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

- புதியதாக உருவாக்கப்படும் ரூபாய்களை இருப்பு வைத்திருக்கும் வங்கிகளானது ஒரு நாளைக்கு மலைகள், அணுக முடியாத பகுதிகள் போன்ற இடங்களில் 2.1 இலட்சம் ரூபாய்களையும் மற்ற அனைத்து இடங்களிலும் 6.6 இலட்சம் ரூபாய்களையும் கையாளும் திறனைப் பெற்றிருக்க வேண்டும்.
- ரூபாய்களை இருப்பு வைத்திருக்கும் வங்கிகளானது ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்களை இருப்பு வைத்து வங்கிகளுக்கு விநியோகிக்கப் படுவதற்காக மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளாகும்.

## வளர்ச்சி - கணிப்பு

- சர்வதேச நாணய நிதியத்தின் (International Monetary Fund - IMF) தலைமைப் பொருளாதார அறிஞரான கீதா கோபிநாத் என்பவர் 2019-20 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தை 7.7 சதவிகிதத்திலிருந்து 7.5 சதவிகிதமாக குறைத்துக் கணக்கிட்டுள்ளார்.
- இவர் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியை கணக்கிடுவதற்காக பயன்படுத்தப்படும் அடிப்படை ஆண்டு அல்லது பணவாட்டக் காரணி குறித்துக் கருத்து தெரிவித்துள்ளார். மேலும் இவர் அரசினால் வெளியிடப்படும் புள்ளியியலில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.
- இந்தியா IMF-ன் சிறப்புத் தரவு வழங்கல் தரத்திற்கு ஒரு உறுப்பினராக உள்ளது.

### *இந்தியாவில் புள்ளியியல்*

- மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகமானது (Ministry of Statistics and Programme Implementation - MOSPI) புள்ளியியல் தொடர்பாக அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் தரங்கள் குறித்த அறிக்கையை வெளியிடுகின்றது.
- இது புள்ளியியல் துறை மற்றும் திட்டம் அமலாக்கத் துறை ஆகியவை இரண்டும் இணைந்த பின்பு 1999 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- தேசியப் புள்ளியியல் அலுவலகம் (National Statistical Office - NSO) என்று அழைக்கப்படும் புள்ளியியல் பிரிவானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்.
    - தேசியப் புள்ளியியல் அலுவலகம் (Central Statistics Office - CSO)
    - தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (The National Sample Survey Office - NSSO)
    - கணினி மையம்
- திட்டம் செயல்படுத்துதல் துறையானது பின்வரும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.
    - இருபது அம்சத் திட்டம்
    - கட்டமைப்பை மேற்பார்வையிடுதல் மற்றும் திட்டத்தை மேற்பார்வையிடுதல்
    - பாராளுமன்ற உறுப்பினரின் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் (MPLADs - Members of Parliament Local Area Development Scheme).

## சொத்துகள் இணைப்பு

- "பணமோசடி" மற்றும் "திட்டமிடப்பட்ட குற்றம் சார்ந்த நடவடிக்கைகளில் இருந்து" பெறப்பட்ட கறைபடிந்த சொத்துக்களை இணைப்பது என்ற வழக்கில் பிஎம்எல்ஏவின் வரம்பானது (PMLA) ஆர்பிடிஏ (RBDA), சர்பேசி (SARFAESI) மற்றும் திவால் குறியீடு ஆகியவற்றை விட அதிகபட்ச அதிகாரம் பெற்று இருக்கும் என்று தில்லி உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.
- பிஎம்எல்ஏ-வின் 71-வது பிரிவானது ஏற்கெனவே உள்ள மற்ற சட்டங்களை மீறுவதாக உள்ளது.

| Abbreviation | Year | Objective |
|---|---|---|
| Recovery of Debt and Bankruptcy Act | 1993 | To establish Tribunals for expeditious adjudication and recovery of debts due to banks and financial institutions |
| Prevention of Money Laundering Act | 2002 | To prevent money-laundering and to provide for confiscation of property derived from money-laundering |
| The Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Securities Interest Act | 2002 | It allows banks and other financial institution to auction residential or commercial properties (of Defaulters) to recover loans |
| The Insolvency and Bankruptcy Code | 2016 | It is also a bankruptcy law which seeks to consolidate the existing framework by creating a single law for insolvency and bankruptcy. |

## அமேசான் - சீனா

- அமேசான் நிறுவனம் சீனாவில் அதன் உள்நாட்டு மின்னணு வர்த்தக நடவடிக்கையை மூட இருப்பதாக அறிவித்து இருக்கின்றது.
- அமேசான் சிறிய சந்தையைக் கொண்டுள்ளதாகக் கூறப்படும் தனது ஜப்பான் சந்தையில் விற்பதைக் காட்டிலும் சீனாவில் குறைவாக விற்கின்றது.
- அமேசான் 2004 ஆம் ஆண்டில் ஜோயோ.காம் என்ற நிறுவனத்தைக் கையகப்படுத்தியதன் மூலம் சீனாவில் தனது நடவடிக்கையை ஆரம்பித்தது.
- அமேசான் 2011 ஆம் ஆண்டில் ஜோயோ வர்த்தகத்தை அமேசான் சீனா என்று மறுபெயரிட்டது.

## டிசிஎஸ் – இந்திய அஞ்சல் துறை

- டாடா ஆலோசக சேவை வழங்கும் நிறுவனமானது (TCS – Tata Consultancy Services) அஞ்சல்

அலுவலகங்களை ஒரு பன்முகச் சேவைகளை அளிக்கும் டிஜிட்டல் மையமாக உருவாக்குவதற்கு பல்லாண்டு ஒப்பந்தத்தில் இந்திய அஞ்சல் துறையுடன் இணைந்துள்ளது.

- TCS ஆனது 1,59,000 க்கும் மேற்பட்ட அஞ்சல் அலுவலகங்களை ஒருங்கிணைத்து உலகின் மிகப்பெரிய பரவலாக்கப்பட்ட மின்னணு முறையில் அஞ்சல் அமைப்பை உருவாக்கவிருக்கிறது.

## பகுதி – மெய்நிகர் நாணயம்

- தனியார் சங்கிலித் தொடர் மற்றும் பகுதி-மெய்நிகர் நாணயத்தினை தொடங்குவதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவை இணையவுள்ளன.
- "Learning Coin" என்றறியப்படும் இதனை வாஷிங்டனை அடிப்படையாகக் கொண்ட பன்னாட்டு நிறுவனங்களுக்குள் மட்டுமே அணுக முடியும்.
- இதற்கு நாணய மதிப்பு இல்லையென்பதால் இது உண்மையான மெய்நிகர் நாணயம் அல்ல.

## எட்மணி – நிதிச் சேவைகள் செயலி

- இந்தியாவின் மிகப்பெரிய நிதியியல் சேவைகளுக்கான செயலியான எட்மணியானது (ETMONEY) ஒருங்கிணைந்த பண வழங்கீடு முகமை (Unified Payment Interface UPI) என்ற அமைப்புடன் ஒரு பணவழங்கீடு முறையாக இணைந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அதன் மாதாந்திரப் பயனாளர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.
- இந்த ஒருங்கிணைப்பானது மில்லியன் கணக்கான எட்மணி பயனர்களுக்கு பரஸ்பர நிதிப் பண வழங்குதலை எளிதாக்குகிறது.
- எட்மணி செயலியானது டைம்ஸ் குழுவின் ஒரு பகுதியான டைம்ஸ் இணையத் தளத்திற்கு சொந்தமானதாகும்.

## வலுவான செயல்பாடு

- முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியத்தின் (Investor Education and Protection Fund-IEPF) ஆணையமானது இணையற்ற பொது நிதியம் மற்றும் முதலீட்டு நிறுவனத்திடம் (Peerless General Finance and Investment Company-PGFIC) 1,514 கோடி மதிப்புடைய வைப்புகளை IEPF க்கு மாற்றும்படி உத்தரவிட்டுள்ளது.
- கடந்த 15 ஆண்டுகளாக PGFIC நிறுவனத்திடம் சுமார் 1 கோடி தனிநபர்களால் செய்யப்பட்ட வைப்பு தொகை முதலீடானது நிலுவையிலுள்ளது.
- IEPF ஆனது நிறுவனச் சட்டம் 2013-ன் (Companies Act 2013) படி பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வமான அமைப்பாகும்.

## தரவு உள்ளூர் மயமாக்கல்

- அமெரிக்க தொழில்நுட்ப தொழிலக குழுக்களானது இந்தியாவின் "தரவுகளை உள்ளூர்மயமாக்கல்' திட்டத்திற்கு எதிராக கருத்து தெரவித்துள்ளன.
- இது ஆய்வு மற்றும் செலவுகளை அதிகரிக்கும் என அவர்கள் ஐயப்படுகின்றனர்.
- ரிசர்வ் வங்கியானது 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தரவுகளின் உள்ளூர் மயமாக்கலுக்கான உத்தரவுகளை வழங்கியது.
- இந்த உத்தரவானது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாத்திற்குள் அனைத்து உலகளாவிய மற்றும் உள்ளூர் பணவழங்கீட்டு நிறுவனங்கள் அவற்றின் தரவு சேமிப்பு கட்டமைப்புகளை இந்தியாவிற்குள் அமைப்பதை கட்டாயமாக்குகிறது.
- பெரும்பாலான பெருநிறுவனங்கள் இன்னும் இந்த விதிமுறைகளைப் பூர்த்தி செய்யவில்லை.
- தரவு தனியுரிமை குறித்த B.N. ஸ்ரீகிருஷ்ணா குழுவானது அனைத்து "முக்கியமான தனிப்பட்ட தரவுகளும்" கட்டாயமாக நாட்டிற்குள்ளேயே செயல்படுத்தப்படவேண்டும் என பரிந்துரை செய்தது.

## ஜன் தன்

- ஜன் தன் வங்கிக் கணக்கில் உள்ள வைப்பு நிதிகளானது ரூ. 1 இலட்சம் கோடியை விரைவில் அடையவிருக்கின்றது.
- ஏப்ரல் 03 ஆம் தேதி நிலவரப்படி, ஜன் தன் வங்கிக் கணக்குகளில் உள்ள மொத்த நிதியின் மதிப்பு ரூ. 97,665.66 ஆகும். ஜன் தன் வங்கிக் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 35.39 கோடிகளாகும்.
- ஜன் தன் வங்கிக் கணக்கு வைத்துள்ள 27.89 கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு ரூபே கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## ஷெல் (போலி) நிறுவனங்கள்

- மத்திய அரசாங்கமானது நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் INC-22 படிவங்களுக்கான விதிமுறைகளைத் தளர்த்தி அதற்கான கால அவகாசத்தை நீட்டித்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முன்பு உருவாக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அந்த நிறுவனங்கள் அமைந்துள்ள இடம், இயக்குநர்கள் மற்றும் வணிகத்திற்கான ஆதாரம் ஆகியவை தொடர்பான விவரங்களை அளிப்பதற்காக இந்த INC-22 படிவங்கள் தேவைப்படுகின்றது.
- ஷெல் நிறுவனங்களை ஒழிப்பதன் ஒரு முயற்சியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### *ஷெல் நிறுவனங்கள்*

- ஷெல் நிறுவனம் என்பது அலுவலகம் இல்லாமலும் பணியாளர்கள் இல்லாமலும் பெயரளவில் மட்டுமே செயல்படக்கூடிய ஒரு நிறுவனம் அல்லது அமைப்பாகும்.

- ஆனால் அவை வங்கிக் கணக்கு கொண்டதாகவும் மந்தமான முதலீடுகளைக் கொண்டதாகவும் அறிவுசார் சொத்துரிமை அல்லது கப்பல் போன்ற சொத்துகளின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரைக் கொண்டதாகவும் இருக்கும்.
- ஷெல் நிறுவனங்கள் நிதி மோசடிக்காகவும் நிதியைத் திசை திருப்பும் நோக்கத்திற்காகவும் உருவாக்கப்பட்ட பல அடுக்குகளைக் கொண்ட நிறுவனங்களை உள்ளடக்கியதாகும்.

## பசுமை மகிழுந்து கடன்

- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 அன்று அனுசரிக்கப்பட்ட உலக பூமி தினத்தை முன்னிட்டு பாரத ஸ்டேட் வங்கியானது இந்தியாவின் மின் வாகனங்களுக்கான முதலாவது "பசுமை மகிழுந்து கடனை" தொடங்கியுள்ளது.
- இது வாடிக்கையாளர்களை மின் வாகனங்கள் வாங்குவதற்கு ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய திட்டமானது ஏற்கனவே உள்ள மகிழுந்து கடன்களுக்கான வட்டி விகிதத்தை விட 20 அடிப்படைப் புள்ளிகள் குறைவாக கடன்களை வழங்கும்.




## குறைதீர்ப்புத் திட்டம்


- இந்திய ரிசர்வ் வங்கியானது குறைதீர்ப்புத் திட்டத்தின் எல்லையை விரிவுபடுத்தியுள்ளது.
- இது தற்பொழுது வைப்புத் தொகைகளை ஏற்காத வங்கிப் பணியல்லாத நிதியியல் நிறுவனங்களையும் (NBFCs/Non-Banking Finance Company) உள்ளடக்கியுள்ளது.
- ரூ. 100 கோடி அல்லது அதற்கும் அதிகமான சொத்து மதிப்பைக் கொண்ட NBFC ஆனது இந்தக் குறைதீர்ப்பு திட்டத்தைப் பெறும்.
- இது வாடிக்கையாளர்களுக்கு எளிதான மற்றும் விரைவான குறைதீர்ப்பு செயல்முறையை அளிக்கின்றது.
- பொது மேலாளர் என்ற தகுதிநிலைக்கு கீழே இல்லாத ஒரு இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரி குறைதீர்ப்பு அதிகாரியாக நியமிக்கப்படவிருக்கின்றார்.

## மின்னணு முறையிலான ரசீது அமைப்பு

- ❖ மின்னணு முறையிலான ரசீது என்பது சரக்குகள் போக்குவரத்தின் உரிமையாளரால் கொண்டு செல்லப்படும் ஒரு தேவையான ஆவணத்தின் மின்னணு வடிவமாகும்.
- ❖ அனுப்பப்பட்ட சரக்கின் மொத்த மதிப்பு ரூ. 50 ஆயிரத்திற்கும் மேல் இருப்பின் இந்த ரசீது உருவாக்கப்பட வேண்டும்.
- ❖ இந்திய நிதி அமைச்சகமானது மின்னணு முறையிலான ரசீது அமைப்பில் சில மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்த மின்னணு முறையிலான ரசீது அமைப்பானது சரக்குகள் அனுப்பப் படுவதற்கு முன்னதாக ஏற்படுத்த வேண்டும்.
- ❖ இது சரக்குகள், சரக்கு அனுப்புநர், பெறுபவர் மற்றும் சரக்கு கொண்டு செல்பவர் ஆகியோரைப் பற்றிய விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- ❖ இந்த மின்னணு முறையிலான ரசீதை அளிக்கத் தவறினால் ரூ.10,000 அபராதமோ அல்லது வரி ஏய்ப்புத் தொகையோ அவற்றில் எது பெரியதோ அது வசூலிக்கப்படும்.

## டீசல் மகிழுந்துகள் நிறுத்தம்

- ❖ நாட்டின் மிகப்பெரிய வாகனத் தயாரிப்பு நிறுவனமான மாருதி சுசூகியானது டீசல் வாகனத் தயாரிப்பை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அன்று நடைமுறைக்கு வரவிருக்கும் புதிய பாரத் – VI உமிழ்வு விதிமுறைகள் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ பாரத் நிலை உமிழ்வுத் தரங்களானது இந்திய அரசால் உருவாக்கப்பட்ட உமிழ்வுத் தரங்களாகும்.
- ❖ இந்தியாவில் உமிழ்வு விதிமுறைகளின் வரலாறு பின்வருமாறு




### *பாரத் நிலை VI*

- ❖ தற்பொழுதுள்ள பாரத் நிலை IV (BS-IV) மற்றும் BS-VI எரிசக்தி விதிமுறைகள் ஆகியவற்றின்

தரங்களிடையே காணப்படும் முக்கிய வேறுபாடானது அவற்றில் உள்ள சல்பராகும்.

- BS-VI எரிபொருளானது 80 சதவிகித அளவிற்கு, தற்பொழுதுள்ள 50 ppm நிலையிலிருந்து 10 ppm என்ற நிலைக்கு, சல்பரைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- நைட்ரஜன் ஆக்ஸைடுகளின் உமிழ்வானது டீசல் மகிழுந்துகளில் 70 சதவிகிதம் என்ற அளவிற்கும் பெட்ரோல் மகிழுந்துகளில் 25 சதவிகிதம் என்ற அளவிற்கும் குறையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## டொலுவினை பயனுள்ள பொருட்களாக மாற்றுதல்

- சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் இருவர் குழுவானது பெட்ரோலியத்தின் கழிவுப் பொருளான டொலுவினை பென்சோயிக் அமிலமாக மாற்றியமைத்துள்ளது.
- கரிம அமிலங்களுக்குப் பதிலாக பசுமை ஆக்ஸிஜனேற்றி மற்றும் தண்ணீர் ஆகியவை இந்த செயல்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- பென்சோயிக் அமிலமானது உணவு பதப்படுத்தல் (E210) மற்றும் பூஞ்சை / பாக்டீரியா தொற்றிற்கு மருந்தாகவும் பயன்படுகிறது.


## நாசாவின் செவ்வாய்க்கான ஹெலிகாப்டர்

- நாசாவின் செவ்வாய் கோளுக்கான ஹெலிகாப்டர் ஆனது பலவரிசை சோதனைகளை வெற்றிகரமாக முடித்து சிவப்புக் கோளின் மீது பறப்பதற்குத் தயாராக உள்ளது.
- இந்த ஹெலிகாப்டர் ஆனது செவ்வாய் ஊர்தி 2020-ன் தரையிறங்கு அமைப்புடன் இணைக்கப்பட்டு செவ்வாய் கோளை நோக்கிச் செல்கிறது.
- 90°C அளவு குறைந்த வெப்ப நிலையுடைய இரவு நேரங்கள் உட்பட மிகவும் குளிர் வெப்ப நிலைகளிலும் இந்த ஹெலிகாப்டரால் செயல்பட முடியும்.



## மூன்ஷூட் விருது

- X Prize அறக்கட்டளையானது 1 மில்லியன் டாலர் தொகையுடைய மூன்ஷூட் விருதை அறிவித்துள்ளது.
- இந்த விருதானது இஸ்ரேலின் ஸ்பேஸ்இல்-க்கு அதன் பெர்ஷூட் விண்கலமானது அடுத்த மாதம் வெற்றிகரமாக சந்திரனில் தரையிறங்க முடிந்தால் வழங்கப்படும்.
- இது கூகுளின் லூனார் X பரிசிற்கும் போட்டியிட வைக்கப்பட்டது.
- இந்தப் போட்டியானது முதன்முதலில் தனியார் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு நிலவில் தரையிறங்கி அதன் பரப்பில் குறைந்த பட்சமாக 500 மீ அளவிற்குப் பயணித்து புகைப்படம் மற்றும் காணொளியைத் திரும்ப அனுப்பும் விண்கலத்திற்கு 20 மில்லியன் டாலர் அளவிற்கு மிகப்பெரிய பரிசை வழங்குகின்றது.




## நொதிகள் கத்தரிப்பான்


- உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தைச் (CCMB - Centre for Cellular & Molecular Biology) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பாக்டீரியாக்களின் செல் சுவர்களை உடைப்பதில் உதவுகின்ற ஒரு புதிய "முரெய்ன் பெப்டிடயாஸ்" என்ற நொதியைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இது ஏற்கெனவே உள்ள நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் மூலமாக பாக்டீரியா எதிர்ப்பு விளைவுகளைத் தடுக்கும் ஒரு புதிய மருந்து விநியோக வழியை வழங்குகிறது.
- நொதிகள் கத்திரிப்பான் என்பது பாக்டீரியாக்களில் உள்ள செல் சுவர்களின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தும் ஒரு நொதியாகும்.
- மருந்து விநியோகத்தின் இந்த முறையானது "நொதிகள் கத்திரிப்பான்" செயல்படுவதிலிருந்து அதனைத் தடுக்கின்றது.
- இதற்கு மாறாக பென்சிலின் போன்ற நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் பாக்டீரியாவின் செல் வளர்ச்சியைத் தடுக்க செல்கள் கூட்டிணைப்பின் இறுதி நிலையை மட்டுமே குறி வைக்கின்றன.
- நொதிகளைத் தடுப்பதன் மூலம் நுண்ணுயிரிகளைத் தாக்க ஒரு புதிய வழியை ஏற்படுத்த முடியும். மேலும் இது நோய் எதிர்ப்பு மருந்துகளின் உற்பத்தியில் புதிய தாக்கத்திற்கு வழிவகுக்கும்.

### CCMB

- CCMB ஆனது நவீன உயிரியல் மற்றும் உயிரியல் துறைகளுக்கு இடையே ஒழுங்குபடுத்தப்பட்ட எல்லைப் பகுதிகளில் உயர்தர அடிப்படை ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளை நடத்துகின்றது.
- ஹைதராபாத்தை மையமாகக் கொண்ட இந்த நிறுவனமானது 1977 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழுவின் கீழ் இயங்குகின்றது.
- இது யுனெஸ்கோவின் உலகளாவிய மூலக்கூறு மற்றும் செல் உயிரியல் அமைப்பினால் "சிறப்புமிகு மையமாக" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## சூப்பர்பக் பூஞ்சைகள்

- ஒரு மருந்து எதிர்ப்பு சூப்பர்பக் பூஞ்சையான "கேண்டிடா அவுரிஸ்" ஆனது மருத்துவ உலகில் வேகமாகப் பரவி ஒரு எச்சரிக்கையை விடுத்துள்ளது.
- இது 2009 ஆம் ஆண்டில் ஜப்பானில் கண்டுபிடிக்கப்பட்டது. இது மிகவும் அதி தீவீர பின் விளைவுகளுடன் குறைந்தது 15 நாடுகளில் பரவியுள்ளது.



- சி.அவுரிஸ் ஆனது மிக முக்கிய பூசண எதிர்ப்பு மருந்துகளினால் ஒழிக்கப் படவில்லை.
- இந்தக் கிருமியானது நோய் எதிர்ப்புத் திறன் குறைவாக உள்ள மக்களிடம் எளிதில் பரவும்.
- பூசணக் கொல்லி மற்றும் பயிர்கள் மீதான பூச்சிக் கொல்லி ஆகியவற்றின் பரவலான பயன்பாடானது சி.அவுரிஸின் எழுச்சிக்கு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

## புதிய வெளிக்கோள் TOI – 197.0

- நாசாவின் விண்வெளி தொலைநோக்கியான டெஸ்-இன் தரவுகளைப் பயன்படுத்தி 5 மில்லியன் ஆண்டுகள் பழமையான மற்றும் பூமியை விட 60 மடங்கு பெரிய அளவுடைய

புதிய கோளை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- TOI-197.0 என அறியப்படும் இந்தக் கோளானது தற்போது சிறப்பாக விளக்கப்பட்டுள்ள வெளிக்கோள்களுள் ஒன்றாகும்.
- அறிவியலாளர்கள் இதை 'சூடான சனி' என அழைக்கின்றனர். ஏனெனில் இது சனிக் கோளின் அளவினையொத்தது ஆகும். ஆனால் இது சனியை விட மிகவும் வெப்பமானதாகும்.
- ஏனென்றால் சனிக் கோளானது சூரியனைச் சுற்றி வரும் சுற்றுப் பாதையை விட இந்த புதியக் கோளானது தான் சுற்றி வரும் நட்சத்திரத்துடன் மிகவும் அண்மையில் அமைந்துள்ளது.

## மரபணு திருத்தம்

- ஜார்ஜியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் 4 வெளிறிய பல்லிகளை உருவாக்குவதற்காக அனோலிஸ் சாக்ரேய் பல்லிகளின் நிறமேற்ற மரபணுக்களை திருத்தியுள்ளனர்.
- இந்த ஆராய்ச்சியாளர்கள் CRISPR புரதங்களை பல்லிகளின் கருப்பைகளில் உள்ள பல்வேறு முதிர்ச்சியடையாத முட்டைகளில் நுண் உட்செலுத்துதல் மூலம் செலுத்தியுள்ளனர். இது டைரோசீனேஸ் மரபணுவைத் திருத்தம் செய்யும்.
- சைரோசீனேஸ் மரபணுவானது அதன் வெளிறிய நிறத்திற்குக் காரணமாகும்.
- இவை சாதாரணப் பல்லிகளிலிருந்து அல்பினோ பல்லிகளை உருவாக்கியுள்ளன.
- இந்த ஆராய்ச்சிக்காக CRISPR-Cas9 தொழில்நுட்பமானது ஆராய்ச்சியாளர்களால் பயன்படுத்தப்பட்டது.








### *CRISPR*

- CRISPR என்பது "குழுக்களாக, ஒழுங்கான இடைவெளியில் அமைந்த, குறுகிய இரு வழிப் பாதை போன்ற அல்லது CRISPR தொடர்புடைய புரதம்-9 அமைப்பு" என்பதைக் குறிக்கும்.
- CRISPR தொழில்நுட்பம் என்பது பொதுவாக ஒரு மரபணு – திருத்தத் தொழில்நுட்பமாகும். இது மரபணுவின் வெளிப்படுத் திறனை மாற்றுவதற்கும் ஒரு உயிரினத்தின் மரபணுவை மாற்றுவதற்கும் பயன்படுத்தப் படுகின்றது.
- இது குறைபாடுடைய மரபணுக்களை சரி செய்வது, நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பது மற்றும் நோய்கள் பரவாமல் தடுப்பது, பயிர்களை மேம்படுத்துவது உள்ளிட்ட பயன்பாடுகளைக் கொண்டுள்ளது.
- CRISPR-ஐப் பயன்படுத்தி மனிதக் கருக்களைக் கையாளும் போது நெறிமுறை சார்ந்த

பிரச்சனைகள் எழுப்பப்பட்டன.

## பருப்பொருளின் புதிய நிலை


- ஸ்காட்லாந்தின் எடின்பர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சக்தி வாய்ந்த கணினி ஒப்புருவாக்கத்தைப் பயன்படுத்தி உருகிய சங்கிலி நிலை என்ற ஒரு புதிய பருப்பொருளின் நிலையைக் கண்டறிந்துள்ளனர்.



- உருகிய சங்கிலி நிலையின் போது, அணுக்கள் ஒரே நேரத்தில் திட மற்றும் திரவமாக இருக்கும்.
- சோடியம் மற்றும் பிஸ்மத் உள்ளிட்ட 6-க்கும் மேற்பட்ட கூறுகள் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இருக்கும் திறன் கொண்டதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

## கருந்துளை - போவேஹி

- முதன்முறையாக கருந்துளை படம் பிடிக்கப்பட்டுள்ளது. இது "போவேஹி" எனப் பெயரிடப்பட்டுள்ளது.



- இந்தப் பெயரானது ஹவாய் சொல்லான "குமுலிப்போ" என்பவற்றிலிருந்து புகழ்பெற்ற ஹவாய் மொழிப் பேராசிரியரான லாரி கிமுரா என்பவரால் வழங்கப்பட்டது.
- இது 54 மில்லியன் ஒளியாண்டுகளுக்கு அப்பால் உள்ள மிகப்பெரிய பால்வழி அண்டமான

மெசியர் 87-ன் மையத்தில் அமைந்துள்ளது.

❖ ஆராய்ச்சியாளர்கள் நிகல்வெல்லைத் தொலைநோக்கியைப் பயன்படுத்தி (Event Horizon Telescope) கருந்துளையின் புகைப்படத்தைப் பெற்றுள்ளனர்.

***நிகல்வெல்லை தொலைநோக்கி***


❖ நிகல்வெல்லைத் தொலைநோக்கி (EHT - Event Horizon Telescope) என்பது சர்வதேச கூட்டுமுயற்சியின் மூலம் பூமியில் அமைந்த 8 ரேடியோ தொலைநோக்கிகளின் ஒரு தொகுப்பாகும்.

❖ EHT ஆனது உலகம் முழுவதும் உள்ள 8 தொலைநோக்கிகளை ஒன்றிணைத்து, இணைப்பு ஏற்படுத்தும் ஒரு முறையான மிகத் தொலைவு அடிப்படை எல்லை கொண்ட குறுக்கீட்டு ஒளி அளவியலைப் பயன்படுத்தியது.

❖ இந்த ஒன்றிணைக்கப்பட்ட தொலைநோக்கிகள் இணைந்து முன்னிகழ்வற்ற உணர்திறன் மற்றும் தெளிவுத் திறனுடன் கூடிய பூமி போன்ற ஒரு மெய்நிகர் தொலைநோக்கியை உருவாக்கின.

❖ EHT தொலைநோக்கிகளின் தொகுப்பு.

| | |
|---|---|
| Atacama Large Millimeter Array | James Clerk Maxwell Telescope |
| Atacama Pathfinder Experiment | Large Millimeter Telescope |
| Heinrich Hertz Submillimetre Telescope | South Pole Telescope |
| IRAM 30m telescope | Sub-Millimeter Array |




***கருந்துளைகள்***

❖ கருந்துளை என்பது அதிக அளவிலான ஈர்ப்பு விசையைக் கொண்டுள்ள விண்வெளியின் ஒரு பகுதியாகும். இதிலிருந்து எந்தவொரு பொருளும் தப்பித்துச் செல்ல முடியாது.

- ஒளி கூட கருந்துளைக்குள் சென்ற பின்பு தப்பித்துச் செல்ல முடியாது.
- பல நட்சத்திரங்களின் வாழ்நாள் முடிவின்போது கருந்துளைகள் உருவாகின்றன.

## ஹோமோ லூசோனென்சிஸ்


- இதற்கு முன்பு அறிவியலால் அறியப்படாத ஒரு புதிய மனித மூதாதையர் இனத்தை பிலிப்பைன்ஸ் நாட்டின் லூசோன் தீவில் உள்ள ஒரு குகையில் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



- சிறிய மனித உருவம் கொண்ட இந்த அமைப்பானது 4 அடிக்கும் உயரம் குறைந்ததாகவும் பெரும்பாலும் நேராக நடக்கக் கூடியதாகவும் உள்ளது என்று கண்டெடுக்கப்பட்ட புதை படிமங்கள் கூறுகின்றன.
- கண்டெக்கப்பட்டப் புதிய இனமானது ஹோமோ லூசோனென்சிஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ஹோமோ லூசோனென்சிஸ்ன் கண்டுபிடிப்பானது மனிதப் பரிணாமம் ஒரு காலத்தில் கருதப்பட்டது போல் நேரியல்பு அல்ல என்ற வளர்ந்து வரும் ஆதாரத்தை ஆதரிக்கிறது.

## பதின் பருவத்தினருக்கான சிறந்த உணவு

- சர்வதேச இரசாயன நிறுவனங்களான டோடுபாண்ட் மற்றும் BASF ஆகியவை பதின் பருவத்தினருக்கான சிறந்த உணவுகளைத் தயாரிப்பதற்காக மனித பால் ஒலிகாசச்சரைடு (HMO - Human milk oligosaccharide) என்ற ஒரு பொருளின் உற்பத்திக்கு மில்லியன் கணக்கில் முதலீடு செய்கின்றன.
- HMO என்பது மனிதப் பாலில் இயற்கையாகக் காணப்படும் செறிக்க முடியாத ஒரு சர்க்கரையாகும்.





- HMO ஆனது செரிமானத்திலிருந்து தப்பித்துப் பெருங்குடலை அடைந்து அங்குள்ள பயனுள்ள பாக்டீரியாவை எடுத்துக் கொள்கின்றது. இதன் மூலம் தாய்ப்பால் கொடுக்கும் குழந்தைகளுக்கு சிறந்த ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துகின்றது.

## முதலாவது "குளிர்த் தெளிப்பு" ஸ்மார்ட் ஆய்வகம்

- மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது விமான என்ஜின் (இயந்திர) பொருட்களுக்கான மேம்படுத்தப்பட்ட சேவைகள் தொழில்நுட்பத்தை வளர்ச்சி பெறச் செய்வதற்கு ஒரு ஆய்வகத் துறையை அமைக்க அமெரிக்காவைச் சேர்ந்த தொழில் குழுமமான ஜெனரல் எலக்ட்ரிக் என்ற நிறுவனத்துடன் இணைந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- "குளிர்த் தெளிப்பு" ஸ்மார்ட் (மேற்பரப்பு மாற்றம் மற்றும் சேர்பொருள் ஆராய்ச்சித் தொழில் நுட்பங்கள்) ஆய்வகம் என்பது இந்தியாவில் உள்ள எந்தவொரு கல்விசார் நிறுவனங்களிலும் அமைக்கப்படாத இதே வகையைச் சேர்ந்த முதலாவது ஆய்வகமாகும்.
- இது மேம்பட்ட உற்பத்தி மற்றும் சேவைகளுக்கான ஒரு வளர்ந்து வரும் தொழில்நுட்பமாகும். இது விமான என்ஜின் பயன்பாடுகளுக்கான செயல்முறைகளை ஒருங்கிணைக்கப் பயன்படும்.
- குளிர்த் தெளிப்புத் தொழில்நுட்பமானது மற்ற பரவலாகப் பயன்படுத்தப்படும் வெப்பத் தெளிப்பு செயல்முறைகளிலிருந்து வேறுபட்டுள்ளது. இதில் பொடிகளின் உருகுதல் தன்மை மற்றும் விஷத் தன்மை ஆகியவை இல்லை.
- எனவே உயர் ரகப் பூச்சை ஏற்படுத்த முடியும்.

## முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட இருதயம்

- இஸ்ரேலில் அறிவியலாளர்கள் மனிதத் திசுக்கள் மற்றும் நாளங்களைப் பயன்படுத்தி முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஒரு இருதயத்தை உருவாக்கியுள்ளனர். இது மருத்துவத் துறையின் முதலாவதும் மற்றும் மிகப் பெரியதுமான ஒரு சாதனை எனக் கட்டியம் கூறப்படுகின்றது.



- மனித இருதயத்தை அச்சிடுவதற்காக அறிவியலாளர்கள் சோதனைக்கான மனித நபர்களின் கொழுப்பு நிறைந்த திசுக்களிலிருந்துப் பெறப்பட்ட "தனிப் பயனாக்கப்பட்ட ஹைட்ரோஜெல்" என்பதனைப் பயன்படுத்தினர். மேலும் பயோஇங்க் என்பதனையும் உருவாக்கினர்.
- செல்கள், இரத்த நாளங்கள், இதயக் கீழறைகள் மற்றும் அறைகள் உள்ளடங்கிய ஒரு முழுமையான இருதயம் வெற்றிகரமாக வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும். இது எந்த ஒரு தனி நபராலும் இதுவரை நிகழ்த்தப் படவில்லை.

## பயன்கள் நிறைந்த பாக்டீரியா

- மரியானா அகழியில் ஒரு புதுமையான எண்ணெயை உண்ணும் பாக்டீரியத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்து இருக்கின்றனர்.
- ஹைட்ரோ கார்பனைச் சிதைக்கும் இந்த பாக்டீரியா எண்ணெயில் உள்ளதைப் போன்று மூலக்கூறுகளை உண்கின்றது.
- எண்ணெய்க் கசிவுகளை நீடித்து நிலைக்கக் கூடிய வகையில் சுத்தம் செய்வதற்கான வழிகளைக் கண்டறிவதிற்கு இந்த பாக்டீரியாவால் உதவ முடியும்.







### *மரியானா அகழி*

- இது மரியானா தீவுகளுக்கு கிழக்கில் தோராயமாக 200 கிலோ மீட்டர் தொலைவில் மேற்கு பசிபிக் கடலில் அமைந்துள்ளது.

- சேலஞ்சர் ஆழமான பகுதி என்று அறியப்படும் இப்பகுதி உலகில் ஆழமான இயற்கையான அகழியைக் கொண்டிருக்கின்றது.




## தடுப்பூசிக்கான எதிர்ப்புப் பிரச்சாரம்

- உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வின்படி, கடந்த ஆண்டின் இதே காலக் கட்டத்தோடு ஒப்பிடுகையில் உலகம் முழுவதுமாக தட்டம்மை நோய் 2019 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 300 சதவிகித அளவிற்கு உயர்ந்துள்ளது.
- அந்நோயின் மிதமிஞ்சிய அதிகரிப்பானது சமூக ஊடகத்தின் மூலம் குறிப்பாகப் பரப்பப்படும் தடுப்பூசிக்கான எதிர்ப்புப் பிரச்சாரங்களின் தாக்கத்தின் காரணமாக உருவாகும் கவலைகளினால் உருவானதாக அறியப்படுகின்றது.
- தட்டமை நோயற்ற ஒரு பகுதி அல்லது ஒரு குறிப்பிட்ட புவியியல் என்று அறிவிப்பதற்கான அடிப்படையானது:

| Criteria | Status |
|---|---|
| Absence of endemic measles virus transmission in a region for more than 12 months | ELIMINATED |
| Transmission is sustained continuously for more than a year. | **NOT ELIMINATED** |

## டிஜிட்டல் சுகாதாரத் தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள்

- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 17-ம் தேதியன்று உலக சுகாதார நிறுவனமானது நாடுகள் டிஜிட்டல் சுகாதாரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான 10 வழிகள் மீது புதிய பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.
- மக்களின் சுகாதார மற்றும் அத்தியாவசியச் சேவைகளை மேம்படுத்திட கைபேசிகள், வரைப்பட்டிகைகள் மற்றும் கணினிகள் வழியாக சுகாதாரச் சேவைகளை அணுகச் செய்திட இது எண்ணுகின்றது.


- இந்த வழிகாட்டுதல்கள் விளிம்பு நிலை மக்களைச் சென்றடைவதின் முக்கியத்துவத்தையும் டிஜிட்டல் சுகாதாரம் எந்த வகையிலும் அவர்களைப் பாதிக்காது என்பதை உறுதி செய்திடுவதையும் வலியுறுத்துகின்றன.

## HD 21749c

- நாசாவின் TESS திட்டம் HD 21749c என்று அழைக்கப்படும் ஒரு புதிய வெளிக் கோளினைக் கண்டுபிடித்திருக்கின்றது.
- TESS – வெளிக்கோளினை ஆராய்வதற்காக சுற்றிவரும் ஒரு செயற்கைக் கோள்.
- புதியதாகக் கண்டறியப்பட்டுள்ள வெளிக்கோளானது 52 ஒளி ஆண்டுகள் தொலைவில் HD 21749 என்றழைக்கப்படுகின்றது. இது ஒரு நட்சத்திரத்தைச் சுற்றி வருகின்றது.
- இந்த நட்சத்திரம் HD 21749b என்றழைக்கப்படும் இரண்டாவது கிரகத்தையும் கொண்டுள்ளது.
- HD 21749b ஆனது 23 முறை புவியின் நிறையை விட அதிகமாகவும் 2.7 முறை புவியின் ஆரத்தை விட அதிகமாகவும் உள்ளது.
- HD 21749c ஆனது ஏறக்குறைய புவியின் அளவைக் கொண்டதாகவும் வெறும் 7.8 புவி தினங்களில் அந்த நட்சத்திரத்தைச் சுற்றி வருவதாகவும் உள்ளது.

## மீத்தேன் ஏரி - சனிக் கிரகம்

- சனிக் கிரகத்தின் மிகப்பெரிய நிலவு டைட்டன் என்றழைக்கப்படுகின்றது.
- 100 மீட்டர்களுக்கும் அதிகமான ஆழத்தைக் கொண்ட திரவ நிலையில் உள்ள சிறிய ஏரிகளைச் சனிக் கிரகம் கொண்டிருக்கின்றது.
- அறிவியலாளர்களைப் பொறுத்தமட்டில் டைட்டன் கிரகத்தின் அறியப்பட்ட இரண்டாவது மிகப்பெரிய திரவநிலை அமைப்பான லிஜியா மேர் மீத்தேனால் நிரம்பியுள்ளது.



- இந்த தகவல் நாசாவின் காசினி விண்கலத்தால் அளிக்கப்பட்டு இருக்கின்றது.
- சூரியக் குடும்பத்தில் சனிக் கிரகமும் புவியும் தரையின் மீது திரவநிலை அமைப்புகளை நிலையாகக் கொண்டிருக்கும் இரண்டு இடங்களாகும்.
- டைட்டன் 5150 கிலோமீட்டர் விட்டத்தைக் கொண்டுள்ளது.
- இது சூரியக் குடும்பத்தின் இரண்டாவது மிகப்பெரிய நிலவு ஆகும்.
- சூரியக் குடும்பத்தில் வியாழன் கிரகத்தின் கானிமேடு என்பதே மிகப்பெரிய நிலவு ஆகும்.

## GSLV - நான்காவது நிலை

- மத்திய அமைச்சரவை தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் புவியிணக்கச் செயற்கைக் கோள் ஏவுவாகனத் திட்டத்தின் நான்காவது நிலையின் தொடர்ச்சிக்கு ஒப்புதல் அளித்திருக்கின்றது.
- GSLV (Geosynchronous Satellite Launch Vehicle) யின் இந்த நான்காவது காலக்கட்டம் 2021-2024 காலக் கட்டத்திற்குள் 5 ஏவுவாகனப் பயணங்களைக் கொண்டிருக்கின்றது.
- இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியானது ஆண்டிற்கு இரண்டு ஏவுதல்கள் என்ற வரிசையில் செயற்கைக் கோள்களை ஏவி விடுவதற்கான தேவையை நிவர்த்தி செய்யும்.
- GSLVயின் தொடரல் திட்டத்திற்கு முதலில் 2003-ம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- GSLV தொடரல் திட்டம் அதிமுக்கிய செயற்கைக்கோள் சேவைகளுக்கும் இந்தியாவில் எதிர்கால விண்வெளித் திட்டங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய செயற்கைக் கோள்களின் தேவையை நிவர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## ஹீலியம் ஹைட்ரைடு அயனி $HeH^+$

- முதன்முறையாக விண்வெளியில் உள்ள நமது பேரண்டத்தில் மிகப் பழமையான ஒரு மூலக்கூறு வகையை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இளம் பிரபஞ்சத்தில் குறைந்து வரும் வெப்பநிலையானது பெரு வெடிப்பின்போது உருவாக்கப்பட்ட ஒளி மூலக்கூறுகளை மீண்டும் இணைக்க அனுமதிக்கிறது.
- அந்த நேரத்தின் போது அயனியாக்கப்பட்ட ஹைட்ரஜன் மற்றும் நடுநிலையான ஹீலியம் அணுக்கள் ஆகியவை வினை புரிந்து $HeH^+$ அயனியை உருவாக்கும்.

## மரபணுத் தொகுதி வரிசையாக்கம்


- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றத்தின் (Council of Scientific and Industrial Research - CSIR) இரு ஆய்வகங்கள் ஒரு மரபணுத் தொகுதி வரிசையாக்கத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- அந்த இரு ஆய்வகங்கள் பின்வருமாறு :
    - செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் (Centre for Cellular and Molecular Biology - CCMB)
    - மரபியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் மையம் (Institute of Genomics and

Integrative Biology - IGIB)

- இவை குறைந்தது 10,000 இந்திய மரபணுத் தொகுதிகளை வரிசையாக்கத் திட்டமிட்டுள்ளன.
- மரபணுத் தொகுதிகள் ஒரு ரத்த மாதிரியின் அடிப்படையில் வரிசையாக்கப் படவிருக்கின்றன.
- இந்தத் திட்டமானது இரண்டு நோக்கங்களைக் கொண்டுள்ளது.
    - மரபணுக்களின் பயன்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு அறிவைப் புகட்டுவது.
    - குடிமக்களின் தனிப்பட்ட மரபு சார்ந்த பண்புகளை நிர்ணயிக்கவும் நோய்க்குரிய தன்மை (மற்றும் பின்னடைவு) ஆகியவற்றைக் கண்டறியவும்.

## குறுங்கோள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம்

- ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது இரட்டைக் குறுங்கோள் திசை மாற்ற சோதனை (Double Asteroid Redirection Test - DART) என்ற கிரக பாதுகாப்புத் திட்ட வாகனத்தைச் செலுத்தும் என நாசா தெரிவித்துள்ளது.
- 2021 ஜுன் மாதம் கலிபோர்னியாவிலிருந்து ஃபால்கன் 9 ராக்கெட் மூலம் இந்த DART கிரகப் பாதுகாப்புத் திட்டமானது செலுத்தப்படும்.




- இந்த விண்கலமானது பூமிக்கருகில் உள்ள டிடிமோஸ் எனும் குறுங்கோளின் துணைக்கோளும் பூமியிலிருந்து சுமார் 4 மில்லியன் மைல்கள் தொலைவில் அமைந்துள்ளதுமான 540 அடி அகலமுடைய (165 மீட்டர்) டிடிமூன் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மீது மோதும்.
- இந்தத் திட்டத்திற்கு பின்னர் 2023-ல் "ஹெரா" என்றழைக்கப்படும் ஐரோப்பாவின் திட்டமானது டிடிமோஸ் அமைப்பை நோக்கிச் செலுத்தப்பட்டு 2026-ல் அங்கு சென்றடையும்.
- சமீபத்தில் ஜப்பானின் ஹயாபூசா 2 விண்கலமானது விண்வெளிப் பாறையான ரியுகுவின் மீது அதன் புறப் பரப்பிலிருந்து ஆதிப்பொருளை ஆய்வுக்கு எடுப்பதற்காக தாமிர வெடிப் பந்தினை மோதச் செய்தது.

## கெப்ளர் – 47 அமைப்பு


❖ கெப்ளர் - 47 அமைப்பில் ஒரு புதிய கோளினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதற்கு கெப்ளர் – 47d எனப் பெயரிடப்பட்டுள்ளது.

❖ நாசாவின் கெப்ளர் விண்வெளித் தொலை நோக்கியின் தரவுகளைப் பயன்படுத்தி ஏற்கனவே அறியப்பட்ட கெப்ளர் – 47b மற்றும் 47c ஆகிய இரண்டு கோள்களுக்கு நடுவே சுற்றி வரும் நெப்டியூன் முதல் சனி அளவுடைய இந்தப் புதிய கோளினை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

❖ புதிய ஆய்வின்படி கெப்ளர் 47d ஆனது பூமியைவிட ஏழு மடங்கு பெரியது. மேலும் இரண்டு சூரியன்களைச் சுற்றிவரும் அமைப்பான கெப்ளர் – 47 அமைப்பின் மூன்று கோள்களிலும் இதுவே மிகப் பெரியதாகும்.

### *கெப்ளர் – 47 அமைப்பு*

❖ கெப்ளர் - 47 என்ற அமைப்பானது சுமார் 3.5 பில்லியன் ஆண்டுகள் பழமையானது. மேலும் இது சிக்னஸ் விண்மீன்த் திரளின் திசையில் 3,340 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.




❖ கெப்ளர் – 47d கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தற்போது இரண்டு சூரியனைச் சுற்றி வருகின்ற கெப்ளர் – 47 அமைப்பில் 3 கோள்கள் உள்ளன.

❖ கெப்ளர் – 47 அமைப்பானது இரட்டை நட்சத்திர அமைப்பைக் கொண்டதாகும். மேலும் அறியப்பட்ட வகையில் இது ஒன்றே பல கோள்களைக் கொண்ட சுற்று இருமை அமைப்பாகும்.

❖ இரண்டு நட்சத்திரங்களைச் சுற்றி வரும் கோள்களைச் சுற்று இருமைக் கோள்கள் எனலாம்.

## முதல் ஆயுதந் தாங்கிய நீர்-நில ஆளில்லாப் படகு

❖ "மரைன் லிசாட்" (Marine Lizard) எனும் பெயருடைய நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய

உலகின் முதலாவது ஆயுதங்கள் கொண்ட ஆளில்லாப் படகானது சீனாவால் சோதிக்கப்பட்டது.

- இது சீனாவின் பெய்டோ வழிகாட்டும் செயற்கைக் கோள் அமைப்பால் வழி நடத்தப்படுகின்றது.



- நிலம் மற்றும் நீரில் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய இது வான்வழி ஆளில்லா விமானங்கள் மற்றும் இதர ஆளில்லா கப்பல்களுக்கு எதிராகப் போர் முனையத்தை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளது.
- இதனால் தானே பயணித்தல், தடைகளைத் தவிர்த்தல், பாதைகளைத் திட்டமிடல் போன்ற வசதிகளுடன் மின்னணு ஒளியியல் அமைப்பு மற்றும் ரேடார் அமைப்பு ஆகியவற்றையும் இது உள்ளடக்கியது.


## பனிப்பொழிவிலிருந்து மின்சாரம்

- கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் ஆய்வாளர்கள் பனிப்பொழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கக்கூடிய முப்பரிமாண வடிவில் அச்சிடப்பட்ட கருவியை உருவாக்கியுள்ளனர்.
- இந்தச் செலவு குறைந்த கருவியானது சிறிய, மெலிதான மற்றும் வளையக்கூடிய வகையில் நெகிழித் தாள் போன்றது. இதற்கு மின்கலன் தேவையில்லை என்பதாலும் இது தனது சொந்த சக்தியை வழங்குவதாலும் எந்த இடத்திலும் உபயோகப்படுத்தப் படக்கூடியது.
- இந்தக் கருவியானது பனி அடிப்படையிலான சிறிய ரக உராய்வு மின்னியற்றி அல்லது “snow TENG “ என அழைக்கப்படுகிறது.
- இது நிலைமின்சாரம் வழியாக மின்னூட்டத்தினை உற்பத்தி செய்து எலக்ட்ரான் பரிமாற்றங்களிலிருந்து ஆற்றலை உற்பத்தி செய்கிறது.

## தனித்துவம் வாய்ந்த தீயணைப்பான்

- விஞ்ஞானிகள் சுடர் மற்றும் எரியும் பொருட்களில் இருந்து உருவாகும் தீயை உறிஞ்சக்கூடிய ஒரு தனித்துவம் வாய்ந்த தீயணைப்பானை மேம்படுத்தியுள்ளனர்.

- வெற்றிடத் தீயணைப்பு முறையானது ஜப்பானில் உள்ள தோயோகாசி தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் வடிவமைக்கப்பட்டது.
- இது விண்வெளி வாகனங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்ற மிகவும் சிறப்பு வாய்ந்த மூடப்பட்ட சூழல்களுக்குப் பொருத்தமானதாக இருக்கும்.




## செவ்வாய் நிலநடுக்கம்

- நாசாவின் (NASA - National Aeronautics and Space Administration) "இன்சைட்" என்ற தரையிறங்கும் விண்கலமானது செவ்வாய் கிரகத்தில் "செவ்வாய் நிலநடுக்கம்" என்று பெரும்பாலும் நம்பக்கூடிய ஒரு வகை நிலநடுக்கத்தைக் கண்டறிந்துள்ளது.
- நாசாவின் இன்சைட் (Insight) என்பது நிலநடுக்கம் சார்ந்த ஆய்வுகள், நிலப் பரப்பியல் மற்றும் வெப்பக் கடத்தல் ஆகியவற்றின் மூலம் செவ்வாய் கிரகத்தின் உட்பகுதியை ஆராய்வது என்பதாகும்.
- செவ்வாயின் "உட்புறப் பகுதியை" பற்றி விரிவாக ஆய்வு செய்யும் முதலாவது விண்வெளி எந்திரவியல் ஆராய்ச்சி இதுவாகும்.
- உட்புற அமைப்புகள் குறித்த இந்த ஆய்வானது நமது சூரியக் குடும்பத்தின் உட்புறப் பகுதியில் உள்ள பாறைக் கோள்களின் ஆரம்ப காலத் தோற்றம் குறித்த கேள்விகளுக்குப் பதில் அளிக்க உதவும்.

## குவாண்டம் வெப்ப நிலைமானி

- புது தில்லியின் ஜாமியா மிலியா இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உயர் நுண் உணர்வியான குவாண்டம் வெப்ப நிலைமானியை மேம்படுத்தியுள்ளனர்.
- இது வெப்ப நிலையில் ஏற்படும் நுண் கெல்வின் மாற்றங்களை அளவிடும். இது விரைவாக முடிவுகளை அளிக்கும்.
- இந்த உயர் நுண் உணர்வி குவாண்டம் வெப்ப நிலைமானியானது கிராபைன் குவாண்டம் புள்ளிகளைப் பயன்படுத்தி மேம்படுத்தப்பட்டது.

### *கிராபைன் குவாண்டம் புள்ளிகள்*


- கிராபைன் குவாண்டம் புள்ளிகள் (GQDs - graphene quantum dots) ஆனது கிராபைனின்

ஒற்றை அடுக்கிலிருந்துப் பல அடுக்குகளைக் கொண்ட குறைவான துண்டுகள், அளவில் சிறியவை அல்லது களங்கள் ஆகியவற்றைக் குறிக்கும்.

- ❖ GQDs ஆனது உயிரியல், ஒளி மின்னணுவியல், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பயன்பாடுகள் ஆகியவற்றில் பயன்படுகின்றது.

## பெப்பி கொலும்போ


- ❖ ஐரோப்பிய மற்றும் ஜப்பானிய விண்வெளி நிறுவனங்கள் ஏரியான் 5 விண்கலனானது பெப்பி கொலும்போ விண்வெளிக் கலத்தை வெற்றிகரமாக சுற்றுவட்டப் பாதைக்கு எடுத்துச் சென்றதாக அறிவித்துள்ளது.
- ❖ இது புதன் கிரகத்திற்கான ஒரு கூட்டுத் திட்டமாகும்.




- ❖ இந்த விண்கலமானது இத்தாலிய விஞ்ஞானியான கியூசிபி "பெப்பி" கொலும்போ என்பவரின் நினைவாக பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ பெப்பி கொலும்போவானது புதன் கிரகத்தின் மேற்பரப்பு மற்றும் ஈர்ப்பு விசையை தன்னிச்சையாக ஆராய்ந்து முடிவுகளை அளிக்கவிருக்கின்றது.
- ❖ பெப்பி – ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தால் மேம்படுத்தப்பட்டது.
    - ○ மியோ – ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் மேம்படுத்தப்பட்டது.

## குறுங்கோளில் முதல் செயற்கைப் பள்ளம்

- ❖ ஜப்பானின் ஆய்வாளர்கள் முதன்முறையாக குறுங்கோளில் செயற்கையான முறையில் வெற்றிகரமாக ஒரு பள்ளத்தை உருவாக்கியுள்ளனர்.





- இது சூரியக் குடும்பத்தில் ஏற்பட்ட மாற்றம் குறித்த சில தடயங்களை அளிக்கும்.
- ஹயபுசா 2 என்ற விண்கலத்திலிருந்து பேஸ்பால் அளவுடைய வெடிபொருளானது வெளியிடப்பட்டு குறுங்கோளின் மீது கணிசமான அளவுக்கு ஒரு பள்ளத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த மோதல் மேலாண்மை செய்யப்பட்டது.
- ஹயபுசா 2 விண்கலமானது பூமியில் இருந்து 340 மில்லியன் கிலோமீட்டர்கள் தொலைவில் உள்ள யுகு என்ற குறுங்கோளின் மீது ஒரு ஏவுகணையை வெடிக்கச் செய்தது.
- இது உயிர்களின் தொடக்கம் மற்றும் சூரியக் குடும்ப பரிணாம வளர்ச்சி ஆகியவற்றைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கப்பட்ட இந்த திட்டமானது 2020 ஆம் ஆண்டில் மாதிரிகளுடன் பூமிக்குத் திரும்பும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சர்வதேசக் காலநிலை நிலைமை

- உலக வானிலையியல் அமைப்பானது (WMO - World Meteorological Organisation) "2018 ஆம் ஆண்டின் சர்வதேசக் காலநிலை நிலைமை" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த வெளியீடானது சர்வதேச கால நிலை நிலைமை மீதான WMO அறிக்கையின் 25-வது ஆண்டு நினைவைக் குறிக்கின்றது. இது முதன்முதலில் 1994 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- வளிமண்டலத்தில் மிக முக்கியமான பசுமை இல்ல வாயுக்களின் மேல்நோக்கிய வளர்ச்சி, கடல் மட்ட உயர்வு அதிகரிப்பு மற்றும் வடக்கு, தெற்கு துருவ மண்டலங்களில் கடற்பனி உருகுதல் ஆகியவை இந்த அறிக்கையின் முக்கியக் கண்டுபிடிப்புகளாகும்.




## ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் சபை


- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் சபையின் (UNEA - UN Environment Assembly) நான்காவது சந்திப்பானது கென்யாவின் நைரோபியில் நடைபெற்றது.
- UNEA-ன் கருத்துருவானது, “சுற்றுச்சூழல் சவால்கள், நீடித்த நுகர்வு மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கான புத்தாக்கத் தீர்வுகள்” என்பதாகும்.
- UNEA 4-ன் தலைமை நாடாக எஸ்தோனியா உள்ளது.
- UNEA என்பது சுற்றுச் சூழல் குறித்து உலகின் உயர்மட்ட நிலையில் முடிவு எடுக்கும் ஒரு அமைப்பாகும்.
- இது தற்பொழுது உலகம் சந்தித்துக் கொண்டிருக்கும் மிக அபாயகரமான சுற்றுச் சூழல் சவால்களைக் களைகிறது.
- UNEA ஆனது 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உருவாக்கப்பட்டது.
- இந்தக் கருத்தரங்கானது பொதுவாக ரியோ + 20 என்றறியப்படுகின்றது.
- முதலாவது மற்றும் இரண்டாவது அமர்வுகளானது சட்ட விரோத வனவிலங்கு வர்த்தகம், காற்றின் தரம், சுற்றுச்சூழல் சட்ட விதிமுறை, பசுமைப் பொருளாதாரத்திற்கு நிதியளித்தல் மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் ஆகியவற்றின் மிக முக்கியமான சவால்கள் குறித்த தீர்மானங்களை எடுத்து, அதை ஏற்றுக் கொண்டது.
- UNEA-ன் மூன்றாவது அமர்வானது “மாசுபாடற்ற கிரகத்தை நோக்கி” என்ற கருத்துருவுடன் நைரோபியில் நடைபெற்றது.
- UNEA ஆனது 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடுகிறது.

## சர்வதேச காற்றின் நிலைமை 2017

- “சர்வதேச காற்றின் நிலைமை” என்ற அறிக்கையின்படி 2017 ஆம் ஆண்டில் இந்தியாவில் வீட்டிற்கு வெளியே மற்றும் வீட்டிற்குள்ளே ஏற்பட்ட காற்று மாசுபாட்டின் காரணமாக 1.2 மில்லியன் இறப்புகள் ஏற்பட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது அமெரிக்காவில் உள்ள சுயாதீன, இலாப நோக்கில்லா ஆராய்ச்சி நிறுவனமான சுகாதார விளைவு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.
- இந்த ஆய்வானது தற்பொழுதுள்ள அதிக அளவு காற்று மாசுபாட்டின் காரணமாக தெற்காசியாவில் உள்ள குழந்தைகளின் சராசரி வாழ்வானது 2 ஆண்டுகள் 6 மாதங்கள் அளவிற்கு குறையும் என்று கூறுகிறது.
- ஏராளமான காற்று மாசுபாட்டினால் ஏற்படக்கூடிய இறப்புகளுக்கு PM 2.5 காரணமாகும். PM 2.5-ன் சரிபாதி உற்பத்தியானது இந்தியா மற்றும் சீனாவில் நிகழ்கிறது.
- உலகளவில் மனிதனால் ஏற்படும் காற்று மாசுபாட்டினால் 65 சதவிகித இறப்புகளுக்கு புதைபடிவ எரிபொருள்களால் உற்பத்தி செய்யப்படும் உமிழ்வுகளே காரணமாகும்.
- இந்தியா மாசுபாடு மற்றும் மாசுபாட்டு ஆதாரங்களைக் களைவதற்காக பின்வரும் முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
    - பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா.
    - விரைவான பாரத் நிலை VI தூய்மை வாகனத் தர நிலைகள்.
    - தேசியத் தூய்மைக் காற்றுத் திட்டம்.

### *PM 2.5*

- PM 2.5 ஆனது 2.5 மைக்ரோ மீட்டருக்குக் குறைவான விட்டம் கொண்ட வளிமண்டல நுண்துகளைக் குறிக்கிறது.
- இந்தத் துகள்களை ஒரு எலக்ட்ரான் நுண்ணோக்கியினால் மட்டுமே கண்டறிய முடியும்.
- இத்துகள் மனிதன் மற்றும் விலங்குகள் சுவாசிக்கும் போது 2.5 அளவிலான நுண் துகள்களை எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது.
- இந்த நுண் துகள்களானது ஆஸ்துமா, மாரடைப்பு, மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் பிற சுவாசப் பிரச்சனைகள் போன்ற நீண்ட கால நோய்களை அல்லது மோசமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதற்காக அறியப்படுகின்றது.




## மின்னணு கழிவுப் பொருளாதாரம்

- உலக வங்கிக் குழுவின் ஒரு உறுப்பினரான சர்வதேச நிதியியல் கழகமானது "இந்தியாவில் மின்னணு கழிவு மேலாண்மை : தொலைநோக்குப் பார்வை" மீதான கருத்தரங்கை நடத்தியது.
- மின்னணு கழிவுகளானது இந்தியப் பொருளாதாரத்திற்கு முக்கியப் பங்காற்றுகிறது. மேலும் இது வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.



- மின்னணு கழிவுத் துறையானது 2025 ஆம் ஆண்டில் 4.5 இலட்சம் நேரடி வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் அது சார்ந்த துறைகளான போக்குவரத்து மற்றும் உற்பத்தி ஆகியவற்றில் மேலும் 1.8 இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.
- மின்னணுக் கழிவுகளானது மின் அல்லது மின்னணு சாதனங்களிலிருந்துப் பிரித்தெடுக்கப்படுகின்றது.

## யூரோ VI எரிபொருள்

- டெல்லியைத் தொடர்ந்து தேசியத் தலைநகரப் பகுதியில் உள்ள நகரங்கள் மற்றும் ஆக்ராவைச் சுற்றியுள்ள நகரங்களில் தூய யூரோ VI நிலையிலான பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றில் மட்டுமே வாகனங்களை இயக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.
- யூரோ VI நிலை எரிபொருளானது 10 பிபிஎம் சல்பரைக் கொண்டுள்ளது. யூரோ IV-ல் 50 பிபிஎம் சல்பர் உள்ளது.

## குதிக்கும் சிலந்திகள்

- ராஜேஷ் சனாப், டாக்டர் ஜான் கலீப் மற்றும் உயிரியலாளர் அனுராதா ஜாக்லேகர் ஆகியோர் தலைமையிலான சிலந்தி ஆய்வுக் குழுவானது குதிக்கும் சிலந்திகளின் புதிய இனத்தைக் கண்டறிந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- கண்டுபிடிக்கப்பட்ட புதிய இனத்தின் பெயர் ஜெர்ஜிகோ சுனிலிமாயே என்பதாகும்.



- சிலந்திகள் நுண்வாழிட சிறப்பு வாய்ந்தவைகள். அதன் வாழிடங்களில் ஏற்படும் திடீர் மாற்றங்களினால் பெரிதும் பாதிப்புக்கு சிலந்திகள் உள்ளாவதால் அவை சீர்மையான சுற்றுச் சூழலைக் காட்டுகின்றன.
- சிலந்திகள் ஒரு முக்கியமான உயிரினமாக இருப்பதால் பூச்சிக் கட்டுப்படுத்திகளாக விளங்குகின்றன.
- சிலந்திகள் நுண்வாழிட உலகின் புலிகள் போன்றவையாகும்.
- சிலந்திகளை அவற்றின் வாழிடங்களிலிருந்து அகற்றினால் சுற்றுச்சூழல் சமநிலையின்மை ஏற்படும்.
- சிலந்திகள் மற்றும் சிலந்தி இனங்களைப் பற்றிப் படிப்பவர்கள் சிலந்தி ஆராய்ச்சியாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

## பருவ மழை கணிப்பு

- தனியார் வானிலை முன்னறிவிப்பு நிறுவனமான ஸ்கைமேட் ஆனது இந்த ஆண்டின் பருவ மழைக் காலத்தில் இயல்பை விட குறைந்த அளவில் மழை பெய்யும் என்று கணித்துள்ளது.
- மேலும் இந்திய வானிலையியல் நிறுவனமானது தென்மேற்குப் பருவ மழைக் காலம் மிகவும் வலுக் குறைந்ததாக இருக்கும் என்று கணித்துள்ளது.
- இந்த முன்னறிவிப்பு நிறுவனமானது 2019 ஆம் ஆண்டில் (ஜூன் – செப்டம்பர்) பருவ மழையானது 93 சதவீதமாக இருக்கும் என்று கணித்திருந்தது.
- LPA (Long period Average) என்பது 50 ஆண்டு காலத்தில் சராசரி வருடாந்திர மழைப்பொழிவு என்று வரையறுக்கப்படுகின்றது.

| Level of Rainfall on LPA | Status of Rainfall |
|---|---|
| **Less than 90%** | Deficient |
| **96-104%** | Average or Normal |
| **90-96%** | Below Normal |
| **104-110%** | Above Normal |
| **Above 110%** | Excess |

## கோமோடோ டிரேகன்


- இந்தோனேஷியாவைச் சேர்ந்த அதிகாரிகள் கோமோடோ சுற்றுலாப் பயணிகளைத் தடை செய்யவிருக்கின்றனர். இந்த தீவானது பழங்கால கோமோடோ டிரேகனின் வாழிடமாக இருக்கிறது. பாதுகாப்பு மற்றும் கடத்தலைத் தடுப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- கோமோடோ டிரேகனின் இயற்கை வாழிடமாகத் திகழும் ஒரே இடம் இந்தோனேஷியத் தீவுகளாகும்.



- கோமோடோ டிரேகன் ஆனது IUCN (International Union for Conservation of Nature) பட்டியலில் "பாதிக்கப்படக்கூடிய நிலையில்" உள்ளது.


## மிதக்கும் சுத்திகரிப்புத் தீவுகள்

- டெல்லியின் நீர் வாரியமானது மாசுக்களை உறிஞ்சவும், நீரை சுத்திகரிக்கவும் நீர் நிலைகளில் மிதக்கும் தீவுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் தீவுகளானது ஹார்மோன் முறையில் தீர்வளிக்கும் தாவரங்களின் தொகுப்பாக உள்ளது.
- சிறு தீவுகள் அளவிலான இந்த மிதக்கும் சதுப்பு நிலங்களானது நீர் நிலைகளில் உள்ள ஊட்டச் சத்துக்களை உறிஞ்சும் தாவரங்களைக் கொண்டுள்ளது.
- இந்த உள்நாட்டுப் புத்தாக்கமானது, நீரினை மீன்களுக்கு ஏற்றதாக மாற்றவும் அந்த ஏரிச் சூழலியலைத் தன்னைத் தானே சுயமாக சுத்தம் செய்யக் கூடியவையாகவும் மாற்றக் கூடியது ஆகும்.



## ஆரளம் சரணாலயத்தில் இரண்டு புதிய பறவையினங்கள்


- ❖ ஆரளம் வனவிங்கு சரணாலத்தில் மேற்கொள்ளப்பட்ட 19-வது பதிப்பு பறவைகள் கணக்கெடுப்பில் 2 புதிய பறவையினங்கள் காணப்பட்டுள்ளது.
- ❖ கம்பளி கழுத்துடைய நாரை மற்றும் வெள்ளை வயிறுடைய கருங்குருவி ஆகியவை புதிதாக காணப்பட்ட பறவையினங்களாகும்.




- ❖ இவையிரண்டும உலர் நில இனங்களாகும். மேலும் இவற்றுடன் இந்த பாதுகாக்கப்பட்டப் பகுதியில் காணப்பட்ட பறவையினங்களின் மொத்த எண்ணிக்கை 246-ஐ தொட்டுள்ளது.
- ❖ ஆரளம் வனவிலங்குச் சரணாலயமானது மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மேற்கு சரிவில் கேரளாவின் வடக்கு முனையில் அமைந்துள்ள சரணாலயம் ஆகும்.

## சைட்டிரிடியோமைகோசிஸ்

- ❖ சைட்டிரிடியோமைகோசிஸ் என்பது நீர் நில வாழ்விகளை (ஈரிட வாழ்விகள்) பாதிக்கக் கூடிய ஒரு கொடிய தொற்றும் நோயாகும்.
- ❖ இது “பாடராசோசிடிரியம் டென்ட்ரோபேட்டிடிஸ்” என்ற பூஞ்சையினால் ஏற்படுகின்றது.
- ❖ இந்தப் பூஞ்சையானது தவளைகள், தேரைகள் மற்றும் ஈரிட வாழ்விகளின் தோலைத் தாக்குகிறது.



- இந்த உயிரினங்கள் சுவாசிக்கவும் உடலில் உள்ள நீரின் அளவை ஒழுங்குபடுத்தவும் தோலைப் பயன்படுத்துகின்றன. இந்த நோயினால் ஏற்படும் பாதிப்பானது இறுதியில் இதயச் செயலிழப்பு மற்றும் மரணத்தை ஏற்படுத்துகின்றது.
- இது "முதலாவது உலகளாவிய கொடிய நோய் பிரச்சனை" என்று விவரிக்கப்படுகின்றது. இதன் விளைவாக 90 இனங்கள் முற்றிலும் அழிந்து போயின.

## மஞ்சள் வானிலை எச்சரிக்கை

- இமாச்சலப் பிரதேசத்திற்கு இடிமின்னலுடன் கூடிய ஒரு மஞ்சள் வானிலை எச்சரிக்கையை வானிலை ஆய்வுத்துறை விடுத்துள்ளது.
- வானிலை ஆய்வு மையமானது சேதத்தினை ஏற்படுத்தக் கூடிய அல்லது பரவலான இடையூறு அல்லது உயிருக்கு ஆபத்து விளைவிக்க சாத்தியமுள்ள வானிலைகளுக்கு முன்னரேப் பொதுமக்களை எச்சரிக்கை செய்வதற்கென வண்ணங்களுடன் கூடிய எச்சரிக்கைகளை வெளியிடுகிறது.
- அடுத்த சில நாட்களுக்கு பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கடுமையான வானிலை இருக்குமென்பதை குறிக்கும் மஞ்சள் வண்ணமானது குறைந்த ஆபத்துடையதாகும்.

## 24 x 7 மாசு வசூல் மையம்

- லண்டன் மாநகரமானது உலகின் முதல் சிறப்புத் தீவிரமான குறை உமிழ் மண்டலத்தை (Ultra Low Emission Zone-ULEZ) செயல்படுத்தியுள்ள நகரமாக மாறியுள்ளது.
- இது உமிழ்வு வரையறைகளை எட்டாத பழைய வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணத்தை வசூலிக்கின்றது.
- இது காற்று மாசுபாட்டை குறைப்பதோடு பொது சுகாதாரத்தினைப் பாதுகாப்பதற்கான முயற்சியாகும்.
- இந்த ULEZ ஆனது வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்படும்.

## முதல் நேர்மறை கார்பன் கிராமம்

- மணிப்பூரின் இம்பாலில் உள்ள மேற்குப் பகுதியில் உள்ள பாயெங் கிராமமானது இந்தியாவின் முதல் நேர்மறை கார்பன் குடியேற்றப் பகுதியாக மாறியுள்ளது.
- இந்தக் கிராமமானது அட்டவணைப்படுத்தப்பட்ட பிரிவான சக்பா சமூகத்தினர் வாழும் கிராமமாகும்.
- பல்வேறு மாநிலங்களுக்கான காலநிலை மாற்ற தாக்கத்தினால் ஏற்படும் மாற்றங்களின் தகவலமைப்பிற்கான மத்திய அரசின் திட்டமான காலநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியத்தின் கீழ் இக்கிராம குடியிருப்பாளர்கள் கிராமத்தை மாற்றியுள்ளனர்.
- ஒரு கிராமமானது அது வெளியிடும் கார்பனைவிட அதிக அளவில் சேகரித்தல், குறைந்த அளவு பசுமையக வாயுக்களை திரட்டுதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான வாய்ப்புகளை குறைத்தல் ஆகியவற்றை செயல்படுத்தினால் நேர்மறை கார்பன் கிராமம் எனும் குறியீடு அதற்கு அளிக்கப்படும்.

## ஜிங்க் பற்றாக்குறை

- காற்றில் அதிகரித்து வரும் கார்பன்-டை-ஆக்ஸைடின் அளவானது இந்தியப் பயிர்களில் ஜிங்க் பற்றாக்குறைக்கு காரணமாக உள்ளது. இதனால் இந்தியர்களால் உட்கொள்ளப்படும் ஊட்டச்சத்து அளவானது குறைந்து கொண்டிருக்கின்றது.
- ஹார்வர்டு T H சன் பொதுச் சுகாதாரப் பள்ளியினால் நடத்தப்பட்ட ஆய்வின்படி இந்தியாவில் அரிசி முக்கிய உணவாக உள்ள பகுதிகளில் வாழும் மக்களின் தினசரி உணவில் ஜிங்க் எடுத்துக் கொள்வதில் பற்றாக்குறை உள்ளது என்பதைக் காட்டுகின்றது.
- பற்றாக்குறையாக ஜிங்க் எடுத்துக் கொள்ளுதலின் தேசிய விகிதமானது 1983 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால கட்டத்தில் 17 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.
- ஜிங்க் பற்றாக்குறையானது பொதுவாகக் குழந்தைகளில் மலேரியா, வயிற்றுப் போக்கு உபாதைகள், நிமோனியா போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது.


## பேரிடர்கள் முகம் 2019

- "சீட்ஸ்" (SEEDS) என்ற அமைப்பால் வெளியிடப்பட்ட "பேரிடர்கள் முகம் 2019" என்ற அறிக்கையின்படி "சராசரி" மழைப் பொழிவு தகவல்களானது நாடெங்கிலும் நிலவும் கடுமையான வெள்ளம் மற்றும் வறட்சி ஆகியவற்றை முழுமையாகக் காட்டுவதில்லை என்று கூறப்பட்டுள்ளது.
- "நீடித்த சுற்றுச் சூழல் மற்றும் சூழலியல் வளர்ச்சி சமூகத்தின்" அறிக்கையானது இந்திய வானிலையியல் அமைப்பினால் பயன்படுத்தப்படும் "வழக்கமான மழைப்பொழிவு" அல்லது "சராசரி மழைப்பொழிவு" போன்ற சொற்கூறுகள் நாடு முழுவதும் மற்றும் மாநிலங்களில் ஏற்படும் மழைப்பொழிவு மாறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்பதைக் கண்டறிந்துள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டில் ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான பருவமழைக் காலத்தின்போது, பஞ்சாபில் "வழக்கமான மழைப் பொழிவு" நிகழ்ந்ததை உறுதி செய்கின்றது.
- ஆனால் பஞ்சாபின் ஒரு பகுதியானது (ரூபார்) 71 சதவிகித மழையையும் மற்றொரு பகுதியானது (பெரோஸ்பூர்) 74 சதவிகிதம் குறைவான மழைப் பொழிவையும் பெற்றுள்ளது.

## மாசுபடுத்தப்பட்ட நதிகள் – மத்திய கண்காணிப்புக் குழு

- தேசியப் பசுமைத் தீர்ப்பாயமானது நாடு முழுவதும் பரவியுள்ள 350 நதிப் படுகைகளை தூய்மையற்ற நிலையிலிருந்து விடுவிப்பதற்காக ஒரு தேசிய அளவிலான திட்டத்தைத் தயாரித்துச் செயல்படுத்துவதற்காக ஒரு மத்திய கண்காணிப்புக் குழுவினை அமைத்து இருக்கின்றது.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒரு மதிப்பீட்டின்படி அதிமுக்கிய மாசுபாடு அடைந்த பகுதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.
    - மிதி நதி – போவாய் முதல் தாராவி வரை

- கோதாவரி – சோமேஷ்வர் முதல் ரஹேத் வரை
- சபர்மதி – கேரோஜ் முதல் வவுதா வரை
- ஹிண்டோன் – சஹரன்பூர் முதல் காசியாபாத் வரை




***பின்னணி***

- 1990 ஆம் ஆண்டுகள் முதல் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் உயிரியல் ஆக்சிஜன் தேவையை (Biochemical Oxygen Demand) முதன்மையாக அளவிடுவதன் மூலம் நதிகளின் தரத்தைக் கண்காணித்திட ஒரு திட்டத்தைக் கொண்டிருக்கின்றது.
- உயிர்வேதியியல் ஆக்சிஜன் தேவை – நீரில் நிறைந்துள்ள உயிர்மப் பொருள்களை உடைத்திட உயிர்வளி வேண்டுகின்ற உயிரினங்களுக்குத் தேவைப்படுகின்ற கரைந்திருக்கும் ஆக்சிஜனின் அளவு.
- அதிகப்படியான உயிர்வேதியியல் ஆக்சிஜன் தேவை அளவானது நதி மிகவும் மோசமான நிலையில் இருப்பதைக் குறிப்பிடுகின்றது.

## கான மயில்

- கான மயில் (Great Indian Bustard) இனத்தின் (அர்டியோடிஸ் நிக்ரிசெப்ஸ்) ஒரே வாழிடமாக இந்தியா விளங்குகின்றது. இது ஒரு “உயர் அச்சுறுத்தல் நிலை இனமாகும்.”
- தேசியப் பசுமைத் தீர்ப்பாயமானது கான மயிலின் எண்ணிக்கை குறித்த “தகவல் அறிக்கையை” சமர்ப்பிக்குமாறு மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தை அறிவுறுத்தியுள்ளது.




- இராஜஸ்தானில் உள்ள காற்றாலைத் திட்டங்கள் மற்றும் மின் பரிமாற்ற இணைப்புகள் ஆகியவற்றினால் கான மயில் சந்திக்கும் அபாயங்கள் குறித்து எடுத்துக் காட்டுவதற்காக வனவிலங்கு மற்றும் சுற்றுச் சூழல் நல மையத்தினால் (CWEL - Centre for Wildlife and Environment Litigation) ஒரு மனுவானது தாக்கல் செய்யப்பட்டது.
- இராஜஸ்தானின் பாலைவன தேசியப் பூங்காவில் 150 கான மயில்கள் மட்டுமே காணப்படுகின்றன.

## ஆக்கிரமிக்கும் வகை காளைத் தவளை

- இந்திய நிலப் பகுதியில் வாழும் இந்தியக் காளைத் தவளையானது (ஹோப்லோ பேட்ராச்சஸ் டிகரினஸ்) சமீபத்தில் அந்தமான் தீவுக் கூட்டங்களை ஆக்கிரமித்துள்ளது.
- இது ஒரு பரவலாக ஆக்கிரமிக்கும் இனமாக வளர்ந்துள்ளது.
- இது மீன்கள், பல்லிகள் மற்றும் கோழிகள் உள்ளிட்ட உள்ளூர் வாழ்விட வாழும் விலங்குகளை உட்கொள்வதனால் அந்தமானின் உள்ளூர்ப் பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலை அது ஏற்படுத்துகின்றது.



## ஆலிவ் ரிட்லி

- தோராயமாக 1.25 இலட்சம் ஆலிவ் ரிட்லி ஆமைக் குஞ்சுகள் ஒடிசா கடற்கரையோரத்தில் உள்ள கலாம் தீவிலிருந்து கடலுக்குள் சென்றன.
- பன்னாட்டு இயற்கை மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு மன்றத்தின்படி (International Union for Conservation of Nature and Natural Resources - IUCN) ஆலிவ் ரிட்லியானது "பாதிக்கப்படக்கூடிய இனமாக" வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இது CITES (Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) என்ற அமைப்பின் பட்டியல் – 1ல் வகைப்படுத்தப்பட்டுள்ளது.




- வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் ஆபத்தான இனங்களில் சர்வதேச வர்த்தகம் மீதான ஒப்பந்தம் என்பது அருகிவரும் தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பாதுகாப்பதற்கான ஒரு பன்முனை ஒப்பந்தமாகும்.
- மேலும் இது வாஷிங்டன் ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- 1975 ஆம் ஆண்டு ஜூலை 01 அன்று CITES நடைமுறைக்கு வந்தது.
- இந்தியாவில் ஆலிவ் ரிட்லி ஆமையின் மிக முக்கியமான அடைகாக்கும் தளங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| Gahirmatha beach | Astaranga coast |
| Beach of Rushikulya River | Devi River mouth |
| Andhra Pradesh | Hope Island of Coringa Wildlife Sanctuary |

## பாலி எரிமலை

- இந்தோனேஷியாவின் பாலியில் உள்ள செயல்பட்டுக் கொண்டிருக்கும் அகுங் எரிமலையானது மீண்டும் வெடித்துள்ளது. இது வானில் 2 கிலோ மீட்டர் உயரத்திற்கு எரிமலைக் குழம்புகளை உமிழ்ந்துள்ளது.
- அகுங் மலையானது பசிபிக் கடலின் "நெருப்பு வளையத்தில்" அமைந்துள்ளது.
- 25,000 மைல்கள் நீளமுடைய இந்தக் குதிரைலாட வடிவம் கொண்ட நெருப்பு வளையமானது எரிமலைச் சங்கிலித் தொடருக்குப் பெயர் பெற்றது.

- உலகில் ஏற்படும் நிலநடுக்கங்களில் 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவை இந்த வளையம் அமைந்த இடத்தில் நிகழ்கின்றது.




## புதிய பறவை இனம்

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுத் தொடர்களின் கிரேட் நிக்கோபார் தீவுகளில் ஹார்ஸ்பீல்டு கரும்பச்சை குயில்கள் (Horsfield's Bronze Cuckoo bird) காணப்பட்டதாக ஆசிய பறவைகள் கவனிப்பு (Birding ASIA) எனும் நூலில் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய ஆய்வு தெரிவித்துள்ளது.
- இதன் தாயகம் ஆஸ்திரேலியா மற்றும் நியூ கினியா ஆகும்.



- இந்தப் பறவை இந்தியாவில் காணப்படுவது இதுவே முதன்முறையாகும்.
- நாட்டின் நிலப்பகுதியில் 0.25 சதவீத பரப்பை மட்டுமே கொண்ட அந்தமான் நிக்கோபார் தீவுகளானது சுமார் 350 வெளிநாட்டுப் பறவைகளுக்குப் புகலிடமாக உள்ளது.

## கரி நிலங்கள்


- ❖ அண்மையில் கென்யாவில் நைரோபியில் நடைபெற்ற ஐ.நா. சுற்றுச்சூழல் கூடுகையில் (United Nations Environment Assembly) கரிநிலம் மீதான முதலாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ இது பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு உத்வேகம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ கரிநிலம் என்பது ஒருவகை சதுப்பு நிலமாகும்.
- ❖ இது கரி மண் மற்றும் அதன் மேல் வளரும் சதுப்புநில வாழிடத்தைக் குறிக்கின்றது.

## பென்குயின் காலனி

- ❖ உலகின் இரண்டாவது மிகப்பெரிய பென்குயின் காலனியான அண்டார்டிகாவில் உள்ள ஹேலி வளைகுடாப் பகுதியானது ஏறக்குறைய அழிந்து விட்டது.
- ❖ பிரிட்டீஷ் அண்டார்டிகா கணக்கெடுப்பு நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பென்குயின் குஞ்சுகள் அங்கு இறந்துள்ளதாகக் கூறியுள்ளனர்.
- ❖ 2016 ஆம் ஆண்டில் அண்டார்டிகாவின் வெடல் கடலில் உள்ள "கடற் பனிக் கட்டிகளானது" சூறாவளியினால் தாக்கி அழிக்கப்பட்ட போது ஏராளமான பென்குயின் குஞ்சுகள் கடலில் மூழ்கி இறந்தன.
- ❖ பருவநிலை மாற்றமானது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் சூறாவளிகளை ஏற்படுத்தி அந்த இடத்தில் ஏராளமான பென்குயின் குஞ்சுகளை அழித்துள்ளன.

## கடல்சார் சுற்றுச்சூழல்

- ❖ அமெரிக்காவில் உள்ள ருட்கர்ஸ் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட ஆய்வானது ஆண்டின் வெப்பமான காலங்களின் போது ஒவ்வொரு உயிரினத்திற்கும் தேவைப்படும் குளிர்ந்த வெப்ப நிலையைக் கணித்துள்ளது.
- ❖ இது தரையில் வாழும் உயிரினங்களை விட கடல்வாழ் உயிரினங்கள் புவி வெப்பமடைதல் காரணமாக இரண்டு மடங்கிற்கும் மேல் அழிக்கப் படுவதைக் கண்டறிந்துள்ளது.
- ❖ வெப்பத்திலிருந்துத் தப்பிப்பதற்காக நிலத்தில் வாழும் உயிரினங்கள் காடுகள், நிழல் உள்ள பகுதிகள் அல்லது நிலத்துக்கு அடியில் உள்ள பகுதிகள் ஆகியவற்றில் பதுங்கிக் கொள்கின்றன. ஆனால் கடலில் வாழும் உயிரினங்களுக்கு வெப்பத்திலிருந்து தப்பிப்பதற்கான வழிகள் எதுவும் இல்லை.
- ❖ கடல் உயிரினங்களின் மீதான மிக அதிக அளவிலான பாதிப்பானது உணவு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்காக மீன் மற்றும் மட்டிகள் ஆகியவற்றை நம்பியிருக்கும் மனிதச் சமூகத்தை மிகவும் பாதிக்கின்றது.




## நிரந்தர உறைபனி

- “நேச்சர் கம்யூனிகேசன்ஸ்” என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஒரு புதிய ஆய்வின்படி, ஆர்ட்டிக்கில் உருகிக் கொண்டிருக்கும் நிரந்தர உறைபனியானது மீத்தேன் மற்றும் கார்பன்-டை-ஆக்ஸைடு ஆகிய வாயுக்களை வெளியிடும் என்று கூறப்பட்டுள்ளது.
- இது புவி வெப்ப மயமாதலை மிகப்பெரிய அளவில் அதிகப்படுத்தும். மேலும் இது உலகில் டிரில்லயன் டாலர் மதிப்பில் சேதங்களையும் விளைவிக்கும்.
- நிரந்தர உறைபனி (Permafrost) என்பது குறைந்தது தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக கடும் குளிர்மிக்க அல்லது முழுமையாக உறைந்த நிலையில் காணப்படும் எந்தவொரு பகுதியையும் குறிப்பதாகும் (32° F அல்லது 0° C).
- நிரந்தர உறைபனியின் மேற்பகுதியின் மீதுள்ள மண்ணின் அடுக்கானது ஆண்டு முழுவதும் உறைந்த நிலையில் காணப்படுவதில்லை.
- கோடைக் காலங்களின் போது உருகியும் மற்ற காலங்களில் உறைந்தும் காணப்படுகின்ற இந்த அடுக்கானது “செயல்பாட்டு அடுக்கு” என்று அழைக்கப்படுகின்றது.

## காகாபோ கிளி

- காகாபோ சிரோக்கோ என்பது நியூசிலாந்தில் காணப்படும் உயர் அச்சுறுத்தல் நிலையில் உள்ள கிளி இனங்களில் ஒரு வகையான உலகின் பெருத்த கிளியாகும்.
- இந்த இனத்தில் பெண் கிளிகள் இனப்பெருக்க செயல்முறைகளை கட்டுப்படுத்துகின்றன.



- நியூசிலாந்தில் வளரும் ரீமு மரங்களில் கனிகள் நிறைந்து காணப்படும் சமயத்தில் இந்த கிளிகள் 2 முதல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடுகின்றன.
- ஒரே காலத்தில் இந்தக் கிளியினால் 249 முட்டைகள் இடப்படுகின்றன.

## 95 மில்லியன் வருடத்திற்கு முந்தைய நண்டு இனம்

- ஆல்பெர்ட்டா பல்கலைக் கழகத்தின் புதைப் படிவியலாளர்கள் 95 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய, நாணய அளவுடைய, கார்ட்டூனில் உள்ளது போன்ற கண்களுடைய கால்லிசிமாயிராபெர்ப்லெக்ஸா எனும் நண்டு இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.




- இந்த நண்டு இனமானது மத்திய கிரிட்டாசியஸ் காலகட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனவும் இது தற்போதைய கொலம்பியா, வட ஆப்பிரிக்கா மற்றும் யோமிங் போன்ற பகுதிகளிலிருந்து வந்துள்ளதாகவும் நம்பப்படுகிறது.
- சிறிய சட்டைப்பை அளவுடைய இந்த நண்டானது இறால் போன்ற மெல்லிய மேலோட்டையும் பெரிய அளவிலான துடுப்பு போன்ற தட்டையான கால்களையும் பவுண்ட் நாய்க் குட்டிகளைப் போன்றுத் தலையிலிருந்துத் துருத்திக் கொண்டிருக்கும் கண்களையும் உடையது.

## நெகிழியற்ற முதல் விமானம்

- ஐக்கிய அரபு அமிரகத்தின் எத்திஹேட் ஏர்வேஸ் ஆனது பறக்கும் பொழுது ஒற்றைப் பயன்பாட்டு நெகிழியற்றதாக செயல்படுகின்ற வளைகுடாப் பகுதியின் முதலாவது விமானமாக மாறியுள்ளது.
- உலக பூமி தினத்தன்று மாசுபாடுகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்துடன் இது பொருந்திப் போகின்றது.
- இது 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் விமானத்தில் மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த நிறுவனத்திலும் 80% அளவிற்கு ஒற்றை உபயோக நெகிழியைக் குறைப்போம் என்ற எத்திஹேட் விமான சேவையின் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகும்.

## காற்று மாசுபாடு

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகமானது தேசியத் தூய காற்றுத் திட்டத்தைச் (National Clean Air Programme - NCAP) செயல்படுத்துவதற்காக ஒரு குழுவை உருவாக்கியுள்ளது.
- இது 20% - 30% என்ற அளவில் துகள்மப் பொருள் மாசுபாட்டை குறைக்க எண்ணுகின்றது.
- இது 2024 ஆம் ஆண்டில் குறைந்தது 102 நகரங்களைச் சென்றடைய இலக்காகக் கொண்டுள்ளது.
- NCAP ஆனது 5 ஆண்டு செயல்திட்டமாக திட்டமிடப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டானது அத்திட்டத்தின் முதலாவது ஆண்டாகும்.

# மாநிலச் செய்திகள்

## முதல்முறை வாக்களிப்பவர்களுக்கான செயலி

- அசாமில் உள்ள போங்காய்கோயான் மாவட்ட நிர்வாகமானது குறிப்பாக முதன்முறை வாக்களிக்கும் வாக்காளர்களைச் சென்றடைவதற்காக ‘சங்கல்ப்’ எனும் அலைபேசி செயலியை உருவாக்கியுள்ளது.
- இது முதன்முறை வாக்காளர்களை ஊக்குவிப்பதற்காக தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் அசாமின் போங்காகோயான் மாவட்ட நிர்வகத்தால் உருவாக்கப்பட்டது.
- இந்த செயலியின் உதவியுடன் அவர்கள் வாக்களிக்கும் நாளில் தங்கள் வாக்குகளை அளிப்பதாக உறுதியளித்து டிஜிட்டல் முறையிலான சங்கல்ப் பத்திரத்தில் கையொப்பமிட முடியும்.

## பிரெய்லியில் வாக்குச் சீட்டு

- மேகாலயாவில் முதன்முதலாக தேர்தல் ஆணையமானது 800க்கும் அதிகமான பார்வையற்ற வாக்களார்களுக்கு இரகசிய வாக்குப் பதிவு முறையில் வாக்களிக்கும் வசதியை அளிக்கவுள்ளது.
- மாநிலத்தில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பிரெய்லி முறை

செயல்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுகளை வழங்க தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

- மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் ஒட்டப்பட்டுள்ள வாக்குப்பதிவுச் சீட்டுகள் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்கள் ஆகியவற்றைப் பிரெய்லி முறையில் கொண்டிருக்கும்.

## நடமாடும் மெத்தடோன் வாகனங்கள்

- எய்ம்ஸ் மருத்துவமனையானது நாட்டில் முதன்முறையாக உள்நாட்டின் சுற்றுப்புறங்களில் உள்ள ஓபியோய்டுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் நடமாடும் மெத்தடோன் வாகனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- எய்ம்ஸ்-ன் தேசிய போதைக்கு அடிமையானோர் சிகிச்சை மையம் கிழக்கு டெல்லியில் ஒரு புதிய சேவையை சோதனைத் திட்டமாகத் தொடங்கியுள்ளது.
- தற்போது உலகின் சில தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, போர்ச்சுக்கல், ஸ்பெயின், கனடா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் மட்டுமே இது போன்ற நடமாடும் வாகனங்கள் சேவையில் உள்ளன.
- இந்தச் சேவையை தெற்காசியப் பிராந்தியத்தில் தொடங்கிய முதல் நாடு இந்தியா ஆகும்.




## கந்தமால் ஹால்டி

- மத்திய ஒடிசாவில் உள்ள கந்தமால் மாவட்டத்தின் பெயரையடுத்து கந்தமால் ஹால்டியானது புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.
- காந்தமால் ஹால்டியானது அதன் குணப்படுத்தும் குணங்களுக்காகவும் மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படும் அதிக மஞ்சள் கொம்பு நிறமிகளுக்காகவும் வெகுவாக அறியப்படுகின்றது.
- மஞ்சள் கந்தமாலில் உள்ள பழங்குடி இன மக்களின் முக்கியமான பணப் பயிராகும்.
- கந்தமால் மஞ்சளின் பட்டையானது ஒடிசா சமையல் வகையான "எந்துரி பித்தா" விற்கு

நறுமணச் சுவையை அளிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

- ஒடிசா மாநிலமானது 2 வேளாண் பொருட்கள் உள்பட 15 பொருட்களுக்கு புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.



## கேப் அறிவியல்


- கேரளாவின் வயநாட்டில் உள்ள சூழலியல் மற்றும் வனவிலங்கு உயிரியலுக்கான ஹியூம் மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் "கேப் அறிவியல்சார் முன்னெடுப்பை" தொடங்க திட்டமிட்டிருக்கின்றனர்.
- இது பொது மக்களுக்கு குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு அறிவியலைத் தொடர்புடையதாக, சக்தி வாய்ந்ததாக மற்றும் முக்கியமானதாக ஏற்படுத்துவதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.
- கேப் அறிவியல் என்பது புகழ்பெற்ற பிரெஞ்சு கேப் தத்துவம்சார் மாதிரியை அடிப்படையாகக் கொண்ட ஒரு அடிப்படைப் பொது அறிவியல் முன்னெடுப்பாகும்.

## மேற்கு வங்காளம்

- தேசியப் பசுமைத் தீர்ப்பாயமானது திடக் கழிவு மேலாண்மை குறித்த பிரச்சனை மீதான காலாண்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மேற்கு வங்காள மாநில அரசிற்கு அறிவுறுத்தியுள்ளது.
- இந்தப் பசுமைத் தீர்ப்பாயத்தின்படி மேற்கு வங்காள மாநிலமானது கழிவுநீர் கங்கை நதியில் கலப்பதற்கு முன் 49 சதவிகிதம் மட்டுமே சுத்திகரிக்கப்படுகின்றது.

## கேரளா சுற்றுலா

- கேரள சுற்றுலாத் துறையானது நீண்ட கால கலாச்சாரத் திட்டத்திற்காக ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள மான்செஸ்டர் நகரத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.




- இந்த ஒப்பந்தமானது மாநிலத்தின் பாரம்பரியப் பாதுகாப்பு மற்றும் சமூகத்தை மையமாகக் கொண்ட பொறுப்புள்ள சுற்றுலாத் துறை முன்னெடுப்புகள் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்தவிருக்கின்றது.

## கேரளா

- கேரளாவின் வய நாட்டைச் சேர்ந்த 22 வயதான ஸ்ரீதன்யா சுரேஷ் என்ற பெண்மணி அம்மாநிலத்திலிருந்து குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்ற முதலாவது பழங்குடியினப் பெண்மணியாக (குறிச்சியா சமூகம்) உருவெடுத்துள்ளார்
- இவர் இத்தேர்வில் 410-வது இடத்தைப் பிடித்துள்ளார்.



## அருணாச்சலப் பிரதேசம்

- இந்திய இராணுவமானது அருணாச்சலப் பிரதேசத்தின் ரோயிங் மாவட்டத்தில் இரண்டாம் உலகப் போரின் போது விபத்துக்குள்ளான அமெரிக்க விமானப் படை விமானத்தின் உதிரி பாகங்களை மீட்டுள்ளது.
- இந்தியாவிலிருந்து சீனாவிற்கு "ஹம்ப்" (திமில் போன்ற பகுதி) என்ற வழியைக் கடக்கும் போது ஏற்பட்ட விமான விபத்தில் 400 அமெரிக்க வீரர்கள் காணாமல் போனதாக நம்பப் படுகின்றது.
- இமயமலையில் உள்ள ஹம்ப் ஆனது ஜப்பானிய வீரர்களால் மியான்மர் கைப்பற்றப்பட்டப் பின்பு, இரண்டாம் உலகப் போரின் சமயத்தில் இந்தியா மற்றும் சீனாவுக்கிடையே முக்கிய விநியோகப் பாதையாகச் செயல்பட்டது.



## நீலக் குறிஞ்சி பூத்தல்

- மிகப்பெரிய அளவிலான காட்டுத் தீயானது கேரளாவின் மூணாரில் உள்ள பாம்பாடும் சோலை தேசியப் பூங்கா மற்றும் வட்டவடாவில் உள்ள நீலக்குறிஞ்சி சரணாலயம் ஆகியவற்றின் காட்டுப் பகுதிகளை அழித்துள்ளது.
- கேரள வன அதிகாரிகள் இந்தக் காட்டுத் தீயானது திட்டமிடப்பட்டு மனிதர்களால் உருவாக்கப்பட்டது என்று சந்தேகிக்கின்றனர்.
- குறிஞ்சி அல்லது நீலக் குறிஞ்சி என்பது (ஸ்ட்ரோபிலந்தின் குந்தியானஸ்) தென் இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள சோலைக் காடுகளில் காணப்படும் ஒரு புதர்ச் செடியாகும்.
- நீல மலைகள் என்று குறிப்பிடப்படும் நீலகிரி மலையானது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் நீலக் குறிஞ்சி மலரின் ஊதா மற்றும் நீல வண்ணத்திலிருந்து இந்தப் பெயரைப் பெற்றது.



- இது 1838, 1850, 1862, 1874, 1886, 1898, 1910, 1922, 1934, 1946, 1958, 1970, 1982, 1994, 2006 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் குறிஞ்சி மலர் பூத்ததை ஆவணப்படுத்திக் காட்சிப்படுத்தப் பட்டு மிகவும் தீவிரமாக நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும்.
- தமிழ்நாட்டில் வாழும் பளியன் என்ற பழங்குடியின மக்கள் இதனைப் பயன்படுத்தி

தங்களது வயதினைக் கணக்கிடுகின்றனர்.

- அண்மையில் புல்வெளிகளில் நிகழ்ந்த பெரிய அளவிலான காட்டுத் தீ மற்றும் மனிதர்களால் ஏற்பட்ட தீ ஆகியவை நீலக் குறிஞ்சி பூத்தலுக்குப் பாதிப்பாக அமைந்தன.
- கேரள மாநிலத்தின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள குறிஞ்சிமலை சரணாலயமானது அருகி வரும் நீலக் குறிஞ்சி மலர் பரவியுள்ள 32 ஹெக்டேர் பரப்புடைய அதன் வாழிடத்தைப் பாதுகாக்கிறது.

## பெரியார் நதி நிற மாற்றம்

- கேரள மாநிலத்தில் உள்ள பெரியார் நதியானது பாதாளம் கட்டுப்பாட்டு பாலத்திற்கு அருகில் கறுப்பு நிறமாக மாறியுள்ளது.
- நீரின் மோசமான தரத்தின் காரணமாக பாசிவழி நீர் மாசு ஏற்பட்டுள்ளதால் இந்த நிற மாற்றம் நிகழ்ந்துள்ளது.
- நீர் நிலைகளுக்கு அதிக அளவிலான கழிவுகள் சென்றடைவதால் பாசிகள் வளர்ச்சிக்கு இது வழி வகுக்கும்.
- சில நாட்களுக்குப் பின்னர், இந்தப் பாசிகள் இறந்து, சிதைந்து விடும். இதன் விளைவாக ஒரு அருவருக்கத்தக்க வாசனை மற்றும் நீரின் நிறத்தில் மாற்றம் ஏற்படும்.
- இந்த மாசுபாட்டிற்குத் தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஆகியவை சமபங்கு வகிக்கின்றன.

### *பெரியார் நதி*

- பெரியார் நதியானது கேரளாவில் உள்ள மிகப் பெரிய நீரை வெளியேற்றும் திறன் கொண்ட நீளமான நதியாகும்.
- முல்லையார் நதி, முத்திரப்புழா நதி, செருதோனி நதி, பெரின்ஞன்குட்டி நதி மற்றும் எடமலை நதி ஆகியவை இதன் முக்கியத் துணையாறுகளாகும்.

### *முல்லைப் பெரியார் அணை*

- பெரியார் தேக்கடி ஏரி மற்றும் நீர்த்தேக்கம் ஆகியவற்றை உருவாக்குவதற்காக பெரியார் மற்றும் முல்லையாறு ஆகிய நதிகள் இணையும் இடத்தில் கட்டப்பட்ட அணை முல்லைப் பெரியார் அணையாகும்.
- இவற்றிலிருந்து மலையிடுக்கின் வழியாக தமிழ்நாட்டிற்கு நீரானது திருப்பி விடப் படுகின்றது. இந்தத் திருப்பி விடப்பட்ட நீரானது மின்சாரத்தை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப் படுகின்றது.
- பின்னர் இது சுருளியார் (வைகை நதியின் ஒரு துணையாறு) நதியில் கலக்கின்றது. இதன் விளைவாக நீரானது வடிநிலப் பாசனத்திற்கு பயன்படுத்தப் படுகின்றது.
- மேல் நீரார் அணை மற்றும் கீழ் நீரார் அணை ஆகியவை பெரியார் வடிநிலப் பகுதியின் தமிழ்நாட்டின் எல்லைக்குள் அமைந்த அணைகளாகும்.
- முல்லைப் பெரியாறு அணையானது ஜான் பென்னி குயிக் என்பவரால் 1887 மற்றும் 1895 கால கட்டத்தில் கட்டப்பட்டது.
- கேரளாவின் மிகப்பெரிய நீர்மின் திறன் திட்டமான இடுக்கி அணையானது பெரியார் நதியின் மீது அமைந்துள்ளது.

## கொன்யாக் நடனம்

- ஏறத்தாழ 4,700 கொன்யாக் நாகா பெண்கள் ஒன்றிணைந்து "மிகப்பெரிய பாரம்பரிய கொன்யாக் நடனத்தை" கின்னஸ் உலக சாதனைப் படைப்பதற்காக நடனமாடினர்.
- கொன்யாக் என்பது 16 நாகா பழங்குடி இனங்களில் ஒன்றாகும். இந்தச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பாலும் நாகாலாந்தின் மான் மாவட்டத்தில் வாழ்கின்றனர்.



- சாதனை படைப்பதற்கான இந்த அதிகாரப்பூர்வ முயற்சியானது நாகாலாந்தின் கொன்யாக் அலியாங் மற்றும் சிறு இருவாய்ச்சிப் பறவை திருவிழாவின் போது மேற்கொள்ளப்பட்டது.

## ஆந்திரப்பிரசேதம்

- இந்திய உச்சநீதிமன்ற கொலீஜியமானது ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றத்தின் முதலாவது தலைமை நீதிபதியாக அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதியான விக்ரம் நாத்தை பரிந்துரைத்துள்ளது.

## WSIS விருதுகள்

- மேற்கு வங்காள அரசின் இரண்டு திட்டங்களான "உட்கார்ஷ் பங்களா" மற்றும் "சபோஜ் சாதி" ஆகியவை ஐக்கிய நாடுகளின் தலைமையின் கீழ் தகவல் சமூகம் மீதான உலக மாநாட்டு (WSIS - World Summit on the Information Society) விருதை வென்றுள்ளது.
- இந்த WSIS விருதுகள் என்பது தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் சக்தியை மேம்படுத்துவதன் மூலம் வளர்ச்சி சார்ந்த உத்திகளை நடைமுறைப்படுத்தும் தனி நபர்கள், அரசாங்கங்கள் மற்றும் தனியார் அமைப்புகளை அங்கீகரிக்கும் ஒரு சர்வதேச நிகழ்வாகும்.
- இந்த நிகழ்வானது முதன்முறையாக 2012 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

***உத்கார்ஷ் பங்களா***

- இது உயரிய விருதைப் பெற்றுள்ளது. இது திறன் வளர்ச்சிப் பிரிவில் வெற்றியாளராக உருவெடுத்துள்ளது.

- இது ஒவ்வொரு ஆண்டும் 6 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக திறன் வளர்ச்சிப் பயிற்சியை அளிக்கும் ஒரு திட்டமாகும்.

### *சபோஜ் சாதி*

- இது மின்னணு அரசுப் பிரிவான தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டின் கீழ் முதல் ஐந்து திட்டங்களில் ஒன்றாக முதன்மைத் திட்டமாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இதன் கீழ் IX முதல் XII வரை பள்ளி செல்லும் மாணவர்களுக்கு 1 கோடி மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

## M3 பதிப்பு EVM கருவிகள்


- தெலுங்கானாவின் நிசாமாபாத் தொகுதியில் போட்டியிட்ட 185 வேட்பாளர்களுக்கும் இடமளிக்கும் வகையில் இந்திய தேர்தல் ஆணையமானது M3 பதிப்பு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்தியது.
- மேலும் தேர்தல் அதிகாரிகள் ஒரே தொகுதியில் அதிகபட்சமான வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்தியதை அங்கீகரிக்க கின்னஸ் சாதனைப் புத்தகத்தினையும் அணுகியுள்ளனர்.
- 1778 வாக்குச் சாவடிகளிலும் 12 வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டு அவை ஒவ்வொரு தேர்தல் மையத்திலும் உள்ள கட்டுப்பாட்டு அலகுடன் இணைக்கப்பட்டன.
- நாட்டில் அதிகபட்சமான வேட்பாளர்களைக் (185) கொண்ட வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் வாக்குப்பதிவு நடத்திய முதல் தொகுதியாக இது அமைந்தது.

### *M3 பதிப்பு EVM*

- இந்தப் புதிய M3 பதிப்பு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களானது 2013 ஆம் ஆண்டிற்குப் பிறகு வெளிவந்தன. இது NOTA உட்பட 384 வேட்பாளர்களை உள்ளிடும் அளவிற்கு அதிகபட்ச திறனைக் கொண்டது.
- மேலும் இது தலையீடுகளைக் கண்டறிதல் மற்றும் சுய பிழையறிதல் சோதனை போன்ற கூடுதல் அம்சங்களைக் கொண்டது.
- இது இந்திய மின்னணுவியல் நிறுவனம் மற்றும் பாரத் மின்னணுவியல் நிறுவனம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டது.

## முதல் ISO சான்றிதழ் பெற்ற இரயில் நிலையம்

- அசாமின் கவுகாத்தி இரயில் நிலையமானது இந்திய ரயில்வேயில் முதல் ISO தரச் சான்றிதழ் பெற்ற இரயில் நிலையமாக மாறியுள்ளது.



TNV

CERTIFICATE OF REGISTRATION

*This is to certify that the Environment Management System of*

**RAILWAY STATION, GUWAHATI**

GUWAHATI RAILWAY STATION, PAN BAZAR,
GUWAHATI-781001, ASSAM, INDIA

has been assessed and registered by TNV as conforming to the requirements of:

**ISO 14001:2015**

For the following Scope

"TO PROVIDE PASSENGERS AMENITIES IN CLEAN & GREEN ENVIRONMENT THROUGHOUT THE ENTIRE RAILWAY STATION PREMISES WITH HIGH CLASS VIP LOUNGE, WAITING ROOMS (AC & NON AC), RETIRING ROOMS, REFRESHMENT AREA, FOOD COURTS AND SANITATION"

"IAF Group- 23 & 35"

| | |
|---|---|
| Certificate Number : | 190326029101 |
| Initial Issue Date: | 26th Mar. 2019 |
| Issue Date: | 26th Mar. 2019 |
| Valid Until: | 25th Mar. 2020 |
| 1st Surveillance Date: | 26th Feb. 2020 |
| 2nd Surveillance Date: | 26th Feb. 2021 |

Pragyesh Singh
CEO
TNV System Certification P Ltd.

MANAGEMENT SYSTEM CERTIFICATE

IAS ACCREDITED Management Systems Certification Body

IAF

*TNV is accredited by International Accreditation Services (IAS), United States of America wide MSCB Number 154. Status of Certificate can be verified on TNV's website www.tnvgroup.org*

- இந்தச் சான்றிதழானது தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தினால் சுத்தமான மற்றும் சுகாதாரமான சூழலியலில் பயணிகளுக்கு வசதிகளை வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ளது.
- பல்வேறு வகையான ISO (தர நிர்ணயத்திற்கான சர்வதேச அமைப்பு) சான்றிதழ்கள் உள்ளன. அவற்றில் கவுகாத்தி இரயில் நிலையம் பெற்றுள்ள சான்றிதழானது ISO-14001 ஆகும்.
- ISO 14001:2015 என குறிக்கப்படும் இந்த நிலையத்தின் சான்றிதழானது 2015 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்ட சர்வதேச விதிமுறைகளின் கீழ் சுற்றுச்சூழல் மேலாண்மை முறைமைக்கானது.

## சென்ச்சுப் பழங்குடியினர்

- சென்ச்சுப் பழங்குடியினக் குடும்பங்கள் நரி வளர்ப்பதில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இவர்கள் நரியானது அதிக அதிர்ஷடத்தைக் கொண்டு வரும் என்று நம்புகின்றனர்.
- ஆனால் நரியானது இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972-ன் கீழ் உள்ளது. இச்சட்டத்தின்படி நரியை வேட்டையாடுவதோ அல்லது வளர்ப்பதோ குற்றமாகும்.
- சென்ச்சுப் பழங்குடியினர் "குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுக்கள்" ஆவர்.
- இவர்கள் காடுகளில் வாழ்பவர்கள் ஆவர். இவர்கள் தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள 5 மாவட்டங்களில் பரவிக் காணப்படுகின்றனர்.

## ஊடாடும் பறவைப் பூங்கா - மும்பை

- எஸ்ஸெல் உலகம் மும்பையில் கோராய் பகுதியில் ஒரு ஊடாடும் பறவைப் பூங்காவை

ஆரம்பித்து இருக்கின்றது.

- சுதந்திரமாகத் திரியும் பறவைகள், நீர்வாழ்ப் பறவைகள் மற்றும் தரைவாழ்ப் பறவைகள் ஆகிய மூன்று வித்தியாசமான பறவை வகையினங்களையும் கொண்டிருக்கும் முதல் பறவைப் பூங்கா இந்தியாவில் இதுவேயாகும்.



- இது 50 வகையினங்களுக்கும் அதிகமான அளவில் ஏறக்குறைய 400 அயலூர்ப் பறவைகளுக்குப் புகலிடமாக விளங்குகின்றது.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பிரவாசி பாரதிய சம்மான் விருது

- RUJ குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவரான Dr. ராஜேந்திர குமார் ஜோஷி பிரவாசி பாரதிய சம்மான் விருதினைப் பெற்றுள்ளார்.
- இந்த விருதானது அறிவியல், கல்வி மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் அவரின் பங்களிப்பிற்காகவும் இந்தியாவின் பெருமையையும் கௌரவத்தையும் ஊக்குவித்ததற்காகவும் வழங்கப்படுகிறது.
- சுவிட்சர்லாந்தில் உள்ள இந்தியத் தூதரகமானது இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பாக பாராட்டு கடிதத்தையும் பதக்கத்தையும் அவருக்கு வழங்கியது.

### *பிரவாசி பாரதிய சம்மான் விருது*

- பிரவாசி பாரதிய சம்மான் விருதானது இந்தியக் குடியரசுத் தலைவரால் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவமாகும்.
- இது 2003 ஆம் ஆண்டில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் விவகாரத் துறை அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது.
- இது இந்தியாவிற்கு கௌரவத்தையும் புகழையும் கொண்டு வருவதில் அவர்களின்

முக்கியப் பங்கினை அங்கீகரிக்கின்றது.



## பீபாடி தொழில்சார் சாதனையாளர் விருது

- மூத்த நடிகையான ரீட்டா மோரேனா 2019 ஆம் ஆண்டிற்கான பீபாடி தொழில்சார் சாதனையாளர் விருதினைப் பெற்றுள்ளார்.




- இந்த விருதானது மின்னணு ஊடகத்தில் ஆற்றிய பணி மற்றும் பொறுப்பின் மூலம் அந்தத் துறையில் அழியாத அடையாளத்தை விட்டுச் சென்றவர்களுக்கு வழங்கப் படுவதாகும்.
- இந்த விருதானது 78-வது வருடாந்திர பீபாடி விருது விழாவில் கோகோ கோலா நிறுவனத்துடன் இணைந்து மெர்சிடிஸ் பென்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.
- மோரேனா ஏற்கனவே ஆஸ்கார், டோனி, எம்மிஸ் மற்றும் கிராமி உட்பட பல விருதுகளை வென்றுள்ளார்.

- மேலும் இவர் உயரடுக்கு விருதுகளில் EGOT குவார்டெட் என்ற விருதைப் பெற்ற 15 நபர்களில் ஒருவராவார்.

## சர்வதேச ஆரோக்கிய விருது

- ஹார்வர்டு மருத்துவப் பள்ளியில் உள்ள மனநல மருத்துவர் மற்றும் உலகளாவிய ஆரோக்கியமான வாழ்விற்கான பேராசிரியரான விக்ரம் பட்டேல் என்பவர் புகழ்பெற்ற ஜான் டிர்க்ஸ் கனடா காய்ர்டுனர் சர்வதேச ஆரோக்கிய விருதை வென்றுள்ளார்.
- இவர் குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள நாடுகளில் மனநலம் தொடர்பான பிரச்சனைகளின் தீவிரம் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் குறித்த அறிவைப் பெறுவதற்கான ஆராய்ச்சியை மேற்கொள்கின்றார்.
- சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் இந்தியாவில் உள்ள மனநல சுகாதாரப் பிரச்சனைகளைத் தடுத்தல் மற்றும் அவற்றிற்கு சிகிச்சை அளிப்பதற்கான சமூக வளங்களைப் பயன்படுத்துதல் ஆகிய அணுகுமுறைகளில் அவர் முன்னோடியாகச் செயல்பட்டார்.



## ஜயித் பதக்கம்

- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 04 அன்று ஐக்கிய அரபு அமீரகம் தனது உயரிய விருதான “ஜயித் பதக்கத்தை” இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி கௌரவித்தது.
- இந்த விருதானது இரு நாடுகளுக்கிடையேயான உறவில் பிரதமர் “முக்கியப் பங்காற்றியதை” கௌரவிக்கும் விதமாக வழங்கப்பட்டுள்ளது.

## அலெம்பா இம்சுங்கர்

- நாகாலாந்து மாநிலத்தின் வனக் காவலரான “அலெம்பா இம்சுங்கர்” என்பவருக்கு “புவி நாள் அமைப்பு நட்சத்திர விருது” வழங்கி கௌரவிக்கப்பட்டது.

- இந்த விருதானது அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் சர்வதேச சுற்றுச்சூழல் அரசு சாரா அமைப்பான புவி நாள் அமைப்பினால் வழங்கப்பட்டது.
- இவர் நாகாலாந்தின் கிப்கயர் மாவட்டத்தில் உள்ள பக்கிம் வன விலங்கு சரணாலயத்தில் வனக் காவலராகப் பணியாற்றுகிறார்.
- இவர் வனவிலங்கு சரணாலயம் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பிற்கு அவர் எடுத்த முயற்சிகளுக்காக இந்தப் புகழ்பெற்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- புவி நாள் அமைப்பானது 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 அன்று முதலாவது புவி நாளின் போது ஏற்படுத்தப்பட்டது.

## உலக வங்கியின் புதிய தலைவர்

- டிரம்ப் நிர்வாகத்தில் பணியாற்றிய அமெரிக்காவின் முன்னணி கருவூல அதிகாரியான டேவிட் மால்பாஸ் என்பவர் உலக வங்கியின் புதிய தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இரண்டாம் உலகப் போருக்குப் பின் தொடங்கப்பட்ட இந்த வங்கியின் அனைத்துத் தலைவர்களும் அமெரிக்கர்கள் ஆவர்.
- எந்தவொரு நாட்டைச் சேர்ந்தவரும் உலக வங்கியின் தலைவராக முடியும். ஆனால் இதுநாள் வரை வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள் உலக வங்கியின் தலைவராகப் பொறுப்பேற்கவில்லை.

## ESPN பல்துறை விளையாட்டு விருதுகள்

- ESPN இந்தியா பல்துறை விளையாட்டு விருதுகளில் இந்த ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீராங்கனையாக ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றவரான PV சிந்துவும் சிறந்த விளையாட்டு வீரராக ஈட்டி எறியும் வீரரான நீரஜ் சோப்ராவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 2018 ஆம் ஆண்டில் இவர்கள் நிகழ்த்திய சாதனைகளுக்காக இவ்விருது இவர்களுக்கு வழங்கப்பட்டது.
- இந்தியாவின் துப்பாக்கிச் சுடுதல் அணியின் பயிற்சியாளரான ஜஸ்பால் ராணா என்பவர் "ஆண்டிற்கானப் பயிற்சியாளர் விருதையும்" 2012 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்றவரான சாய்னா நேவால் ஆண்டின் "மீண்டு வருவோருக்கான விருதையும்" வென்றுள்ளனர்.

## மகரிஷி பத்ராயன் வியாஸ் சம்மான் 2019

- புதுடெல்லியில் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு, குடியரசுத் தலைவர் விருதுச் சான்றிதழ் மற்றும் மகரிஷி பத்ராயன் வியாஸ் சம்மான் விருதுகள் ஆகியவற்றை வழங்கினார்.
- பாலி மொழி அறிஞரான Dr.கியானாதித்யா ஷாக்யா, குடியரசுத் தலைவரின் மகரிஷி

பத்ராயன் வியாஸ் சம்மான் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

***குடியரசுத் தலைவர் விருதுச் சான்றிதழ்***

- இவ்விருதானது 60 வயதிற்கு மேற்பட்ட பல்வேறு அறிஞர்களின் சிறந்தப் பங்களிப்பினை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகிறது.
- இது 1958 ஆம் ஆண்டு சமஸ்கிருதம், அரபு மற்றும் பாரசீக மொழி அறிஞர்களை கௌரவிக்க அறிமுகப்படுத்தப்பட்டது.
- பின்னர் இது பாலி / பிராகிருதம், செம்மொழிகளான ஒடியா, கன்னடா, தெலுங்கு, தமிழ் மற்றும் மலையாளம் ஆகியவற்றிற்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

***மகரிஷி பத்ராயன் வியாஸ் சம்மான் விருதுகள்***

- இந்த விருதானது சமஸ்கிருதம், பாரசீகம், அரபு, பாலி, பிராகிருதம், செம்மொழிகளான ஒடியா, கன்னடா, தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் கணிசமானப் பங்களிப்பை அளித்தவர்களை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகிறது.
- இவ்விருதானது 2002 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இவ்விருது 30 முதல் 45 வயது வரை உடைய இளம் அறிஞர்களுக்கு வழங்கப்படுகிறது.
- இவ்விரு விருதுகளும் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் வழங்கப்படுகின்றன.

## ஆண்டிற்கான உலகளாவிய சிறந்த கசடு நிறுவன விருது

- டாடா எஃகு நிறுவனமானது 14-வது உலகளாவிய கசடு மாநாடு மற்றும் கண்காட்சியில் இந்த ஆண்டிற்கான சிறந்த உலகளாவிய கசடு நிறுவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.




- எஃகு தயாரிப்பின் துணைப் பொருட்களுக்கான புதிய பயன்பாடுகளை உருவாக்குவதில் புத்தாக்க நடைமுறைகளுக்காக இவ்விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- மேலும் ஆர்செலார் மிட்டல், CHC வள நிறுவனம், கோன்ட்ரா ஸ்டீல், எகோசெம், ஹார்ஸ்கோ மெட்டல்ஸ் & மினரல்ஸ், கோர்யோ கசடு சிமெண்ட் கோ.லிட் மற்றும் பல உலகளாவிய நிறுவனங்களும் இவ்விருதினைப் பெற்றன.

## கிரிக்கெட் வீரர் - கோலி

- சிறந்த விளையாட்டை வெளிப்படுத்தியதற்காக, தொடர்ந்து மூன்றாவது முறையாக விஸ்டெனின் "ஆண்டின் முன்னணி கிரிக்கெட் வீரராக" கோலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.




- பெண்களுக்கான "ஆண்டின் முன்னணி கிரிக்கெட் வீரராக" ஸ்மிரிதி மந்தனா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தொடர்ந்து இரண்டாவது முறையாக "ஆண்டின் 20 ஓவர் முன்னணி கிரிக்கெட் வீரராக" ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ரஷித் கான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- விஸ்டன் கிரிக்கெட் வீரர்களின் அலமன்க்கின் 156-வது பதிப்பின் வெளியீட்டின் போது இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டன.

### *விஸ்டன் அலமன்க்*

- விஸ்டன் கிரிக்கெட் வீரர்களின் அலமன்க் அல்லது பொதுவாக விஸ்டன் என்பது ஐக்கிய இராஜ்ஜியத்தில் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் ஒரு கிரிக்கெட் குறிப்புரைப் புத்தகமாகும்.
- விஸ்டனானது இங்கிலாந்து கிரிக்கெட் வீரரான ஜான் விஸ்டனால் (1826-84) 1864 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- இன்றைய காலகட்டத்தில் இதன் வருடாந்திர வெளியீடானது எவ்வித தடையுமின்றித் தொடர்கிறது. இது நீண்ட காலமாக விளையாட்டிற்காக ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுவதால் வரலாற்றில் இடம் பிடித்துள்ளது.
- 2012 ஆம் ஆண்டில், விஸ்டன் விளையாட்டு வீரர்கள் அலமன்க்கின் இந்தியப் பதிப்பானது தொடங்கப்பட்டது (2013).
- முந்தைய கோடைக் காலத்தின் போது இங்கிலாந்தில் சிறப்பாகச் செயல்பட்ட வீரர்களைக் கௌரவிப்பதற்காக 1889 ஆம் ஆண்டில் "ஆண்டின் கிரிக்கெட் வீரர்களுக்கான விருதுகளை" விஸ்டன் அறிமுகப் படுத்தியது.
- ஒரு வீரர் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே இந்த விருதைப் பெற முடியும்.

- வெற்றிகளின் எண்ணிக்கையின் மீது எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாமல் சர்வதேச விளையாட்டுகளில் சிறப்பாகச் செயல்பட்டவர்களை "ஆண்டின் முன்னணி கிரிக்கெட் வீரர்களுக்கான விருதுகள்" கௌரவிக்கிறது. இது சமீபத்தில் இருந்து தான் வழங்கப்பட்டு வருகின்றது.

## ஜாமியா மிலியா பல்கலைக் கழகம்

- ஜாமியா மிலியா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பேராசிரியர் நஜ்மா அக்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இப்பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண் இவராவார்.
- 1920 ஆம் அண்டில் ஆங்கிலேய ஆட்சியின் போது இந்தியாவின் ஒன்றுபட்ட ஐக்கிய மாகாணத்தில் உள்ள அலிகார் நகரத்தில் ஜாமியா மிலியா இசுலாமியப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது.
- இது 1988 ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் மத்தியப் பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டது.
- உருது மொழியில் ஜாமியா என்பது பல்கலைக் கழகத்தையும் மிலியா என்பது தேசியத்தையும் குறிக்கிறது.
- இந்திய தேசியக் காங்கிரஸைச் சேர்ந்த தேசியத் தலைவரான அபுல் கலாம் ஆசாத் என்பவர் இதன் தொடக்க கால ஆதரவுத் தலைவர்களில் ஒருவராவார்.

## சரஸ்வதி சம்மான் விருது

- தெலுங்கு கவிஞரான K. சிவ ரெட்டி என்பவரின் "பகாகி ஒட்டிகிலிட்டி" என்ற தலைப்பு கொண்ட கவிதையின் தொகுப்பிற்காக 2018 ஆம் ஆண்டின் புகழ்பெற்ற சரஸ்வதி சம்மான் விருதுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த விருதானது ரூ.15 இலட்சம் நிதியையும் ஒரு சான்றிதழையும் ஒரு பதக்கத்தையும் கொண்டுள்ளது.
- இந்த விருதானது கே.கே. பிர்லா அறக்கட்டளையினால் 1991 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இந்த விருதானது எந்தவொரு இந்திய மொழியிலும் கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட தலைசிறந்த இலக்கியப் பணிக்காக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.


## தீபா மாலிக்

- தீபா மாலிக் என்பவர் நியூசிலாந்து பிரதம அமைச்சரின் "2019 ஆம் ஆண்டிற்கான சர் எட்மண்டு ஹில்லாரி தோழமை விருதைப்" பெறுபவராக பெயரிடப்பட்டுள்ளார்.
- பாரா ஒலிம்பிக் போட்டிகளில் ஒரு பதக்கத்தை வென்ற முதலாவது இந்தியப் பெண் இவராவார்.

- இவர் 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் குண்டு எறிதலில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.
- இவர் 58 தேசிய விருதுகள் மற்றும் 23 சர்வதேச விருதுகள் உள்பட பத்மஸ்ரீ மற்றும் அர்ஜூனா விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.
- இந்த தோழமைத் திட்டமானது இரு நாடுகளுக்கிடையேயான நட்பை வெளிப்படுத்துவதன் மூலம் இந்தியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கிடையேயான உறவை வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2008 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது.

## இலண்டன் நகரத்தின் சுதந்திரம்

- இந்தியப் பொதுக் காப்பீட்டுக் கழகத்தின் (General Insurance Corporation) தலைவர் மற்றும் மேலாண் இயக்குனரான அலெய்ஸ் G. வைத்தியன் என்பவருக்கு ஐக்கிய இராஜ்ஜியத்தின் இலண்டன் நகர சுதந்திர விருது வழங்கப்பட்டது.
- இந்தியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகியவற்றிற்கிடையே காப்பீட்டை ஊக்கப்படுத்தும் இவரது பணியை அங்கீகரிக்கும் விதமாக இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- இலண்டன் நகரத்தின் சுதந்திரம் என்ற அங்கீகார விருதானது 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.




## உலக பத்திரிக்கை புகைப்பட விருதுகள் 2019

- அமெரிக்க – மெக்ஸிகோ எல்லைக்கு அருகே உதவியின்றி அழுது கொண்டிருக்கும் குழந்தையின் புகைப்படமானது புகழ்பெற்ற உலக பத்திரிக்கை புகைப்பட விருதை வென்றது.
- ‘எல்லையில் அழும் பெண்’ எனும் தலைப்பிடப்பட்ட இந்தப் புகைப்படமானது கெட்டி புகைப்பட நிறுவனத்தின் மூத்த புகைப்படவியல் ஊழியரான ஜான் மூர் என்பவரால் 2018 ஆம் ஆண்டு ஜூன் 12 அன்று எடுக்கப்பட்டது.
- இந்தப் புகைப்படமானது அமெரிக்காவின் மெக்கலென் எல்லைப்புற அதிகாரிகளால் சோதனையிடப்பட்ட சான்ட்ரா சான்செஸ் எனும் தாய்க்கு அருகில் நின்று அழுது கொண்டிருக்கும் அவரின் குழந்தையான யானெலா சான்செஸ்-ஐ காட்டுகிறது.

- இந்த விருதானது நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டது.
- 1995 ஆம் ஆண்டு முதல் உலக பத்திரிக்கைப் புகைப்படப் போட்டியானது கடந்த ஆண்டில் பார்வையிடக்கூடிய பத்திரிக்கையியலில் சிறந்த பங்களிப்பைச் செய்த புகைப்படத்தின் புகைப்பட நிபுணர்களை அங்கீகரிக்கிறது.



## புலிட்சர் விருது

- புலிட்சர் விருது என்பது அமெரிக்காவில் நாளிதழ், பத்திரிக்கை மற்றும் நிகழ்நேர இதழியல், இலக்கியம், இசை உள்ளடக்கம் ஆகியவற்றில் சாதனை படைத்தவர்களுக்காக வழங்கப்படும் விருதாகும்.
- அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மற்றும் அவரது குடும்பத்தினர் குறித்து தனித்தனியே விசாரணை மேற்கொண்டதற்காக நியூயார்க் டைம்ஸ் மற்றும் வால் ஸ்ட்ரீட் பத்திரிக்கை ஆகிய பத்திரிக்கைகளுக்குப் புலிட்சர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- இது ஜோசப் புலிட்சர் என்பவரால் 1917 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

## ககன்தீப் காங்

- ககன்தீப் காங் என்பவர் இலண்டனில் உள்ள “ராயல் சமூகத்தின் உறுப்பினராக” (FRS - fellow of the Royal Society) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- காங் என்பவர் தடுப்பூசிப் பரிசோதனைகளுக்கு உதவுவதற்காக தேசிய ரோட்டா வைரஸ் மற்றும் டைபாய்டு கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் ஆய்வகங்களை உருவாக்கினார். அவர் அங்கு நிலை 1-3 வரையிலான தடுப்பூசிகளின் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டார்.
- இந்தப் புகழ்பெற்ற அறிவியல்சார் நிறுவனத்தின் 359 ஆண்டுகள் வரலாற்றில் FRS ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இந்தியப் பெண் விஞ்ஞானி இவராவார்.

*ராயல் சமூகத்தின் உறுப்பினர்*

- FRS என்பது இயற்கை அறிவு வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்காற்றியதற்காக இலண்டன் ராயல் சமூகம் தேர்ந்தெடுக்கும் தனிநபர்களுக்கு வழங்கப்படும் ஒரு விருதாகும்.
- இது 1603 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- FRS-ல் உறுப்பினராக உள்ள சில புகழ்பெற்ற இந்திய விஞ்ஞானிகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| Srinivasa Ramanujan | Mathematics Genius |
| S.Chandrasekahr | 1983 Nobel Prize Awardee |
| Venkatraman Ramakrishnan | 2009 Nobel Prize Awardee |

## நன்மதிப்பு விருது

- தெற்கு சூடானில் ஐ.நா. திட்டத்திற்குப் (UNMISS - UN Mission in South Sudan) பணியாற்றும் 150 இந்திய அமைதிப் படை வீரர்களுக்கு, அவர்களுடைய சேவை மற்றும் தியாகத்திற்காக ஐ.நாவினால் நன்மதிப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- ஐ.நா அமைதிப் பாதுகாப்புத் திட்டத்திற்கு மிக அதிக அளவிலான படைகளை அனுப்பும் நாடுகளில் ஒன்று இந்தியா ஆகும்.

- தற்போதையத் திட்டத்தில் 2400 இராணுவ மற்றும் காவல் துறை வீரர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். UNMISS அமைதிப் படைக்கு வீரர்களை அதிக அளவில் அனுப்பும் நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- UNMISS ஆனது தெற்கு சூடானில் குடிமக்களுக்கு எதிரான போராட்டங்களைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இது மக்களுக்குப் பாதுகாப்பான சூழலை வழங்குகின்றது.

## நல்லெண்ணத் தூதர் - தெருவோரக் குழந்தைகளின் கிரிக்கெட்

- மிதாலி ராஜ் என்பவர் தெருவோரக் குழந்தைகளின் கிரிக்கெட் உலகக் கோப்பைக்கு இந்திய அணியின் நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டு இருக்கின்றார்.



- அணியை ஆதரிப்பதில் மிதாலி ராஜ் முன்னாள் அணித் தலைவர் சவுரவ் கங்குலியுடனும் ஐபில் அணியான ராஜஸ்தான் ராயல்ஸ் அணியுடனும் கை கோர்த்திருக்கின்றார்.

## A.K. சிங் வாழ்நாள் சாதனையாளர் விருது

- மொகாலியில் உள்ள சண்டிகர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 4-வது அப்துல் கலாம் புத்தாக்க மாநாட்டில் டாக்டர் A.K. சிங் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார்.
- டாக்டர் A.K. சிங் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் (Defence Research and Development Organisation - DRDO) உயிர் அறிவியல் துறை இயக்குநராக இருக்கின்றார்.
- இந்த அறிவியலாளர் 18-க்கும் மேற்பட்ட காப்புரிமைகளைக் கொண்டிருக்கின்றார். மேலும் அவர் தேசிய மற்றும் சர்வதேச அளவில் 57-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிப் பதிப்புகளை வெளியிட்டு இருக்கின்றார்.
- தொற்றுகின்ற காயத்தைக் கண்டறிவதற்காக அவர் டயக்னோபாக்ட் எனும் ஒரு கருவியை வடிவமைத்து இருக்கின்றார்.
- மேலும் இவர் மருந்து ஆராய்ச்சித் துறையில் அணு மருத்துவப் புகைப்படத்தின் பயன்பாடான பார்மகோசின்டிகிராபி என்பதை உருவாக்கி வெளியிட்டும் இருக்கின்றார்.
- இம்மாநாடு உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத் தினத்தை அனுசரிப்பதற்காக அந்த பல்கலைக் கழகத்தால் அனுசரிக்கப்பட்டது.

### *உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத் தினம் – ஏப்ரல் 21*

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 2002 ஆம் ஆண்டில் ஏப்ரல் 21-ம் தேதியை உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத் தினமாக ஏற்றுக் கொண்டிருக்கின்றது.
- இத்தினம் தீர்வு காண்பதில் புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றின் பங்கைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரித்திடவும் அதன் நீட்சியாக நீடித்த வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்றிடவும் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் லியனார்டோ டா வின்சியின் பிறந்த தினத்திற்கு ஆறு நாட்கள் கழித்தும் சர்வதேசப் புவி அன்னை தினத்திற்கு ஒரு நாள் முன்பாகவும் அனுசரிக்கப்படுகின்றது.

## யுனெஸ்கோ / குயிலர்மோ கானோ பத்திரிக்கை சுதந்திர விருது 2019

- ராய்ட்டர்ஸ் நிறுவனத்தின் பத்திரிக்கையாளர்களான கியாவ் சோயி ஓ மற்றும் வா லோன் ஆகியோர் 2019 ஆம் ஆண்டின் யுனெஸ்கோ / குயிலர்மோ கானோ பத்திரிக்கை சுதந்திர விருதுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- இந்த விருதானது வெளிப்படை சுதந்திரத்திற்கான தங்களின் உறுதிப்பாடு, தைரியம் மற்றும் எதிர்ப்பைத் தாங்குதல் ஆகியவற்றை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகிறது.
- இவர்கள் தற்போது 2017 டிசம்பர் 12 முதல் மியான்மரின் ரகசிய காப்புச் சட்டத்தின் கீழ் ஏழு ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.
- இந்த விருதானது, எத்தியோப்பியாவில் மே 03 ஆம் தேதி உலகப் பத்திரிக்கை சுதந்திர தினம் அனுசரிக்கப்படுவதன் ஒரு பகுதியாக மே 02 ஆம் தேதி வழங்கப்படும்.

## உலகளாவிய திறன் சவால்

- 2019 ஆம் ஆண்டின் உலகளாவிய திறன்கள் சவாலில் (Global Skills Challenge) இந்தியா இரண்டு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் உலகளாவிய திறன்கள் சவால் போட்டி ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்டது.
- இந்த போட்டிகள் உலக தொழிற்சார் திறன்களுக்கான சாம்பியன்ஷிப்பை ஏற்பாடு செய்யும் WorldSkills எனும் அமைப்பால் நடத்தப்பட்டது.
- இது இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை உலகின் வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்படுகிறது.
- முதல் உலகளாவிய திறன் சவால் போட்டி 1950 ஆம் ஆண்டு மாட்ரிட் நகரில் நடைபெற்றது.
- World Skills ஆனது திறமையான மக்களை அடையாளம் காண்பதையும் பொருளாதார வளர்ச்சியை அடைவதில் திறன்கள் எவ்வளவு முக்கியம் என்பதை வெளிக்காட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

| போட்டியாளர்கள் | பதக்கம் | திறன் |
|---|---|---|
| சுமந்த் மற்றும் மஞ்சுநாத தேசுராகரா | வெள்ளி | எந்திர மின்னணுவியல் |
| சஞ்சய் பிரமாணிக் | வெண்கலம் | ஆபரண வடிவமைப்பு |
| சவுரப் பாகேல் | வெண்கலம் | அடுமனை மற்றும் இனிப்பு வகை தயாரிப்பு |

## தாகூர் இலக்கிய விருது

- ரவீந்திரநாத் தாகூர் இலக்கிய விருதிற்கான இரண்டாவது பதிப்பின் “இலக்கியப்” பிரிவில் 2010 ஆம் ஆண்டில் “சோலோ” என்ற நாவலை இயற்றிய “ராணா தாஸ் குப்தாவிற்கு” தாகூர் இலக்கிய விருது வழங்கப்பட்டது.
- இந்த நாவலானது தனிமையாக்கல் தொடர்பான ஒரு கதையாகும். மேலும் இது தற்போது கையிருப்பில் இருக்கும் அனைத்துப் பணத்தின் இழப்பு தொடர்பான ஒரு புதினமும் ஆகும்.
- 10,000 அமெரிக்க டாலர்கள், தாகூர் உருவம் பொறிக்கப்பட்ட ஒரு சிலை மற்றும் இலக்கியப் பங்களிப்பிற்கான ஒரு சான்று ஆகியவை தாஸ் குப்தாவிற்கு வழங்கப்பட்டன.
- “சமூகத்தில் சாதனை புரிதல்” என்ற பிரிவில் இதே விருதுக்கு ஜப்பானைச் சேர்ந்த யோஹெய் சசாகாவா என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தொழுநோய் ஒழிப்பில் இவரது பங்களிப்பிற்காகவும் உலக அமைதிக்கு இவர் ஆற்றிய பங்களிப்பிற்காகவும் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய கவிதை மற்றும் புத்தகங்களின் மறுமலர்ச்சிக்காகத் தாகூர் விருதானது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றது.

## BCM-95 (பிசிஎம் – 95)

- 2019 ஆம் ஆண்டின் தேசிய அறிவுசார் சொத்துரிமை (Intellectual Property - IP) விருதுக்காக கொச்சியைச் சேர்ந்த பென்னி அந்தோணி என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- "காப்புரிமைகள் மற்றும் வணிக மயமாக்கத்தில் முன்னிலையில் உள்ள தனி நபர்கள்" என்ற பிரிவில் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- இவர் உலகின் முன்னணியில் உள்ள காப்புரிமை பெற்ற மஞ்சள் சாறை உருவாக்கும் BCM – 95-ன் கண்டுபிடிப்பாளர் ஆவார்.
- பென்னிக்கு உலக சொத்துரிமை அமைப்பால் "கண்டுபிடிப்பாளர்களுக்கான WIPO பதக்கமும்" வழங்கப்பட்டது.

### *தேசிய அறிவுசார் சொத்துரிமை விருதுகள்*

- இந்த விருதானது இந்திய அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தால் வழங்கப்படுகின்றது.
- இது காப்புரிமைகள், வடிவமைப்புகள், வணிகக் குறியீடுகள் மற்றும் புவிசார் குறியீடுகள் ஆகிய துறைகளில் தலைசிறந்த கண்டுபிடிப்பாளர்கள், அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது.

## அர்ஜுனா விருதுகள்

- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமானது (BCCI - Board of Control for Cricket in India) முகமது சமி, ஜஸ்பிரித் பும்ரா, ரவீந்திர ஜடேஜா மற்றும் பூனம் யாதவ் ஆகியோரை அர்ஜுனா விருதுக்காகப் பரிந்துரை செய்துள்ளது.
- அர்ஜுனா விருதின் நோக்கமானது சர்வதேச அளவில் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை கௌரவிப்பதாகும்.
- இது மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தால் வழங்கப்படுகின்றது.
- இது 1961-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- அர்ஜுனா விருதினைப் பெற்ற முதலாவது கிரிக்கெட் வீரர் சலீம் துரானி ஆவார்.
- இதுவரை 53 கிரிக்கெட் வீரர்கள் அர்ஜுனா விருதினைப் பெற்றுள்ளனர்.

### *விருதுக்கான தகுதி நிலைகள்*

- கடந்த 4 ஆண்டுகளில் சர்வதேச அளவில் சிறப்பான விளையாட்டை வெளிப்படுத்துதல்.
- தலைமைத்துவப் பண்பு, விளையாட்டு வீரருக்குரிய தகுதி நிலைகள் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்துதல்.
- எந்த ஒரு நபரும் இரண்டாவது முறையாக இந்த விருதினைப் பெறவில்லை.

## தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது - 2019

- கொச்சியை அடிப்படையாகக் கொண்ட அர்ஜூனா நேச்சுரல் லிமிடெட்டின் கிளை

மேலாண் இயக்குநர் மற்றும் இணை நிறுவனரான டாக்டர். பென்னி ஆண்டனி 2019 ஆம் ஆண்டின் தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


- இவர் காப்புரிமை மற்றும் வர்த்தக மயமாக்குதலுக்கான சிறந்த தனிநபர் எனும் பிரிவில் இவ்விருதினைப் பெற்றார்.
- இவர் உலகின் காப்புரிமைப் பெற்ற மஞ்சள் சாறை உருவாக்கும் BCM 95 என்ற முன்னணி செயல்முறையின் கண்டுபிடிப்பாளராவார்.




- மேலும் இவரிடம் சர்வதேச அளவிலான 80 காப்புரிமைகள் உள்ளன.
- இந்த விருதுடன், இந்திய அறிவுசார் சொத்துரிமை அலுவலகம் மற்றும் உலக அறிவுசார் சொத்துரிமைக் கழகம் ஆகியவை இணைந்து இவருக்கு கண்டுபிடிப்பாளர்களுக்கான WIPO-இன் விருதினை வழங்கி கவுரவித்தது.

## 71வது உலகப் பத்திரிக்கை சுதந்திரத்தின் நாயகன்

- பாகிஸ்தானின் டான் பத்திரிக்கையின் ஆசிரியரும் கட்டுரையாளருமான சிரில் அல்மெய்டா சர்வதேச பத்திரிக்கை நிறுவனத்தின் (IPI - International Press Institute) 2019 ஆம் ஆண்டிற்கான 71வது உலகப் பத்திரிக்கைச் சுதந்திரத்தின் நாயகன் விருதைப் பெற்றுள்ளார்.



- இவ்விருதானது பாகிஸ்தானின் அரசு மற்றும் இராணுவத்தினருக்கிடையேயான உறவுகளின் மீதான விமர்சனம் மற்றும் உறுதியான உள்ளடக்கம் ஆகியவற்றிற்காக இவருக்கு வழங்கப்படுகிறது.
- இந்த விருதானது 2019 ஆம் ஆண்டின் ஜுன் 05 அன்று உலக அறிவுசார் சொத்துரிமை தினத்தன்று ஜெனீவாவில் நடைபெறவுள்ள IPI-ன் வருடாந்திர கூடுகை மற்றும் பொதுச் சபை நிகழ்ச்சியில் வழங்கப்படவுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## அஸ்லான் ஷா ஹாக்கி கோப்பை

- 2019 ஆண்டின் சுல்தான் அஸ்லான் ஷா கோப்பையின் இறுதிப் போட்டியில் தென் கொரியா அணி பெனால்டி கோல் வாய்ப்புகளில் கோல் அடித்து இந்தியாவைத் தோற்கடித்தது.
- மலேசியாவின் இபோக்கில் நடைபெற்ற சுல்தான் அஸ்லான் ஷா கோப்பைப் போட்டியில் உலகத் தரவரிசையில் 17-வது இடத்தில் உள்ள தென் கொரியாவானது 5-வது இடத்தில் உள்ள இந்தியாவை வீழ்த்தி கோப்பையை வென்றது.




## இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டி

- இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டியின் 2019 ஆம் ஆண்டுப் பதிப்பானது புதுதில்லியில் உள்ள இந்திரா காந்தி உள் விளையாட்டு அரங்கில் நிறைவு பெற்றது.
- டென்மார்க்கைச் சேர்ந்த விக்டர் அக்சல்சென் மற்றும் தாய்லாந்தைச் சேர்ந்த ரட்சனூக் இண்டானூன் ஆகியோர் முறையே ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டங்களை வென்றனர்.
- ஆண்களுக்கான இரட்டையர் பிரிவானது தாய்லாந்தைச் சேர்ந்த டியோ லீ யாங் மற்றும் வாங் சீ-லின் ஆகியோரால் வெல்லப்பட்டது.

- பெண்களுக்கான இரட்டையர் பிரிவானது இந்தோனேஷியாவைச் சேர்ந்த டியோ கிரேசியா போலி மற்றும் அப்ரியானி ரஹாயு ஆகியோரால் வெல்லப்பட்டது.
- புகழ்மிக்க இந்திய பேட்மிண்டன் வீரர்களான பிவி சிந்து மற்றும் கிடாம்பி ஸ்ரீகாந்த் ஆகிய இருவரும் இப்போட்டியில் தோற்றுள்ளனர்.
- இந்திய ஓபன் போட்டியானது 2008 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது.

## தேசிய கிரிக்கெட் சங்கம்

- இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ராகுல் டிராவிட் இந்தியாவில் இளம் கிரிக்கெட் சாதனையாளர்களை வடிவமைக்கும் கிரிக்கெட் நிர்வாகியாக ஒரு முக்கியப் பதவியில் செயல்படவிருக்கிறார்.
- புகழ்பெற்ற கிரிக்கெட் வீரான இவர் தற்பொழுது சிறப்பு வாய்ந்த மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தேசியக் கிரிக்கெட் சங்கத்தை (NCA - National Cricket Academy) நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்கவிருக்கிறார்.
- தேசியக் கிரிக்கெட் சங்கமானது பெங்களூருவில் உள்ள சின்னசாமி மைதானத்தில் அமைந்துள்ளது.
- NCA ஆனது கிரிக்கெட் நிர்வாகி மற்றும் BCCI-ன் முன்னாள் தலைவர் ராஜ் சிங் துங்கர்பூர் என்பவரால் 2000 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## ஆசிய காற்றுத் துப்பாக்கி சாம்பியன்ஷிப்

- தைபேயில் உள்ள தையுவானில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டிற்கான காற்றுத் துப்பாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 16 தங்கம், 5 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்கள் உள்பட மொத்தம் 25 பதக்கங்களை வென்றுள்ளது.
- இளையோருக்கான 10 மீ காற்றில் துப்பாக்கி சுடுதல் பிரிவில் யாஷ் வர்தன் மற்றும் ஸ்ரேயா அகர்வால் ஆகியோர் முறையே ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

## சதுரங்கம்

- 14 வயதுக்குட்பட்டோருக்கான பெண்கள் பிரிவில் உலகின் முதலாவது பெண்மணியாக 13 வயதுடைய திவ்யா தேஷ்முக் உருவெடுத்துள்ளார். இந்த இடத்தைப் பிடித்த கொனேரு ஹம்பிக்குப் பிறகு இந்த இடத்தைப் பிடித்த இரண்டாவது பெண்மணியாக இவர் உருவெடுத்துள்ளார்.

## ஐசிசி டெஸ்ட் தரவரிசை

- இந்தியா ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்ததைத் தொடர்ந்து, தொடர்ந்து மூன்றாவது முறையாக ரூ.1 மில்லியனை இந்தியா வென்றுள்ளது.



**ICC Test Rankings**

| # | TEAM | M | PTS | RATE |
|---|---|---|---|---|
| 1 | India | 41 | 4,983 | 122 |
| 2 | South Africa | 37 | 4,020 | 109 |
| 3 | Australia | 49 | 5,302 | 108 |
| 4 | England | 50 | 5,071 | 101 |
| 5 | Pakistan | 36 | 3,494 | 97 |
| 6 | New Zealand | 45 | 4,339 | 96 |
| 7 | Sri Lanka | 42 | 3,761 | 90 |
| 8 | West Indies | 30 | 2,077 | 69 |
| 9 | Bangladesh | 22 | 1,444 | 66 |
| 10 | Zimbabwe | 10 | 48 | 5 |

## அஸ்லான் ஷா ஹாக்கிக் கோப்பை

- மலேசியாவின் இபாக்கில் உள்ள அஸ்லான் ஷா அரங்கத்தில் நடைபெற்ற சுல்தான் அஸ்லான் ஷா ஹாக்கிக் கோப்பைப் போட்டியின் 28-வது பதிப்பில் 17-வது இடத்தில் உள்ள தென் கொரிய அணியானது 5-வது இடத்தில் உள்ள இந்தியாவை வீழ்த்தியது.
- பெனால்டி ஆட்டத்தில் 4-2 என்ற கணக்கில் இந்தியா வீழ்ந்தது.
- இது 1983 ஆம் ஆண்டில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் போட்டியாகத் தொடங்கியது.
- இப்போட்டியின் வளர்ச்சி மற்றும் சிறப்புத் தன்மை ஆகியவற்றைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரு வருடாந்திர நிகழ்ச்சியாக இது உருவெடுத்தது.
- இந்த போட்டிக்கு ஹாக்கிப் போட்டியின் ரசிகரான மலேசியாவின் 9-வது மன்னரான யாங்-டி-பெர்டுலான் அகோங்கான் சுல்தான் அஸ்லான் ஷா என்பவரின் நினைவாக இப்பெயர் வைக்கப்பட்டது.

## ஸ்குவாஷ்

- உலகின் முதல் 10 இடங்களுக்கான பட்டியலில் இடம் பிடித்த முதலாவது இந்திய ஆண் வீரராக இந்தியாவின் முன்னிலை ஸ்குவாஷ் வீரரான சவ்ரவ் கோசல் உருவெடுத்ததையடுத்து சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தார்.



- ஜோஸ்னா சின்னப்பா மற்றும் தீபிகா பல்லீகல் ஆகிய இரண்டு தமிழ்நாட்டு பெண் வீராங்கனைகள் உலகின் முதல் 10 இடங்களுக்கான பட்டியலில் இடம் பிடித்த முதலாவது இந்தியர்கள் ஆவர். ஆனால் அவர்கள் அதைத் தக்க வைத்துக் கொள்ள தவறி விட்டனர்.

## FIFA

- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 04 அன்று சர்வதேசக் கால்பந்து நிர்வாக அமைப்பான FIFA ஆனது உலகக் கால்பந்து தரவரிசையை வெளியிட்டது.
- இதில் இந்தியா இரண்டு இடங்கள் முன்னேறி 101-வது இடத்தில் உள்ளது. இந்தத் தரவரிசையில் பெல்ஜியம் முதலிடத்தில் உள்ளது.

## மலேசிய ஓபன்

- சீனாவின் பேட்மிண்டன் வீரரான லின் டான் என்பவர் சீனாவைச் சேர்ந்த சென் லாங் என்பவரை வீழ்த்தி மலேசிய ஓபன் பட்டத்தை வென்றார்.



- பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் தைவானின் முன்னணி வீரரான தாய் சூ இங் என்பவர் ஜப்பானைச் சேர்ந்த அகேன் யமாகுச்சி என்பவரை வீழ்த்தியதையடுத்து அவர் தொடர்ந்து தனது மூன்றாவது மலேசிய ஓபன் பட்டத்தைப் பெற்றார்.

## அகஸ்டா மாஸ்டர்ஸ்

- அமெரிக்காவைச் சேர்ந்த ஜெனிபர் கூப்ச்சோ என்பவர் மெக்சிகோவைச் சேர்ந்த மரியா பாசி என்பவரை வீழ்த்தி அகஸ்டா மாஸ்டர்ஸ் குழிப் பந்தாட்டத் தொடரை வென்ற முதலாவது பெண்மணியாக உருவெடுத்துள்ளார்.
- தொழில்சார் குழிப் பந்தாட்டத்தின் நான்கு முக்கிய சாம்பியன்ஷிப்களில் அகஸ்டா மாஸ்டர்சும் ஒன்றாகும்.
- இது போபி ஜோன்ஸ் என்பவரால் 1934 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது எப்பொழுதும் அமெரிக்காவின் ஜார்ஜியாவில் உள்ள அகஸ்டா தேசிய குழிப் பந்தாட்டக் கழகத்தில் மட்டுமே நடைபெறும்.

❖ வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆண்கள் மட்டுமே பங்கு கொள்ளக் கூடிய குழிப் பந்தாட்டத் தொடரில் முதன் முறையாக 2019 ஆம் ஆண்டில் பெண்கள் குழிப் பந்தாட்ட வீராங்கனைகளும் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

## ஹாக்கி பயிற்சியாளர்

❖ ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரஹாம் ரெய்டு என்பவர் இந்திய ஆண்கள் ஹாக்கி அணியின் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ இவர் 1992 பார்சிலோனா ஒலிம்பிக்ஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்ற ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்தவராகவும் 1984, 1985, 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து சாம்பியன்ஷிப் டிராபிப் பட்டத்தை வென்ற ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்தவராகவும் இருந்துள்ளார்.

## குத்துச் சண்டை – தங்கப் பதக்கம்

❖ ஜெர்மனியின் கோல்னில் நடைபெற்ற குத்துச் சண்டை உலகக் கோப்பையின் 54 கிலோ எடைப் பிரிவில் மணிப்பூரைச் சேர்ந்த மீனா குமாரி மைசனாம் என்பவர் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

❖ இவர் இறுதிப் போட்டியில் தாய்லாந்தைச் சேர்ந்த மச்சாய் புன்யானுட் என்பவரைத் தோற்கடித்தார்.



❖ இந்த ஆண்டின் தொடக்கத்தில், பல்கேரியாவின் சோபியாவில் நடைபெற்ற புகழ்மிக்க ஸ்ட்ரான்ஜா நினைவுப் போட்டியில் ஒரு தங்கப் பதக்கம் வென்ற ஒரே இரண்டாவது இந்தியப் பெண் குத்துச் சண்டை வீராங்கனையாக உருவெடுத்துள்ளார்.

## ஆசியக் கோப்பை மேசைப் பந்தாட்ட போட்டித் தொடர் 2019

❖ 2019ஆம் ஆண்டிற்கான ஆசியக் கோப்பை மேசைப் பந்தாட்ட போட்டித் தொடரில் ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவு என இரண்டு பிரிவிலும் இறுதிப் பட்டத்தினை சீனாவின் வீரர்கள் கைப்பற்றினர்.

- 2019 ஆம் ஆண்டின் போட்டித் தொடரானது ஜப்பானின் யோகோஹாமாவில் நடைபெற்றது.
- ஜப்பானில் 4-வது முறையாக நடைபெறும் இது 32-வது போட்டித் தொடராகும்.

| Event | Gold | Silver | Bronze |
|---|---|---|---|
| Men's Singles | Fan Zhendong | Ma Long | Koki Niwa |
| Women's Singles | Zhu Yuling | Chen Meng | Kasumi Ishikawa |

## டைகர் - வெற்றி

- டைகர் உட்ஸ் என்பவர் அகஸ்டா மாஸ்டர்ஸ் தேசிய கோல்ப் தொடரை வென்றுள்ளார்.
- இவர் 22 ஆண்டுகளுக்கு முன்னர் 1997 ஆம் ஆண்டில் தனது முதலாவது மாஸ்டர்ஸ் தொடரை வென்று சாதனை படைத்தார். அப்போது அவருடைய வயது 21 ஆகும்.



- அகஸ்டாவில் இவர் பெற்ற இந்த வெற்றியானது 15 தொழில்சார் முக்கியப் பட்டங்களைப் பெற்றுத் தந்துள்ளது. இவர் முழு நேர கோல்ப் வீரரான ஜேக் நக்லாஸ் என்பவரை விட 3 பட்டங்கள் குறைவாகப் பெற்றுள்ளார்.

## மல்யுத்தத் தரவரிசை

- இந்தியாவைச் சேர்ந்த பாஜ்ராங் புனியா என்பவர் ஆண்களுக்கான 65 கிலோ கிராம் ப்ரீஸ்டைல் பிரிவுத் தரவரிசையில் உலகின் முதல் இடத்தை மீண்டும் பிடித்துள்ளார்.
- இந்தத் தரவரிசையானது ஒருங்கிணைந்த மல்யுத்த அமைப்பால் வெளியிடப்பட்டது.



- புனியா என்பவர் 2018 ஆம் ஆண்டில் ஆசியப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் தங்கப் பதக்கங்களையும் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினையும் வென்றுள்ளார்.

## கோமதி மாரிமுத்து

- திருச்சியைச் சேர்ந்த கோமதி மாரிமுத்து என்பவர் தோஹாவில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் ஆசியத் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் இந்தியாவின் முதலாவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இவர் 2:20.70 வினாடிகள் என்ற ஒரு தனிப்பட்ட நேரத்துடன் 800 மீட்டர் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- 30 வயது நிரம்பிய தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்த தடகள வீராங்கனையின் முதலாவது தங்கப் பதக்கம் இதுவாகும்.




## சந்தோஷ் கோப்பை

- லூதியானாவில் நடைபெற்ற சந்தோஷ் கோப்பை இறுதிப் போட்டியில் பஞ்சாப் அணியை 1-0 என்ற கணக்கில் வீழ்த்தி சர்வீசஸ் அணி கோப்பையை வென்றுள்ளது.
- சந்தோஷ் கோப்பை என்பது பிராந்திய மாநில மன்றங்கள் மற்றும் அரசு நிறுவனங்களால்

பங்கு கொள்ளப்படும் கால்பந்து நாக் அவுட் போட்டியாகும்.

- இது இந்தியக் கால்பந்தின் நிர்வாக அமைப்பான அனைத்து இந்தியக் கால்பந்து கூட்டமைப்பினால் (AIFF - All India Football Federation) நடத்தப்படுகின்றது.
- சந்தோஷ் போட்டித் தொடரானது 1941 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இதற்கு சந்தோஷின் (தற்போது வங்க தேசத்தில் உள்ள ஒரு இடம்) மறைந்த மகாராஜா சர் மன்மத நாத் ராய் சவுத்ரி என்பவரின் நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டது.
- அந்தக் காலக்கட்டத்தில் இவர் இந்தியக் கால்பந்து மன்றத்தின் அதிபர் மற்றும் போட்டியின் நன்கொடையாளராக விளங்கினார்.
- இந்தப் போட்டித் தொடரில் முன்னணியில் உள்ள மூன்று போட்டியாளர்களுக்கு பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

| Position | Name of the Trophy | Donor |
|---|---|---|
| Winner | Santhosh Trophy | Maharaja of Santhosh |
| Runner-up | Kamla Gupta Trophy | Former head of Indian Football association head S.K.Gupta |
| Third Place | The Sampangi Cup | Karnataka State Football association |

## ஜெர்மி லல்ரினங்கா

- ஆசிய தடகளப் போட்டியில் 2019 ஆம் ஆண்டின் இளைஞர் உலக சாதனை மற்றும் ஆசிய சாதனைகளை மிசோரம் மாநிலத்தைச் சேர்ந்த 16 வயதான பளுதூக்கும் வீராங்கனையான ஜெர்மி லல்ரினுங்கா முறியடித்துள்ளார்.
- 16 வயதான இவர் மூன்று முயற்சிகளில் 130 கிலோ மற்றும் 134 கிலோ ஆகிய இரண்டு முயற்சிகளை வெற்றிகரமாக முடித்துள்ளார்
- ஜெர்மி மொத்தமாக தேசிய மற்றும் சர்வதேச அளவிலான 15 சாதனைகளை முறியடித்துள்ளார்.



## ஆசிய தடகள சாம்பியன்ஷிப்

- ஆசிய தடகள சாம்பியன்ஷிப்பின் 23-வது பதிப்பானது கத்தாரின் தோஹாவில் நிறைவு பெற்றது.
- இந்தப் போட்டித் தொடரில் இந்தியா 17 பதக்கங்களுடன் (3 தங்கம், 7 வெள்ளி மற்றும் 7 வெண்கலம்) நான்காவது இடத்தில் உள்ளது.
- 800 மீட்டர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற கோமதி மாரிமுத்துவின் சாதனையானது பெரிதும் பாராட்டப்பட்டது.
- ஆண்களுக்கான பிரிவில் பதக்கம் வென்றவர்கள்

| Event | Gold | Silver | Bronze |
|---|---|---|---|
| Shot Put | Tejinder Pal | | |
| 1500 metres | | Ajay Kumar Saroj | |
| 3000 m steeple chase | | Avinash Sable | |
| 10,000 metres (Men) | | | Gavit Murli Kumar |
| 400 metres hurdles | | | Jabir Madari Palliyalil |

- பெண்களுக்கான பிரிவில் பதக்கம் வென்றவர்கள்

| Event | Gold | Silver | Bronze |
|---|---|---|---|
| 800 metres | Gomathi | | |
| 1500 metres | PU Chithra | | |
| Javelin Throw | | Annu Rani | |
| Heptathlon | | Swapna Barman | |
| 10,000 metres | | | Sanjivani Jadhav |
| 200 metres | | | Dutee Chand |
| 400 metres | | | M.R. Poovamma |
| 5000 metres | | | Parul Chowdary |
| 400 metres hurdles | | | Sarita Gaykwad |
| | | M.R. Poovamma | |
| 4 x 100m Relay | | Saritaben | |
| | | V.K. Vismaya | |
| | | Prachi | |

## லா லிகா பட்டம்

- ஸ்பெயினின் கால்பந்துக் கூட்டிணைவான "லா லிகா" போட்டியின் இறுதி ஆட்டத்தில் பார்சிலோனிய அணி வெற்றி பெற்றுள்ளது.
- இவர்கள் லெவண்டி அணிக்கு எதிராக விளையாடி வெற்றி பெற்றுள்ளனர்.
- பார்சிலோனியாவின் நட்சத்திர வீரரான லியோனல் மெசி அந்த அணி வெற்றி பெறுவதற்கான ஒரு கோலை அடித்தார். அதுவே அந்த அணியின் மொத்த கோலும் ஆகும்.
- பார்சிலோனிய அணி இதுவரை 26 முறை "லா லிகா" பட்டத்தை வென்றுள்ளது.
- "லா லிகா" என்பது ஸ்பெயின் கால்பந்துக் கூட்டிணைவு அமைப்பின் ஆண்களுக்கான முன்னணி தொழில்சார் கால்பந்துப் பிரிவாகும்.
- இது 1929-ல் தொடங்கப்பட்டது.

**La Liga**

LaLiga Santander

| | |
|---|---|
| Organising body | Liga de Fútbol Profesional (LFP) |
| Founded | 1929; 90 years ago |
| Country | Spain |
| Confederation | UEFA |
| Number of teams | 20 |
| Level on pyramid | 1 |
| Relegation to | Segunda División |
| Domestic cup(s) | Copa del Rey<br>Supercopa de España |
| International cup(s) | UEFA Champions League<br>UEFA Europa League |
| Current champions | Barcelona (26th title) (2018–19) |
| Most championships | Real Madrid (33 titles) |
| Most appearances | Andoni Zubizarreta (622) |
| Top goalscorer | Lionel Messi (417) |

## ISSF உலகக் கோப்பை 2019 - பீஜிங்

- சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கிச் சுடும் விளையாட்டுக் கூட்டமைப்பின் (International Shooting Sport Federation - ISSF) 2019 ஆம் ஆண்டிற்கான உலகக் கோப்பைப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் இந்திய துப்பாக்கிச் சுடும் இணைகளான சவுரப் சவுத்ரி மற்றும் மானு பாக்கர் ஆகியோர் 10 மீட்டர் காற்று கைத் துப்பாக்கிச் சுடுதலின் கலப்புப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றனர்.
- இதே போட்டித் தொடரில் 10 மீட்டர் காற்று துப்பாக்கிச் சுடுதலின் கலப்புக் குழுப் போட்டியில் அஞ்சும் மௌட்கில் மற்றும் திவ்யான்ஷ் சிங் பன்வார் ஆகியோர் இணைந்து சீனாவைத் தோற்கடித்து தங்கப் பதக்கம் வென்றனர்.

**MEDAL STANDINGS**

| | | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | IND | 3 | 1 | | 4 |
| 2 | CHN | 2 | 2 | 1 | 5 |
| 3 | RUS | 1 | 3 | 3 | 7 |
| 4 | KOR | 1 | 2 | 2 | 5 |
| 5 | BUL | 1 | | | 1 |

- இதற்கு முன்பாக 2019 பிப்ரவரியில் நடைபெற்ற உலகக் கோப்பைத் துப்பாக்கிச் சுடுதல் போட்டியின் டெல்லி பதிப்பில் சவுத்ரி மற்றும் பாக்கர் இணையானது இதே பிரிவில் தங்கம் வென்றது குறிப்பிடத் தக்கது.

## ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் 2019

- ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் ஆனது தாய்லாந்தின் பாங்காக்கில் உள்ள ஹீவாமார்ச் உள்ளரங்கத்தில் நடைபெற்றது.
- முதன்முறையாக ஆடவர் மற்றும் மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகள் ஒன்றாக நடத்தப்பட்டன.
- இந்தப் போட்டியானது சர்வதேச குத்துச் சண்டைச் சங்கத்தால் நடத்தப்பட்டது.
- இந்தியாவானது இந்த போட்டித் தொடரை 2 தங்கப் பதக்கம், 4 வெள்ளிப் பதக்கம் மற்றும் 7 வெண்கலப் பதக்கம் என மொத்தமாக 13 பதக்கங்களுடன் முடித்தது.
- ஹரியானாவின் அமீத் பங்கால் 52 கிலோ எடைப் பிரிவில் வென்று இப்போட்டியில் தனது முதல் தங்கப் பதக்கத்தை வென்றார்.
- 81 கிலோ எடைப் பிரிவில் நடப்பு உலக சாம்பியனான சீனாவின் வாங் லீனாவை வீழ்த்தி பூஜாராணி தங்கப் பதக்கத்தை வென்றார்.
- ஆசிய குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டித் தொடரில் 81 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் முதல் தங்கப் பதக்கம் இதுவேயாகும்.




## ஆசிய மல்யுத்தப் போட்டி

- 2019 ஆம் ஆண்டின் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியானது சீனாவின் சியானில் நடைபெற்றது.
- பதக்கப் பட்டியலில் இந்தியா எட்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியா மொத்தம் 16 பதக்கங்களை வென்றுள்ளது.
- இந்தியாவின் பதக்கங்கள்: 1 தங்கம், 6 வெள்ளி மற்றும் 9 வெண்கலம்.
- பஜ்ரங் புனியா என்பவர் 65 கிலோ எடைப் பரிவில் இந்தியாவின் ஒரேயொரு தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இந்தப் போட்டித் தொடரானது ஆசியத் தொடர்பு மல்யுத்தக் குழுவினால் (Asian Associated Wrestling Committee - AAWC) ஒருங்கிணைக்கப்பட்டது.
- 1979 ஆம் ஆண்டில் ஜலந்தரில் முதலாவது போட்டித் தொடரானது நடத்தப்பட்டது.
- 1996 ஆம் ஆண்டில் பெண்களுக்கான போட்டித் தொடரானது முதன்முறையாக நடத்தப்பட்டது.

# முக்கிய தினங்கள்

## ஒடிசா தினம் – ஏப்ரல் 01

- உட்கல் திவாஸ் அல்லது ஒடிசா தினம் ஆண்டுதோறும் ஏப்ரல் 01 அன்று கொண்டாடப்படுகின்றது.
- இந்தத் தினமானது பிரிட்டிஷ் ஆட்சியின் போது ஒடிசா மகாகாணம் (தற்போதைய ஒடிஸா மாநிலம்) உருவாக்கப்பட்டதை குறிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது.
- ஒடிசா மாகாணமானது 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் நாள் மக்களின் மொழி அடிப்படையில் உருவாக்கப்பட்டது.
- இந்திய சுதந்திரத்திற்கு முன்பாக உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் மொழிவாரி மாகாணம் இதுவாகும்.
- இது முன்னதாக வங்காளம் மற்றும் பீகார் ஆகிய மாகாணங்களுடன் பிரிக்கப்பட்டு இருந்தது.




## உலக மன இறுக்க விழிப்புணர்வு தினம்

- ஏப்ரல் – 02 ஆம் தேதியானது உலக மன இறுக்க தினமாக சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தீர்மானத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- உலக மன இறுக்க தினம் மட்டுமே ஐ.நா.வின் ஏழு அதிகாரப் பூர்வ உடல்நலம் சார்ந்த தினங்களில் ஒன்றாகும்.
- இந்தத் தினமானது உலகம் முழுவதும் மன இறக்க கோளாறுடன் வாழும் மக்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த அனுசரிக்கப்படுகின்றது.

## சர்வதேசச் சுரங்க விழிப்புணர்வு தினம்

- சர்வதேசச் சுரங்க விழிப்புணர்வு தினம் மற்றும் சுரங்க நடவடிக்கையில் உதவி செய்தல் தினம் ஆகியவை 2019 ஆம் ஆணடு ஏப்ரல் 04 அன்று அனுசரிக்கப்பட்டன.
- 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 04 ஆம் தேதியை சர்வதேச சுரங்க விழிப்புணர்வு தினமாக அனுசரிக்கப்படும் என்று அறிவித்தது.
- இந்த ஆண்டில் கருத்துருவானது, “ஐக்கிய நாடுகளானது – நிலையான வளர்ச்சி இலக்குகள் – பாதுகாப்பான இடம் – பாதுகாப்பான இல்லம்” ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.
- இந்தக் கருத்துருவானது சுரங்க நடவடிக்கை, சுரங்க இடங்களைப் பாதுகாப்பான விளையாட்டு மைதானமாக மாற்றுதல் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் ஆகியவற்றைத் தொடர்புபடுத்துகிறது.






## தேசிய கடல்சார் தினம்

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 05 அன்று தேசிய கடல்சார் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது உலகெங்கிலும் உள்ள கண்டங்களுக்கிடையே பாதுகாப்பான மற்றும் சுற்றுச் சுழலுக்கு உகந்த வணிகத்தை ஆதரிப்பது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துருவானது, “இந்தியப் பெருங்கடல் - வாய்ப்பிற்கான கடல்” என்பதாகும்.
- இத்தினமானது முதன் முறையாக 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 அன்று மும்பையிலிருந்து இலண்டனிற்கு இயக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது கப்பலான சிந்தியா நீராவி கடற்பயண நிறுவனத்தின் கப்பலான எஸ்எஸ் லாயல்டியின் பயணத்தின் வாயிலாக இந்தியாவின் முதலாவது கடற் பயணம் தொடங்கப் பட்டது.
- 1906 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த வ. உ. சிதம்பரம், தனது சுதேசி கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். அதன் முதலாவது கப்பல் எஸ்எஸ் கலியா என்பதாகும்.

## உலக சுகாதார தினம்


- உலக சுகாதார நிறுவனத்தின் (WHO - World Health Organization) ஆதரவுடன் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7 ஆம் தேதியன்று உலக சுகாதார தினமானது சர்வதேச சுகாதார விழிப்புணர்வு தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 அன்று WHO உருவாக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டானது உலக சுகாதார நிறுவனத்தின் 70-வது ஆண்டுக் கொண்டாட்டத்தின் நிறைவைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டின் உலக சுகாதார தினத்தின் கருத்துருவானது "அனைவருக்கும் சுகாதாரம்" என்பதாகும்.
- இந்தியாவின் அனைவரையும் உள்ளடக்கிய சுகாதாரத்தை நோக்கியப் பணியானது ஆயுஷ்மான் பாரத் திட்டத்தையும் உள்ளடக்கியது.
- இந்தத் திட்டமானது சமுதாயத்தில் சமூகப் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினர்களின் குடும்பத்திற்கு ரூ.5 இலட்ச ரூபாய் அளவிலான மருத்துவ சேவை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஒரு பகுதியாக 2030 ஆம் ஆண்டில் அனைவரையும் உள்ளடக்கிய சுகாதாரத்தை அடைவதற்கு முயற்சிக்க அனைத்து ஐ.நா உறுப்பு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

## கோஹிமாப் போர்

- இந்தியா கோஹிமாப் போரின் 75-வது நினைவு தினத்தை ஏப்ரல் 4 அன்று கடைபிடித்தது.
- இரண்டாம் உலகப் போரின் போது 1944 ஆம் ஆண்டில் ஜப்பானியரால் நடத்தப்பட்ட யு-கோ தாக்குதல் அல்லது ஆபரேஷன் சி-யின் திருப்பு முனையாக கோஹிமாப் போர் கருதப்படுகின்றது.
- இந்தப் போரானது 1944 ஆம் ஆண்டில் ஏப்ரல் 4 முதல் ஜூன் 22 வரை நாகாலாந்தின் கோஹிமா நகரைச் சுற்றிலும் மூன்று நிலைகளில் நடைபெற்றது.
- இந்தப் போரின் முடிவில் பிரிட்டிஷ் இந்தியப் படைகள் ஜப்பானியர்களை வெற்றிகரமாக வெளியேற்றின.
- இந்தப் போரானது "கிழக்கின் ஸ்டாலின்கிரேடு" என்றும் அழைக்கப்படுகின்றது.
- 2013 ஆம் ஆண்டில், பிரிட்டின் தேசிய இராணுவ அருங்காட்சியகமானது இம்பால் மற்றும் கோஹிமாவில் நடைபெற்ற போரை "பிரிட்டனின் சிறந்த போர்" என்று கூறியது.

## பார்வையின்மைத் தடுப்பு வாரம் 2019 - ஏப்ரல் 01 முதல் 07


- பார்வையின்மைத் தடுப்பு வாரமானது ஏப்ரல் 1 (திங்கள்) முதல் ஏப்ரல் 7 (ஞாயிறு) வரை கடைபிடிக்கப்பட்டது.
- இந்தப் பிரச்சாரமானது பார்வையற்றோர் மீதான விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் இந்திய அரசால் திட்டமிடப்பட்டதாகும்.




- இது முதன்முதலில் 1960 ஆண்டில் ஜவஹர்லால் நேரு மற்றும் ராஜ்குமாரி அம்ரித் கவுர் ஆகியோரால் 1860 ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- "விஷன் 2020: பார்வைக்கான உரிமை" எனும் மற்றொருப் பிரச்சாரமானது 1999 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனத்தால் பார்வையின்மையைத் தடுப்பதற்காக தொடங்கப்பட்டது.

## 1994 ஆம் ஆண்டு ருவாண்டா இனப் படுகொலை மீதான பிரதிபலிப்பிற்கான சர்வதேச தினம் - ஏப்ரல் 07

- ருவாண்டா இனப் படுகொலை மீதான பிரதிபலிப்பிற்கான சர்வதேச தினமானது ஐ.நா சபையால் ஏப்ரல் 07 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- 1994 ஆண்டில் நடைபெற்ற ருவாண்டா இனப் படுகொலையை நினைவு கூறும் சர்வதேச தினமாக இந்த தினமானது 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 அன்று ஐ.நா சபையில் அங்கீகரிக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டானது, மனித வரலாற்றில் இருண்ட அத்தியாயங்களில் ஒன்றான ருவாண்டாவில் டுட்ஸிகளுக்கு எதிரான இனப் படுகொலையின் 25-வது வருட நினைவு நாளைக் குறிக்கின்றது.




- டுட்ஸி, மிதவாத ஹிட்டு, துவா மற்றும் இனப் படுகொலைகளை எதிர்க்கும் இதர இன மக்கள் என 8 லட்சத்திற்கும் மேற்பட்டோர் மூன்று மாதங்களுக்குள் தனியான முறையில் கொல்லப்பட்டனர்.

## தேசிய கைத்தறி வாரம் - ஏப்ரல் 07 முதல் 14

- தேசிய கைத்தறி வாரமானது ஏப்ரல் 07 முதல் 14 வரை இந்த ஆண்டு கடைபிடிக்கப்படுகிறது.




- தேசிய கைத்தறித் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 7 அன்று அனுசரிக்கப் படுகின்றது. மேலும் தேசிய கைத்தறி வாரமானது கடந்த ஆண்டு 2018 டிசம்பரில் அனுசரிக்கப்பட்டது.
- இந்நிகழ்வில் அவலோன் ஃபோதரிங்காம் என்பவரால் எழுதப்பட்ட 'இந்தியாவின் ஜவுளி ஆதார நூல்' ஏப்ரல் 9 அன்று வெளியிடப்பட விருக்கின்றது .

## சர்வதேச வளர்ச்சி மற்றும் அமைதிக்கான விளையாட்டு தினம்

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 6 ஆம் தேதி சர்வதேச வளர்ச்சி மற்றும் அமைதிக்கான விளையாட்டு தினமாக (International day of Sport for development and peace - IDSDP) அனுசரிக்கப் படுகின்றது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இத்தினமானது 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 6-ஆம் தேதி முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இத்தினமானது 1896 ஆம் ஆண்டில் ஏதென்ஸில் (கிரீஸ்) நவீன யுகத்தின் முதலாவது ஒலிம்பிக் விளையாட்டின் தொடக்கத்தை அனுசரிக்கின்றது.
- சமூக மாற்றம், சமூக வளர்ச்சி மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் புரிதலை ஊக்குவிப்பதற்கான விளையாட்டுச் சக்தியின் வருடாந்திரக் கொண்டாட்டமாக IDSDP உள்ளது.




## உலக ஹோமியோபதி தினம்


- ஏப்ரல் 10 அன்று உலக ஹோமியோபதி தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- இது ஹோமியோபதியைக் கண்டுபிடித்தவரான ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் ஹானிமன் என்பவரது பிறந்த தினத்தை அனுசரிக்கின்றது.



- இது மாற்று மருத்துவ முறை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதையும் அதை மேற்கொள்வது மற்றும் அதன் தீர்வு விகிதங்களை மேம்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- ஆயுஷ் அமைச்சகமானது இரண்டு நாட்கள் நடைபெறும் ஹோமியோபதி மீதான சர்வதேசக் கருத்தரங்கை புது தில்லியில் நடத்தியது.

## தேசிய ஆய்வு தினம்

- ஏப்ரல் 10 அன்று இந்தியா முழுவதும் தேசிய ஆய்வு தினம் அனுசரிக்கப்படுகின்றது.




- இந்த நாளில் படைத் தலைவர் வில்லியம் லம்டன் என்பவர் பின்வரும் இரண்டு முக்கியமான பணிகளைத் தொடங்கியதால் ஆய்வு வரலாற்றில் இந்த நாள் முக்கியவத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது.
    - GTS (சிறந்த முக்கோண ஆய்வு)
    - குமரி முனை முதல் பெங்களூரு வரை ஆய்வு செய்யப்பட்ட சிறந்த வில்
- சிறந்த முக்கோண ஆய்வு என்பது அறிவியல் பூர்வமாக இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் அளப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாகும்.
- இந்த ஆய்விற்கான ஆதார மையம் மதராஸ் ஆகும்.

## உலக நடுக்குவாதம் (பார்க்கின்சன்) தினம் – ஏப்ரல் 11

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 11 ஆம் தேதி உலக பார்க்கின்சன் தினம் அனுசரிக்கப்படுகின்றது.

- இந்தத் தினமானது பார்க்கின்சன் நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இந்த நோய் நிலைமையின் அதிகமான புரிதலை ஊக்குவிப்பதையும் இது எவ்வாறு ஒரு மனிதனைத் தாக்குகிறது என்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் கருத்துருவானது "விழிப்புணர்வு என்பது #KeyToPD" ஆகும்.
- இந்த நாளானது 1817 ஆம் ஆண்டில் "நடுங்கும் முடக்குவாதம் மீதான ஒரு கட்டுரை" என்பதில் பார்க்கின்சன் நோய் குறித்து விளக்கிய இலண்டனைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் பார்க்கின்சன் என்பவரின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இவர் பார்க்கின்சன் நோய் குறித்த அறிகுறிகளுடன் உள்ள 6 நபர்களைப் பரிசோதித்து விளக்கம் அளித்தார்.
- ஒரு பிரெஞ்சு நரம்பியல் வல்லுநரான ஜீன்-மார்ட்டின் சர்க்கேட் என்பவர் "பார்க்கின்சன் நோய்" என்ற சொற்றொடரை உருவாக்கினார்.




## பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம் – ஏப்ரல் 11

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 11 ஆம் தேதி பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம் (NSMD -National Safe Motherhood Day) அனுசரிக்கப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் NSMD-ன் கருத்துருவானது, "அன்னைகளுக்கான பேறு கால உதவியாளர்" என்பதாகும்.
- கஸ்தூரிபாய் காந்தியின் பிறந்த தினத்தின் நினைவாக 2003 ஆம் ஆண்டில் இந்திய அரசு ஏப்ரல் 11 ஆம் தேதியை பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினமாக அறிவித்துள்ளது.
- இந்தத் தினமானது பெண்களின் சீரான உடல்நலம், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு அளிக்கப்படும் மகப்பேறு வசதிகள், பெண்களிடையே இரத்த சோகையைக் குறைத்தல், மருத்துவமனையில் குழந்தைப் பிறப்பு, பிறப்பிற்கு முன்பு மற்றும் பிறப்பிற்கு பின்பான உடல்நலம் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

## மனித விண்வெளிப் பயணத்திற்கான சர்வதேச தினம்- ஏப்ரல் 12

- மனிதனின் முதல் விண்வெளிப் பயணத்தை நினைவுகூறும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 12 ம் நாள் மனித விண்வெளிப் பயணத்திற்கான சர்வதேசத் தினமாக கொண்டாடப்படுகிறது.
- 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 அன்று சோவியத் யூனியனின் குடிமகனான லெப்டினென்ட்

யூரி காகரின் மனித வரலாற்றில் முதல் முறையாக "வஸ்தோக்" விண்கலத்தில் பூமியின் சுற்றுப் பாதையில் பயணித்தார்.




- விண்வெளி ஆராய்ச்சியில் ஏற்படுத்தப்பட்ட சாதனைகளின் நினைவாக 2001 ஆம் ஆண்டு முதல், உலக விண்வெளி விருந்து என்று அழைக்கப்படும் யூரியின் இரவு ஆனது உலகம் முழுவதும் ஒவ்வொரு ஏப்ரல் 12 ம் தேதியும் நடைபெறுகிறது.
- 2011 ஏப்ரல் 7 அன்று, ஐ.நா. பொதுச் சபையானது ஏப்ரல் 12 ஐ மனித விண்வெளிப் பயணத்திற்கான சர்வதேசத் தினமாக அறிவித்து தீர்மானத்தை நிறைவேற்றியது.

## ஜாலியன்வாலா பாக் படுகொலை தினம் - ஏப்ரல் 13

- ஏப்ரல் 13 ம் தேதி ஜாலியன்வாலா பாக் படுகொலை தினமானது பஞ்சாபின் ஜாலியன்வாலா பாக்கில் 1919 ஆம் ஆண்டு நடந்த அமிர்தசரஸ் படுகொலை நினைவாக அனுசரிக்கப்படுகிறது.
- அனைத்துப் பக்கங்களிலும் சுவரால் சூழப்பட்டு 7 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து காணப்படும் பிரபலமான பொதுப் பூங்காவான ஜாலியன்வாலா பாக்கின் பெயரினை இது கொண்டுள்ளது.
- சத்யபால் மற்றும் சாய்புதீன் கிச்லு ஆகிய இரு தேசியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதையும் அவர்கள் நாடு கடத்தப்பட்டதையும் கண்டித்து ஒரு அமைதியான போராட்டத்திற்காக மக்கள் இங்கு ஒன்று திரண்டிருந்தனர்.



- கர்னல் ரெஜினால்டு டயரின் கட்டுப்பாட்டின் கீழிருந்த ஆங்கிலேய இந்திய ராணுவத்தினர் இந்த இந்தியர்கள் கூட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
- ஆங்கிலேயர்களின் அதிகாரப்பூர்வ விசாரணையின் போது 379 மரணங்கள் என தெரிவித்திருந்த போதிலும் இறப்பின் எண்ணிக்கையானது சுமார் 1000 என்ற அளவில் காங்கிரஸால் கூறப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டானது இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றின் கருப்பு நிகழ்வான இதன் நூறாவது ஆண்டாகும்.
- மேலும், 100 வது ஆண்டினை நினைவுகூறும் வகையில் அஞ்சல் தலையையும் ஒரு நாணயத்தையும் இந்தியாவின் குடியரசு துணைத் தலைவர் வெளியிட்டார்.

## அம்பேத்கர் ஜெயந்தி – ஏப்ரல் 14

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14 ஆம் தேதி அம்பேத்கர் ஜெயந்தி அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த நிகழ்வானது டாக்டர் அம்பேத்கரின் பிறந்த தினத்துடன் ஒன்றிப் பொருந்துகிறது. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதியானது அம்பேத்கரின் 128-வது பிறந்த தினமாகும்.
- இந்திய அரசியலமைப்பின் வரைவுக் குழுவின் தலைவர் டாக்டர் அம்பேத்கர் ஆவார்.



- இந்திய சமுதாயத்தில் அவரது அசாதாரண திறமை மற்றும் மகத்தான பங்களிப்பானது இந்தியா முழுவதும் மதிக்கப் படுகின்றது.

## இமாச்சலப் பிரதேச தினம்

- ஏப்ரல் 15-ம் தேதியன்று இமாலய மாநிலமான இமாச்சலப் பிரதேசம் 72-வது இமாச்சல தினத்தைக் கொண்டாடியது.
- இமாச்சல தினம் 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 15-ம் தேதி அது உருவாக்கப்பட்டதை நினைவில் கொள்வதற்காக கொண்டாடப்படுகின்றது.

## மகாவீர் ஜெயந்தி

- மகாவீர் ஜெயந்தி என்பது 24-வது மற்றும் கடைசிச் சமண தீர்த்தங்கரரான மகாவீரரின் பிறந்த தினத்தின் நினைவாகும்.
- கிரிகோரியன் நாட்காட்டியின்படி, இந்நாளானது மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் நிகழ்கின்றது. இந்த ஆண்டு இத்தினமானது சமணர்களால் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 அன்று கொண்டாடப்பட்டது.
- இது சமணர்களின் மிக முக்கியமான மதம் சார்ந்த திருவிழாக்களில் ஒன்றாகும்.
- மகாவீரர் ஆன்மீக விடுதலைக்கு அகிம்சை (வன்முறையில் ஈடுபடாமை), சத்யம் (உண்மை), அஸ்தேயம் (திருடாமை), பிரம்மச்சரியம் (தூய்மை) மற்றும் அபரிகிரஹம் ஆகிய ஐந்தும் அவசியம் என்று போதித்தார்.
- இவரது போதனைகள் இந்திரபூதி கௌதமா (தலைமைச் சீடர்) என்பவரால் தொகுக்கப்பட்டது.

## முஜிப்நகர் தினம்

- ஏப்ரல் 17 அன்று வங்காள தேசமானது முஜிப்நகர் தினத்தை அனுசரித்தது.
- வங்காளத்தின் அவாமி லீக்கை நிறுவியவரான ஷேக் முஜிபூர் ரகுமான் என்பவர் 1971 ஆம் ஆண்டு மார்ச் 25 அன்று கைது செய்யப்பட்டு பாகிஸ்தானிற்கு நாடு கடத்தப்பட்டார்.
- அதன் பின்னர் 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 அன்று அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் பைதியாநாத்தலாவில் ஒன்று கூடி வங்காள தேசத்தின் மாகாண அரசாங்கத்தை உருவாக்க முடிவு செய்தனர்.
- இந்த நிகழ்ச்சியானது வங்காள தேசம் சுதந்திர நாடாக உருவாக வழிவகுத்தது.
- இந்த வரலாற்று நிகழ்ச்சியை நினைவு கூர்வதற்காக 1998 ஆம் ஆண்டு முன்னாள் மாம்பழத் தோட்டமான பைதியாநாத்தலாவானது முஜிப்நகர் எனப் பெயர் மாற்றப்பட்டது.

## உலகப் பாரம்பரிய தினம் 2019

- ஏப்ரல் 18 ஆம் தேதி உலகப் பாரம்பரிய தினமாக அனுசரிக்கப்படுகின்றது. இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு “கிராமப்புற இயற்கை நிலம்” என்பதாகும்.
- “கிராமப்புற இயற்கை நிலம்” என்ற கருத்துருவானது, “கிராமப்புற பாரம்பரியம் மீதான அறிவியல்சார் கருத்தரங்கு” என்ற கருத்துருவுடன் தொடர்புடையதாகும்.
- உலகப் பாரம்பரிய தினமானது சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் இடங்கள் ஆணையத்தினால் 1982 ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப்பட்டு யுனெஸ்கோவின் பொதுச் சபையினால் 1983 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இத்தினமானது கலாச்சாரப் பாரம்பரியத்தின் பன்மைத்துவம் குறித்தும் அதைப் பாதுகாப்பதற்குத் தேவையான முயற்சிகள் குறித்தும் பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு வாய்ப்பை வழங்குகின்றது.
- ICOMOS (International Council on Monuments and Sites) ஆனது “நீலக் கவசம்” என்ற அமைப்பின் நிறுவன உறுப்பினர் மற்றும் பங்காளராகும். இது போர்கள் மற்றும் இயற்கைப்

பேரிடர்களால் பாதிக்கப்பட்ட உலகின் கலாச்சாரப் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்குப் பணியாற்றுகின்றது.

- ICOMOS ஆனது 1965 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையிடம் பாரீஸ் ஆகும்.

## உலக இரத்தம் உறையா நோய் தினம் – ஏப்ரல் 17

- ஹேமோபிலியா என்பது ரத்தம் முறையாக உறையாத வகையில் உள்ள ஒரு அரிதான மரபணு தொடர்பான இரத்தப் போக்குக் கோளாறு ஆகும்.
- இதன் விளைவாக ஹேமோபிலியாவை அமையப் பெற்றவர்கள் ஒரு காயத்தைப் பெற்றடைந்த பின்பு நீண்ட காலத்திற்கும் தன்னிச்சையான உதிரப் போக்கினால் அவதிப்படுவர்.
- ஒவ்வொரு ஏப்ரல் 17-ம் தேதியும் உலக ஹேமோபிலியா தினமாக ஹேமோபிலியாவைப் பற்றியும் இதர உள்ளார்ந்த இரத்தக் கசிவு கோளாறுகளைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்த உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
- 1989 ஆம் ஆண்டு உலக ஹேமோபிலியா கூட்டமைப்பு (World Federation of Hemophilia - WFH) மூலம் உலக ஹேமோபிலியா தினம் ஆரம்பிக்கப்பட்டது.

### *துரிதத் தகவல்கள்*

- ஒவ்வொரு காயமும் எப்பொழுதும் உயிருக்கு ஆபத்தைத் தரக்கூடியவை ஆகாது. ஹேமோபிலியா நோயாளிகள் தங்கள் இரத்தத்தில் உறைய வைக்கக் கூடிய காரணி என்றழைக்கப்படும் ஒரு புரதம் இல்லாமலிருப்பதாலோ அல்லது அவை ஒழுங்காக செயலாற்றாததாலோ இரத்தக் கசிவை அடைகின்றன.
- பெரும்பாலும் அதிகப்படியான மக்கள் ஹேமோபிலியா என்பது ஆண்களை மட்டுமே தாக்குகின்றது எனக் கருதுகின்றனர். ஆனால் அரிதாக ஓசையற்ற நோய்க் கடத்திகளான பெண்களும் இரத்தக் கசிவிற்கான அறிகுறிகளைக் கொண்டு அவதியுறுகின்றனர்.

## புனித வெள்ளி

- இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைதல் மற்றும் அவரது மரணம் ஆகியவற்றை நினைவு கூறுவதற்காக கிறிஸ்துவ சமூகமானது ஏப்ரல் 19 ஆம் தேதியன்று புனித வெள்ளியை அனுசரித்தது.
- மேலும் இது கறுப்பு வெள்ளி, சிறப்பு வெள்ளி, ஈஸ்டர் வெள்ளி அல்லது புனித வெள்ளி என்றும் அழைக்கப்படுகின்றது.
- புனித வெள்ளியானது யூதத் திருவிழாவான “பாசோவர்” என்ற திருவிழாவின் தொடக்கத்துடன் ஒன்றிப் பொருந்துகின்றது.
- புனித வெள்ளிக்கு அடுத்து ஈஸ்டர் ஞாயிறு நிகழ்கின்றது. ஈஸ்டர் ஞாயிறானது இயேசுவின் இறப்பிலிருந்து அவர் புத்துயிர் பெற்றதைக் குறிக்கின்றது.

## உலக சீன மொழி தினம்

- ஏப்ரல் 20 அல்லது ஏறத்தாழ அதையொட்டிய தேதிகளில் உலக சீன மொழி தினத்தை ஐக்கிய நாடுகள் அனுசரிக்கின்றது.
- இது யுனெஸ்கோவினால் 2010 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இத்தினத்தின் நோக்கம் பன்மொழி வழக்கு மற்றும் கலாச்சார பன்மைத்துவம் ஆகியவற்றை அனுசரிப்பதாகும்.
- மேலும் இந்த நாளானது ஐக்கிய நாடுகள் அமைப்பு முழுவதும் பயன்படுத்தப்படும் 6 அலுவல் ரீதியிலான மொழிகளையும் (ரஷ்ய மொழி, ஆங்கில மொழி, ஸ்பெயின் மொழி, அரபி மொழி, பிரெஞ்சு மொழி, சீன மொழி) சமமாக ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசியக் குடிமைப் பணிகள் தினம் – ஏப்ரல் 21

- ஏப்ரல் 21 அன்று இந்தியா முழுவதும் குடிமைப் பணிகள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 2006 ஆம் ஆண்டில் முதலாவது குடிமைப் பணிகள் தினம் அனுசரிக்கப்பட்டது.
- இந்த நாளில் குடிமைப் பணியாளர்கள் பொது மக்களின் தேவைகளுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்கின்றனர். இவர்கள் பொதுச் சேவைகளுக்கு தங்களுடைய பொறுப்புகளை இந்த நாளில் புதுப்பித்துக் கொள்கின்றனர்.




- இந்த நாளானது 1947 ஆம் ஆண்டில் புது தில்லியில் உள்ள மெட்கேப் இல்லத்தில் முதலாவது பிரிவைச் சேர்ந்த குடிமைப் பணி பயிற்சி அதிகாரிகளிடையே சர்தார் வல்லபாய் படேல் உரையாற்றிய நாளுடன் ஒன்றிப் பொருந்துகின்றது.
- அவருடைய புகழ்பெற்ற உரையில் குடிமைப் பணியாளர்களை "இந்தியாவின் எஃகுச் சட்டகம்" என்று குறிப்பிட்டார்.
- மக்களவைத் தேர்தல் காரணமாக குடிமைப் பணிகள் தினமானது இந்த ஆண்டு அனுசரிக்கப்படவில்லை.

## உலக பூமி தினம் – ஏப்ரல் 22


- உலக பூமி தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22 ஆம் நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் நாள் அன்று கொண்டாடப்பட்ட முதல் உலக பூமி தினமானது சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு எதிராக 22 மில்லியன் அமெரிக்கர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தினத்தைக் குறிக்கும் நாளாகும்.




- நமது எதிர்கால தலைமுறையினருக்காக இந்தக் கோளினை ஒரு சிறந்த இடமாக மாற்றுவதற்கு நமது சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கும் பேணிக் காப்பதற்குமான தேவையை நமக்கு நினைவூட்டுவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2019 ஆம் ஆண்டில் கருத்துருவானது, "நமது இனங்களைப் பாதுகாப்போம்" என்பதாகும். உலகம் முழுவதிலும் விரைவாக அழிந்துவரும் இனங்களின் மீது கவனத்தினை ஈர்ப்பதே இதன் நோக்கமாகும்.

## உலக புத்தகத் தினம்

- உலக புத்தகத் தினம் அல்லது உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம் அல்லது சர்வதேசப் புத்தக தினமானது ஏப்ரல் 23 அன்று அனுசரிக்கப்படுகின்றது.



- இந்நிகழ்ச்சியானது வாசித்தல், பிரசுரித்தல் மற்றும் காப்புரிமை ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (United Nations Educational, Scientific and Cultural Organization - UNESCO) ஒருங்கிணைக்கப்படுகின்றது.
- 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 அன்று இத்தினமானது முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- இத்தினத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களான வில்லியம் ஷேக்ஸ்பியர், மிக்யூல் செர்வன்டிஸ் மற்றும் இன்கா கார்சிலசோ டி லா வேகா ஆகியோர் இறந்தனர்.
- 2019 ஆம் ஆண்டின் புத்தகத் தினமானது "பூர்வகுடி மொழிகளைப் பாதுகாத்தல்" என்பவற்றில் சிறப்புக் கவனம் செலுத்துவதுடன் இலக்கியம் மற்றும் வாசிப்பை கொண்டாடுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

## மகளிருக்கு அரசியல் அதிகாரமளிக்கும் நாள்- ஏப்ரல் 24

- மகளிருக்கு அரசியல் அதிகாரமளிக்கும் நாளானது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 24-ம் நாள் இந்தியாவில் அனுசரிக்கப்படுகின்றது.




- அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தின் தேவையைப் பற்றி கவனம் செலுத்தும் யோசனையை கொண்டு வருவதே இதன் நோக்கமாகும்.
- இந்திய அரசியலமைப்பின் 9-ஆம் அட்டவணையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ம் நாள் கொண்டுவரப்பட்ட 73-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டமானது, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் இடங்களை ஒதுக்கியுள்ளது.
- புது டெல்லியில் உள்ள சமூக அறிவியல் நிறுவனமானது 1994 ஆம் ஆண்டிலிருந்து ஏப்ரல் 24 ஆம் நாளை பெண்களுக்கு அரசியலில் அதிகாரமளிக்கும் நாளாக அனுசரித்து வருகிறது.
- 2019 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்படும் இந்த 25-வது மகளிருக்கு அரசியல் அதிகாரமளிக்கும் தினத்தின் கருத்துருவானது, "பேரழிவு மேலாண்மையில் பஞ்சாயத்துகள்" என்பதாகும்.

## அமைதிக்கான பன்முகத் தன்மை மற்றும் அரசியல் செயலாண்மை திறனுக்கான சர்வதேச தினம்

- ஏப்ரல் 24, 2019 ஆம் ஆண்டு அதிகாரப் பூர்வமான முதல் அமைதிக்கான பன்முகத் தன்மை மற்றும் அரசியல் செயலாண்மைத் திறனுக்கான சர்வதேச தினம் கொண்டாடப்பட்டது.
- இது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 12 அன்று ஐ.நா பொதுச் சபை தீர்மானத்தினால் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
- இந்த நாளானது, கல்வி மற்றும் பொது விழிப்புணர்வை வளர்க்கும் நடவடிக்கைகள் வழியாக அமைதிக்கான பன்முகத் தன்மை மற்றும் அரசியல் செயலாண்மைத் திறன்களின் நன்மைகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக மலேரியா தினம் – ஏப்ரல் 25


- உலக மலேரியா தினமானது ஆண்டுதோறும் ஏப்ரல் 25 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தத் தினமானது மலேரியாவை கட்டுப்படுத்தும் உலகளாவிய முயற்சிகளை அங்கீகரிக்கின்றது.
- உலக மலேரியா தினமானது 2017 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் உயர்மட்ட அமைப்பான உலக சுகாதார கூடுகையின் 60-வது அமர்வில் தொடங்கப்பட்டது.
- உலக மலேரியா தினம் தொடங்கப்படுவதற்கு முன்னதாக ஏப்ரல் 25 அன்று ஆப்ரிக்க மலேரியா தினம் அனுசரிக்கப்பட்டு வந்தது.
- 2019 ஆம் ஆண்டின் உலக மலேரியா தினத்தின் கருத்துருவானது, "மலேரியா இல்லாமை என்னிடமிருந்துத் தொடங்கிறது" என்பதாகும்.




## தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் பெண்களுக்கான சர்வதேச தினம்

- தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் பெண்களுக்கான சர்வதேச தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தின் 4-வது வியாழக்கிழமை அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு ஏப்ரல் 25 அன்று இத்தினமானது கடைபிடிக்கப்பட்டது.
- இது தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் வளர்ந்து வரும் ஆய்வுகள் மற்றும் வேலைவாய்ப்புகளில் கவனம் செலுத்த இளம்பெண்கள் மற்றும் மகளிருக்கு அதிகாரமளித்தல் மற்றும் ஊக்குவித்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது 2012 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச தொலைத்தொடர்பு கழகத்தின்

(International Telecommunication Union) உறுப்பு நாடுகளால் அனுசரிக்கப்படுகின்றது.




## தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் – ஏப்ரல் 24

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 24 அன்று மத்தியப் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தினால் தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று இந்தியாவின் முன்னாள் பிரதமரான மன்மோகன் சிங் இத்தினத்தின் முதலாவது கொண்டாட்டத்தை அறிவித்தார்.
- 1992 ஆம் ஆண்டின் 73-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதியை இத்தினம் குறிக்கின்றது.
- இந்தத் திருத்தமானது பஞ்சாயத்துகளை "தன்னாட்சி நிறுவனங்களாக" அங்கீகரிக்கின்றது.
- இது தேவையான அதிகாரங்களுடன் பஞ்சாயத்துகளைத் தன்னாட்சி நிறுவனங்களாக செயல்படுவதற்குப் பஞ்சாயத்துகளுக்கு உதவுகின்றது.




## உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத் தினம் – ஏப்ரல் 21

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 21 அன்று உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்

தினமானது (WCID - World Creativity and Innovation Day) அனுசரிக்கப்படுகின்றது.


- ❖ நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைதல் தொடர்பான அனைத்து பிரச்சனைகளுக்கும் படைப்பாற்றல் மூலம் தீர்வு காண்பதற்கு வேண்டி மக்களுக்கு உதவுவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 அன்று முதலாவது WCID தினமானது ஐ.நா.வினால் அனுசரிக்கப்பட்டது.




## உலக அறிவுசார் சொத்துரிமை தினம்

- ❖ ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 26 அன்று உலக அறிவுசார் சொத்துரிமை தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இந்நிகழ்ச்சியானது உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பால் (World Intellectual Property Organization WIPO) 2000 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- ❖ 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 அன்று உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பை அமைப்பதற்கான பிரகடனமானது நடைமுறைக்கு வந்தது.
- ❖ இந்தத் தினமானது புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றாலை ஊக்குவித்தலில் அறிவுசார் சொத்துரிமையின் (காப்புரிமை, வணிகக் குறியீடு, தொழிலக அடையாளங்கள் மற்றும் பதிப்புரிமை) பங்கு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை எண்ணுகின்றது.
- ❖ இந்த ஆண்டின் கருத்துருவானது, “தங்கத்தை எட்டுதல்” என்பதாகும்.

## உஸ்தாத் அல்லா ரக்கா



- ❖ ஏப்ரல் 29 அன்று புகழ்பெற்ற தபேலா கலைஞரான உஸ்தாத் அல்லா ரக்காவின் (1919, ஏப்ரல் 29 – 2000 பிப்ரவரி 3) பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.
- ❖ இவர் தபேலாக் கலையை இசைத்து உலகம் முழுவதும் அதை புகழ்பெறச் செய்தார்.
- ❖ அல்லா ரக்கா என்பவர் சித்தார் கலைஞரான பண்டிட் ரவி சங்கருடன் இணைந்து மேற்கு நாடுகளில் இந்தியப் பாரம்பரிய இசையை புகழ்பெறச் செய்தார்.
- ❖ இவர் தபேலா இசையின் பஞ்சாப் கரானாவின் தீவிர ஆதரவாளர் ஆவார்.
- ❖ பஞ்சாப் கரானா என்பது அக்பர் பேரரசில் இருந்த இசைக் கலைஞர்களில் ஒருவரான லாலா பவானி தாஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

- அல்லா ரக்காவின் மகனான ஜாஹிர் ஹுசைன் என்பவர் இந்தியாவின் புகழ்பெற்ற தபேலாக் கலைஞர் ஆவார்.

## உலக நோய்த் தடுப்பு வாரம்


- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில் உலக நோய்த் தடுப்பு வாரம் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான கருத்துருவானது, "அனைவரையும் பாதுகாப்பது: நோய் தடுப்பு மருந்துகளின் பணி" என்பதாகும்.
- இந்த ஆண்டிற்கான கருத்துருவின் இலக்குகளானது குழந்தைகள், சமூகங்கள் மற்றும் உலகம் ஆகியவற்றின் சுகாதாரத்திற்கான நோய்த் தடுப்பு மருந்துகளின் மதிப்பை வெளிக் கொணர்வதாகும்.




- நோய்த் தடுப்பானது குழந்தைப் பருவம் முதல் வயது மூப்பு வரை 25 வகையான தொற்று நோய்களிலிருந்து காக்கின்றது.
- உலக சுகாதார அமைப்பானது தனது 2012-ஆம் ஆண்டு, மே மாதச் சந்திப்பின் போது உலக நோய்த் தடுப்பு வாரக் கடைபிடிப்பினை அங்கீகரித்தது.

## உலக கால்நடை தினம் – ஏப்ரல் 27

- உலக கால்நடை தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 27 அன்று உலகளவில் அனுசரிக்கப்படுகின்றது.
- இது உலகளாவிய அளவில் உள்ள கால்நடை மருத்துவர்கள் செய்யும் உயிர் காக்கும் பணியினை ஊக்குவிக்கவும் முன்னிலைப்படுத்தவும் அனுசரிக்கப்படுகிறது.




- உலக கால்நடை தினமானது 2000 ஆம் ஆண்டில் உலக கால்நடை சங்கத்தால் உருவாக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டிற்கான உலக கால்நடை தினத்தின் கருத்துருவானது "தடுப்பூசிகளின் மதிப்பு" என்பதாகும்.

## பணியில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான உலக தினம் – ஏப்ரல் 28

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 28 ஆம் நாள் பணியில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான உலக தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- பணியாளர்களின் வாழ்வைப் பாதிக்கக் கூடிய பணியிட விபத்துக்கள் மற்றும் நோய்கள் தடுப்பு குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- இந்தத் தினமானது உலகளாவிய அளவில் தொழில்சார் விபத்துகள் மற்றும் நோய்கள் தடுப்பினை ஊக்குவிப்பதற்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பால் உருவாக்கப்பட்டது.
- இந்த தினமானது 2003 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச தொழிலாளர் அமைப்பால் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டின் கருத்துருவானது "எதிர்காலத்தில் பாதுகாப்பும் சுகாதாரமும் பணியின் முக்கியப் பகுதி" என்பதாகும்.

## ஆயுஷ்மான் பாரத் திவாஸ்

- ஏப்ரல் 30 அன்று நாடு முழுவதும் ஆயுஷ்மான் பாரத் திவாஸ் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தத் திட்டமானது நாட்டின் அணுக முடியாத பகுதிகளில் தேவையான மற்றும் வாங்கத்தகு மருத்துவ வசதிகளை மிக எளிதான முறையில் அளிப்பதற்கு எண்ணுகின்றது.
- இந்தத் திட்டமானது ஒரு ஆண்டில் ஒரு குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் மதிப்பிலான மருத்துவப் பலன்களை அளிக்க எண்ணுகின்றது.

## உலகளாவிய கலாச்சார தினம்

- ஏப்ரல் 15 அன்று உலகம் முழுவதும் உள்ள பல நாடுகள் ஆண்டுதோறும் கடைபிடிக்கப்படும் உலக கலாச்சாரத் தினத்தை அனுசரித்தன.

- இந்தத் தினமானது 1935 ஆம் ஆண்டில் "ரோரிச் ஒப்பந்தம்" ஏற்றுக் கொள்ளப்பட்டதை நினைவு கூறுவதற்காக உருவாக்கப்பட்டது.
- இது கலை, அறிவியல், நிறுவனங்கள் மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்களின் பாதுகாப்பு மீதான அமெரிக்கர்களுக்கிடையேயான ஒரு ஒப்பந்தமாகும்.
- ரஷ்யக் கலைஞர் மற்றும் ஓவியரான நிக்கோலஸ் ரோரிச் என்பவரின் நினைவாக இத்தினத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டது.
- 1998 ஆம் ஆண்டில் உலக கலாச்சார மன்றமானது இத்தினத்தின் முதலாவது கொண்டாட்டத்தைத் தொடங்கியது.

## சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினம்

- ஏப்ரல் 26 அன்று உலகம் முழுவதும் சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினமானது அனுசரிக்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஏப்ரல் 26 ஆம் தேதியை சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினத்தை அனுசரிப்பதற்கான ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இத்தினமானது 1986 ஆம் ஆண்டில் உக்ரைனின் செர்னோபில் அணுசக்தி ஆலையில் ஏற்பட்ட விபத்தை அனுசரிக்கின்றது.
- மூன்று நாடுகளில் உள்ள ஏறத்தாழ 8.4 மில்லியன் மக்கள் இந்தக் கதிர்வீச்சினால் பாதிப்புக்கு உள்ளாக்கப் பட்டனர்.

## சர்வதேச நடன தினம்

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 21 அன்று சர்வதேச நடன தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது உலகம் முழுவதும் நடனக் கலையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஜுன் – ஜார்ஜஸ் நோவிரி என்பவரின் பிறந்த தினத்தைக் குறிக்கின்றது.
- இவர் நவீனக் கூட்டு நடனத்தை உருவாக்கியவராவார்.
- இத்தினமானது சர்வதேச மேடை நிறுவனத்தின் (ITI - International Theatre Institute) நடனக் குழுவின் முன்னெடுப்பாகும்.
- யுனெஸ்கோவின் நிகழ்த்துக் கலைகளுக்கான முக்கியப் பங்காளர் ITI நிறுவனம் ஆகும்.
- 1982 ஆம் ஆண்டில் இத்தினத்தின் முதலாவது கொண்டாட்டமானது நிகழ்த்தப் பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் நடனத் தினத்தின் போது தலை சிறந்த நடனப் பயிற்சியாளர் அல்லது நடனக் கலைஞரின் தகவலானது உலகம் முழுவதும் பரப்பப் படுகின்றது.
- அந்த நபர் அந்த ஆண்டின் தகவல் கலைஞராக தேர்ந்தெடுக்கப் படுகின்றார்.
- இந்தியாவைச் சேர்ந்த ஒரே தகவல் கலைஞர் இந்திய நடனக் கலைஞரான சேத்னா ஜலன் ஆவார்.
- 1986 ஆம் ஆண்டில் இவர் நடன தினத் தகவலை உலகம் முழுவதும் அனுப்பினார்.

# இதரச் செய்திகள்

## சிலம்பொலி சு.செல்லப்பன்

- தமிழ் அறிஞரும் சொற்பொழிவாளருமான சிலம்பொலி சு. செல்லப்பன் தனது 91வது வயதில் சென்னையின் திருவான்மியூரில் காலமானார்.
- இவர் தமிழ் மேம்பாட்டுத் துறையின் இயக்குநராகவும் உலகத் தமிழ் ஆய்வு மையத்தின் நிறுவனர் - இயக்குநராகவும் பதவி வகித்தார்.




- இவர் சிலம்பொலி, சிலப்பதிகாரச் சிந்தனைகள், சங்க இலக்கியத் தேன் மற்றும் பல புத்தகங்களை எழுதியுள்ளார்.
- தமிழ் இலக்கியத்திற்கும் மொழிக்கும் அவரதுப் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக மாநில அரசு மற்றும் தமிழ்ச் சங்கம் ஆகியவை அவருக்கு விருதுகளை வழங்கியுள்ளன.
- மூத்த்த தமிழ் அறிஞரான R.P. சேதுப் பிள்ளை இவரின் பெயருக்கு முன்னொட்டாக சிலம்பொலியைக் குறிப்பிட்டார். இதுவே காலம் முழுவதும் அவருடன் நிலைத்திருந்தது.

## புகையிலையின் தவறான பயன்பாடு

- உலக சுகாதார நிறுவனத்தின்படி (WHO - World Health Organisation) 2017 ஆம் ஆண்டில் விற்பனையானது $700 பில்லியனாக இருந்தது. இது WHO ஆனது மனித உடல்நலத்தை பாதுகாக்க வேண்டி செலவிட நினைத்ததை விட 250 மடங்கு அதிகமானதாகும்.
- புகையிலை என்பது அதிக எண்ணிக்கையிலான அதன் பயனாளர்களைக் கொல்லும் ஒரே சட்ட ரீதியிலான போதைப் பொருளாகும்.
- இந்தியப் புகையிலை நிறுவனத்தின் தரவுப்படி புகையற்ற புகையிலையின் உலகளாவிய நுகர்வுகளில் 84 சதவிகிதத்தை இந்தியா கொண்டுள்ளது.

## உலக சுகாதாரப் புள்ளியியல் 2019

- 2019 ஆம் ஆண்டின் உலக சுகாதாரப் புள்ளியியலானது ஏப்ரல் 07 அன்று உலக சுகாதாரத் தினத்துடன் ஒன்றிப் பொருந்துவதற்காக உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- முதன்முறையாக உலக சுகாதாரப் புள்ளியியலானது பாலினத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- உலகில், குறிப்பாக வளமிக்க நாடுகளில் ஆண்களை விட பெண்கள் அதிக வாழ்நாளைக் கொண்டுள்ளனர்.




- உயிரியியல், சுற்றுச் சூழல், சமூகக் காரணிகள், தேவையினால் ஏற்படும் சில தாக்கங்கள் மற்றும் சுகாதாரச் சேவைகளை எடுத்துக் கொள்வது ஆகியவை இதற்குக் காரணங்களாகும்.
- 2000 மற்றும் 2016 ஆண்டிற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் உலகில் பிறப்பின் போதான வாழ்நாள் எதிர்பார்ப்பானது 66.5 ஆண்டுகளிலிருந்து 5.5 சதவிகிதம் அதிகரித்து 72.0 ஆண்டுகளாக உள்ளது.

## அறுவை சிகிச்சை பிரசவ விழிப்புணர்வு மாதம்

- ஏப்ரல் மாதமானது சர்வதேச அறுவை சிகிச்சை பிரசவ விழிப்புணர்வு அமைப்பினால் அறுவை சிகிச்சை பிரசவ மாதம் கடைபிடிக்கப்படுகின்றது.
- விழிப்புணர்வுப் பிரச்சாரங்களானது இயற்கையான குழந்தைப் பிறப்புடன் ஒப்பிடும்போது அறுவை சிகிச்சை முறையினால் பயன் அடையாமல் இருப்பவர்கள் அல்லது இந்த முறை தேவையில்லை என்று நினைக்கும் தாய்மார்களிடையே அறுவை சிகிச்சை பிரசவத்தின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக நடத்தப்படுகின்றது.

## மை சர்கிள் (My Circle) செயலி

- பெண்களின் பாதுகாப்பிற்கு உதவுவதற்காக FICCI மகளிர் அமைப்புடன் (FLO - FICCI Ladies Organisation) இணைந்து பாரதி ஏர்டெல் நிறுவனத்தால் மை சர்கிள் என்ற செயலியானது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

- இந்தச் செயலியானது அவசர கால சூழ்நிலைகளின் போது, இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டும் வசதியுடன் பெண்கள் தங்களது குடும்பம் அல்லது நண்பர்களுக்கு SOS எச்சரிக்கையை அனுப்ப அனுமதிக்கிறது. இது ஆங்கிலம் மற்றும் தமிழ் உள்ளிட்ட 13 மொழிகளில் எச்சரிக்கையை அனுப்ப அனுமதிக்கிறது.
- இந்தச் செயலியானது ஏர்டெல் மற்றும் ஏர்டெல் அல்லாதது ஆகிய இரண்டு தொலைத் தொடர்பு சேவை அமைப்புடன் உள்ள தொலைபேசிகளில் செயல்படும்.

## மிகவும் செல்வாக்குள்ள 100 மனிதர்கள்

- ஆண்டின் உலகின் மிக செல்வாக்குள்ள முன்னோடிகள், தலைவர்கள், சிறப்புத் தலைவர்கள், கலைஞர்கள், பெருந் தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட தி டைம்ஸின் மிகவும் செல்வாக்குள்ள 100 மனிதர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் ரிலையன்ஸ் தொழிற்துறையின் தலைவரான முகேஷ் அம்பானி இடம் பிடித்துள்ளார்.
- இந்த பட்டியலில் இந்திய உச்ச நீதிமன்ற வழக்குரைஞர்களான மேனகா குருசாமி மற்றும் அருந்ததி கட்ஜு ஆகியோரும் இடம் பிடித்துள்ளனர்.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 377-ஐ நீக்கியதன் மூலம் ஓரினச் சேர்க்கை குற்றமில்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்ட உச்ச நீதிமன்ற வழக்கான "நவ்தேஜ் ஜோகர் வழக்கில்" இருவரும் வாதாடி வெற்றி பெற்றனர்.




- இந்தப் பட்டியலானது முதன்முறையாக 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- டைம்ஸ் அமைப்பானது 5 பிரிவுகளிலிருந்து தலா 20 நபர்களை அங்கீகரிக்கின்றது.

- Leaders and Revolutionaries
- Scientists and Thinkers
- Builders and Titans
- Artists and Entertainers
- Heroes and Icons

## ராஜோரி தினம் – ஏப்ரல் 13

- ராஜோரி மாவட்டத்தின் விடுதலைக்காக தங்கள் உயிரினைத் தியாகம் செய்த படை வீரர்களின் துணிச்சலையும் வீரத்தினையும் நினைவு கூறும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 13 ஆம் நாள் ராஜோரி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டப் பிறகு மேற்கு மாவட்டப் பகுதிகளிலிருந்து கிளர்ச்சியாளர்களுடன் இணைந்து பாகிஸ்தானானது படையெடுத்து 1947 ஆம் ஆண்டு நவம்பர் 07 அன்று ராஜோரி மாவட்டத்தினைக் கைப்பற்றியது.
- எல்லைப் பகுதியிலிருந்து ஊடுருவிய கிளர்ச்சியாளர்கள் மற்றும் பாகிஸ்தான் இராணுவத்தினரிடமிருந்து 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 அன்று ராஜோரி மீண்டும் கைப்பற்றப்பட்டது.




## உலக ஒவ்வாமை வாரம்

- உலக ஒவ்வாமை வாரம் என்பது 2011 ஆம் ஆண்டிலிருந்து உலக ஒவ்வாமை அமைப்பினால் வருடந்தோறும் கடைபிடிக்கப்படும் ஒரு உலகளாவிய முன்னெடுப்பு ஆகும்.
- இது 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் 07 முதல் 13-ம் தேதி வரை கடைபிடிக்கப்பட்டது.
- இந்த ஆண்டின் கருத்துருவானது "உணவு ஒவ்வாமை என்பது உலகளாவிய பிரச்சனை" என்பதாகும்.
- உலக ஒவ்வாமை அமைப்பானது இராண்டாண்டிற்கு ஒருமுறை நடைபெறும் உலக ஒவ்வாமைக்கான கூடுகையுடன் இணைந்து 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதம் உலக ஒவ்வாமை தினத்தை நடத்தியது. இத்தினம் ஆண்டுதோறும் ஜூலை 08 அன்று அனுசரிக்கப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - -